125/2000

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மே 10, 2000, தொகுதி 104
எண் 1

V2,11,31'800
P00.104.1
22778

வெளியீடு 26-4-2001 Issued 26-4-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 10, 2000 - தொகுதி 104 -- எண் 1

**Wednesday the 10th May, 2000 – Volume 104– No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

125
அவை

# 10-5-2000

## உள்ளடக்கம்


பக்கங்கள்

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| வாசுதேவநல்லூர் கீழப்புதூர் திரு. ராமர் மரணம் | 1-13 |
| *திரு. கே. சுப்பராயன் | 2-3 |
| *திரு. சொ. கருப்பசாமி | 3-6 |
| *திரு. டி. மணி | 6 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 7 |
| திரு. சி. ஞானசேகரன் | 7-8 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 9-12,13 |
| திரு. பி.ஆர் சுந்தரம் | 12,13 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் | 14-16 |
| 3. அறிக்கை அளித்தல்— | |
| அரசு உறுதிமொழிக் குழு | 16-17 |
| 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)— | |
| தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 | 17 |

| | |
|---|---|
| | பக்கங்கள் |
| 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 27 — ஊரக வளர்ச்சி<br>(ஆ) கோரிக்கை எண் 48 — குடிநீர் வழங்கல்<br>(இ) கோரிக்கை எண் 49 — நகராட்சி நிருவாகம் | 18-242 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 18,25,32,37, 42,49,55,56,57, 58,59,65,79, 108,119,126-127,132-133, 155,157, 158,159, 175-233 |
| திரு. வெ. சின்னய்யா | 38-43 |
| திரு. தி.ப. ஆறுமுகம் | 44-47 |
| திரு. லி. அய்யலுசாமி | 47-50,213 |
| *திரு. எஸ். ராஜு | 50-54 |
| *திரு. சொ. கருப்பசாமி | 54-59 |
| *திரு. ஆர். சக்ரபாணி | 60-65 |
| திரு. ந. சுந்தரம் | 65-70 |
| *திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 70-74 |
| திரு. எம். ரங்கநாதன் | 74-78 |
| *திரு. முகம்மது கோதர் மைதீன் | 78-81 |
| *திரு. கே.கே. வீரப்பன் | 81-85 |
| திரு. சி. வேலாயுதன் | 85-91,117 |
| திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா | 91-96 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 97-101 |
| திருமதி ஏ.ஆர். வேடம்மாள் | 101-106 |
| *திரு. லா. சந்தானம் | 106-110 |
| *திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம் | 110-113 |
| *திரு. ஏ.ஜி. சம்பத் | 113-117,119 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 119-121 |





| | |
|---|---|
| | பக்கங்கள் |
| 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| திரு. எஸ்.கே. வேதரத்தினம் | 121-124 |
| திரு. டி. அமரமூர்த்தி | 124-129 |
| திரு. ஏ.எம் ராமசாமி | 129-132 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 24,30-31,132-135,236,239 |
| *திரு. டி மணி | 136-140, 141-142 |
| திரு. ஐ. கணேசன் | 142-143, 144-150 |
| திரு. எ. தெய்வநாயகம் | 22,28,34,150-153,234,238,241 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 153-155, 156-159 |
| திரு. க. வேல்சாமி | 159-161 |
| திரு. மு. அப்பாவு | 23,29-30,161-163,235,238,241 |
| *திரு. இரா. மணிமாறன் | 163-165 |
| திரு. மு.பெ. சாமிநாதன் | 165-167 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 21,108,167-169,234 |
| திரு. ஜி. பழனிசாமி | 118,169-173,199 |
| திரு. க. மணிவர்மா | 20,28,173-175,219,234,238 |
| 6. அறிவிப்புகள்— | |
| உறுப்பினர்களுக்கு நண்பகல் உணவு மற்றும் தேநீர் வழங்குதல் | 43 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 243-245 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** ஊராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல், மாசுக்கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. Minister for Education .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. Minister for Health and Electricity .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. Minister for Revenue .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. Minister for Rural Development and Local Administration .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

பேரவைத் துணைத் தலைவர்

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

செயலாளர்

**திரு. செ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. க. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை திருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - | தலைமை திருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - | தலைமை திருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை திருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - | தலைமை திருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை திருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | - | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | - | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - | வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - | அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | - | கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - | மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | - | தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | - | சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - | கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | - | அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | - | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | - | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - | பவானிசாகர் |
| 18. | ஆருன் ரஷீத், திரு. ஜே.எம். | - | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | - | ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
26. இராசமாணிக்கம, திரு. பி. - ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ - ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
31. இராமச்சந்திரன் திரு. ஓ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந. பூ. - மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. - தளி
39. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. - தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. - வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. - மேட்டூர்

63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னப்பா, திரு. வெ. - திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. - மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
118. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்



130. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
131. துரை. திரு. கே. - திருவெறும்பூர்
132. துரைமுருகன், திரு. - காட்பாடி
133. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
134. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
135. நடராசன், திரு. ஆ. - பேரூர்
136. நடராஜன், திரு. த. - செஞ்சி
137. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
138. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
139. நாகரத்தினம், திரு. ச - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
140. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
143. நேரு, திரு. கா.நா. - லால்குடி
144. பசும்பொன் தா. கிருட்டினன், திரு. - சிவகங்கை
145. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
152. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்

153. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
155. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
156. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
164. பெருமாள, திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
165. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
174. மணி, திரு. டி. - விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. - பென்னாகரம்



176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்
177. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
179. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. - தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
189. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்

| | | |
|---|---|---|
| 198. ரங்கநாதன், திரு. எம். | - | குன்னூர் (செ.வ.) |
| 199. ரங்கநாதன், திரு. ப. | - | புரசைவாக்கம் |
| 200. ரவி அருணன், திரு. கே. | - | தென்காசி |
| 201. ரவிசங்கர், திரு. கு. | - | விளாத்திகுளம் |
| 202. ராசேந்திரன், திரு. ஏ. | - | பேரூர் |
| 203. ராணி, செல்வி க. | - | தலைவாசல் (செ.வ.) |
| 204. ராமசாமி, திரு. ஏ.எம். | - | ஆத்தூர் |
| 205. ராமச்சந்திரன், திரு. செ. | - | திருப்பரங்குன்றம் |
| 206. ராஜு, திரு. எஸ். | - | பொள்ளாச்சி |
| 207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | - | சத்தியமங்கலம் |
| 208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | - | காங்கேயம் |
| 209. லட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 210. வல்லரசு, திரு. பி.என். | - | உசிலம்பட்டி |
| 211. வாசுகி முருகேசன், திருமதி | - | கரூர் |
| 212. விஜயகுமார், திரு. கே.எம். | - | சாத்தூர் |
| 213. விஜயன், திரு. டி.சி. | - | திருவொற்றியூர் |
| 214. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | - | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | - | ஒசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | - | பாலக்கோடு |



| | | |
|---|---|---|
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | - | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | - | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி.பி. | - | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | - | அரூர் (செ.வ.) |
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | - | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | - | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | - | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | - | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | - | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | - | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 234. ஆன் டி' மான்டி, திருமதி | - | நியமனம் |
| 235. வெற்றிடம் | - | திருப்போரூர் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

**திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்**

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 28, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 மே 10, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> **"நீர்இன்று அமையாது உலகெனின்** *யார்யார்க்கும்*
> **வான்இன்று அமையாது ஒழுக்கு."**

உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வாசுதேவநல்லூர் கீழப்புதூர் திரு. ராமர் மரணம்

*(திரு. சி. ஞானசேகரன் எழுந்து நின்றார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எழுந்து நிற்கும்போது நீங்கள் எழுந்து நிற்பதை நான் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்று கேள்வி நேரம் இல்லாவிட்டால்கூட agenda இருக்கிறது. தவிர, சிறப்புக் கவன ஈர்ப்பு ஒன்றை எடுத்துக்கொள்ள விருக்கிறேன். அதை முடித்த பிறகுதான் உங்களைக் கேட்க அனுமதிப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரம் இல்லை என்றால், எப்போது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் எழுந்து நிற்கலாம் என்று அர்த்தமா? (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

[பேரவைத் தலைவர்] [2000 மே 10

வாசுதேவநல்லூர் கீழப்புதூரைச் சேர்ந்த விவசாயி ஒருவர் காவல் நிலையத்தில் இறந்தது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் திரு. இரா. தாமரைக்கனி, திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், திரு. ரா. ஈஸ்வரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. கே. சுப்பராயன், திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் கொடுத்திருக்கின்றார்கள். இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் (குறுக்கீடு)

**திரு. சி. வேலாயுதன் :** தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இன்றைக்குக் காலையில் கொடுத்ததை எல்லாம் நான் கணக்கில் சேர்க்கமுடியாது. Agenda-வை பார்த்துவிட்டுக் கொடுக்கிறது என்றால், அதற்கு அளவே இல்லாமல் போய்விடும். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ரா. ஈஸ்வரன் அவர்களைத்தான் நான் முதலில் கூப்பிட வேண்டும். இரண்டு நாட்களாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார். நான் சொல்லிவிட்டேன். இப்போது வரவில்லை என்றால் நான் எப்படிக் காத்திருக்க முடியும்? வரவில்லையென்றால் ... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** வந்துவிடுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வந்து விடுவார்? திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூரில் நடந்த கோயில் திருவிழா ஒன்றில் கலந்துகொள்வதற்காக வந்த, ஆத்துவழி கிராமத்தைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ராமர் என்பவர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட நிலையில், இறந்திருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக, பொது நிகழ்ச்சிகளிலே பங்குபெறுகிற பொதுமக்களின் உயிர் உடைமையைக் காப்பாற்ற சட்டரீதியாகக் கடமைப்பட்டுள்ள காவல் துறையின் நடவடிக்கைகள் மனித உயிர்களைப் பறிப்பதாக அமைவது ஒரு தொடர்கதை போல் நீண்டு வருவது, ஜனநாயகக் கட்டமைப்பில் மனித உரிமையை மீறுகிற குற்றத்தைச் செய்ததாக அமைகிறது. எனவே, மாநில அரசு இந்த விஷயத்தை ஏதோ ஒரு சிறிய நிகழ்வாகக் கருதாமல், இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதை ஒரு முடிவுக்குக் கொண்டுவருகிற, பொருத்தமான



நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட நபரால் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் அவரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிப்பது என்பது சட்ட ரீதியாக போலீசாருக்கு உள்ள உரிமை. அதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆனால், தங்களுடைய சட்டக் கடமையை நிறைவேற்றுவதையே ஒரு சட்ட மீறலாக அவர்கள் ஆக்கிக்கொள்வது என்பது துரதிருஷ்டமானது. மத்திய மனித உரிமைக் கமிஷனும் சரி, சமூக வாழ்வில் நல்லுணர்வுகொண்ட தொண்டுள்ளம் படைத்த பல பெரியவர்களும் சரி, இதைத் தொடர்ந்து கண்டித்து வருகிறார்கள். ஆனாலும், இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிற வழிவகை குறித்து ஆராய்வது அவசர அவசியம் என நான் கருதுகிறேன். சம்பந்தப்பட்ட நபர் யார், அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதுகூட இரண்டாம் பட்சம். ஆனால், எந்த ஒரு பிரஜைக்கும் இத்தகைய ஆபத்து ஏற்படக்கூடாது. அதுவும், இந்தியா சுதந்திரம் பெற்று 52 ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தியா தனக்கு என்று ஒரு குடியரசுச் சட்டத்தை இயற்றிக்கொண்டு சட்டரீதியான பல்வேறு உரிமைகளைப் பெற்றிருக்கிற குடிமக்களை காவல் துறை நடத்துகிற முறை தவறானதாக, சட்டவிரோதமானதாகத் தொடர்ந்து நீடித்து வருவது நல்லதல்ல. எனவே, சட்டத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ள காவல் துறையின் இத்தகைய சட்டமீறல்கள், கடும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய குற்றமாக மாநில அரசு கருத வேண்டும். அப்படிக் கருதி இந்தப் பிரச்சினையில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2-5-2000 தேதியன்று மாலை 6-08 மணிக்குமேல் வாசுதேவநல்லூர் மாரியம்மன் கோயிலுக்கு, பூக்குழி நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக ஆத்துவழி கிராமத்தைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர் ராமர் என்பவர் சென்றபோது, ஏராளமான மக்கள் அங்கே இருந்துகொண்டிருந்த சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர், கரை வேட்டியோடும், துண்டோடும் முன்னால் சென்று கொண்டிருந்தபோது, அண்ணா தி.மு.க. தொண்டர் பின்னாலே சென்றபோது, காவல் துறையைச் சார்ந்த

[திரு. சொ. கருப்பசாமி] [2000 மே 10

ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், அந்த நிகழ்ச்சிக்கு உள்ளே செல்லவிடாமல், ராமரைத் தடுத்து நிறுத்தி வெளியே இழுத்திருக்கின்றார்கள். ஆனாலும் ராமர், எனக்கு முன்பாகச் செல்கின்ற தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் உள்ளே செல்கிறார், என்னை மட்டும் அனுமதிக்கவில்லை, ஏன்? என்று தட்டிக்கேட்டதன் காரணமாக, நீ என்னை எதிர்த்துப் பேசுகிறாயா என்று அவர் சட்டையைப் பிடித்து இழுத்து அடித்து, காலால் போட்டு மிதித்து, மிகவும் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறார். பேரூராட்சியில் அரசு மருத்துவமனை இல்லாத காரணமாக, அங்கே திருமலைக் கணேசன் என்பவரின் தனியார் கிளினிக் உள்ளது; அடிபட்ட வேதனை தாங்க முடியாமல் இருந்த ராமரை ரங்கசாமி என்பவர் உடனடியாக கைத்தாங்கலாக அழைத்துச்சென்று அந்த திருமலைக் கணேசனின் கிளினிக்கில் முதலுதவி சிகிச்சைக்காகச் சேர்த்திருக்கிறார். சரியாக மாலை 7-00 மணிக்கு மேல் அந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பிறகு அவர் மாலை சுமார் 7-30 மணியளவில் அந்த கிளினிக்கிலேயே இறந்துவிட்டார். உடனடியாக வேறு வழியில்லாமல், அந்த திருமலைக் கணேசன் என்னும் மருத்துவர் காவல் துறைக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். ஆனால், காவல் துறை கண்டுகொள்ளவில்லை. இரவு முழுவதும் அந்தப் பிரேதம் அங்கேயே இருந்தது. காலையில் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் திருமலைக் கணேசனை உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டுமென்று அழைக்க வந்தபோது ஊர் பொதுமக்கள் எல்லாம் ஒன்றுகூடி, ஒன்றுதிரண்டு இந்த இறப்புக்கு காவல் துறைதான் காரணம், நீங்கள்தான் அடித்துக்கொன்றிருக்கிறீர்கள் என்று பெரிய பிரச்சினையாக்கி, மருத்துவரை வெளியே வாருங்கள் என்று கூப்பிட்டபோது, அவர் வெளியே வரமுடியாமல், பொதுமக்களால் பிரச்சினை ஏற்பட்ட நேரத்தில், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகேசன் அவர்கள் தகவல் தெரிந்து உடனடியாக வருகை தந்திருக்கிறார்கள். காவல் துறையினர் அடித்ததன் காரணமாக, "F.I.R. போடுங்கள், போட்ட பிறகுதான் நீங்கள் Post-mortem-ற்கு எடுப்பதற்கு நாங்கள் அனுமதி கொடுப்போம்" என்று சொன்னார்கள், அதன்பேரிலும் அவர்கள் F.I.R. போடவில்லை. உடனடியாக, பாராளுமன்ற உறுப்பினரே, அந்தப் பொதுமக்களோடு ஒன்றுகூடி, சாலை மறியலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 1 மணி நேர அளவிற்கு சாலைப் போக்குவரத்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டுள்ளன. வேறு வழியின்றி காவல் துறை S.P. வந்து உடனடியாக F.I.R. போட்டு,



2000 மே 10] [திரு. சொ. கருப்பசாமி]

**அந்த Body-ஐ மீண்டும் தென்காசி அரசு பொது மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டும், R.D.O. முன்னிலையில்தான், பிரேதப் பரிசோதனை நடத்த வேண்டும் என்று சொன்னதன்பேரில், அந்த Body தென்காசிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், இதுவரையில் post-mortem குறிப்புகள் என்னவென்று வரவில்லை. சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கவில்லை.**

**சங்கரன்கோயில் காவல் நிலையத்தில், இந்த ஆட்சியிலே, இதே வாசுதேவநல்லூர் கிராமத்துக்குப் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்த ஒருவர், lockup-ல் இருந்தபோது இறந்து, அதன்மீது நாங்கள் பலமுறை மேல் அதிகாரிகளிடத்தில் தகவல் கொடுத்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல் துறையே, பொதுமக்களை, குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனை, அதுவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரை, இப்படி அடித்துக் கொன்றிருப்பது மிகவும் வேதனைக்குரியது, கண்டனத்திற்குரியது. ஆரம்பத்திலேயே வாசுதேவ நல்லூருக்கு அருகில் உள்ள சாதாரண குக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் lockup-ல் இருந்த சமயத்தில் இறந்தபோதே முறையாக காவல் துறையின்மீது நடவடிக்கை எடுத்திருந்திருப்பீர்களானால், தொடர் நிகழ்ச்சியாக இம்மாதிரி சம்பவம் நடந்திருக்காது. நீங்கள் அதை அப்படியே விட்டுவிட்டதன் காரணமாக, ஆளும் கட்சியைச் சார்ந்தவர் என்பதன் காரணமாக...**

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிற subject-ஐப் பற்றிப் பேச வேண்டும். சங்கரன்கோயிலைப் பற்றிப் பேசினீர்களானால், நான் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவேன். (குறுக்கீடு) கொடுத்ததைப் பேசுங்கள். நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் குற்றம் சாட்டுங்கள். இப்போது வாசுதேவநல்லூரைப் பற்றிப் பேசுங்கள். அடுத்த ஊரைப் பற்றிப் பேசினீர்களானால், அவைக் குறிப்பிலிருந்து உங்கள் பேச்சை எடுத்துவிடுவேன்.**

**திரு. சொ. கருப்பசாமி: ராமர் என்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலுடைய தொண்டர். ஆகவே, எங்களுடைய தலைவர், பொதுச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும்**

இதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி முறையாக ஒரு தனி நீதிபதியை வைத்து விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூரில் ஒரு கோயில் திருவிழாவைப் பார்க்க பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த ராமர் என்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர் சென்றபோது காவல் துறையினரால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். எந்தப் பிரச்சினையும் அவரால் அங்கே ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பத்திரிகைகளில் வந்திருக்கின்ற செய்திகளைப் பூராவும் படிக்கின்றபோது, அவராலே எந்தவிதமான விவகாரமும் அங்கே ஏற்படவில்லை என்று தெரிகிறது. சாதாரணமாக நம்முடைய காவல் துறையிலுள்ள ஒருசாரார், ஏதாவது சொல்லியதற்கு திருப்பிக்கேட்டால் உடனே அவர்களுக்கு ஆத்திரம் வரும். ஆத்திரம் வந்தால், உடனே அவர்கள் கைது செய்வார்கள். காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்வார்கள். இல்லையென்றால், சம்பந்தப்பட்ட இடத்திற்குப் போய் மிருகத்தனமாகத் தாக்குவது என்பது வாடிக்கையான நிகழ்ச்சியாக நடந்து வருகின்றது. இதற்கு முன்னால் இருந்ததிலேயிருந்து பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக நிரபராதியான ஒருவரைக் காவல் துறையினர் தாக்கி, அது ஒரு கொலை நிகழ்ச்சியாக மாறி இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், நம்முடைய மாநிலத்தில் காவல் துறை என்பது இப்போது ஒரு கட்டுப்பாடற்ற நிலைக்குச் சென்றுவிட்டதோ என்ற ஒரு சந்தேகம்கூட எழுகின்ற நிலையில், இந்த விவகாரத்தில் அரசு ஒரு சரியான விசாரணை நடத்தி, அதிலே யார் குற்றவாளி, ஆய்வாளரா அல்லது உதவி ஆய்வாளரா என்பதையெல்லாம் கண்டறிந்து, உரிய தண்டனை வழங்குவதன் மூலமாகத்தான் மேலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடவாமல் தடுப்பதற்கு ஒரு நல்ல ஏதுவான காரணமாக அமையும். அந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினையில் அரசு ஆழமாகத் தலையிட்டு, இதற்கு நல்ல தீர்வை ஏற்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்த மாநிலத்தில் இனிமேல் நடக்காதவாறு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்கு இப்பிரச்சினையைக் கொண்டு வருகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூரில் மாரியம்மன் கோவில் தீ மிதிப்புத் திருவிழாவில் ஏழை விவசாயத் தொழிலாளி ராமர் எல்லோரையும் போலக் கலந்துகொண்டிருக்கிறார். விழா என்றாலே, கொஞ்சம் சந்தோஷமாக எல்லோரும் இருப்பார்கள். அந்த அடிப்படையிலே அந்த வாலிபரும் இருந்திருக்கிறார் என்று கருதுகிறேன். ஏழை மக்கள், எளிய மக்கள் என்றாலே பொதுவாகக் காவல் துறைக்கு ஒரு காழ்ப்புணர்வு இருப்பதாகக் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே அவர்மீது அத்துமீறி காவல் துறையினர் நடத்திய தாக்குதலால், தலையிலே பலத்த காயம்பட்டு, அவர் மரணத்துக்கு ஆளாகியிருக்கிறார்.

அவர் குற்றுயிரும், குலையுயிருமாக இருந்த நேரத்தில் அங்கே இருக்கின்ற தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு இருக்கிறார். காவல் துறையினர் தாக்கியதாலே அவர் காயம்பட்டிருக்கிறார், இறக்கும் தருவாயில் இருக்கிறார் என்பதை உணர்ந்த அந்த தனியார் மருத்துவமனையின் மருத்துவர், அவரைக் கடையநல்லூருக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார். ஆனால், அந்த மருத்துவமனையிலேயே அவர் மரணமடைந்து விட்டார். மறுநாள் அங்கு விசாரணைக்குச் சென்ற உயர் காவல் அதிகாரிகள் அந்த மருத்துவரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து விஷத்தால்தான் இவர் இறந்து இருக்கிறார் என்று நீங்கள் சொல்லுங்கள் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறார். நான் கேட்க விரும்புவது, அரசை வலியுறுத்த விரும்புவது, காவல் துறை எந்தத் தவறை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. விசாரணைக்குச் செல்லுகின்றபோதோ அல்லது இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளிலோ நடைபெறக் கூடிய இத்தகைய போக்கு மாற்றப்பட வேண்டும். அது ஒன்றுதான் நாகரிக உலகத்திற்கு நல்லது என்ற அடிப்படையிலே இந்த சம்பவத்திற்குக் காரணமான அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டிக் கேட்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மற்ற உறுப்பினர்கள் facts of the case-ஐச் சொல்லிவிட்டார்கள். கருத்தை மட்டும் நான் சொல்லவிரும்புகிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [2000 மே 10

ஆத்துவழி கிராமத்தில் ராமர் திருவிழாவிற்குச் சென்றிருக்கின்றார். அவர் ஒரு மாற்றுக் கட்சிக்காரர், காவல் துறை எல்லோருக்கும் பொதுவான ஒன்று. எந்தக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின்படியும், நியாயத்தின்படியும் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள். எதிர்க்கட்சி என்று சொன்னாலே அவர்களையெல்லாம் ஒருவிதமாக மோசமாக நடத்துகிற ஒரு நிலை இருப்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல் துறையினர், ராமர் அ.இ.அ.தி.மு.க. என்ற காரணத்தாலே அவரைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு போயிருக்கிறார்கள். எந்தக் குற்றமும் செய்யாதவர் அவர். அப்படியே ஏதாவது ஒரு குற்றத்தைச் செய்திருந்தாலும்கூட பரவாயில்லை. திருவிழாவிற்குப் போனவரை, குற்றம் செய்யாதவரை இவர்கள் அழைத்துச்சென்று, காவல் நிலையத்திலே விசாரணை என்று வைத்துக்கொண்டிருக்கிறபோது, காவல் நிலையத்திலே மரணம் நிகழ்வது என்பது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு விழுந்திருக்கக்கூடிய அடி என்றுதான் நான் சொல்வேன். காவல் துறையிலே ஏற்படுகிற custodial death-ஐ நிச்சயமாகத் தவிர்ப்பேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு, ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பின்னாலும்கூட, அறிவுரைகளைச் சொன்னாலும்கூட, தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகளை காவல் துறையினர் அத்துமீறிச் செய்வது என்பதும், மாற்றுக் கட்சிக்காரர்களை இப்படிச் செய்வதென்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. காவல் துறையினர் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ, அந்தக் கட்சி பக்கமே சென்று, அவர்களும் அந்தக் கட்சியினுடைய அங்கத்தினர்கள் போலவே மாறிவிடக்கூடிய ஒரு கொடுமை இப்போது தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பதை நான் நிச்சயமாக வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இதுபோன்ற நிகழ்வுகளை, இனியாவது தவிர்ப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்; custodial death-ஐ நிறுத்துவதற்கு என்ன முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது; மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு என்ன பாதுகாப்பை இந்த அரசாங்கம் கொடுக்கப்போகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2000 மே 10]

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் ராமர் என்பவருடைய சாவு குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. சொ. கருப்பசாமி, திரு. டி. மணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற வினாவையும் எழுப்பியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தினுடைய காவல் துறையும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தந்துள்ள விவரங்களை, அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தந்துள்ள விவரங்கள் இவை. நானாக எதையும் கணித்து இப்படித்தான் நடந்தது என்று சொல்லவில்லை, ஏனென்றால் மேற்கொண்டு விசாரணை நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருப்பதால், தந்துள்ள விவரங்கள்:

வாசுதேவநல்லூர் மாரியம்மன் கோயில் பூக்குழி 2-5-2000 அன்று மாலை 4-15 மணி முதல் 5-00 மணி வரை நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அதிலே கலந்துகொண்டு தீ மிதித்தார்கள்.

பகல் சுமார் 2-00 மணி முதல் தீ மிதிக்கும் இடத்தைச் சுற்றி சங்கரன்கோயில் உதவி காவல் கண்காணிப்பாளர், புளியங்குடி ஆய்வாளர் மற்றும் 100 காவலர்கள் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள்.

மாலை சுமார் 3-30 மணிக்கு, கீழப்புதூரைச் சேர்ந்த நாற்பது வயதுடைய அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ராமர், குடிபோதையில் அங்கே தள்ளாடிக்கொண்டே வந்தார். வாசுதேவநல்லூர் பஜாரில் சித்திரைக் கனி என்பவரின் பூச்சிமருந்துக் கடையில் பூச்சிமருந்து பாட்டில் கேட்டார். அவர் குடிபோதையில் இருந்ததாலும், வழக்கமாகக் குடித்துக்கொண்டு அடிக்கடி பஜாரில் தள்ளாடியபடி திரியும் பழக்கம் உடையவர் என்பதாலும் கடைக்காரர் பூச்சிமருந்து தர மறுத்து விட்டார்.

முற்பகல் 9-50

பின்பு மாலை 5-30 மணியளவில் Kayalvizhi Readymade Store-க்கு மேற்கே தென்காசி-மதுரை Main-Road-ல் பிதற்றிக்கொண்டு ராமர் கிடந்துள்ளார். வாயில் நுரை தள்ளியபடி கை கால் உதறிக்கொண்டு கிடந்த ராமரை அருகில் Medical Store

வைத்திருக்கும் ம.தி.மு.க. நகரச் செயலாளர் மகாலிங்கம் பார்த்துள்ளார். அப்போது ராமர் வாயிலிருந்து பூச்சிமருந்து வாடை அடித்துள்ளது. அதுசமயம் அங்கு வந்த வாசுதேவநல்லூரைச் சேர்ந்த ஜெயலலிதா பேரவை துணைச் செயலாளர் ரங்கசாமியும் மற்றும் ஒருவரும் சேர்ந்து ஒரு தள்ளுவண்டியில் ராமரைத் தூக்கிப்போட்டு வாசுதேவநல்லூர் Main Road-ல் உள்ள டாக்டர் திருமலை கணேசனிடம் சிகிச்சைக்குச் சேர்த்துள்ளார்கள். டாக்டர், வயிற்றைச் சுத்தம் செய்து முதலுதவி செய்துள்ளார். பூச்சிமருந்து போன்ற விஷத்தை யாராவது அருந்தினால் உடனடியாக வயிற்றைச் சுத்தம் செய்வது மருத்துவர்களின் வாடிக்கை. உடனே ரங்கசாமி வாடகைக் கார் எடுக்க கடைத் தெருவுக்கு வந்துள்ளார். அங்கு வாசுதேவநல்லூரைச் சேர்ந்த தங்கப்பழம், வாசுதேவநல்லூர் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் ஆயுள்ராஜா பாண்டியன் ஆகிய இருவரையும் காருடன் பார்க்க, ராமரை அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல காரைக் கேட்டுள்ளார், கார் அவசரமாக சிவகிரிக்குப் போக இருப்பதால், பணம் தருகிறேன் என்று கூறி ஆயுள்ராஜா பாண்டியன் ரூ.200-ஐ ரங்கசாமியிடம் கொடுத்துள்ளார். இதற்கிடையில் ரங்கசாமி மருத்துவமனைக்குச் சென்றபோது இரவு 8½ மணிக்கு ராமர் இறந்துவிட்டதாக டாக்டர் கூறியுள்ளார். இதன்பிறகு வெளி ஆட்களின் தூண்டுதலின்பேரில், இறந்துபோன ராமரின் 15 வயதுடைய மகள் தங்கம், காவல் துறை ஆய்வாளர் ராமரை பூக்குழி நடந்த பகுதியிலே பிடித்துத் தள்ளி அடித்ததால்தான் இறந்துள்ளார் என்று கொடுத்த புகாரின்பேரில் வாசுதேவநல்லூர் காவல் நிலையக் குற்ற எண் 106/2000 சட்டப் பிரிவு 174 கு.வி.ந.ச. -ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தென்காசி வருவாய்க் கோட்டாட்சியரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

ராமரின் சடலம் தென்காசி அரசு மருத்துவமனையில் 3-5-2000 அன்று பிற்பகலில் இரண்டு மருத்துவர்களால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. பிரேதப் பரிசோதனையில் இறந்தவரின் உள் உறுப்புகள் யாவும் நல்லநிலையில் இருந்ததாகவும், வயிறு மற்றும் குடல் காலியாக இருந்ததாகவும், அது ஏற்கெனவே மருத்துவமனையிலே முற்றாகக் கழுவப்பட்டுவிட்ட காரணத்தினால் வயிறு மற்றும் குடல் காலியாக இருந்ததாகவும், இறந்தவர் விஷம் அருந்தினாரா என்பது குறித்து குடல் உறுப்புகளை இரசாயனப் பரிசோதனை செய்த பின்னரே கருத்துக் கூற முடியும் என்றும் பிரேதப் பரிசோதனை செய்த மருத்தவர் தெரிவித்துள்ளார். பிரேதப்





பரிசோதனைக்குப் பின்னர், இறந்து போனவரின் சடலம் உறவினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஆய்வாளரின் தொடர் சாராய வேட்டையினாலும், அவருடைய கண்டிப்பான செயல்பாட்டினாலும், வேண்டுமென்றே ஆய்வாளரைச் சம்பந்தப்படுத்தி புகார் கூறப்பட்டுள்ளதாகப் போலீஸ் தரப்பிலே சொல்லப்படுகிறது.

இறந்துபோன ராமரின் முதல் மற்றும் இரண்டாவது மனைவிகள் காரணமாக ஏற்பட்டுள்ள தகராறுகள் காரணமாக ராமர் மனம் உடைந்து தினந்தோறும் குடித்துவிட்டு நிம்மதி இழந்து இருந்ததாகவும் தெரிகிறது. தென்காசி கோட்டாட்சித் தலைவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையைப் பெற்று உடனடியாக வாசுதேவநல்லூர் அருணகிரி மருத்துவமனைக்கு விரைந்து, இறந்தவருடைய பிரேதத்தைப் பார்வையிட்டு, பிரேத விசாரணை செய்துள்ளார். கூடியிருந்த மக்களிடம் ராமர் இறந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் எனக் கோட்டாட்சித் தலைவர் தெரிவித்ததன்பேரில் கூட்டத்தினர் கலைந்து சென்றுள்ளனர் என்றும், தென்காசி கோட்டாட்சித் தலைவர் இறந்தவருடைய உடலைப் பார்வையிட்டபோது, பின்வரும் காயங்கள் அவருடைய உடலில் இருந்துள்ளன என்றும் நெல்லை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்:

1. இடது கால் மூட்டுக்கு கீழ் இடது பக்கம் சிறிய காயம்.

2. இடது காலில் ஒரு சிறிய காயம்.

3. மேற்கண்ட காயத்திற்குக் கீழ் இடது காலில் ஒரு சிறிய காயம்.

இந்தக் காயங்கள் எல்லாம் அவர் குடிபோதையிலே கீழே விழுந்தபோது ஏற்பட்ட சிராய்ப்புகள் என்றும், யாரும் அடித்து அதனால் ஏற்பட்ட காயங்கள் அல்ல என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். பிரேத விசாரணை நடத்தி உடலை தென்காசி அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக கோட்டாட்சியர் அனுப்பியதாகவும், தென்காசி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்து முடித்து உறவினர்களிடம் ஒப்புடைக்கப்பட்டு 3-5-2000 அன்று இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது என்றும், உடல் உள்உறுப்புகள்

இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன என்றும் தென்காசி கோட்டாட்சியர் தமது விசாரணையிலே தெரிவித்துள்ளார். ராமர் மரணம் குறித்து காவல் துறைத் தரப்பில், அவர் விஷம் அருந்தி இறந்ததாகவும், ராமர் தரப்பைச் சேர்ந்தவர்கள் காவல் துறையினரின் தாக்குதல் காரணமாக இறந்ததாகவும் கூறுவதால் இந்தச் சம்பவம் குறித்து காவல் நிலை ஆணை எண் 145-ன்கீழ் விரிவான விசாரணை நடத்த உத்தரவிடலாம் எனத் தெரிவித்ததன்பேரில் காவல் நிலை ஆணை 145-ன்கீழ் தென்காசி கோட்டாட்சித் தலைவரின் மேல்விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், விசாரணையை இரண்டு வார காலத்தில் முடிக்கும்படி தென்காசி கோட்டாட்சித் தலைவரைக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த விவரங்கள்தான் எனக்குக் கிடைத்துள்ளன. இதை வைத்து மேலும் விசாரணை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். என்ன subject?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முதல்வர் சொன்னதிலிருந்து.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஈஸ்வரன், நீங்கள் எப்படிப் பேசுவீர்கள்? மூன்று நாட்களாகக் கேட்டீர்கள். உங்களுக்கு அனுமதி கொடுத்து, உங்களைத்தான் கூப்பிட்டேன். அவைக்கு வருவதே இல்லை. சரி, சொல்லுங்கள்.

*முற்பகல் 9-55*

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முதலமைச்சர் அவர்கள் பதிலே சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பதில் சொன்ன பிறகு, திரு. ஈஸ்வரன், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்? இதுகுறித்து ஏதாவது இருந்தால், தனியாகச் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் பேசிய பிறகு உறுப்பினர் பேசுவது முறையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பேசியதற்குப் பிறகு எப்படிப் பேசுவீர்கள்?

**திரு. ரா. ஈஸ்வரன்:** சரி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கூறும்போது, உயர் அதிகாரிகள் கொடுத்த தகவலின்பேரில் நான் இதைப் பேசுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். மேலும் கோட்டாட்சியரை வைத்து ஒரு விசாரணைக் கமிஷன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே என்ன இருக்கிறது? முதலமைச்சர் தனக்கு வந்த தகவல்—எது உண்மை என்று எனக்குத் தெரியாது; வந்த தகவலைச் சொல்கிறேன்— என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நீங்கள் எதற்கு எழுந்திருக்கிறீர்கள்? இப்படி ஒவ்வொருவராக எழுந்தால் என்ன அர்த்தம்? இது சட்டசபையா, என்ன? (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டாட்சியரின் விசாரணை மூலம் நியாயம் கிடைக்காது. நீதிபதியை வைத்து விசாரணையை நடத்த வேண்டும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் நீதிபதி விசாரணை வேண்டும் என்று சொல்கிறார். அதை த.மா.கா. கேட்டால், நான் அதைப்பற்றி யோசிப்பேன்; கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் கேட்டால், அதைப்பற்றி யோசிப்பேன். 100 பேர் கும்பகோணம் மகாமகத்திலே இறந்தபோது நீதி விசாரணை வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்ட நேரத்தில், அதுமாத்திரமல்ல, அதற்காக வழக்கேகூட நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் தொடுத்தார்கள்; அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், அலட்சியப்படுத்திவிட்டு, D.R.O. விசாரணை போதும் என்று, 100 பேர் மகாமகக் குளத்திலே மூழ்கி இறந்து போனதற்குக் காரணமாக இருந்த ஜெயலலிதாவும் சசிகலாவும் அதற்கு இணங்கவில்லை என்பதை சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2000 மே 10

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை, தங்களிடம் ஓர் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இன்றைக்குக் காலையிலே தான் வந்து சொல்லி இருக்கிறீர்கள். உடனே நீங்களே தீர்ப்புச் சொல்லி, இவர் அடித்தார், அவர் அடித்தார் என்று சொன்னால், இது மரபுக்கு விரோதமான ஒரு செயல். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, காலையிலே தங்களுடைய அறையில் இதைப்பற்றி திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது, நான், தகவலை என்னிடம் சொல்லுங்கள்; நான் இன்றைக்கே அதைபபற்றி அதிகாரிகளிடத்தில் விசாரித்து, மற்றவர்களிடத்தில் விசாரித்து, நாளைக்கு நிச்சயமாக எடுத்துச் சொல்கிறேன் என்று தெரிவித்தேன். இப்படி ஒவ்வொரு நாளும் தங்கள் அறையிலே ஒரு தடவை நான் பிரச்சினைகளுக்கு பதில் சொல்வதும், இங்கே ஒரு முறை பதில் சொல்வதும் தேவைதானா என்பதைத் தாங்கள்தான் அறிவிக்க வேண்டும். எனவே, இப்போது அவர் இங்கே எடுத்து எழுப்பிய கருத்து அவை நடவடிக்கைக் குறிப்பிலே இடம் பெறலாமா என்பதற்கும் தாங்கள்தான் தீர்ப்பு வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கருத்து இடம் பெறாது. ஆனால், ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்; நாளை எடுக்கப்படும் என்பது அவைக்குறிப்பிலே இடம் பெறும். திரு. கே. சுப்பராயன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையின் வரம்பை மீறிப் பேசவில்லை.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 மே 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரம்பு மீறித்தான் பேசினீர்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Within the limit only, I am raising this.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னை வந்து கேட்டுவிட்டு, உங்களுக்குப் பதில் சொன்ன பிறகு, இங்கே raise பண்ணுவது proper ஆக இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குறிப்பிலிருந்து எடுக்கக் காரணம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காரணம், நாளைக்கு நான் எடுக்கிறேன் என்று சொன்ன பிறகு இங்கே raise பண்ணியதுதான். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கிறேன். டில்லி உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே, சென்னை மாநகராட்சி செயல்படாததால் மாநகரத்தைச் சார்ந்த சாலையோர வியாபாரிகள் 7 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; இன்றைக்குக் கோட்டையை நோக்கி ஊர்வலமாக, மாநில அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக வருகிறார்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் அவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், அதேநேரத்தில் அத்தகைய மாற்று இடம் அவர்கள் வியாபாரம் செய்வதற்கு உரிய இடமாக இருக்க வேண்டும் என்றும் ஒரு கோரிக்கையை முன்வைத்து, அதற்கு உரிய ஒரு Committee-யும் உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்டுவிட்டது. ஆனால், இன்னும் அதை மாநகராட்சி செயல்படுத்தவில்லை. எனவே, உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள Committee-யை சென்னை மாநகராட்சி செயல்பட வைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், இன்றைக்குக் காலையிலே வந்து அறிவிப்புக் கொடுக்கிறீர்கள்; உடனே, அவை கூடியவுடனே அதைப் பேசிவிடுகிறீர்கள். யார் பதில் சொல்ல முடியும்?

**திரு. கே. சுப்பராயன்:** இன்று காலையில் கொடுக்கவில்லை; கடந்த 2 தினங்களுக்கு முன்னர் நான் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறேன்;

[திரு. கே. சுப்பராயன்] [2000 மே 10

(குறுக்கீடு) நேற்று அல்லது முந்தாநாள் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மானியக் கோரிக்கையில் சேலம் Bus stand பிரச்சினை குறித்து நான் பேசிக்கொண்டிருந்தபோது, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் என்னை நோக்கி வந்து, என்னை தாக்குவதற்காக முயற்சித்தார்கள்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சற்று இருங்கள். (குறுக்கீடு) நான் சொல்லுகிறேன். (குறுக்கீடு) பிறகு நான் record-ல் ஏற்றமாட்டேன். நீங்கள் என்ன சொல்ல வேண்டுமென்றால், வேளாண்மைத் துறை அமைச்சர்மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்கார வேண்டும். நீங்கள் விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தால், நான் அமைச்சரை பதிலுக்கு விவரம் சொல்ல அனுமதிப்பேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையை உங்களிடம் கொடுத்திருக்கிறேன். அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். உரிமைக் குழுவிற்கு அனுப்பி எனக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்த உடனேயே நீங்களே தீர்ப்புச் சொன்னால், நான் இங்கே பேரவைத் தலைவராக இருப்பதில் அவசியம் இல்லை. நீங்கள் கொடுத்த பிரச்சினையைப் பார்த்து, அது உரிமை மீறலா, இல்லையா என்கிற என்னுடைய தீர்ப்பை, பின்னால் சொல்லுவேன்.

## 3. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுவின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள், திரு. கே. ரவி அருணன், குழுவின் தலைவர்.



2000 மே 10]

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1999-2000 ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தைந்தாவது முதல் முப்பத்தைந்தாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்), 2000 ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000–2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி**
**(ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்**
**(இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்**

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1319,54,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண 1947, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி, பெருமுகை, அலமேலுமங்காபுரம், வசூர் வெங்கடாவரம், சப்பங்கிநல்லூர், சதுப்பேரி, சிறுகாஞ்சி, கருகம்பத்தூர், கொணவட்டம் ஆகிய கிராமங்களில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் சிமெண்ட் சாலை, கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1319,54,04,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5097, திரு. நா. பெரியசாமி.



***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், பூமாலைப்பட்டி ஊராட்சியில் உள்ள முத்துராமலிங்கபுரத்திற்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் இடையேயுள்ள ஊருணியின் இருபுறங்களிலும் (மேற்கு, தெற்கு) சுற்றுச் சுவர்கள் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1319,54,04,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1670, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர், நல்லூர் பேரூராட்சி சுப்பிரமணிய நகர் பகுதியில் நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் சாக்கடை நீர் வெளியேற வழியில்லாமல் ஏரி போல தேங்கி நிற்பதை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3596, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி ஒன்றியம், கீழத்திருப்பாலக்குடி ஊராட்சியை இரண்டாகப் பிரித்து ஆலங்கோட்டை கிராமத்தை தலைமையிடமாகக்கொண்டு ஒரு புதிய ஊராட்சியை ஏற்படுத்தித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2178, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகளுக்கு ஒதுக்க வேண்டிய நிதி உரிய காலத்தில் ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1625, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், பெரிய புலியூர், தொட்டிப்பாளையம் ஆகிய ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1276, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, தச்சம்பட்டை தலைமை இடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தினை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3494, திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 353, திரு. கே. தங்கமணி.



**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியில், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து கீழப்பசளை (விலக்கு) சாலையை கிராம சாலைகள் திட்டத்தில் சேர்த்து சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4329, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கு வளர்ச்சிப் பணிகளை அதிக அளவில் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3737, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊரக வளர்ச்சித் துறையில் தற்காலிகமாக பணியாற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2392, திரு. எ. தெய்வநாயகம்.

[2000 மே 10

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1740, திரு. வி.கே. லட்சுமணன்.

*திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதி மூலம் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளை மேற்கொண்டு பராமரிக்கும் பொறுப்பை அந்தந்த உள்ளாட்சிகளே மேற்கொள்ள வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3411, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மயிலங்கோட்டை ஊராட்சி, கூடலிவயல் கிராமத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4084, திரு. பி.ஆர். சுந்தரம்.



2000 மே 10]

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தினை இரண்டாகப் பிரித்து மங்களபுரம் பகுதியில் ஒரு புதிய ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4198, திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 745, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2458, திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரத்தில் உள்ள அருள்மிகு நித்திய கல்யாணி மார்த்தாண்ட அம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 155, திரு. கே. ரவி அருணன்.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம்,

சடையப்பபுரம் கிராமத்தில் புதிதாக வாக்குச் சாவடி ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3117, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to include Hosur Block, Shoolagiri Block, Thally Block, Kelamangalam Block and Vepanampalli Block in the Hoganekkal rural water supply Scheme" I move—

"That the sum of Rs. 1319,54,04,000 allocated under Demand No. 27—Rural Development be reduced by Rs. 100".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2742, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1862, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நெல்லையப்பபுரம் ஆதிதிராவிடர்கள் குடியிருக்கும் இடத்திற்குச் சாலை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3555, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதிக்குட்பட்ட கிராமப்புற ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2836, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, நக்கம்பாடி பஞ்சாயத்தில் உள்ள நின்னியூரைப் பிரித்து தனி பஞ்சாயத்து ஆக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1319,54,04,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-05

### (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 126,79,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1903, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி, அல்லாபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம் மற்றும் சத்துவாச்சாரி பேரூராட்சிகளில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க பொன்னை ஆற்றில் இருந்து தண்ணீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4175, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊத்துக்குளி ஒன்றியப் பகுதி முழுவதையும் கொடிவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்த்து குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2867, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நகரம் மற்றும் கிராமத்திற்கான குடிநீர் பற்றாக்குறையினைப் போக்க மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் இருந்து நீர் எடுத்து மேற்படி பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3677, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூத்தாநல்லூர் நகராட்சிக்குத் தேவையான குடிநீர் வழங்கும் திட்டத்தினை உடனடியாக இவ்வாண்டே நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2275, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்திலுள்ள அம்மன் ஏரியிலிருந்து சுற்றியுள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2673, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, மைலம்பாடி, வைரமங்கலம், ஓரிச்சேரி, புன்னம், பருவாச்சி மற்றும் சின்னபுலியூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள ஊர்களுக்கு முழுமையாகக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1290, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3134, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை நகரின் மக்கள் தொகை பெருக்கத்தைக் கணக்கில் எடுத்து, மேலும் ஒரு குடிநீர்த் திட்டம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2408, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1994, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பில்லூரிலிருந்து கோவை மாநகராட்சிக்குத் தனியாக குழாய் அமைத்துக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3241, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதியில் உள்ள கடற்கரை பகுதி கிராமங்கள் அனைத்திற்கும் சேர்த்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தலின் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4129, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து கிராமங்களுக்கும் நவீன ரக பில்டர் பொருத்தி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2445, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனங்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட அண்ணாநகர், நெருஞ்சி காலனி, சாத்தான்குளம் காலனி, தளவாய்புரம், சொக்கலிங்கபுரம், பாஸ்கரா சிவலிங்க நாடார் காம்பவுண்ட், அழகியநம்பியாபுரம், சர்வோதயா காலனி, யாதவர் தெரு, பாஸ்கராபுரம், சிவகாமியாபுரம், புண்ணியவாளன்புரம், பாம்பன்குளம், முத்துசாமிபுரம், சின்னான்

காலனி, நாராயணவரம், ரோஸ்மியாபுரம் மற்றும் புதூர் ஆகிய கிராமங்களுக்கு உடனடியாகக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 187, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி மற்றும் மேலகரம், குற்றாலம், இலஞ்சி மற்றும் புதூர் பேரூராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டியதன அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2804, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2721, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள வழியோரக் கிராமங்களுக்கு சீவலப்பேரி தண்ணீர் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1886, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊர்களில் உள்ள இடையன்குளம், புலியக்குறிச்சி, ஜெ.ஜெ. நகர், சடையமான்குளம், சுப்பிரமணியபுரம் மெயின்ரோடு மற்றும் மேல்கரை ஆகிய ஊர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3548, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் தற்பொழுது நிறைவேற்றப்பட்டுவரும் குடிநீர்த் திட்டங்களை உடனடி பயனுக்குக் கொண்டு வரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 126,79,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4220, திரு. க. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2342, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

### (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 554,47,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண 1901, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4177, திரு. நா பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு நகராட்சிமன்றத்தில் அமரர் தியாகி ப. ஜீவானந்தம் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2866, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் கிராமப்புற குடிநீர் விநியோகத் திட்டத்தில் விடுபட்டுள்ள



குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் விநியோக இணைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3582, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி மற்றும் கூத்தாநல்லூர் நகராட்சிகளின் அடிப்படைத் தேவைகளை நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை மூலமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2280, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சிறு மேம்பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2676, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம் பவானி நகரில் அமைந்துள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயம், புண்ணியத் தலமாகவும், சுற்றுலாத் தலமாகவும் விளங்குவதால் அங்கு சாலைகளைச் செப்பனிட்டு சாக்கடை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3137, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2409, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2002, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகராட்சியில் 23-வது மற்றும் 24-வது வார்டுகளில் உள்ள சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3194, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடை



வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4130, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிவடைந்த அனைத்து நகராட்சிகளுக்கும் அரசு நிதி உதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2443, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள மேம்பாலத்தின் பழுதுபார்க்கும் பணி நடைபெறுவதன் காரணமாகப் பேருந்துகள் செல்லும் மாற்றுப் பாதையில் மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 554,47,67,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 188, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சியில் நகர்மன்ற அரங்கம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும், செங்கோட்டை பூங்காவைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய *49* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *554,47,67,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2803*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய *49* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *554,47,67,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4296*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் உள்ள பேருந்து நிலையம் நெருக்கடியாகவும், குறுகலாகவும், சுகாதார வசதியற்றும் உள்ளதால் பேரூராட்சி எல்லைக்குள்ளேயே நவீன கழிப்பிட வசதியுடன்கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய *49* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *554,47,67,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3072*, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to provide street lights by the Hosur Municipality and Mathigiri Panchayat near TVS Nagar, Hosur" I move—

"That the sum of Rs. 554,47,67,000 allocated under Demand No. 49—Municipal Administration be reduced by Rs.100."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏராளமான உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேச வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கைகள் முக்கியமான கோரிக்கைகள் என்ற காரணத்தினால், நான் முழுவதும் சட்டமன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று முடிவெடுத்திருக்கிறோம். இதிலே, பட்டியலில் இருப்பவர்கள்போக, இன்னும் சில பேர்களுக்குக்கூட அனுமதி கொடுக்க முடியும். காரணம், முதன்முதலாக, எனக்குத் தெரிந்தமட்டில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தன்னுடைய பதவிக் காலத்திலே இந்த, இந்த வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்லி, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்த வேலைகள் பற்றிய குறிப்புகள் அடங்கிய நகலையும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, முதலிலே, பேரவைத் தலைவர் என்ற முறையிலே மட்டுமல்லாமல் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலேயும், நான் அவருக்கும்,

---

@*247* முதல் *383* வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II, மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

அவருடைய துறைக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்தக் குறிப்புகள் கையில் இருக்கிற காரணத்தினால், உறுப்பினர்கள், தங்கள் தொகுதியிலே என்ன நடந்தது, நடக்கவில்லை என்பதை மட்டும் பேசுவதுடன், ஒவ்வோர் உறுப்பினரும் 5 நிமிடங்களுக்குமேல் பேசாமல் இருந்தால், இன்னும் பல உறுப்பினர்கள் பேசுவதற்கு நிச்சயமாக வாய்ப்புக் கிடைக்கும். ஏனென்றால், இதிலே அரசியல் இருப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள், தங்களுடைய பேச்சை முறையாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் போக, நேரம் இருந்தால், இன்னும் சிலருக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும் என்பதையும் அறிவித்துக்கொள்கிறேன்.

முதலில், திரு. சின்னய்யா விவாதத்தைத் தொடங்கி வைப்பார்.

**திரு. வெ. சின்னய்யா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறைக்கு 1997-98-ல் அரசு 789 கோடி ரூபாய் ஒதுக்கியது. 1998-99-ல் 1,185.63 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. 1999-2000-ல், 1,225.7 கோடியாக உயர்ந்திருக்கிறது. 2000-2001-க்கு 1,319 கோடி ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த உள்ளாட்சித் துறைக்கு இவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தும், தமிழகத்திலே இப்போது ஊரக வளர்ச்சித் துறையினர் போராட்டத்திலே ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்தவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று எனது உரையிலே முன்னுரையாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊரக வளர்ச்சித் துறை நிருவாகம் கடந்த ஒரு வார காலமாக, தமிழகம் முழுவதும் ஸ்தம்பித்து இருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, அந்தப் போராட்டக் குழுவினரை அழைத்துப் பேசி, இதற்கு ஒரு சுமுகமான தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, நமது தமிழக அரசு சார்பில் உள்ளாட்சித் துறையிலே, பல்வேறு திட்டங்கள் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களையெல்லாம் உருவாக்கி, இந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று நினைக்கிற நேரத்தில், பெரியார் சமத்துவபுரம் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே பெரியார் சமத்துவபுரம் என்பது, துலையானூர் ஊராட்சியிலே அமைக்கப்பட்டது. கட்டிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட இரண்டு நாட்களில் விழுந்துவிட்டன. அத்தனை வீடுகளும் ஒழுகுகின்றன. இதற்குக் காரணம், நமது முதலமைச்சர் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதன் திறப்பு விழாவிலே கலந்துகொள்ளவில்லை. அதிகாரிகள் அவர்களாகவே யாருக்கும் தெரியாமல், தேர்தல் காலம் என்பதாலே, திறந்து வைத்துவிட்டார்கள். அந்தப் பகுதியை தயவுசெய்து நமது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வரும்போது பார்க்க வேண்டும். அந்த இடத்திலே சங்கம் கூடாது என்று சொல்கிறோம். ஆனால் சங்கம் வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே வீடு வைத்திருப்பவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கம் வைத்திருப்பவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னால், கட்டுப்பாடு என்று வைத்து, 2 பெண்களுக்கு 1,001 ரூபாய் அபராதம் விதித்திருக்கிறார்கள். ஆகவே, பெரியார் சமத்துவபுரம் என்பது என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

அடுத்து, இப்போது ஊராட்சித் துறையில், பல்வேறு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்பதால் நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 60 இலட்சம் ரூபாய் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள், பாராட்டுக்குரியது. ஆனால், கடந்த காலத்தில் 1 கிலோமீட்டர் சாலை அமைப்பதற்கு 3 இலட்சம் ரூபாய் என்றால், இந்த ஆண்டு கிலோமீட்டருக்கு 6 இலட்சம் ரூபாய் ஆகிறது. ஆகவே, ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு வழங்குகின்ற 60.00 இலட்சம் ரூபாய் என்பது, சாலையமைப்பதற்கும், குடிநீர் வழங்குவதற்கும்

போதுமானதாக இல்லை. எனவே, தயவுசெய்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் கலந்துபேசி 60 லட்சம் ரூபாயை 1 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலக் காடுகள் திட்டத்தின்கீழ், ஊராட்சிகளுக்கு வர வேண்டிய பணம் இன்னும் வரவில்லை. உதாரணமாக, கீழாநிலக்கோட்டை என்ற ஊராட்சியில் எனது தொகுதி இருக்கிறது. அந்த ஊராட்சிக்குச் சமூக நலக் காடுகள் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட பணம் இன்னும் வரவு வைக்கப்படவில்லை. அதை உடனடியாக வரவு வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, 11 சதவிகிதத் தொகை இப்போது பிடித்தம் செய்கிறார்கள். ஆனால், நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறைகளிலே 5 சதவிகிதம்தான் பிடிக்கிறார்கள். ஆகவே, 11 சதவிகிதத்தை 5 சதவிகிதமாகக் குறைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிமளம் ஒன்றியத்தில் தாஞ்சூர் என்ற ஊராட்சிக்குச் சொந்தமான ஊருணி ஒன்று இருக்கிறது. அந்த ஊராட்சி மன்றத்தினர் ஊருணியில் மீன் பிடிப்பதற்காக ஏலம் விடுகிறார்கள். தனியார் ஒருவர் ஊருணி தனக்குச் சொந்தம் என்று சொல்லி, அதை நிறுத்தி வைத்திருக்கிறார். இப்போது ஊராட்சி மன்றத்தால் அந்த ஊருணி ஏலம் விடப்படவில்லை. அதை உடனடியாக ஏலம் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், திருமயம் ஊராட்சியைப் பேரூராட்சியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தர வேண்டும். பொன்னமராவதி பேரூராட்சியை, நகராட்சியாகவும், தாலுகாவாகவும் ஆக்கித்தர வேண்டுமென்று நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அரிமளம் ஒன்றியத்திலே கடியாப்பட்டி ஊராட்சிக்கு அருகில், செட்டிப்பட்டி என்ற கிராமத்தில் காவிக்கல் கிடைக்கிறது. அதை வைத்து Paint தொழிற்சாலை அமைப்பதற்கான சூழ்நிலை இருக்கிறது. அதையும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்போது தெரு விளக்குகள் எரிய வேண்டுமென்று நாம் சொல்கிறோம். திருமயம் கூட்டுறவு மின்சார வாரியத்திலே ஏறத்தாழ 90 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. காலியிடங்கள் அதிகமாக இருப்பதால், கிராமங்களுக்கு நாங்கள் செல்கிறபோது அங்கே ஆளே இல்லை என்ற நிலைமை இருப்பதால், தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை. ஆகவே, அங்கேயுள்ள கிராமிய மின்சார வாரியத்தில் 90 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து பணி நிரந்தரம் செய்தால் அவர்கள் அந்தப் பணியைச் செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நேற்றையதினம் நமது சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது ஒவ்வொரு பிரச்சினையும் 30 நாட்களுக்குள், 60 நாட்களுக்குள் முடிக்கப்படும் என்று உறுதியாகச் சொன்னார்கள். பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலத்தாணியத்தில் ஊராட்சி மன்றத் தலைவர், 2 இலட்சம் ரூபாய் கையாடல் செய்தார் என்று 2 வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முன்னாலே இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அதுபற்றி நடவடிக்கை எடுத்தார். இப்போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால், 2 வருடம் ஆகிவிட்டது. அந்த மேலத்தாணியத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர் 2 இலட்சம் ரூபாய் கையாடல் செய்ததற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. 18 பேரிடம் விசாரணை நடத்தினார்கள். அந்த 18 பேரும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். தண்ணீர் வரி என்கிற வகையில் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 2,500 வீதம் வாங்கி 500 ரூபாய்க்கு மட்டும் ரசீது கொடுத்து, 2,000 ரூபாயை எடுத்திருக்கிறார்கள். அந்த 500 ரூபாய்க்கான ரசீதும் உண்மையான ரசீது அல்ல. அது போலியான ரசீது. A.D. (Panchayat) கையொப்பம் இல்லாமலேயே, அந்த ரசீதை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக, அந்த ஊராட்சி மன்றத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 250 ரூபாய் கையாடல் செய்ததற்காக மூன்று ஊராட்சி மன்றத் தலைவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார்கள். இரண்டு வருட காலமாக, இந்த ஊராட்சித் தலைவர்மீது நடவடிக்கை இல்லை. அங்கே மக்கள் சபையைக் கூட்டுவதில்லை.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரடியாக இதுபற்றித் தகவல் தெரிவித்தாரா? இரண்டு ஆண்டு காலம் பலமுறை என்னைச் சந்தித்தபோதும் என்னிடத்திலே இதுபற்றித் தகவலைத் தெரிவிக்கவில்லையே! எழுத்துமூலமாக நாளை காலையில் கொடுப்பார்களேயானால், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வெ. சின்னய்யா:** அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேதான் file pending ஆக இருக்கிறது. A.D. (Panchayat) அனுப்பியிருக்கிறார், 15 குற்றச்சாட்டுகளைச் சுமத்தி நாளை எழுதித் தருகிறேன். நிச்சயமாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஊராட்சிகளிலே தெருக்களில் பெயர் எழுதுவதில்லை. முன்காலத்திலே ஊர்களில் தெருப் பெயர்கள் எழுதப்பட்டதால், இந்தப் பகுதி, இன்ன நம்பர் என்று சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** இப்போது தெருக்களின் பெயர் எழுதுவதற்குக்கூட முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. நகராட்சிகளில் வரி விதிப்புக் கொள்கையில் appeal செய்வதைப் பொறுத்தவரையில் முன்பு ஓர் ஆண்டுக்கு இரண்டுமுறை appeal செய்யலாம் என்று இருந்ததை, இப்போது 5 வருடங்களுக்கு ஒரு முறை என்று மாற்றியிருக்கிறீர்கள். தயவுசெய்து, appeal என்பதை ஓர் ஆண்டு காலத்திற்குள்ளே செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகராட்சியில் காவிரிக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஏறத்தாழ 40 கோடி ரூபாய் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அதிலே 10 கோடி ரூபாய் மானியம். மீதி 30 கோடி ரூபாயை இப்போது அரசாங்கத்திற்குக் கட்ட முடியாத சூழ்நிலை இருப்பதால், அந்த ரூபாயைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மேலூர் நகராட்சியில் நேர்மையான, திறமையான குமரேசன் என்கிற அதிகாரி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக எடுத்த நடவடிக்கைக்காக மாற்றப்பட்டு இருக்கிறார். ஒரு நேர்மையான அதிகாரியை இந்த அரசு மாற்றியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளரும் நகரச் செயலாளரும் இதிலே ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த அதிகாரி இப்போது stay வாங்கியிருக்கிறார். அப்படி இருந்தும், அவர் இன்னும் பணியிலே அமர்த்தப்படவில்லை. இந்த அராஜகத்தைக் கைவிட்டு, உடனடியாக அவர் பணி நியமனம் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டு ஒன்றியம், சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய பேச்சை முடியுங்கள். தண்டராம்பட்டுக்காரருக்கு நான் அனுமதி கொடுக்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வெ. சின்னய்யா:** இப்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் மிக அவசியம். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூடுவதற்கு மீண்டும் ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### உறுப்பினர்களுக்கு நண்பகல் உணவு மற்றும் தேநீர் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாமக்கல் கவிஞர் மாளிகையில், 10-வது மாடியில் உள்ள உணவுக் கூடத்தில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்றைக்கு நண்பகல் உணவு வழங்கவும், பிற்பகல் 4-00 மணி முதல் 4-30 மணி வரை பேரவை மண்டபத்தை ஒட்டியுள்ள பிளாசாவில் தேநீர் , வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 மே 10

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

### (இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் தொடரும். திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு, மாணபுமிகு முதல்வர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகள் பற்றிய மிக முக்கியமான மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிராம மக்கள், நகர மக்கள், மாநகர மக்கள் ஆகிய அனைவருக்கும் அடிப்படைத் தேவைகளை அன்றாடம் நிறைவேற்றிக் கொடுக்க, மிக முனைப்போடு செயலாற்றி வருகின்ற, இந்தத் துறையையும், செயலாளரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உள்ளாட்சி அமைப்பு முறை, மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 1,319 கோடிக்கு மேலான தொகை வழங்கப்பட்டு, சுமார், 1 இலட்சத்து 17 ஆயிரம் மக்கள் பிரதிநிதிகளைக்கொண்டு, 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கும் 650க்கு மேற்பட்ட பேரூராட்சிகளுக்கும் 355 ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக உள்ளாட்சி அமைப்புகள் சிறப்பாக மக்கள் சேவை செய்து வருகின்றன. முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்காத உள்ளாட்சிகளின் தொடர்பு, இப்போது கிடைத்திருக்கிறது. குறிப்பாக மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவம் கிடைத்த வகையிலே அவர்களும் சிறப்பான முறையிலே பணியாற்றி வருகிறார்கள். கிராமப்புறங்களில் உள் கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் சுய



வேலைவாய்ப்புத் திட்டங்கள் மற்றும் கூலி வேலைவாய்ப்புத் திட்டங்கள் மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் இப்போது வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களின் எண்ணிக்கைக் குறைந்து, அவர்கள் வருவாய் பெருகி இருப்பதால் இதனை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினால் கடந்த 3 ஆண்டுகளில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலேயும் 3 கிராமங்கள் தன்னிறைவு பெறும் வகையில் 80, 90 விழுக்காடு பணிகள் முற்றிலுமாக நிறைவேற்றப்பட்டு, அந்தக் கிராமங்கள் பாதை வசதி, சாக்கடை வசதி மற்றும் குடிநீர் வசதி பெற்று சிறப்பாகத் திகழ்கின்றன.

முற்பகல் 10-25

நமக்கு நாமே திட்டமும் மக்களின் பங்கேற்போடு நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், வாழ்க்கையில் மிக மிக பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன்பெறுவதோடு, அனைத்து ஜாதி, மத மக்களும், சகோதரர்களாக வாழ வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** சரி, சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசின் வருவாயில் 8 விழுக்காடு வழங்கப்பட்டுள்ளதால், சிறிய, சிறிய ஊராட்சிகள் நல்ல பலன் பெற்றுள்ளன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான விசைப் பம்புகளை இயக்க மற்றும் மின்சார விளக்குகளுக்குச் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணங்களைக் கட்ட முடியாத ஊராட்சிகள்கூட இப்போது இந்த வருவாயால் நல்ல நிலையில் இருந்து வருகின்றன. கிராமப்புற குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதில், அரசும், குடிநீர் வடிகால் வாரியமும் முனைப்போடு செயல்பட்டு வருவதால், கடந்த 4 ஆண்டுகளில் 80 சதவிகித கிராமக் குடியிருப்புகள் நல்ல பலன் பெற்றுள்ளன. 500 மக்கள் தொகை, 1,000 மக்கள்தொகையுள்ள கிராமங்களுக்கும் பாதை வசதி அமைத்துக் கொடுக்கப்பட்டு, பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளன.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் அரசின் நிதிப் பங்கீடு ஆண்டுக்காண்டு அதிகப்படுத்தப்பட்டு வருவதாலும், கேளிக்கை வரி,

முத்திரைக் கட்டணம் ஆகிய வருவாய் வருவதாலும் அவற்றைக் கொண்டு மிகச் சிறப்பாக, அடிப்படை வசதிகளைச் செய்து வருகின்றன. அந்தவகையிலே என்னுடைய தொகுதியிலே திருச்செங்கோடு நகராட்சியும் குமாரபாளையம் நகராட்சியும் நல்ல முறையில் பணிகளை ஆற்றி வருகின்றன. நகராட்சிகளில் உள்ள 7,163.84 கிலோமீட்டர் சாலைகள் தார்ச் சாலைகளாக ஆக்கப்பட்டுவிட்டன என்றும், 700 கிலோமீட்டர் சாலைகள் மட்டும் மண் சாலைகளாக இருக்கின்றன என்றும் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் நடப்பாண்டில் தார்ச் சாலைகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருப்பது மிக்க மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும்.

கடந்த 4 ஆண்டுகால கழக ஆட்சியிலே குடிநீர் வடிகால் வாரியம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. கிராமக் குடிநீர்த் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், பேரூராட்சி மற்றும் நகராட்சி குடிநீர் முன்னேற்றத் திட்டங்கள், பொன்விழா குடிநீர்த் திட்டங்கள் ஆகியவை போர்க்கால வேலைகள் போல நடைபெற்று வருகின்றன. அதைக் குறை கூறுவது என்றால், நன்றிகெட்ட செயலாகக் கருத வேண்டும். என்னுடைய தொகுதியிலே, திருச்செங்கோடு பொன்விழா குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.14.6 கோடி செலவிலே 50 விழுக்காடு மானியமாகக் கொடுக்கப்பட்டதற்கு என்னுடைய திருச்செங்கோடு நகர மக்களின் சார்பிலும், என்னுடைய சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பள்ளிப்பாளையம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 189 கிராமக் குடியிருப்புகள் பயன் அடையவுள்ள கலியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்ட வேலைகள் 80 விழுக்காடு முடிந்த நிலையில் உள்ளதை ஜூன் 2000-த்திற்குள் முடித்து, கோடைக்குமுன் மக்கள் பயன் அடைய உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், காடச்சநல்லூர் அண்ணா நகர்த் திட்டம், குமாரபாளையம் நகராட்சி அபிவிருத்தித் திட்டம், ராஜீவ் காந்தி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை விரைந்து முடித்து மக்கள் பயன் அடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது)



முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. லி. அய்யலுசாமி, (குறுக்கீடு) நீங்கள் 1,2,3,4 நிமிடங்கள் என்று சொல்லிக் கொண்டே போவீர்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** பள்ளிப்பாளையம், திருச்செங்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 131 கிராமக் குடியிருப்புகள் பயனடையும் திட்டத்தின்கீழ் ஆய்வுப் பணிகளை விரைவில் முடித்து அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியிலே பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையம் ஆகிய இடங்களில் கிலோமீட்டர் 19/6-லும் 28/10-லும் நெடுஞ்சாலையிலே கட்டப்படும் இரு பாலங்களின் வேலைகள் தாமதமாக நடைபெற்று வருகின்றன. அவற்றை விரைவில் முடித்து மக்களின் போக்குவரத்துக் கஷ்டத்தைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிப்பாளையம், குமாரபாளையம் ஆகிய நகராட்சிகளின் கழிவு நீரைச் சுத்தம் செய்து, காவிரி ஆற்றில் சுத்தமான நீராக விடுகின்ற சுத்திகரிப்புத் திட்டம் மிக வேகமாக நடைபெற வேண்டும், அதற்கான முனைப்பான வேலைகள் நடைபெற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொண்டு, என்னுடைய தொகுதி விஷயமாக முதலில் பேசுகிறேன்.

லிங்கம்பட்டி ஊராட்சியில் குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலமாக ஒரு விசைப் பம்பும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக ஒரு விசைப் பம்பும் ஆக மொத்தத்தில் இரு விசைப் பம்புகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. வறட்சியின் காரணமாக தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, இப்போது அந்தத் தண்ணீரும் உப்புத் தண்ணீராக மாறக்கூடிய நிலையில், நல்ல தண்ணீர் கொண்டுவருவதற்குச் சமத்துவபுரத்தில் நீராதாரத்தைக்

கண்டிபிடித்து, நல்ல நீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குலசேகரபுரம் ஊராட்சியில் விசைப் பம்பு ஒன்று குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கும் இப்போது வறட்சியின் காரணமாகக் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு இருப்பதனால், அதுவும் உப்பு நீராக மாறக்கூடிய சூழ்நிலை இருப்பதனால் அங்கும் சமத்துவபுரம் பகுதியில் நீராதாரத்தைக் கண்டுபிடித்து, நல்ல குடிதண்ணீரைக் கொடுக்கும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீத்தாம்பட்டி குடிதண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் விஷப் பம்பு மூலமாகத் தண்ணீர் ஏற்றப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்வது விசைப் பம்பு. அதை விஷப் பம்பு என்று எழுதிவிடாதீர்கள். *(சிரிப்பு)*

**திரு. லி. அய்யலுசாமி:** விசைப் பம்புதான். *(பலத்த சிரிப்பு)* அந்த விசைப் பம்பு மூலம் தீத்தாம்பட்டி கிராமத்திற்கும் குடிதண்ணீர் Supply செய்யப்படுகிறது. அதுவும் உப்பு நீராக மாறியிருப்பதால், அங்கு வேறு நல்ல நீராதாரத்தைக் கண்டுபிடித்து, அங்கும் நல்ல குடிநீரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 2000 ஆண்டில் குருவிக்குளம் ஒன்றியம் குடிநீர்த் திட்டத்தில் தாங்கள் கொடுத்த குறிப்பில் சங்குபட்டி மட்டும் இடம் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே மைல்பாறை குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும், அதேமாதிரி, ஆண்டிப்பட்டி குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும் எனக்குக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதையும் இந்த ஆண்டு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வரகனூர், குளக்கட்டாகுறிச்சி, பழைய அப்பநேரி கிராமங்களிலும் குடிநீர் கிடையாது. அங்கேயும் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பாளையங்கோட்டை, மானூர், சங்கரன்கோவில், குருவிகுளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். கோவில்பட்டி தொகுதியில் உள்ள குருவிகுளம் ஒன்றியத்தில் 21 ஊராட்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதுபோல 388 கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்தும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 10-35*

அடுத்து, கோவில்பட்டி குடிநீர்த் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. கிராமப் பகுதிகளிலிருந்து கோவில்பட்டி நகரத்திற்கு பிழைப்பிற்காக நிறைய மக்கள் குடியேறி மக்கள் பெருக்கம் அதிகரித்ததால் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 60 வழியோரக் கிராமங்களையும் கயத்தார், கழுகுமலை ஆகிய இரண்டு பேரூராட்சிகளையும் அந்தத் திட்டத்திலே சேர்த்து புதிதாகத் திட்டம் உருவாக்கப்படுவதாக நான் அறிகிறேன். அந்தத் திட்டத்தை உடனடியாக அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தரும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், தருமபுரி மாவட்டத்தில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக அமல் நடத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலுள்ள ஒன்றியச் சாலைகள் பழுது அடைந்தால் விரைவாகச் சீர்செய்து கொடுக்கிறார்கள். சீர்செய்யப்படாத மீதி உள்ள சாலைகளையும் இந்த ஆண்டு தனி சிறப்புக் கவனம் செலுத்தி, தனி நிதி ஒதுக்கி, சீர் செய்து தரும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளைச் செய்ய தனியாருக்கு contract விடுவதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன். நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் தினக்கூலிகளாகப் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். காலியாக உள்ள சுகாதாரப் பணியாளர்களின் பணியிடங்களை.......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** உறுப்பினர் அவர்கள் நியாயமான கோரிக்கைகளை எப்போதும் பேசிப் பழக்கப்பட்டவர். அதற்கு நியாயமாகவே நான் அவருக்குப் பதிலைச் சொல்கிறேன். இதுவரை அந்தத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு வேறு காரணங்களாலோ அல்லது ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டாலோ எந்த விதமான பணிப் பாதிப்பும் நிச்சயம் ஏற்படாது என்று இந்த அவையில் உறுதி தருகிறேன்.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. மக்கள் நலப் பணியாளர்களுக்கு அந்தந்த ஊராட்சி நிர்வாகங்களின்கீழ் கடமையும், பொறுப்பும் கொடுத்து பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

ஊராட்சி எழுத்தாளர்கள் பகுதி நேரப் பணியாளர்களாக வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வீட்டு வரியையும் தொழில் வரியையும் வசூல் செய்வதுடன், ஊராட்சியின் 32 ஆவணங்களையும் பராமரிக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. ஆகவே, அவர்களை முழு நேரப் பணியாளர்களாக அங்கீகரித்து முழுநேர ஊதியம் வழங்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தருமபுரி மாவட்டத்தில் தளி ஒன்றியத்தில் உள்ள சில ஊராட்சிகளையும், கெலமங்களம் ஒன்றியத்தில் உள்ள சில ஊராட்சிகளையும், பிரித்து அஞ்சப்பட்டியை மையமாக வைத்து அஞ்சப்பட்டி ஒன்றியத்தைத் தொடங்க வேண்டும். அதற்கான செயற்குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் அரசுக்கு வந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிஷம். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தொகுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் பற்றிய விவரங்களை எல்லாம் பட்டியலாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் உள்ள விவரங்களில் என்னுடைய தொகுதியில் உள்ள 21 பஞ்சாயத்துகளில் குருவிகுளம் பஞ்சாயத்திற்கான விவரங்கள் வரவில்லை. அது எப்படி விடுபட்டுப்போனது என்று தெரியவில்லை. அதற்கு மேலே அங்கே சென்றுதான் நான் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 10-40*

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய செயல்பாடு சிறப்பாக உள்ளது. குறிப்பாக, தமிழகத்தினுடைய குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்கள் சிறப்பாகச் செயலாற்றுகிறார்கள். அவர்கள் சிறப்பான பட்டியலைக் கொடுத்ததற்காக அவருடைய சிறப்பான பணியைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜு.

***திரு. எஸ். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய என்னுடைய அன்புத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய பேச்சைத் தொடங்குகின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்



குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துச்சொல்கின்ற வாய்ப்பை வழங்கிய நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அவரவர்களுடைய சட்டமன்றத் தொகுதிகளில் ஆற்றியுள்ள பணிகள், கழக அரசு ஆற்றியுள்ள சாதனைகள் அடங்கிய பட்டியல் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனைகளைத் தொகுத்துக் கொடுத்தார்கள். இந்த ஆண்டு தொகுதிகளிலே ஆற்றியுள்ள சாதனைகளைப் பட்டியல் போட்டு, அப்பட்டியலை எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தமட்டில் இங்கே கட்சிகளுக்கு இடமில்லை என்று சொன்னார்கள். "உள்ளாட்சி மன்றங்கள் கொடிகள் பறக்கும் கோபுரம் அல்ல; மக்கள் குறை தீர்க்கும் மணிமண்டபம். கட்சிகளின் கூடாரம் அல்ல; கருத்துள்ளோர் சேர்ந்து கடமையாற்றுகின்ற மக்கள் மன்றம்" என்று அதைப்பற்றி ஒரு காலத்திலே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலேதான் இப்போது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், கலைஞர் அவர்களின் அரசாங்கம், செயல்படுவதுடன் உள்ளாட்சி மன்றங்கள் ஆக்கப் பணிகளை நிறைவேற்றுவதிலே கட்சிக் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையிலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலே 3 அடுக்கு முறை புகுத்தப்பட்டு முதல் முறையாக அது அமலுக்கு வந்திருக்கிறது. இந்த 3 அடுக்கு முறையினால் பல்வேறு முரண்பாடுகள் உருவாகியிருக்கின்றன. காரணம், ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மிகுந்த முரண்பாடுகள் உள்ளன. அதேநேரத்திலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி, மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, ஊராட்சி மன்ற உறுப்பினர் நிதி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் நிதி, ஒன்றியக் குழு உறுப்பினர் நிதி இப்படிப்பட்ட நிதிகள் யாவும் ஒருங்கிணைந்து செயல்படாமல்

பல்வேறு முறைகளிலே, திட்டங்கள் செயல்படுகின்ற காரணத்தினால், ஆங்காங்கே ஒருசில இடங்களிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் பல இடங்களிலே அவை நிறைவேற்றப்படுவதிலே சிரமங்கள் உருவாகியிருக்கின்றன. பரவலாக அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும்கூட ஒன்றுக்கொன்று ஒருங்கிணைப்பு தேவை என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். அதேநேரத்திலே, உள்ளாட்சி மன்றப் பணிகளை நிறைவேற்றுவதிலே ஊராட்சி மன்றமும், தொகுதிவாரியாக ஊராட்சி மன்றத் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களும், மாவட்டத்தில் அந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட உறுப்பினரும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்களும் மற்றும் பேரூராட்சி, நகராட்சி, உறுப்பினர்கள் அடங்கிய ஓர் ஒருங்கிணைப்புக் குழு —Co-ordination Committee—அமைக்கப்பட்டு அதன்மூலம் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமும், ஒருவருக்கொருவர் கலந்துபேசி முடிவெடுத்தால்தான் நிதிகளைப் பரவலாக தொகுதிகளிலே செலவிட முடியும் என்ற என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்கள் ஒரு இலட்சம் ரூபாய் அளவிலே பணிகளை கிராம நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்று, தனியார் பொறியாளர்களை வைத்துச் செய்யலாம் என்று தமிழக அரசு, விதி வகுத்து இருக்கிறது. அதிலே சிறிய திருத்தம் செய்யப்பட வேண்டும். இப்படி உள்ளாட்சி மன்றங்களின்மூலம் பெரிய திட்டங்களை நாம் செய்து வந்தாலும்கூட ஒருசில கிராமங்களிலே பிரச்சினைகள் வருமானால், அந்த மக்கள் வருகின்ற இடம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அல்லது வீடு. தண்ணீர் இல்லை, விளக்கு இல்லை, சாலை வசதி இல்லை என்றெல்லாம் குறைபாடுகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதனாலே ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட ஊராட்சியும், நகராட்சிகளும் இணைந்து பணியாற்றுவதுடன், சட்டமன்ற உறுப்பினரோடு திட்டங்கள் குறித்து கலந்துபேசி முடிவெடுத்தால் நல்லமுறையில் பல திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

முற்பகல் 10-45

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே பொள்ளாச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். காரணம் இந்தத் திட்டத்திலே கிணத்துக்கடவு தொகுதி



முழுவதும் அடங்குகிறது. அதேபோல தாராபுரம் சட்டமன்றத் தொகுதியிலே குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியமும் இடம்பெறுகிறது. எனவே, பொள்ளாச்சிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அதேபோன்று, பொள்ளாச்சி நகராட்சி மன்றத்திற்கு அருகிலே ஒரு மத்திய பேருந்து நிலையத்தை உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டும். அதற்கான அரசாணை கிடைத்துவிட்டது. அதற்கான நிர்வாக அனுமதி—administrative sanction—உடனடியாக வழங்கப்பட்டு மேற்படி பேருந்து நிலையம் கட்டும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். கடந்தகால ஆட்சியிலே தனி அதிகாரிகளின் தர்பார் நடைபோட்டுக் கொண்டிருந்தது. உதாரணமாக, அன்று வருவாய் எல்லாம் முடக்கப்பட்டு பல முன்னேற்றத் திட்டங்கள் பாழ்பட்டுப் போயின. ஆனால் நம்முடைய கலைஞர் அரசு வந்ததற்குப் பின்னாலே உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டு, வருவாய்கூட, தனி அதிகாரிகள் காலத்திலே இருந்ததைவிடக் கூடியுள்ளது. உதாரணமாக, எங்களுடைய பொள்ளாச்சி நகராட்சியைப் பொறுத்தமட்டில் 1992 முதல் 1996 வரை நான்கு ஆண்டுகளில் வருவாய் ரூ. 329 இலட்சம் ஆகும். ஆனால் நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பின்னாலே 1996-97 முதல் 1999-2000 வரை வருவாய் ரூ. 530 இலட்சம் ஆகும். ஏறக்குறைய 200 இலட்சம் ரூபாய் நம்முடைய பொது ஏலத்தின்மூலம் கூடுதலாக (non-tax item) வருமானத்தை நகராட்சி மன்றங்கள் பெருக்கி இருக்கின்றன. இப்படிப்பட்ட நல்ல நிர்வாகத் திட்டங்களை எல்லாம் நம்முடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்.

**திரு. எஸ். ராஜு:** என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதியைப் பற்றி முதலிலேயே பேச வேண்டும்; நாட்டைப் பற்றி முதலிலே பேச வேண்டியதில்லை. முதலில் உங்கள் தொகுதியைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. எஸ். ராஜு:** சரி. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே என்னுடைய தொகுதிக்கு ஒரு சார்பு நீதிமன்றம் வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆலடி அருணா அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொள்ளாச்சிப் பகுதியை மையமாகக் கொண்டு வாழ்ந்துவருகிற பரம்பிக்குளம் ஆழியாறு பகுதி விவசாயிகள் ஒரு மடை விட்டு ஒரு மடைப் பாசனம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக கலைஞர் அவர்கள் ஆணையிட்டு அதற்கான அரசாணையைப் பிறப்பித்ததற்கும் எனது தொகுதி மக்கள் சார்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொள்ளாச்சித் தொகுதியிலே அமைந்திருக்கின்ற ஆனைமலை காவல் எல்லையை இரண்டாகப் பிரித்து ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுகிறேன். ஆனைமலையிலே ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன். ஆனைமலை நல்லாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பொள்ளாச்சி நகராட்சியை—நகர ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (City Corporate Plan) அடிப்படையிலே எடுத்து நவீனமுறையிலே உருவாக்கத் திட்டமிட்டு, ஆணையிட்ட நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களுக்கும் இந்தநேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 103 நகராட்சிகளில் முதல் முறையாக மின் மயானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொள்ளாச்சி நகராட்சி மன்றமும், பொள்ளாச்சி சுழற் சங்கமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கி இப்போது அது வெற்றிகரமாக அங்கே நிறைவேற்றப்பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-50

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த அளவில், எங்களுடைய சங்கரன்கோவில் தொகுதியில், ஆலங்குளம் வழியோரக் கிராமங்களுக்கு சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகச் சங்கரன்கோவில் பகுதிக்கு வருகின்ற தண்ணீர் பாதிக்காத அளவில் தனித் திட்டமாக ஒதுக்கித்தர வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க, அதன்மூலம் இன்னும் பணிகள் வேகமாக நடைபெறவில்லை. உடனடியாக வேகமாகப் பணிகள் நடைபெற்று, பக்கத்துக் கிராமங்களுக்கும், குடிநீர் இல்லாத கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டும். சங்கரன்கோவில் நகருக்கு தண்ணீர் இப்போது 10 நாட்கள், 12 நாட்களுக்கு ஒருமுறைதான் வழங்கப்பட்டு வருகிறது. கோடைக்காலம் தொடங்கிவிட்டதன் காரணமாகக் கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சங்கரன்கோவில் நகராட்சிக் கீழ்ப்பகுதியில் கட்டி முழுநேரமும் தண்ணீரை விநியோகிக்கின்ற அளவில் வழிவகை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்கின்றேன்.

தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக சங்கரன்கோவில் ஒன்றியப் பகுதியில் உள்ள திருவெட்டநல்லூர் ஊராட்சி, அரியநாயகபுரம் ஊராட்சி, மடத்துப்பட்டி ஊராட்சி, கீழவீரசிகாமணி ஊராட்சி ஆகிய நான்கு ஊராட்சிகளும் சேர்த்துக்கொள்ளப்படும் என்று முதலில் குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்போது அந்த நான்கு ஊராட்சிகளும் விடுபட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது. எனவே உடனடியாக அந்த நான்கு ஊராட்சிகளையும் சேர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் தனித் திட்டமாகவே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, அதன் அடிப்படையில் மறுபடியும் நானே நேரில் சென்று பரிசீலனை செய்து அந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வேகமாக என்று சொன்னால், அதிலே ஒன்றும் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், வேகமாகத்தான் நிறைவேற்றப்படுகிறது. 10 நாட்கள், 15 நாட்கள் விட்டு தண்ணீர் கொடுப்பது என்பது தவறு. 2 நாட்கள், 3 நாட்களுக்கு ஒருமுறை அங்கே தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவாக அதையும் நீக்குவதற்கான

நடவடிக்கையை எடுப்பதற்காகத்தான் இந்தத் திட்டம். இன்னும் சொல்கிறேன், விடுபட்ட கிராமங்கள் இருப்பதாகச் சொல்கிறார். அப்படியிருந்தால் என்னிடத்திலே தெரிவியுங்கள் என்றுகூட நானே கேட்டிருக்கிறேன். அப்படி எந்தக் கிராமமும் விடுபட்டதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே, அவர்களுடைய காலத்திலேதான் 2 கிலோமீட்டருக்கு மேல் இருந்தால் எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற நிலை இருந்தது. அதை இரத்து செய்து இருக்கிறோம். நிச்சயமாக அந்த வழியோரக் கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வேறு வழியில்லை என்றால் அந்தத் திட்டத்தில் சேர்த்து தண்ணீர் கொடுக்கப்படும்.

**திரு. சொ. கருப்பசாமி:** ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சில கிராமங்களில் குடிநீர் வசதி இல்லாமல், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக borewell போடுவதற்காக இடங்களைத் தேர்வு செய்கின்ற சூழ்நிலையில் பக்கத்து ஊராட்சிகளைச் சேர்ந்தவர்கள், இங்கே குடிநீர் ஆழ்துளைக் குழாய் அமைத்தால், எங்கள் பகுதி குடிநீர், விவசாயம் போன்றவை பாதிக்கும் என்ற எண்ணத்தை உருவாக்கி அதை தடைபடுத்தி நிறுத்திவிடுகிறார்கள். எனவே உடனடியாக மாற்று இடங்களில் அந்த ஊராட்சிப் பகுதிகளிலேயே, அந்தந்த கிராமப் பகுதிகளிலேயே ஆழ்துளைக் குழாய்களை அமைக்க வேண்டும். இவற்றை தாமதப்படுத்துவதன் மூலமாக, சில கிராமங்களில், குறிப்பாக மேலநல்லூர் ஒன்றியப் பகுதிகளிலும், மடத்துப்பட்டி கிராமத்திலும் உள்ள மக்கள் பாராளுமன்றத் தேர்தலின்போது, நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று சொன்ன சூழ்நிலையெல்லாம் உருவானது. அந்தக் கிராமத்திற்காக, சட்டமன்ற உறுப்பினர் நிதியை நான் வழங்கியபோதிலும்கூட, அது இன்னும் நிறைவேறவில்லை, எனவே உடனடியாக அங்குள்ள குடிநீர் பிரச்சினைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னுரிமை கொடுத்து, அந்த வேலையைச் செய்வதற்கு உத்தரவு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, தொகுப்பு வீடுகள் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி முகமை மூலமாகக் கட்டப்படுகின்றன. அந்தத் தொகுப்பு வீடுகள் 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. சமத்துவபுரத்தில் உருவாகின்ற தொகுப்பு வீட்டிற்கு 42 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக கட்டப்படுகின்ற தொகுப்பு வீட்டிற்கு.......



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் ஒன்றாகக் கருதி குழப்பிக் கொள்ளக்கூடாது. இதை ஆதிதிராவிடர் நலத் துறையிலேயிருந்து கொடுக்கிறார்கள். அந்தச் சமத்துவபுரத் திட்டத்தில் 10 ஆயிரம் ரூபாய் கடனாகத் தருகிறார்கள். இல்லாவிட்டால் பயனாளிகளிடத்திலிருந்து நன்கொடையாகப் பெற்று அதைச் சேர்த்து செய்கிறார்கள். இப்படித்தான் அந்தத் தொகை உயர்ந்திருக்கிறதே தவிர அரசு மூலமாக அதற்கு எந்தவிதமான தனித் தொகையும் கூட்டியோ, குறைத்தோ நிச்சயமாகக் கொடுக்கவில்லை. அதை மட்டும் தயவுசெய்து கவனத்தில்கொண்டு, வேறு எங்கேயாவது இப்படி மாறுபட்ட கருத்துகள் இருந்தால், அதைத் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 10-55*

**திரு. சொ. கருப்பசாமி:** தொகுப்பு வீட்டுக்கு கட்டுமானப் பொருட்களை எடுத்துக்கொண்டு வருவதற்கு ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள்தான் வீடு இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால் சமத்துவபுரம் வீட்டுக்கு அப்படிப்பட்ட அளவுகோல் கிடையாது. ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு பொறியாளர்களும், இரண்டு பணி மேற்பார்வையாளர்களும் மட்டும் இருக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் எங்கே என்று கேட்டால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு கூட்டத்திற்குச் சென்று இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தப் பணிகள் நடக்கும்போது அந்தப் பொறியாளர்கள் நேரடியாகப் பார்வையிட்டால் அந்த வீடுகள் முறையாக, நல்லமுறையில் கட்டப்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அமைச்சர் அவர்கள் வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் வருகிறார், ஆகவே, உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டுமென்று சொல்லி அவசரமாக பணிகளைச் செய்வதன் காரணமாக அந்த வீடுகள் எல்லாம் ஒழுகும் நிலையில் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

எங்களுடைய சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் கோவிந்தபேரி தெப்பம் என்று ஒரு தெப்பம் இருக்கிறது. அந்தத் தெப்பத்தை அந்தப் பகுதியில் உள்ள மக்கள் குளிப்பதற்கும், விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாய வேலைகளைச் செய்துவிட்டு வருகின்ற நேரத்தில் குளிக்கவும் உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆனால் கேரளாவிலிருந்து வந்துள்ள ஒரு பாம்பாட்டி சித்தர் என்ற ஆசாமி அந்தத் தெப்பத்தையும் பக்கத்து இடங்களையும் ஆக்கிரமிப்பு செய்து

[திரு. சொ. கருப்பசாமி] [2000 மே 10

இரண்டு மாடிக் கட்டடத்தையும் கட்டி விட்டார். சங்கரன்கோவில் நகராட்சி மன்றம் ம.தி.மு.க. பொறுப்பில் இருந்த நேரத்தில் இது நடக்கவில்லை. இப்போது தி.மு.க.-வின் பொறுப்பில் நகர்மன்றம் வந்தபிறகு அங்கே ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. நான் பலமுறை பொதுமக்களோடு சேர்ந்து நகராட்சி ஆணையரிடமும், நகராட்சிப் பொறியாளர்களிடமும் மனுக்கள் கொடுத்தும் ஒன்றுமே செய்ய முடியவில்லை. நாங்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம் எல்லாம் செய்திருக்கிறோம். இதுவரையில் அந்தக் கட்டடத்தையும், ஆக்கிரமிப்பையும் அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. சாதாரணமாக சாலையோரங்களில் ஏழை எளிய வியாபாரிகள் வியாபாரம் செய்தால் அந்த வியாபாரப் பொருட்களை எல்லாம், அத்துமீறி, காவல்துறையின் உதவியோடு அகற்றுகிறோம் என்று சொல்லி, பொருட்களை எல்லாம் எடுத்துச்செல்கிறார்கள். ஆக்கிரமிப்பை எடுக்கிறார்கள். ஆனால் கேரளாவிலிருந்து வந்துள்ள ஒரு தனிப்பட்ட நபர் செய்துள்ள ஆக்கிரமிப்பை எடுக்க முடியாத நிலை அங்கே இருந்துகொண்டிருக்கிறது. ஆணையரும், பொறியாளரும்தான் அதற்குக் காரணம். அந்த ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதைப் பார்த்தால், ஏதோ சாலைகளில் இருக்கிற கடைக்காரர்களை எல்லாம் அப்புறப்படுத்துகிறார்கள், ஏழைகளை எல்லாம் துன்பப்படுத்துகிறார்கள், பணக்காரர்கள் கட்டியிருக்கிற வீடுகளை நாங்கள் ஒன்றும் நெருங்குவது இல்லை என்று சொல்வதைப்போல தெரிகிறது. பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து அத்துமீறி ஆக்கிரமித்துக் கட்டிய வீடுகளையெல்லாம் இந்த அரசு அவ்வப்போது, தெரிந்தவரையில், அவை சரியான அளவில் இல்லாமல் இருக்குமானால், அவற்றையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கியிருக்கிறது. இதில் இவ்வளவு பேசுகிறவர் என்னிடம் எந்தவிதமான பேதமும் பார்க்காமல் எழுதிக்கொடுத்திருப்பாரேயானால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பேன். இப்போதும் சொல்கிறேன். அவர் குறிப்பிட்ட அந்த இடத்தைப்பற்றி இன்றைக்கு எழுதித் தருவாரேயானால் உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. விரைவில் பேசி முடியுங்கள். ஒரு நிமிடம்தான் கொடுப்பேன்.



2000 மே 10]

**திரு. சொ. கருப்பசாமி:** ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற Fitters மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரிகின்ற தற்காலிகப் பணியாளர்கள் எல்லாம் நீண்ட நாட்களாகப் பணி செய்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் முன்னுரிமை கொடுத்து அவர்களை முறையாகப் பணி நியமனம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். அதுபோல் ஊராட்சிகளில் பணிபுரிகின்ற துப்புரவுப் பணியாளர்கள், மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இயக்குபவர்களுக்கெல்லாம் குறைந்த அளவு ஊதியம்தான் இன்னமும் கொடுக்கப்பட்டு வருகிறது. மாதம் 150 ரூபாய் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கையை எப்படி ஓட்ட முடியும்? ஆகவே துப்புரவுப் பணியாளர்களுக்கெல்லாம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இயக்குபவர்களுக்கெல்லாம், சாதாரண நிலையில் பணியாற்றுகின்ற அந்த ஊழியர்களுக்கெல்லாம் ஊதிய உயர்வு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அவர்களுக்கு தைப் பொங்கலுக்கான கருணைத் தொகைகூட கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள் இதற்கு முன்னால் இருந்த எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், எல்லோருக்கும் சமமாக பொங்கல் கருணைத்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவலே எனக்குக் கிடையாது. இந்த ஆட்சி வந்தபிறகுதான் அவர்களுக்கு பொங்கல் கருணைத் தொகை கொடுக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிக் கொடுக்காமல் இருந்தால் அதை ஆதாரப்பூர்வமாகத் தெரிவிக்கலாம்.

**திரு. சொ. கருப்பசாமி:** அனைத்து ஊழியர்களுக்கும், குறிப்பாக இரவு நேர ஊழியர்களுக்கும் அந்தப் பொங்கல் பரிசை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் பணி செய்கின்ற B.E. பட்டம் பெற்ற பணி மேற்பார்வையாளர்களுக்கு, பணி உயர்வுக்காக அரசு ஆணை வெளியிட்டதாக எங்களுக்கு தகவல் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் அவர்களுக்குப் பணி உயர்வு கொடுக்கப்படவில்லை. ஒன்றிய மேற்பார்வையாளர்கள் பணியிடங்களும் சாலை ஆய்வாளர் பணியிடங்களும் காலியாக இருக்கின்றன. அவற்றை உடனடியாக நிரப்பி பணி நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும்...

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'மேலும், மேலும்' எல்லாம் கிடையாது. நான் அப்போதே ஒரு நிமிடம் என்று சொன்னேன். அதற்குப் பிறகு, மேலும் என்ன மேலும்? *(குறுக்கீடு)* உறுப்பினர் சுந்தரம் ஏதோ சொல்கிறார். 10-48-க்கு ஆரம்பித்து 10-59 வரைக்கும் திரு. கருப்பசாமிக்கு நேரம் கொடுத்து இருக்கின்றேன். அதனால் நீங்கள் தேவையில்லாமல் எதையாவது சொல்லாதீர்கள். திரு. ஆர். சக்ரபாணி.

***திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் குறித்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்களின் முக்கியக் கொள்கையான அனைத்து மக்களுக்கும் குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு, சுகாதார வசதி, கல்வி ஆகியவற்றை தருகின்ற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளிலே இந்தத் துறை பல்வேறு சாதனைகளைப் புரிந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய உணர்வுகளை இந்தத் துறை நான்கு ஆண்டுகளில் பிரதிபலித்திருக்கிறது என்பதற்காக இந்தத் துறையை இந்த நேரத்திலே நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

முதலில் குடிநீரைப் பொறுத்தவரை ஒவ்வொரு நபருக்கும் 55 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு, இப்போது இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 6500 ஊரகக் குடியிருப்புகளுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோல சுமார் 48 நகர குடியிருப்புகளுக்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். கிராமங்களில், இப்போது 50 பேர், 100 பேர், இருந்தால்கூட, மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. எங்கு பார்த்தாலும் மேல்நிலைத் தொட்டிகள். இப்போது குடிநீர் வழங்கல் துறையிலே நல்ல முறையில் பணிகள் நடைபெறுகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



இப்போது, அரசு ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு எல்லாம் ஒரு நாளைக்கு சுமார் 1000 லிட்டர் குடிநீர் வழங்க வேண்டுமென்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு 18,511 பள்ளிகளுக்கு குடிநீர் வழங்க திட்டமிட்டிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். நமது குடிநீர் வடிகால் வாரியத்தில் இப்போது 40 ஆழ்துளையிடும் இயந்திரங்கள்தான் இருக்கின்றன. இந்த 40 இயந்திரங்களை வைத்து, இந்த ஆண்டுக்குள் அனைத்து ஊர்களுக்கும் குடிநீருக்காக குறிப்பிட்ட காலத்திற்குள் ஆழ்துளையிடுவது முடியாத காரியம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அதிகாரிகளுடன்கலந்து இன்னும் கூடுதலாக ஆழ்துளையிடும் இயந்திரங்களை வாங்க வேண்டுமென்று இந்நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அடுத்து ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமும், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமும் கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு 20,899 கிலோமீட்டர் கிராமச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றியிருக்கிறது. ஏற்கெனவே, இருந்த சாலைகளையும் சேர்த்து மொத்தம் 26,848 கிலோமீட்டர் கிராமச் சாலைகள், இப்போது தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு 11,651 கிலோமீட்டர் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு பத்திரங்களை வெளியிடுவதன் மூலமாக 100 கோடி ரூபாய், NABARD மூலமாக 120 கோடி ரூபாய், டீசல் செஸ் மூலமாக 100 கோடி ரூபாய் வருவதை முன்னிட்டு, இந்த ஆண்டு அனைத்து கிராமங்களுக்கும் தார்ச் சாலைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது சுமார் 26,848 கிலோமீட்டர் கிராமச் சாலைகள் இருக்கின்றன. இந்தச் சாலைகளை பராமரிப்பதற்கு ஒன்றியங்களுக்குக் கூடுதலாக சிறப்பு நிதி ஒதுக்கித் தர வேண்டுமென்றும் இந்நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், நெடுஞ்சாலைத் துறையில், எப்படி சாலைப் பணியாளர்கள் நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் உள்ள மரங்களை, செடிகளை

வெட்டுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அதேபோல ஊராட்சி ஒன்றியங்களிலேயும் அம்மாதிரி பணி செய்ய சாலைப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கிராமங்களிலே, தெருக்களுக்கு இடையிலே சிமெண்ட் சாலை அமைப்பதாக சொன்னதற்கேற்ப இப்போது 5,000 கிலோமீட்டருக்கு அனுமதி அளித்திருப்பதை கிராமங்களில் இருக்கின்ற அனைத்து மக்களும், அதேபோல குக்கிராமங்களில் இருப்பவர்கள்கூட மனமுவந்து பாராட்டுகின்றனர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுக் காலத்திலே 90097 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. குக்கிராமங்களில்கூட சோடியம் ஆவி விளக்குகள் எரிவதை மக்கள் எல்லாம் பாராட்டுகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் தெரு விளக்குகள் அமைக்கின்ற வாய்ப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்படவில்லை. எனவே, இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும் குறைந்தது 300 தெரு விளக்குகளையாவது அமைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரை பல ஆண்டுகளாக நியாயவிலைக் கடைகளுக்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் இல்லாத சூழ்நிலையை மாற்றி நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றவுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் 6652 நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தந்திருப்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டுகிறேன். பள்ளிகளைப் பொறுத்தவரை, பல நேரங்களில் பள்ளி மாணவர்கள் வெயிலிலும், மர நிழலிலும் படித்து வந்த சூழ்நிலையை மாற்றி இப்போது ஒன்றியங்களின் சார்பாக ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் என்று சுமார் 5326 பள்ளிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தந்திருப்பதை நான் இந்த நேரத்திலே மனதாரப் பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதிக்கு, கரூருக்கு அருகில் கட்டளை ரங்கநாதபுரத்தில் இருந்து, காவிரி ஆற்றிலிருந்து குஜிலியம்பாறை வடமதுரை, வேடசந்தூர், ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊர்களில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏற்கெனவே ஆய்வுப் பணிகள் எல்லாம்



முடிவுற்று இருக்கின்றன. எனவே, இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல்வர் அவர்களுடன்கலந்து அந்தத் திட்டத்தினை நிறைவேற்றினால் வேடசந்தூர் தொகுதி, ஒட்டன்சத்திரம் தொகுதி, ஆத்தூர் தொகுதி, பழனி தொகுதி ஆகிய நான்கு தொகுதிகளில் நிலவும் நிரந்தர குடிநீர் பிரச்சினை தீரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இந்தத் திட்டத்தினை தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் இரண்டாகப் பிரித்து, கள்ளிமந்தையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பதற்கு ஏற்கெனவே Council கூட்டத்தில் தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து, இப்போது ஊரக வளர்ச்சி இயக்குநரிடத்தில் அந்தக் கோப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கள்ளிமந்தையத்தைத் தலைமையிடமாகக்கொண்டு ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஒட்டன்சத்திரம் வளர்ந்து வருகிற நகரமாகும். ஏற்கெனவே வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதற்கான விதிப்படி அனைத்துத் தகுதியும் பெற்றிருக்கிறது. எனவே அதை இந்த ஆண்டே நகராட்சியாக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நலப் பணியாளர்களை 1989 ஆம் ஆண்டு நமது தலைவர் அவர்கள்தான் நியமனம் செய்தார்கள். இடையிலே வந்த அரசு அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட்டது. மீண்டும் நமது தலைவர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் அவர்களையெல்லாம் பணியில் அமர்த்தினார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இப்பொழுது 750 ரூபாய்தான். அவர்களது பணியை இந்த அரசு நிரந்தரம் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு 32 ஆயிரம் ரூபாய் செலவில் வீடுகளைக் கட்டிக் கொடுத்து வருகிறது. அதிலே 100 வீடுகள் என்றால், 85 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் 15 வீடுகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் என்று இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் இப்போது வறுமைக் கோட்டுக்குக்கீழே வாழ்கின்ற காரணத்தால், நமது அரசு, மத்திய அரசை வலியுறுத்தி, 100 வீடுகளில் 70 வீடுகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 30 வீடுகளை பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திலே ஜவ்வாதுபட்டி, சோழியப்பன்புதூர் இடையே நங்காஞ்சியாறு என்று ஓர் ஆறு செல்கிறது. மழைக்காலங்களில் இந்த இரண்டு ஊர்களும் துண்டிக்கப்படுவதால், அந்த இரண்டு ஊர்களுக்கும் இடையே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொப்பம்பட்டி ஒன்றியத்தில் கொத்தையம் வெடிக்காரன்வலசு இடையே நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே தொப்பம்பட்டி ஒன்றியத்தில் அக்கரைப்பட்டி, நரிக்கல்பட்டி இடையே சண்முக நதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் நிதியைப் பொறுத்தவரையில் நமது அரசு பொறுப்பேற்றவுடன் (மணியடிக்கப்பெற்றது) 25 இலட்சம், 35 இலட்சம், 50 இலட்சம் ரூபாய் என்று உயர்த்தி, இந்த ஆண்டு அதை 60 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஓர் ஊராட்சி ஒன்றியத்தைத் தேர்ந்தெடுக்கலாம் என்று விதியை வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் இரண்டு ஊராட்சிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வகையில் அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்து, கணினி மையம், இப்போது தமிழகத்திலே பல மாவட்டங்களிலும் உள்ள பல ஊராட்சி ஒன்றியங்கள் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கணினி மையம் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வில்வாதம்பட்டியில் ஒரு சமுதாயக் கிணறு வெட்டப்படுகிறது. அந்தக் கிணற்றிலிருந்து வில்வாதம்பட்டி, வண்ணாபட்டி; மொல்லம்பட்டி, புளியம்பட்டி, தம்பலப்பட்டி, மார்க்கண்டாபுரம், திருக்கவுண்டன்வலசு, மரிச்சிலம்பு, பூலாம்பட்டி ஆகிய ஊர்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

இப்போது நமது ஊராட்சி மன்றங்களில் கைப்பம்புகளைப் பழுது பார்க்கின்ற பணியை ஊராட்சித் தலைவர்கள்தான் பார்க்கிறார்கள். ஆனால், வாக்கு போடாத மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள கைப்பம்பை அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் பழுதுபார்க்காத சூழ்நிலை இருக்கிறது. ஆதலால், இனிமேல் ஊராட்சி ஒன்றியமே கைப்பம்பை பழுதுபார்க்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே அதற்கான உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில், கைப்பம்பாக இருந்தாலும், விசைப்பம்பாக இருந்தாலும் குடிநீர் பிரச்சினையில் அவர்களே தலையிட்டுச் செய்யலாம் என்ற உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். சக்ரபாணி:** உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இந்த ஆண்டு பிரித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியத்தை ஏற்கெனவே ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. சுந்தரம்.

**திரு. ந. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி

நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியிலுள்ள கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் மிகுந்த அளவுக்கு குடிநீர் கஷ்டம் உள்ளது. பொதுமக்களுக்கு உடனடியாகக் குடிநீர் வசதியை ஏற்படுத்தி, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, வறட்சியைப் போக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். குறிப்பாக, விசாலியன்கோட்டை, சாந்தம்பத்தி, சன்னவனம், பாகாடி, பனங்குடி, மாலைகண்டான், வெற்றியூர், கீழபூங்குடி, முகம்பட்டி, வாரிவேல், வீரசோழநகர், பிளார், பொட்டல் புஞ்சை, மேலசக்கரவர்த்திபட்டி, கூத்தநூர், கொடுங்குளம், மேலமாகாணம், காந்தி நகர் காலனி (நடராஜபுரம்), தட்டட்டிபுதூர், வாவாரி, திருவலங்கை காயாவயல், இளங்குடி, தெம்மாவயல் ஆகிய ஊர்களில் குடிநீர்ப் பிரச்சினையால் மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

முற்பகல் 11-10

ஊராட்சி ஒன்றியத்தில் போடப்பட்ட ஒன்றிய தார்ச் சாலைகள் மிகவும பழுதடைந்த நிலையில் உள்ளன. இந்தச் சாலைகளை புதிய தார்ச் சாலைகளாக அமைத்திடவும், மராமத்து செய்திடவும் நிர்வாக அனுமதி வழங்கி சிறப்பு நிதியும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலும் பேரூராட்சிகளிலும் கட்டப்பட்ட அரசு கட்டடங்களைப் பராமரிப்பு செய்ய நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுகிறேன்.

சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள சுமார் 300 கண்மாய்களையும். கல்லல் ஒன்றியத்தில் உள்ள சுமார் 300 கண்மாய்களையும் மராமத்து செய்து வறட்சியைப் போக்கிட வேண்டுகிறேன். இந்தக் கண்மாய்களுக்கு வரும் வரத்துக் கால்வாய்கள் பல ஆண்டுகளாக தூர் வாராமல் உள்ளன. காட்டாமணக்கு செடிகள் மிகவும் அதிகமாக இருப்பதால் அவை கண்மாய்களை மூடிவிடும் நிலையில் உள்ளன. அதற்காக சிறப்பு நிதி வழங்கி அவற்றை மராமத்து செய்ய அன்புடன் வேண்டுகிறேன். கல்லல் ஊராட்சி ஒன்றியம் 44 பஞ்சாயத்துகளைக்கொண்ட மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து குன்றக்குடியை தலைமையிடமாக வைத்து புதிய ஊராட்சி ஒன்றியத்தை அமைத்திட வேண்டுகிறேன்.



நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள எல்லா காலிப் பணியிடங்களையும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பணி நியமனம் செய்திட அரசு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்

காரைக்குடி நகராட்சிக்கு TUFIDCO திட்டத்தின்கீழ் கடன் மற்றும் மானியமாக நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் வணிக வளாகம் கட்டுதல் மற்றும் நகரில் பல்வேறு இடங்களில் உள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக அமைத்தல், மழைநீர் வடிகால் கட்டுதல் போன்ற பணிகளுக்காக ரூ.432 இலட்சம் அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அதற்கு அரசு அனுமதி அளித்து TUFIDCO மூலம் கடன் வழங்கி காரைக்குடி நகரம் பயன்பெறும் வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் கடனை வணிக வளாகத்தில் வரும் வருமானத்தின்மூலம் திரும்பச் செலுத்த இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது சுகாதாரத்தை முன்னிட்டு நான்கு மயானங்களில் தகன மேடைகள், சாலை வசதிகள், விளக்கு வசதிகள் மற்றும் borewell வசதிகளை ஏற்படுத்தவும் சுற்றுச் சுவர்கள் கட்டி மேம்படுத்தவும், குடிசைப் பகுதிகளில் Septic tank தண்ணீர் வசதியுடன் கழிப்பிடங்கள் அமைப்பதற்கும், நகரில் பிரதான இரண்டு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும் அரசுக்கு அனுமதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடி நகரில் போதுமான குடிநீர் வசதி இருந்தும் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டித்தர வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கித் திட்டத்தின் மூலம் சுகாதார வாகனங்கள் வாங்கவும், குடிநீர் விநியோக லாரி ஒன்று வாங்கவும், தெரு விளக்குகள் அமைப்பதற்கும், தெரு விளக்குகள் பராமரிப்புக்கு ஏணியுடன் லாரி ஒன்று வாங்குவதற்கும் சுமார் 46 இலட்சம் ரூபாய் கடன் பெறுவதற்கு அரசு அனுமதி வழங்கி விட்டது. ஆனால், இன்னும் அதற்கான நிர்வாக அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே, நிர்வாக அனுமதி கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பால்வாடிக் கட்டடங்கள் சமூக நலத் துறையின்கீழ் உள்ளன. மிகவும் பழுதடைந்த பால்வாடிகளை மராமத்து செய்வதற்கு ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்வதுடன் அதற்கென சிறப்பு நிதி கொடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். புதிதாக கூடுதல் தெரு விளக்குகள் அமைப்பதற்கு சென்ற வருடத்திலிருந்து அனுமதி கிடைக்கவில்லை. இந்த ஆண்டு புதிய தெரு விளக்குகள் அமைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியங்களில் உள்ள சாலைகளைப் போடுவதற்குப் போதுமான நிதியாதாரம் இல்லாத நிலையில் R.R. சாலைகளையும் ஒன்றியங்களில் ஒப்படைப்பு செய்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் அதை maintain பண்ணுவதற்காக R.R.-லேயே அந்தச் சாலைகள் இருக்க ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடியின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க ring road அமைக்க வேண்டுகிறேன். கோட்டையூர் பேரூராட்சியில் pipe line-களை மாற்றுவதற்கு சுமார் 7 இலட்சம் ரூபாய் சிறப்பு நிதி கேட்டு அரசு அனுமதிக்காக காத்திருக்கிறார்கள். அரசு அனுமதி அளிப்பதுடன் சிறப்பு நிதியும் கொடுத்து குடிநீர் வசதி செய்துதர வேண்டுகிறேன்

பேரூராட்சிகளுக்கு 31 சதவீதம், நகராட்சிகளுக்கு 31 சதவீதம் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 38 சதவீதம் என்ற அடிப்படையிலே 10-வது நிதிக் கமிஷனிலே இருந்து நிதி கூடுதலாகக் கொடுக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு மானியம் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். புதுவயலில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை விரைவாக முடிக்க வேண்டுகிறேன்.

பேரூராட்சிகளில் பணியாளர்களை நியமிக்க Norms Committee உள்ளது. மேல்மட்ட அலுவலர்களைவிட கீழ்மட்ட அலுவலர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இரண்டு கிலோமீட்டர் சாலைகளைத் துப்புரவு செய்ய ஓர் ஆள் தேவை என்று உள்ளது. அதை ஒரு கிலோமீட்டருக்கு ஓர் ஆள் என்று மாற்றி, பணியமர்த்த வேண்டும். Temporary ஆகக்கூட பணி அமர்த்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



பேரூராட்சி அலுவலகங்களுக்கு அவசியம் தொலைபேசி தேவை. S.T.D. வசதியில்லாவிட்டால்கூடப் பரவாயில்லை, அதை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சொர்ண ஜெயந்தி வேலைக்கு முன்பு 4 இலட்சம் ரூபாய் என்று இருந்தது, இப்போது அதை அரசு இரண்டு இலட்சமாகக் குறைத்துள்ளது. அதை 10 இலட்சமாக உயர்த்தி சொர்ண ஜெயந்தி வேலைகள் நல்லமுறையில் நடைபெற ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நலிவுற்ற பேரூராட்சிகளுக்கு power tiller கொடுக்க வேண்டுகிறேன். காரைக்குடி நகராட்சிக்கு power tiller வேண்டும். மாட்டு வண்டி கூடாது என்பது அரசின் கொள்கை ஆகும். ஆகவே, power tiller வாங்குவதற்கு அனுமதி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளில் பல்வேறு பணிகளைச் செய்வதற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்த அரசு ஆணை எண் 130 வெளியிடப்பட்டுள்ளது. அதை எளிமைப்படுத்த வேண்டுகிறேன். அங்கீகரிக்கப்படாத பழைய வீட்டுமனைகளில் வீடு கட்டுவதற்கு development charge-ஐ மட்டும் வாங்கிக்கொண்டு அனுமதி வழங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல பழைய வீடுகளில் மேல்மாடி கட்டுவதற்கும் development charge-ஐ வாங்கிக்கொண்டு Plan-ஐ approve பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

கல்லல், ஆத்தங்குடி, மித்திரவயல் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக உயர்த்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). காரைக்குடி பயணியர் விடுதியை மராமத்து செய்ய சிறப்பு நிதி அளிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நலப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து 13500 பணியாளர்களும் அச்சமின்றிப் பணியாற்ற ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் பணி உதவியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டப்படுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி இடமும் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், இதுவரை கட்டப்படவில்லை. உடனடியாகக் கட்ட அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் கிராமங்களுக்கு அளிக்கும் நிதி ஒதுக்கீடு போதாது. அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் எடுக்கப்படும் கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது ஆரம்ப சுகாதார கிளை மருந்தகம், அதேபோல் கால்நடை மருந்தகம் அவசியம் வழங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன். அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், தேர்வு செய்கின்ற இடங்களைப் பொறுத்தவரையில், 3 ஒன்றியங்கள் உள்ள தொகுதிகளில் குறிப்பாக நன்னிலம் ஒன்றியத்திலே இருந்து 3 ஆண்டுகளும் அண்ணா மறுமலர்ச்சித் திட்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதாவது, ஜனத்தொகை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 3 ஒன்றியங்களிலும் தேர்ந்தெடுக்காமல், ஒரே ஒன்றியத்தில்தான் அந்தத் திட்டம் அமைந்து இருக்கிறது. இதுகுறித்து அரசு விதியை மாற்றி 3 ஒன்றியங்களிலும் தெரிவு செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 60 இலட்ச ரூபாயாக உயர்த்தியதை 1 கோடியாக உயர்த்தி வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தண்டராம்பட்டு தொகுதி சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு, (மணியடிக்கப்பெற்றது). வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பல நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு



திரு. கோ.சி. மணி அவர்கள் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அந்தந்தத் தொகுதியில் என்ன என்ன வேலைகள் நடந்து இருக்கின்றன என்பதைப் பட்டியல்போட்டு கையேடு ஒன்றை அழகான பெட்டியிலே வைத்து தந்திருக்கிறார்கள். அந்தப் பெட்டியிலே 10 இலட்சம் ரூபாய் வைத்துத் தந்தால்கூட எங்களுக்கு இவ்வளவு மகிழ்ச்சி இருந்திருக்காது. அதைவிட ஒரு கருத்துக் கருவூலத்தைத் தந்ததற்காக அமைச்சர் அவர்களை மிகமிகப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் 1989-லேயும், 1991-லேயும், 1996-லேயும் சட்டமன்ற தேர்தலில் நின்றபோது, முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டபோது என்ன செய்தேன், இனி தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன செய்யப்போகிறேன் என்பதையும், முன்பு செய்த சாதனையையும், கலைஞர் ஆட்சியில் என்னுடைய தொகுதிக்குக் கிடைத்த நன்மைகளையும், இனி நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் என்ன செய்வேன் என்பதையும் பட்டியல் போட்டு, அதை கையேடாக அல்லது துண்டுப் பிரசுரமாக மக்களிடத்திலே கொடுத்துவிட்டுத்தான் வாக்குக் கேட்டேன். அதோடு மட்டுமல்லாமல், அதைப்பற்றி வீடியோ படம் எடுத்து ஒவ்வொரு தேர்தலிலுமே மக்களிடத்திலே காட்டுவது என்னுடைய பழக்கம், ஆனால், இந்தமுறை என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் சேகரிக்கின்ற அல்லது சேகரிக்க இயலாமல் போகின்ற காரியங்களைக்கூட சேகரித்து கையேடாக எங்களுக்குத் தந்ததற்காக எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் நான் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். நான் இன்னும் சொல்ல வேண்டுமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்களே, தயவுசெய்து உங்களுடைய கையை எங்கள் பக்கம் திருப்புங்கள்; கை குலுக்க அல்ல; அதிலே நாங்கள் எல்லாம் முத்தமிட வேண்டுமென்று இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாடுபட்டு இருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றபோதே இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் குடிநீர் இல்லாத கிராமமே இல்லை என்கிற அளவிற்கு நான் திட்டங்களை நிறைவேற்றுவேன் எனறார்கள். அவர் திட்டம் தீட்டினார்; அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துகின்ற அமைச்சராக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இருக்கிறார் என்பதில் நமக்கெல்லாம் மகிழ்ச்சி.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மானூர் ஒன்றியத்தில் 17 ஊராட்சிகள்; பாளையங்கோட்டை ஒன்றியத்தில் 4 ஊராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் நெல்லை மாநகராட்சியின் பெரும் பகுதியும் அடங்கியிருக்கின்ற தொகுதி. கலைஞருடைய காலத்தில் தச்சநல்லூர் நகராட்சிப் பகுதியில் சுமார் 1½ கோடி ரூபாயில் கூடுதல் குடிநீர் தருவதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டி நிறைவுபெற்று இருக்கின்றது. இன்னும் சொல்ல வேண்டுமானால், நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையை எடுத்துச் சொன்னால், அதைக் காது கொடுத்துக் கேட்டு, அதிலே இருக்கின்ற நுணுக்கத்தை அறிந்து உடனடியாக அதிகாரிகளிடத்திலே அவர் கலந்துபேசி முடிவு எடுப்பவர்.

முற்பகல் 11-20

என்னுடைய தொகுதியில் உள்ள தென்பத்து ஊராட்சி திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியையொட்டி இருக்கிறது. அந்த ஊராட்சியில் 4, 5 குக்கிராமங்கள் இருக்கின்றன. அங்கே குடிநீர் தர வேண்டும். தனித் திட்டம் போட முடியாது. ஆகவே, பேட்டை (rural) நரசிங்கநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலேயிருந்து இதிலே உள்ள சில பகுதிகளுக்கு தண்ணீர் தர வேண்டுமென்று கேட்டேன். சொக்கட்டான் தோப்பு, கரிகால்தோப்பு, பெருமாள் கோயில் தெரு போன்ற பகுதிகளுக்கு வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து. வேறு கிராமத்திலிருந்து தண்ணீர் தருவதற்கான திட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தந்து, பணமும் தந்து, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தாழ்த்தப்பட்ட, இஸ்லாமியர்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே 18 தெருக் குழாய்களைத் திறந்தேன். 18 குழாய்கள் ஒவ்வொன்றையும் நானே திறக்க வேண்டுமென்று மக்கள் ஆர்வத்தோடு என்னிடத்திலே கேட்டு, அந்த 18 குழாய்களையும் நானே நேரில் சென்று திறந்தபோது அதிலே எவ்வளவு மகிழ்ச்சி இருக்கிறது என்பதை அறிய முடிந்தது. ஆகவே, ஓர் ஊராட்சியிலிருந்து இன்னொரு ஊராட்சிப் பகுதிக்கு குடிநீர் தருகின்ற திட்டத்தினைத் தந்தவர் நம்முடைய அமைச்சர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லை மாநகராட்சிக்கு பக்கத்திலே நான் சொன்ன தென்பத்து என்கின்ற ஒரு பகுதி இருக்கிறது. அதைப்போல இராமையன்பட்டி பகுதி, பாளையங்கோட்டையையொட்டி இருக்கிறது. இதற்கு தனி



குடிநீர்த் திட்டம் போட முடியாது. ஊராட்சிப் பகுதி. அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு கருத்தரங்கிற்கு வந்திருந்தார்கள். அப்போது இந்தப் பகுதிக்கு மாநகராட்சிக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் தர வேண்டுமென்று நான் கேட்டேன். உடனடியாக அவர்கள் அந்தத் துறை அதிகாரிகளோடு, அப்போதே கலந்து ஆலோசித்தார்கள். மாநகராட்சி சம்மதம் தருமானால் உடனே தருகிறேன் என்றார்கள். மாநகராட்சி சம்மதம் தந்தது. இப்போது வேலை தொடங்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே மாநகராட்சிப் பகுதிக்கான குடிநீர்த் திட்டத்திலிருந்து ஊராட்சிப் பகுதிக்கு குடிநீர் தந்த ஒரு தொகுதி இருக்கிறது என்றால் அது திருநெல்வேலி தொகுதி என்பதையும், இதை செய்து முடித்தவர் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்பதையும் நான் மிக மிகப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையினுடைய செயலாளராக இருந்தாலும் அல்லது குடிநீர் வாரிய அதிகாரிகள், நிருவாக இயக்குநர் போன்ற அதிகாரிகளாக இருந்தாலும் அரசிற்கு மிகுந்த ஒத்துழைப்பு தருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு விஷயத்தினைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்திலே மிக மிக வறண்ட பகுதிகள் என்று சொல்லப்படுபவை சாத்தான்குளமும் இராதாபுரமும் ஆகும். அவை, நம்முடைய உறுப்பினர் அப்பாவு அவர்களுடைய தொகுதியில் வருகின்றன. இரண்டு தொகுதிகளிலும் தண்ணீர் கிடையாது. நான் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும்கூட, என்னுடைய சொந்த ஊர் சாத்தான்குளத்திலே உள்ள ஒரு சிற்றூர். அங்கே குடிநீரே கிடையாது. நான் மாணவனாக இருந்தபோதிலிருந்து இப்போதுவரை அங்கே குடிநீரே கிடையாது. அந்தப் பகுதிக்கு தண்ணீர் தரவேண்டுமென்று கேட்டவுடன் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தண்ணீர் தருவதற்கு உத்தரவிட்டார்கள். தாமிரபரணி ஆற்றிலிருந்து சாத்தான்குளம் பகுதி முழுவதற்கும் குடிநீர் தருவதற்காக பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, இப்போது குழாய்கள் பதிக்கப்பட்டு வருகின்றன. நான் எனது ஊருக்கு சென்று பார்த்தேன். குழாய்கள் போட்டிருக்கிறார்கள். எனக்கிருந்த மகிழ்ச்சியிலே அப்படியே அந்தக்

குழாய்களை கட்டித் தழுவி, 5 நிமிடங்கள் கண்ணீர் விடக்கூடிய அளவிற்கு ஒரு மகிழ்ச்சி வெள்ளத்தில் இருந்தேன். அந்தப் பகுதியில் உள்ளவர்களும் அப்படி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இப்போது இராதாபுரம் தொகுதிக்கும் அமைச்சர் அவர்கள் தண்ணீர் தருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் இராதாபுரம் தொகுதி உறுப்பினர் சென்ற முறை தேவையில்லாது ஒரு குற்றச்சாட்டை அமைச்சர்மீது சொன்னார். அமைச்சருக்குச் சொந்தமானவர் கடையிலேயிருந்து நெல்லை மாநகராட்சிக்கு மின்சார Choke வாங்கியதாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் சென்று பார்த்தேன், விசாரித்தேன். கோப்புகளைப் பார்த்தேன். அந்தச் Choke-கள் வடநாட்டு மார்வாடிக் கடையிலிருந்து வாங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் கோ.சி. மணி அவர்களுக்கு ஒரு வடநாட்டுக்காரரோடு எப்போது சம்மந்தம் ஏற்பட்டது என்பதை உறுப்பினர் திரு. அப்பாவுதான் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

தவித்த வாய்க்குத் தண்ணீர் தந்தவரை மகாராஜன் என்று சொல்வார்கள். இப்போது தவித்த தொகுதிக்கு தண்ணீர் தந்தவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி), அதைச் செய்து முடிப்பவர் நம்முடைய அமைச்சர். ஆகவே தொகுதி மக்கள் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக வாழ்த்துதலையும், பாராட்டுதலையும் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி நிர்வாகத்தை ஒரு நல்லாட்சியாக நடத்திக் காட்ட வேண்டுமென்று, அற்புதமானத் திட்டங்களைத் தீட்டித் தருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று சென்னை மாநகர மேயர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், சென்னையைத் தூய்மையாக மாற்றுகிற முயற்சிக்கு என்னுடைய நன்றியையும் கூறி



என் உரையைத் தொடங்குகின்றேன்.

13-5-1996 முதல் 31-3-2000 வரை சட்டமன்றத் தொகுதிகளிலே நடந்த ஊராட்சிப் பணிகள் குடிநீர் வழங்கல் பணிகளையெல்லாம் புத்தகமாக அச்சிட்டு எங்களுக்கு வழங்கி எங்களுடைய வேலைப்பளுவை குறைத்ததோடு மட்டுமல்லாமல், மீண்டும் அந்தப் பணிகளைச் சென்று பார்த்துவர ஒரு வசதியை ஏற்படுத்தித் தந்த நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படுகின்ற ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம், வேலை உறுதித் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற அருமையான திட்டங்களால் ஆங்காங்கே ஊராட்சி மன்றங்கள் இப்போது சிறப்புற செயல்பட்டு வருகின்றன. இதுவரைக்கும் காணாத ஒரு சிறப்பு கடந்த நான்காண்டு காலமாக ஊராட்சிகளிலே, நகராட்சிகளிலே நடந்து கொண்டிருக்கிறது. காரணம் நாங்களும் ஒரு கால கட்டத்திலே நகராட்சி மன்றத் தலைவர்களாகவும் மற்றும் ஊராட்சிகளிலேயும் அங்கம் வகித்தவர்கள்தான். அப்போது எப்படி நகராட்சிகளின் செயல்பாடுகள் இருந்தன என்றால், எப்போது வெளியே போவோம் என்று இருந்தன. அந்தக் காலக் கட்டங்கள் எல்லாம் மாறி மூன்று வருடங்கள் என்று இருந்த பதவிக் காலத்தை இப்போது ஐந்து வருடங்களாக மாற்றி அற்புதமான வகையிலே ஊராட்சிகளும், நகராட்சிகளும் பல பணிகளை மிக விரைவாகச் செயலாற்றி, மக்களின் அடிப்படை வசதிகளை செய்து வருகின்றன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எடுத்துக்கொண்டால், எல்லா தொகுதிகளிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் ஓர் ஊராட்சியை எடுத்துக்கொண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலமாக பல்வேறு நலப் பணிகள் ஆற்றப்படுகின்றன. அந்தவகையில் குறைந்தபட்சம் எல்லா பணிகளும் நிறைவுற்ற ஒரு கிராமமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுகிறது. அதுபோல, நமக்கு நாமே திட்டத்தின் காரணமாக, மக்களே திட்டங்களை மனமுவந்து ஏற்று, தங்களுடைய பங்கையும் அளித்து கல்யாண மண்டபங்கள், சமூகக்கூடங்கள் போன்றவற்றை அமைப்பதுடன் தளவாடச் சாமான்கள் போன்றவற்றைப்பெற்று மிக

[திரு. எம். ரங்கநாதன்] [2000 மே 10

மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். நமக்கு நாமே திட்டமும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு காலங்காலமாக அழியாத புகழைத் தேடித்தருகிற ஒரு திட்டமாக அமைந்துள்ளதுடன் மக்கள் மத்தியிலேயும் அவை புகழ்பெற்ற திட்டங்களாக இருக்கின்றன.

அடுத்து, ஊராட்சிகளில் ஆங்காங்கே சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிமெண்டைப் பார்த்திராத குக்கிராமங்கள் எத்தனையோ உண்டு. அந்த ஊர்களில் எல்லாம் நாங்கள் சென்று பார்க்கிறபோது, மலைப் பகுதியில் மக்கள் வாழ்கின்ற சில பகுதிகளுக்குச் சென்று பார்க்கும்போது, எல்லா இடங்களிலும் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறுக்குச் சாலைகள், சந்துகள், தெருக்கள், வீடுகளில் உள்ள வாசற்படிகளுக்கு முன்னால் கோலம் போடுகின்ற அளவிலுள்ள சிறிய தெருக்கள், எல்லாவற்றையும் சிமெண்ட் சாலைகளாக, சிமெண்ட தரைகளாக அமைத்துக் கொடுத்து இருக்கின்றார்கள் என்றால், அது இந்த நான்காண்டு ஆட்சியில்தான் என்றால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு மிக மிக முக்கியமான பணிகள் நடைபெற்றிருக்கின்றன. தெருவிளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாகப் போடப்பட்டிருக்கின்றன. எந்தக் காலத்தில் சோடியம் விளக்கை மக்கள் பார்த்திருப்பார்கள்? 498 சோடியம் விளக்குகள் என்னுடைய தொகுதியில் போடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தன்னுடைய புத்தகத்திலே தெரிவித்துள்ளார்கள். அது உள்ளபடியே எனக்குப் பெருமகிழ்ச்சியளிக்கிறது. குழல் விளக்குகள் இன்னும் பல விளக்குகளோடு இணைந்து இந்த சோடியம் ஆவி விளக்குகளும் போடப்பட்டதன் காரணமாக அந்த மலைப்பகுதி ஊர்களெல்லாம் இரவும் பகலாகக் காட்சித் தருகிறது என்றால் அது மிகையாகாது. காரணம் நீங்கள் வந்து பார்ப்பீர்கள் என்றால், பார்க்கிற நேரத்திலே அதன் அருமை பெருமை தெரியும். ஆகவே ஊராட்சிகள் சிறந்த முறையிலே இப்போது பணியாற்றிக்கொண்டு வருவதற்காக நாம் எல்லாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

நகராட்சிகளிலும் பல்வேறு பணிகள் சிறந்த அளவில் நடைபெறுகின்றன. (மணியடிக்கப்பெற்றது) நான் இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. (சிரிப்பு) என்னுடைய தொகுதிக்கு வந்துவிடுகிறேன். மனம் உவந்து பாராட்டுகிற, மனம் ஒப்பி மன மகிழ்ச்சியோடு பாராட்டுகிற நிகழ்ச்சியாக இந்த மானியக் கோரிக்கைகளிலே நாங்கள் எல்லாம் பேசுகிற காரணத்தால், அந்த அளவுக்கு மன நிறைவோடு இருக்கிறோம் என்பதால், இந்த



2000 மே 10] [திரு. எம். ரங்கநாதன்]

உள்ளாட்சித் துறை சிறந்த முறையில் இருப்பதன் காரணமாகத்தான் பேச்சினை நீட்டித்தேனே தவிர வேறு ஒன்றும் அல்ல.

குன்னூர் நகராட்சியை எடுத்துக்கொண்டால், அங்கே சாலைப் பணியாளர்களைப் போட வேண்டும். காரணம், நெடுஞ்சாலைத் துறையில் சாலைப் பணியாளர்களைப் போட்டதன் காரணமாக நெடுஞ்சாலைகள் மிகச்சிறந்த சாலைகளாக மாறியிருக்கின்றன. ஆங்காங்கே சாலைப் பணியாளர்கள் தங்களுடைய பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து சாலைகளைப் பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல நகராட்சிகளுக்கும் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டால்தான் சாலைகள் எல்லாம் சிறப்பாக, சீராக இருக்கும். ஆகவே நகராட்சிகளுக்கும் சாலைப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். 11,600 கி.மீ. தார்ச் சாலைகளாகவும், 5000 கி.மீ. சிமெண்ட் சாலைகளாகவும் போடுகின்ற ஒரு திட்டத்தை நம்முடைய தமிழக அரசு அறிவித்திருக்கிறது. அதற்கு என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதை பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தை பேரூராட்சிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெங்குமராடா என்ற இடம் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் தொகுதியைச் சேர்ந்தது. தெங்குமராடா பகுதிக்கு பவானிசாகரிலிருந்து போக வேண்டும். முதலில் கோவை மாவட்டம் போய், அங்கிருந்து பெரியார் மாவட்டம் சென்று அங்கேயிருந்து என்னுடைய தொகுதியிலுள்ள தெங்குமராடாவுக்குப் போக வேண்டும். அந்த ஊராட்சியில் 35 கி.மீ. தூரத்திற்கு வெறும் கல், மண், சாலைகளாக இருக்கின்றன. சுதந்திரம் பெற்று இதுவரைக்கும் அங்கே தார்ச் சாலைகளே போடப்படவில்லை. அது வனத் துறைக்குச் சொந்தமான சாலை. அந்தச் சாலையைச் செப்பனிட்டு அங்கே இருக்கிற 5000 மக்களும் சென்றுவர வசதி ஏற்படுத்த வேண்டும். அதுபோல குன்னூர் நகராட்சிப் பேருந்து நிலையம் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. இந்தப் பேருந்து நிலையம் மிக அதிகமாக பேருந்து வந்துபோகிற ஓர் இடமாக இருப்பதால் அதை விஸ்தரிக்க வேண்டுமென்று எத்தனையோ முறை நானும் பல்வேறு காலகட்டங்களில் அதற்காகப் போராடி ஏதேதோ செய்தோம். ஆனால் இதுவரைக்கும் விஸ்தரிக்கப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர்

அவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தார்கள். ஒரு காலக் கட்டத்திலே அதற்காக 16 இலட்சம் ரூபாய், உலக வங்கி கடனாகத் தந்தது. ஆனால் அந்த நேரத்திலே அங்கேயிருந்த தீயணைப்பு நிலையத்தை மாற்ற முடியாத நிலை இருந்த காரணத்தால் அந்தப் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆக விரைவிலே அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தித்தர வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதேபோன்று, குன்னூரில் குறுக்காக அறு என்ற பெயரால் ஒரு கால்வாய் ஓடுகிறது. அந்தக் கால்வாயில் மூடுகல் போட்டால் நிறைய இடமும் கிடைக்கும், மக்களுக்கு ஏற்படும் நெருக்கடியும் தீரும். அதற்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட அதிகாரியும் சுங்கவரி அதிகாரியும் 45 ஆயிரம் ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். மீதிப் பணத்தைக் கொடுத்து, அந்தக் கால்வாயை மூடினால் நெருக்கடி தீரும். இது ஆற்றை அடைப்பது அல்ல. அதை அமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்திருக்கிறார்கள். அதேபோன்று, இதுவரையில் குன்னூரிலே லாரிகளை நிறுத்துவதற்குத் தகுந்த இடமில்லை. இருந்தாலும் அதற்கென்று ஏற்கெனவே பெருந்தானம் பள்ளிக்கூடப் பக்கத்திலே ஓர் இடம் இருக்கிறது. அந்த இடத்தில் லாரி நிறுத்தத்தை அரசு ஏற்படுத்த வேண்டும். காரணம், ரோடெல்லாம், வழியெல்லாம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

***திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதித்தத் தங்களுக்கு நன்றி தெரிவித்துகொள்கிறேன்.

பாளையங்கோட்டை, 'Oxford of the South' என்கின்ற பெயர் பெற்ற ஒரு சிறப்பான நகரம். அந்த நகரத்திற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், குடிநீர் அபிவிருத்தித் திட்டம், 1989-90-ல் உருவாக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னர் அந்தத் திட்டம் செயல்படாமல் இருந்தது. 1996ஆம் ஆண்டு முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த நேரத்தில், அவர்கள் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு வாக்குறுதியைக்



கொடுத்தார்கள். 4-வது முறையாக தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில், பாளையங்கோட்டை தொகுதி மக்களுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவேன் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் நான்காவது முறையாக அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 1996 ஆவது ஆண்டே அந்தத் திட்டத்திற்கு 6 கோடியே 63 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, அந்தத் திட்டம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆனால், அந்தத் திட்டம் உருவாக்கப்பட்ட நேரத்தில் இரண்டு ஆண்டுகளில், அந்தப் பணி முடியும் என்று அறிவிக்கப்பட்டது; ஆனால் இரண்டு ஆண்டுகளிலே முடியவில்லை. 1999ஆம் ஆண்டு, 11ஆம் மாதம் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திருநெல்வேலிக்கு வந்த நேரத்திலேகூட, குடிநீர் வடிகால் வாரியத்தால் கொடுக்கப்பட்ட அறிவிப்பின்படி 2000ஆவது ஆண்டு, மூன்றாவது மாதம் இந்தக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் அது இன்றுவரை நிறைவேறாமல் இருக்கிறது. 90 சதவீதம் அந்தப் பணிகள் முடிந்து இருக்கின்றபடியால் இத் திட்டத்தை விரைந்து முடிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டத்தைப் போடுவதோடு, திட்டத்தை அறிவிப்பதோடு நிதி ஒதுக்கீடு செய்வதோடு அரசும், வாரியமும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவும் செய்கின்றன. ஒப்பந்தக்காரர்களிடத்திலே பணியை ஒப்படைப்பதைப் பொறுத்தவரை இரண்டு, மூன்று ஒப்பந்தங்களாக அதை விட்டதன் காரணத்தால், ஒரு வேலைக்கு பாதிப்பு ஏற்பட்டால்கூட முழுவதும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு நிலைமை வருகிறது. அநேகமாக, அடுத்த மாதம் அது நிச்சயமாகச் செயல்படுத்தப்படும். அதை ஒட்டித்தான், இப்போது எந்தப் பணியாக இருந்தாலும் ஒருவரே ஒப்பந்தம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று புதிதாகத் திருத்தி இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில், இனிமேல் அதிக காலதாமதத்திற்கு இடமில்லை.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டையைப் பொறுத்தமட்டில், 1996-க்குப் பின்புதான் அதிகமான விரிவாக்கப் பகுதிகள் உருவாகியிருக்கின்றன. ஆனால்

[திரு. முகம்மது கோதர் மைதீன்] [2000 மே 10

இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 1989-90-ல் போடப்பட்ட காரணத்தினால் பாளையங்கோட்டையிலே இருக்கக்கூடிய பல விரிவாக்கப் பகுதிகள் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே இடம்பெறவில்லை. ஆகவே, அந்தப் பகுதிகள் எல்லாம் இடம் பெறுகின்ற வகையில் ஒரு புதிய குடிநீர்த் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலேயும், மாண்புமிகு முதலமைச்சரிடத்திலேயும் 16-2-1999 அன்று கொடுத்தேன். அந்தக் கோரிக்கையானது சம்பந்தப்பட்ட குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் திருநெல்வேலியிலே இருக்கக்கூடிய நிர்வாகப் பொறியாளர் அவர்கள் 14-5-1999 அன்று ஒரு திட்டத்தைத் தீட்டி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

அதாவது, ஒரு கோடி ரூபாயில் ஒரு புதிய திட்டம் உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி, இப்போது மணப்படைவீட்டிலேயிருந்து வந்து கொண்டிருக்கின்ற தண்ணீரையும், புதிதாக திருமலைக் கொழுந்துபுரத்தில் இருந்து எடுக்கக்கூடிய தண்ணீரையும் ஒன்றாகச் சேர்த்து காமாட்சி நகரிலே 4 இலட்சம் லிட்டர் கொள்கின்ற அளவிற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை உருவாக்கி, அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு இந்த இரண்டு பக்கத்திலிருந்தும் வரக்கூடிய தண்ணீரை, S.P. அலுவலகத்திற்கு அருகே ஒரு sump-ஐ ஏற்படுத்தி அதிலிருந்து காமாட்சி நகருக்குள் கொண்டு சென்று, காமாட்சி நகரிலேயிருந்து பாளையங்கோட்டையினுடைய விரிவாக்கப் பகுதிகளாக விளங்குகின்ற வி.எம்.சத்திரம், stage 1, 2, 3, ஆகிய பகுதிகளுக்கும், அதைப்போல, காமாட்சி நகர், P & T காலனி, K.T.C. காலனி, T.V.S. நகர் ஆகிய பகுதிகளுக்கும் கொடுப்பதற்கு வேண்டிய திட்டத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மேலப்பாளையத்தைப் பொறுத்தமட்டில, 1½ இலட்சம் மக்கள் வாழக்கூடிய ஒரு நகரமாகும். அந்த நகரத்திலே 1982 ஆம் ஆண்டுதான் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டப்பட்டு, அதன்மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. 1982 ஆம் ஆண்டிற்குப் பின்பு மேலப்பாளையத்தில் பல விரிவாக்கப் பகுதிகளெல்லாம்



2000 மே 10] [திரு. முகம்மது கோதர் மைதீன்]

உருவாகியிருக்கின்றன. குறிப்பாக, சேவியர் காலனி, ஹாமிம்புரம், பங்களா அப்பா நகர் ஆகிய பகுதிகளெல்லாம் உருவாகியிருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியின் மூலம் மேலப்பாளையம் முழுவதற்கும் இப்போது தண்ணீர் கிடைக்கவில்லை. நான் நிதி நிலை அறிக்கையில் பேசும்போதுகூட மேலப்பாளையத்தினுடைய தண்ணீர்ப் பற்றாக்குறையைப் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். நேற்றைய தினம் கூட அங்கேயிருந்து வந்த தகவலின் அடிப்படையில் சொல்கிறேன். அங்கேயிருக்கிறவர்கள், அருகில் இருக்கக்கூடிய தாமிரபரணி ஆற்றிற்குச் சைக்கிளிலே இரண்டு பக்கங்களிலும் குடங்களை எடுத்துச் சென்று தண்ணீர் கொண்டுவந்து கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சியின் சார்பாகக் குடிநீர் லாரிகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். மேலப்பாளையத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு தெருவும் 1/2 கிலோமீட்டர் அளவிற்கு இருக்கக்கூடிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால், மேலப்பாளையத்தின் அந்த 1½ இலட்சம் மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்ற வகையிலே மேலப்பாளையத்தினுடைய மேல்பகுதியிலே புதிதாக ஒரு நீர்த்தேக்கத்தொட்டியைக் கட்ட வேண்டும். மேலப்பாளையத்தைப் பொறுத்தமட்டில், தாமிரபரணியினுடைய தலைமாட்டிலே இருக்கக்கூடிய பகுதி. அது இருந்தும், அந்தப் பகுதி மக்கள் குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மேலப்பாளையம் புகைவண்டி நிலையத்திற்கு அருகே ஒரு நீர்த்தேக்கத் தொட்டியை உருவாக்கி, மேலப்பாளையத்தினுடைய மேல்பகுதியிலிருந்து, மத்திய பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்குக் குடிநீர் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.கே. வீரப்பன்.

***திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்திலே கலந்துகொண்டு ஒருசில கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கியமைக்காக தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர்

அவர்களுக்கும் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்த நேரத்திலே, புதிய அமைப்பான, மூன்றாவது அடுக்கான, மாவட்ட ஊராட்சியினுடைய செயல்பாடுகளைப் பொறுத்து, அதனுடைய செயல்பாடுகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, படிப்படியாக அதிகாரங்கள் வழங்கப்படும் என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களே இந்தச் சட்டப் பேரவையிலே அறிவித்தார்கள். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று சொல்லி ஆட்சிக்கு வந்து, இந்த ஆட்சியிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்புகளும், அதிகாரங்களும் வழங்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அந்த உயர்மட்டக் குழு, 1999 ஜனவரியிலே, அரசுக்கு, 1008 பரிந்துரைகளை வழங்கி இருக்கிறது; ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறது. அந்த 1008 பரிந்துரைகளிலே இதுவரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 718 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, இப்போது உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்கி இருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே இயங்கி வந்த திட்டக் குழு, இனி, மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையிலே செயல்படும் என்று சொல்லி, இன்றைக்குச் சட்டமன்றப் பேரவையிலே அறிவித்து இருக்கிறார்கள். அதற்காக மாவட்ட ஊராட்சிக் குழுவின் தலைவர் என்கின்ற முறையிலே தனிப்பட்ட முறையிலே நான் அவர்களுக்கு நன்றி சொல்வதைவிட, நாடும் நாட்டு மக்களும் அறிகின்ற வகையிலே, இந்த மாமன்றத்திலே அவருக்கு நான் நன்றி சொல்வது சாலப் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினால், இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் மாவட்ட ஊராட்சிக் குழுவின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.



நம்முடைய உள்ளாட்சிகளுக்கு வரி வருவாயிலே இருந்து சென்ற ஆண்டு 845 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் நடப்பு ஆண்டிற்கு அதை 1,036 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பைக் கருதி, கிராமப்புறங்களிலே இருக்கின்ற 3 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையிலே கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம், கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பொன்விழாத் திட்டம் போன்ற திட்டங்களுக்காக இப்போது மாநில அரசு 73 கோடி ரூபாயும், மத்திய அரசு 219 கோடி ரூபாயும் ஒதுக்கியிருக்கின்றன. அந்தவகையில் 3 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையிலே, திட்டமிடப்பட்டுள்ளது.

சாலை மேம்பாட்டிற்காக, நடப்பு ஆண்டிலேயும் வரும் நிதியாண்டிலேயுமாக 11,600 கிலோமீட்டர் கிராமச் சாலைகளை தார்ச் சாலைகளாகவும், 5,000 கிலோமீட்டர் தெருக்களை சிமெண்ட் வீதிகளாகவும் ஆக்குவதற்காக 900 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இப்போது உழவர் சந்தையிலே, உழவர்கள் நேரடியாக நியாய விலையிலே விற்பனை செய்வதைப்போல, கிராமப்புற மக்கள், தாங்கள் தயாரித்த கைவினைப் பொருள்களை நகரத்திலே கொண்டு வந்து விற்பதற்காக நிரந்தர மையங்களை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு 'பூமாலை' என்ற வணிகச் சின்னம் ஒன்றை உருவாக்கி, அங்கே விற்பனையை அதிகரிப்பதற்காக, அந்தச் செலவுக்காக மட்டும் 14.60 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அடுத்து, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அது, இந்த மூன்றாண்டுகளிலே மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வந்திருக்கிறது. வரும் நிதியாண்டிலும், 210 ஊராட்சிகளுக்கு அதை எடுத்துக் கொள்வதற்காக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, நமக்கு நாமே திட்டம், மக்கள் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிற காரணத்தினால், மக்கள் இந்த அரசாங்கத்திலே ஓர் அங்கம் என்பதை உணர வேண்டும்; இது நம்முடைய அரசாங்கம், நாமும் இந்த அரசாங்கத்திலே ஓர் அங்கம் என்பதை உணர வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டது இந்தத் திட்டம். இது மிகச் சிறப்பாக மக்கள் மத்தியிலே வரவேற்பை ஏற்படுத்தி இருக்கிற காரணத்தினாலே, இந்த நிதியாண்டில் 30

கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்று. (மணியடிக்கப்பெற்றது). ஒரு நிமிடத்திலே பேசி முடித்துவிடுகிறேன். அதோடு மக்களுடைய பங்கேற்பு இன்னும் அதிகரிக்கின்றபோது, கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்று சொல்லி இருப்பது பாராட்டத்தக்க ஒன்று.

அடுத்தபடியாக, ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு இந்த 4 ஆண்டுகளிலே 2 இலட்சத்து 84 ஆயிரம் இலவச concrete வீடுகள் கட்டப்பட்டபோது, இந்த நிதி ஆண்டிலே மேலும் 31 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு 99 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது பாராட்டத்தக்க ஒன்று. அதேபோன்று, ஊரகத் தூய்மை இயக்கம் "Rural Sanitation Campaign" என்ற பெயரிலே ஒரு திட்டம் இப்போது உருவாக்கப்பட்டு, அதற்காக 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பது பாராட்டத்தக்க ஒன்று.

*முற்பகல் 11-45*

ஊரகக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், எதிர்காலத்திலே 2050-ஆம் ஆண்டிலே, நம்முடைய இந்தியாவிலே 6 மாநிலங்களிலே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கும் என்றும், அதிலே தமிழ்நாடு ஒன்று என்றும், நெதர்லாந்து நாட்டிலே நடைபெற்ற இரண்டாவது உலக தண்ணீர் மன்றத்திலே Second World Water Forum and Ministerial Conference-ல் சொல்லியிருப்பதைக் கருத்திலேகொண்டு, மழை நீரைச் சேமித்து உபயோகிப்பது குறித்தும், நிலத்தடி நீரைப் பாதுகாப்பது குறித்தும் ஆய்வு செய்து ஓர் அறிக்கையை அரசுக்கு அளிப்பதற்காக ஓர் உயர்மட்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டு இருப்பது பாராட்டத்தக்க ஒன்று. ஆக எதிர்காலத்தைக் கருத்திலேகொண்டு, செயல்படுகின்ற ஓர் அரசாக இந்த அரசு திகழ்கிறது.

இந்தத் துறையின் மானியக் கோரிக்கைகளின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றியும், நமக்கு நாமே திட்டம் பற்றியும், குறிப்பாக சமத்துவபுரம் திட்டம் பற்றியும் குறை சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

ஏதோ அவரது தொகுதியிலே சமத்துவபுரத்திலே கட்டப்பட்டு இருக்கின்ற அனைத்து வீடுகளும் விழுந்து விட்டன என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை மிகவும்



பாராட்டத்தக்க ஒன்று. எங்களுடைய மாவட்டத்திலே மிகச் சிறப்பாக அந்த சமத்துவபுரத் திட்டம் செயல்பட்டு வருகிறது. அங்கொன்றும், இங்கொன்றுமாக ஏதாவது தவறுகள் நடக்குமானால், அந்தத் தவறுகளும் சுட்டிக் காட்டப்படுகின்றபோது, உடனடியாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் இப்போது பொறுப்பிலே இருக்கின்றார்கள். அதேபோன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார்கள்.

இறுதியாக, குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றி மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். குடிநீரைப் பொறுத்தவரை எங்களுடைய மாவட்டத்திற்கு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவிற்கு பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக எங்கள் மாவட்டத்திற்கு வந்து ஆய்வு செய்தபோதுகூட, பல்வேறு திட்டங்களையும் விரைந்து முடித்துக் கொடுப்பதாக நம்முடைய குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் அமைச்சரிடம் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னதற்கு மாறாக, இப்போது வேலைகள் மிகவும் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த டிசம்பர் மாதத்திலே முடித்துக் கொடுப்பதாகச் சொன்ன வேலைகளிலே கேணி வெட்டுகின்ற வேலையோ, Pipe line போடுகின்ற வேலையோ அல்லது மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுகின்ற வேலையோ எதுவும் நடைபெறவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துத் துறைகளும் தங்களது பணிகளைச் செவ்வனே செய்து வந்திருந்தாலும்கூட, மக்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக முனைந்து செயலாற்றக்கூடிய துறை, உள்ளாட்சித் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் நான் இந்தந்தப் பணிகளைச் செய்திருக்கிறேன், எனவே அரசைப்பற்றிக் குறை சொல்வதை விட்டுவிட்டு, மேலும்

நான் உங்கள் தொகுதியிலே என்னென்ன செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்டுங்கள், நான் அவற்றை நிறைவேற்ற முயற்சிக்கிறேன் என்று, அவர்களே கோருவது போன்ற ஒரு கடிதத்தை இங்கே வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் என்னென்ன செய்தார்கள் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால் நான் குறிப்பிட்டவாறு ஒரு கடிதம்கூட வைத்திருக்கிறார்கள். எனவே, அந்த அளவிற்குச் சிறப்பாக இந்தத் துறை செயல்படுகிறது என்பதை உணர்ந்து, மனசாட்சி உள்ள யாரும் நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆனாலும், சில தேவைகள் இன்னும் கவனிக்கப்பட வேண்டியிருப்பதால் அவற்றைப்பற்றி மட்டும் சொல்லி அமையலாம் என்று கருதுகிறேன்.

என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியைப் பொறுத்தமட்டில், கப்பியறைப் பஞ்சாயத்து மிகப்பெரும் தண்ணீர்ப் பஞ்சம் உள்ள ஓர் இடமாக இருக்கிறது. வறட்சி என்று வந்துவிட்டால், ஆரம்பத்திலேயே தண்ணீர்ப் பற்றாக்குறை வந்துவிடும். பல இடங்களில் அது ஓரளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்டு இருப்பினும் கப்பியறைப் பஞ்சாயத்தினுடைய மேடான பகுதிகளுக்கு இன்னும் தண்ணீர் வந்து சேரவில்லை, குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அதை அரசு கவனிக்க வேண்டும். அதுபோன்று என்னுடைய வில்லுக்குறி பஞ்சாயத்தில் காரவிளை, பரசோ போன்ற பகுதிகளில் ஏற்கெனவே இருந்த குடிதண்ணீர்த் திட்டத்தின்கீழ் கிணறு அமைத்த இடத்தில் தண்ணீர் இல்லாமல் ஆகிவிட்டது. எனவே இன்னொரு இடத்தை, அங்குள்ள பொதுமக்கள் காட்டியிருக்கிறார்கள். அந்த இடத்தில், புதிதாக ஒரு கிணறை அமைத்து, குடிதண்ணீர் வசதியை மேம்படுத்த ஆவன செய்ய வேண்டுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஊரிலே ஒரு குடிநீர்த் திட்டம் செயல்படுகிறது. என்ன பாக்கியம் என்றே தெரியவில்லை. எவ்வளவு வறட்சி வந்தாலும்கூட, அங்கு தண்ணீர் வற்றுவதே கிடையாது. அந்த அளவிற்குச் செழிப்பாக நல்லதண்ணீர் கிடைக்கிறது. ஆனால், என்னுடைய ஊரில் வீடுகளுக்குத் தண்ணீர் இணைப்பு இன்னும் கிடைக்கவில்லை. என்னுடைய வீட்டிற்குக்கூட தண்ணீர் இணைப்பு கிடைக்கவில்லை. ஏராளமான அளவில் செழிப்பாக நல்லதண்ணீர் கிடைக்கிறபடியால் அரசாங்கம் இந்தப் பகுதிகளில் உள்ள



வீடுகளுக்குத் தண்ணீர் இணைப்பு கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். என்னுடைய வீட்டிற்கும் இதுவரையில் தண்ணீர் இணைப்பு கிடைக்கவில்லையாதலால், அதையும் கவனத்திலே கொண்டு இதுகுறித்து ஆவன செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பக்கத்து ஊரான ஒரு பஞ்சாயத்தில் சுங்காங்கடை, வேளாளர் தெரு ஆகிய 2 தெருக்கள் இருக்கின்றன. அங்கும், அதுபோன்று, அம்பேத்கர் காலனி, பனவிளை, ஆளூர், புன்னவிளை, வீராணி போன்ற பகுதிகளிலும் குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அதற்கான பணிகள் நடந்துகொண்டிருப்பதாக இங்கே கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விரைவில் அங்கே குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்துதர அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-50

அடுத்து, முளகுமூடு டவுன் பஞ்சாயத்தின் 17ஆவது வார்டில் தண்ணீர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது. அதையும் கவனத்தில்கொண்டு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதைப் பொறுத்தவரை அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு சுகாதாரத் துறையைச் சார்ந்தது. அதனுடைய அலுவலகம் சென்னையிலே இருக்கிறது. கோவையில் நடந்தது போன்று தண்ணீர்மூலம் பிரச்சினை அல்லது ஒரு சம்பவம் வந்துவிட்டால், எங்களது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சென்னைக்கு வந்துதான் அதைப் பரிசோதிக்கக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களுக்கு மையமாக, திருநெல்வேலியிலோ அல்லது வசதியான ஏதாவது ஓர் இடத்தைத் தேர்வு செய்தால், அங்கும் இந்தப் பணியைச் செய்யும் வகையில் அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாவட்டத்திற்கு ஒரு சுகாதார அதிகாரி, குடி தண்ணீரைப் பரிசோதித்து பராமரிக்கின்ற பணியைச் செய்ய முடியுமா என்பதை நிதிநிலையையும் கருத்தில்கொண்டு ஆலோசிக்க வேண்டும்.

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், நாகர்கோவில் நகராட்சி, குழித்துறை நகராட்சி, குளச்சல் நகராட்சி ஆகிய மூன்று நகராட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனது தொகுதிக்குட்பட்டு இருக்கக்கூடிய பத்மநாபபுரம் நகராட்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. மற்ற மாவட்டங்களில் பல பஞ்சாயத்துக்கள் இணைக்கப்பட்டு உள்ளதுபோல, பத்மநாபபுரம் தொகுதிக்குள் இருக்கக்கூடிய பத்மநாபபுரம் நகராட்சியையும் மற்றும் அனைத்துப் பஞ்சாயத்துக்களையும் இந்தத் திட்டத்தின்கீழ் இணைத்து ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் எனனதான் நல்ல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினாலும்கூட, சில அதிகாரிகளுடைய செயல்பாட்டால், கெட்ட பெயர் அரசாங்கத்திற்கு வந்துவிடுகின்றது. அதனால் எங்களைப்போன்ற எம்.எல்.ஏ.-க்கள்கூட வேதனைபடக்கூடிய நிலை ஏற்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். என்னுடைய ஊர் கீழக்கருப்புக்கோடு. என்னுடைய ஊரில் விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அங்கு ஒரு குளம் இருக்கிறது. குளத்தில் இறங்கிக் குளிப்பதற்கு படித்துறை கிடையாது. படித்துறை வேண்டுமென்று பஞ்சாயத்தில் எல்லாம் முயற்சி செய்து. அதற்குத் தேவையான பணமும் வந்துவிட்டது என்ற நிலையில் குளத்தில் இருந்து இப்போது தண்ணீரைத் திறக்கவிடக்கூடாது, குளத்தை வற்ற வைக்கக்கூடாது. விவசாயத்திற்குத் தேவை இருக்கிறது என்று விவசாயிகள் சொல்வதால் நான் எம்.எல்.ஏ. ஆகி 4 ஆண்டுகளாக முயற்சி செய்தும் அந்த வேலையைச் செய்ய முடியவில்லை. கடைசியில் பஞ்சாயத்தை நம்பியிருந்தால் முடியாது என்று கருதி, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதி ஒதுக்க வேண்டுமென்று, திட்ட அலுவலர் அவர்களிடம் சொல்லி, அவர்களும் ஒதுக்குகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். உடனே வேலை செய்ய வேண்டும். அதற்கு பிறருடைய அனுமதி எல்லாம் பார்த்திருந்தால் சரியாகாது என்று அவர்களிடம் சொல்லியிருந்தேன். அவரும் உடனே செய்ய ஆவன செய்கிறேன் என்று சொன்னார். Contractor வந்து குளத்தை வற்ற வைத்துவிட்டார். பொறியாளர் வந்து பார்த்து வேலை செய்யலாம் என்று சொல்லாத காரணத்தால் கிட்டத்தட்ட ஒரு மாத காலமாகப் பணி செய்யப்படாமல் கிடப்பில் இருக்கிறது. அதுபோல், சாலை போட அனுமதி கொடுத்தாகிவிட்டது. அடியில் ஒரு குழாயைப்போட்டு சாலையை மூட வேண்டும்.



அதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில், என்னுடைய ஊரில் இது நடைபெற்றது. Project Officer-இடம் நான் phone-ல் பேசினேன், பொறியாளரிடமும் பேசியிருக்கின்றேன். அனைவரும், சரி, சரி என்று சொல்கிறார்கள். Project Officer-ஐப் பொறுத்தமட்டில் இதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். சம்பந்தப்பட்ட பொறியாளர் வந்து பார்த்து வேலையைச் செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும். அதைச் செய்யாமல், சட்டமன்ற உறுப்பினரான என்னுடைய ஊரில், நான் இவ்வளவு ஆர்வம் எடுத்த பிறகும் ஒரு மாத காலம் போக்குவரத்து பாதிக்கப்பட்ட நிலைமை என்று சொன்னால், அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கை அரசாங்கம் கருத்தில்கொண்டு இதுபோன்ற அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைகளில் உள்ள மின் கம்பங்களை மாற்ற வேண்டுமென்று சொன்னால், பஞ்சாயத்து பணம் கட்ட வேண்டுமென்று சொல்கினறார்கள். பஞ்சாயத்தோ, வேலை ஆட்களுக்குப் பணம் கொடுக்கக்கூட எங்களிடம் நிதி இல்லை, எனவே, நாங்கள் எப்படி பணம் கட்டுவது என்று சொல்கின்றார்கள் மின் வாரியமோ பணம் தந்தால்தான் மாற்றுவோம் என்று சொல்கின்றார்கள். ஆக. ஆக்கிரமிப்புகளை அகற்றிய பிறகும்கூட அந்த மின் கம்பங்களை மாற்ற முடியாத நிலை இருக்கிறது. சாதாரணமாக கிராமங்களில் சொல்வார்கள். கழுவிக் 'கழுவி செடியில் அல்லது சாக்கடையில் போடுவது என்று. அதுபோன்று ஆக்கிரமிப்புகளை அகற்றுவது, திரும்பவும் ஆக்கிரமிப்பது, திரும்பவும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது, திரும்பவும் ஆக்கிரமிப்பது 'என்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, மின் கம்பங்களை சாலை ஓரத்தில் கொண்டு வருவதற்கு ஏதாவது ஒரு வழியில் பஞ்சாயத்தோ அல்லது மின் துறையோ அல்லது அரசாங்கமோ இதற்கென்று ஒரு நிதியை ஒதுக்கியாவது ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்தபடியாக, குழித்துறை தாமிரபரணி ஆற்றிலிருந்துதான் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய கிட்டத்தட்ட பாதி இடங்களுக்கு வேண்டிய குடிதண்ணீர் வருகிறது. ஆற்றிலே அமைக்கப்பட்டிருக்கக்கூடிய கிணறுகளின் அருகில் மணல் எடுக்கக்கூடிய காரணத்தால் கிணறுகள் சரிந்து விழக்கூடிய நிலை இருக்கிறது. அதைச் சுற்றி பெரிய பாறாங்கற்களைக் கொண்டு

போட்டு, அல்லது முன்காலத்திலே கிணறு அமைக்கும்போது, கிணற்றைச் சுற்றி 5 அடி அகலத்திற்கு பாறாங்கற்களையும், பெரிய பெரிய கற்களையும் பரப்பி, உள்ளே மணல், சிறிய கற்கள் போன்றவற்றைப் போட்டு நிரப்புவார்கள். அதுபோன்று அந்தக் கிணறுகளைச்சுற்றி ஏதாவது செய்து கிணறுகளைப் பாதுகாக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை ஆற்று கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் 22 I.T.I. படித்து, 1992 ஆம் ஆண்டிலிருந்து பல ஆண்டுகள் பணியாற்றியவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 88 பேர் இப்போது அங்கே தேவைப்படுகிறார்கள் என்று அறிகிறேன். ஆகவே அந்த 22 பேர்களுடைய பணியை நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று மக்கள் நலப் பணியாளர்கள் தங்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இப்படி நிரந்தரப்படுத்த வேண்டுமென்றும், சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும், பலதரப்பட்ட மக்களும் போராடுகிறார்கள். அவர்களையெல்லாம் எந்த அளவிற்கு கவனிக்க முடியும் என்பதை அரசாங்கம்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், என்னைப் பொறுத்தமட்டில், கிராமங்களில் எண்ணெய்க் குடம் போட்டவனும் அப்போ என்று அழுகிறான், வெறும் குடம் போட்டவனும் அப்போ என்று அழுகிறான் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். எண்ணெய்க் குடம் போட்டவனுக்கு அதிக நஷ்டம். அவன் அழுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் வெறும் குடம் போட்டவன் எதற்கு அழுகிறான்? அதுபோன்று 3,000 ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்கக்கூடியவர்கள் எங்களை நிரந்தரப்படுத்துங்கள், எங்கள் குடும்பத்திற்கு வேறு வழியில்லை என்று சொன்னால் நியாயம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நான் இதற்கப்புறம் பேச விரும்பவில்லை. காரணம், அரசியலுக்காக அதையெல்லாம் பேசினால் நன்றாக இருக்காது. 3,000 ரூபாய்க்கும் கீழே எங்களுக்கு 500 ரூபாய் தான் சம்பளம், 1,000 ரூபாய்தான் சம்பளம் என்கிறவர்கள் எங்களை நிரந்தரப்படுத்துங்கள், எங்கள் குடும்பத்தை நடத்த வழியில்லை என்று சொல்வது நியாயம். எனவே அரசு நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு இப்படிப்பட்டவர்களையாவது நிரந்தரப்படுத்த ஆவன செய்ய முடியுமா என்பதை இந்த நல்ல வேளையில் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 11-55*

அடுத்து, ஓசூர் தொகுதியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்தி, அந்தத் தொகுதிக்குத் தண்ணீர் நல்லபடியாகக் கிடைக்க ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக ஆக்கக்கூடிய அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் எம்.எல்.ஏ.-க்களோடு ஒரு meeting நடந்தது. அதைப் பரிசீலிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களெல்லாம் பொதுமக்கள் மத்தியிலே பெரிய வரவேற்பை ஏற்படுத்தியுள்ளன. அரசாங்கம் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு நமக்கு நாமே திட்டத்தை ஒரு பஞ்சாயத்திற்கு இரண்டு வீதம் செயல்படுத்த முடியுமா என்று பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கௌரவத்தை அளித்திருக்கிறது. இதை, நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு 1 கோடியாகவோ முடியாமல் இருக்குமானால் 75 இலட்சமாகவாவது ஆக்கித்தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நல்லவேளையில் கேட்டு, அமர்கிறேன். வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம், பாரத் மாதா கி ஜே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளில் பேசுகிற வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் மக்கள் மகிழ்ந்து போற்றுகிற வகையில் குறள்வழி நல்லாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

> "தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
> நீங்கா நிலனாள் பவர்க்கு"

என்பதற்கேற்ப எதிராளியிடமிருந்து காக்கும் அறிவுத்திறம், துணிவு இவற்றோடு எப்போதும் விழிப்பு நிலையிலிருந்து, எதனையும் காலம்

தாழ்த்தாது செய்தல் என்பது நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கே உரிய அரிய செயல்முறையாகும். புயல் வெள்ளமா? அங்கே விரைந்து மக்களைச் சந்திக்கிறார், அவர்கள்தம் குறைகளைத் தீர்க்கிறார். வறட்சியா? பாதிக்கப்பட்ட நிலங்களை, கால்நடைகளை உடனடியாகப் பார்வையிடுகிறார், வேண்டிய நிவாரணங்களை அறிவித்து துயர் துடைக்கிறார். நிதிநிலை அறிக்கை தாக்கலா? விவசாயிகளை, வணிகர்களை அழைத்து, அவர்தம் குறைகளை நேரில் கேட்டறிந்து, அவர்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்கிறார். இந்தக் கோடையிலே குடிநீர் தட்டுப்பாடா? போர்க்கால நடவடிக்கை எடுக்கிறார். இப்படி நாளும் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் நம் முதல்வரை எண்ணுகிறபோது,

"இங்கிவனை யாம் பெறவே
என்னதவம் செய்து விட்டோம்"

என்ற பாடல் வரிகள் நம்முடைய உள்ளத்திலே கிளர்ந்து உவகை அடையச் செய்கிறது. அதே பாடலில்,

"நண்பனாய், மந்திரியாய்
பார்வையிலே சேவகனாய்"

என்று தொடரும் வரிகள் நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் குறிப்பதாக நிச்சயமாக எடுத்துக்கொள்ளலாம்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற குறளுக்குச் சொந்தக்காரர் அவர். 'விவசாயிகளின் பிரச்சினைகளில் ஆழங்கால் கண்டவர்' என்று நம்முடைய மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களாலே பாராட்டப் பெற்றவர். நமக்கு நாமே திட்டத்துக்குக் 'கரு' தந்தவர் என்று நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களாலே முரசொலி ஏட்டில் புகழாரம் சூட்டப் பெற்றவர். 1996 பொதுத் தேர்தலின்போது மக்களைச் சந்தித்து, வாக்குகள் கேட்க நாமெல்லாம் சென்றபோது, விளக்குகள் இல்லை, குடிநீர் இல்லை, சாலைகள் சரிவர இல்லாததால் பேருந்துகள் வர இயலவில்லை என்ற அவலக் குரல் எங்கும் கேட்டது. தலைவர்



கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இந்த 4 ஆண்டுகளில் ஒவ்வொரு சிற்றூருக்கும் நாம் செல்லும்போது மலர்ந்த முகத்தோடு மக்கள் வரவேற்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. இதற்குக் காரணம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளிக்கிற பெருநிதியோடு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற பெருமுயற்சி என்பதை நாம் உணர்ந்தவர்கள். அவர் ஓர் உண்மை ஊழியர். முதல்வருக்குக் கிடைத்த உறுதி மிக்கத் தொண்டர். அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அவர் அலைந்திருக்கிற அலைச்சல், உழைத்திருக்கிற உழைப்பு, பட்டிருக்கிற பாடு எத்தகையது என்பதை இந்தப் பேரவையிலுள்ள ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும் அறிவோம்.

நண்பகல் 12-00

1996-ல் இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட நிலையில், இடையறாது அலைந்து அவர் பணிகளை மேற்கொள்வதைப் பார்த்து, அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் கலக்கமுற்று, அறுவை சிகிச்சை மேற்கொண்டு சில மாதங்கள்தானே ஆகிறது, சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடாதா என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, "இந்த அறுவை சிகிச்சையை யார் செய்து வைத்தார்கள்? அவருடைய ஆட்சி சிறப்படைய உழைக்காமல் இந்த உடம்பு இருந்து என்ன ஆகப்போகிறது?" என்றும் அதற்கும் மேலாக "நம்முடைய தலைவருடைய வயது என்ன? அவருடைய நிர்வாகப் பணி, அரசியல் பணி, எழுத்துப் பணி, கலை இலக்கியப் பணி இவற்றோடு அவர் மேற்கொள்ளும் சுற்றுப் பயணங்கள் எத்தனை, எத்தனை? அவரைக் காட்டிலும் 10 வயது குறைவாக உள்ள நான் அவருடைய செயலில் நூறில் ஒரு பங்காவது செய்ய வேண்டாமா?" என்றும் எங்களிடம் கேட்டார்.

1947-ல் விடுதலைபெற்ற பிறகு திரு. சங்கரா ரெட்டி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆனார்கள். அன்றைக்கு உள்ளாட்சித் துறைக்கு ஸ்தல ஸ்தாபன இலாகா என்று பெயர். முதலில் திரு. சங்கரா ரெட்டி, பிறகு திருமதி இராமசாமி படையாச்சி, பிறகு லூர்தம்மாள் சைமன் அவர்கள் மற்றும் எஸ்.எம்.ஏ. மஜீத் அவர்கள் போன்ற ஏராளமான உள்ளாட்சித் துறை

அமைச்சர்களையெல்லாம் நாம் கண்டிருக்கிறோம். இந்த 53 ஆண்டுகால உள்ளாட்சித் துறை வரலாற்றில் மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களுடைய காலத்தில் செய்துள்ள சாதனை 'தன்னிகரற்ற சரித்திர சாதனை' என்பது மறுக்க முடியாத உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) கட்சிக் கண்ணோட்டம் இல்லாது, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்னும் பாகுபாடு இன்றி, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்த்து மக்களுக்கு எவை தேவையோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றப் பாடுபட்டு வருபவர். அதிகாரிகளிடம் பேசும்போது நீங்கள் எல்லாம் நிறையப் படித்தவர்கள், நானோ படிக்காதவன் என்று கூறி, அவர்களிடம் ஒரு முறைக்கு நான்கு முறை புரியாததைக் கேட்பதைப்போலக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அவற்றுக்கும் மேலாகத் தன்னுடைய முத்திரையைப் பதிக்கக்கூடியவர். 'அனுபவம் முந்தியது, வேதம் பிந்தியது' என்பது இவரிடத்திலே நாம் காணும் உண்மை. இனி வரப்போகிற 50 ஆண்டுகாலத்திலும்கூட, இவரது உழைப்பை விஞ்சிட இயலுமா என்பது ஐயமே.

உள்ளாட்சித் துறை மானியத்தைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி மன்றங்களின் சிறப்பான நிர்வாகத்திற்கு சென்னை மாநகராட்சியையும், அதன் மேன்மைக்குரிய மேயர் அவர்களையும் எடுத்துக்காட்டாக நாம் கொள்ளலாம். அவர் பொறுப்பு ஏற்றபோது கேள்விக்குறியாகப் பார்த்த பார்வைகள், இப்போது வியப்புக்குறி பார்வையாக, ஆச்சரியக்குறி பார்வையாக மாறியிருப்பதை நம்மால் உணர முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேன்மைமிகு மேயர் அவர்களின் நிர்வாகத் திறன், மாநகராட்சிப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் காட்டும் அக்கறை, விளையாட்டில் ஈடுபாடு, தூய்மை நிறைந்த சென்னையாக மாற்றுவதில் ஆர்வம், அடுக்கடுக்காய் மேம்பாலங்கள் கட்டுவது என்று அத்தனையும் விரைவுப் பணிகள். சொல்லிலே விவேகம், செயலிலே வேகம், வயதுக்கும் மீறிய அனுபவ முதிர்ச்சியையும் அவரிடத்திலே காண முடிகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் நல்லாட்சிக்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அரும்பணி அணி சேர்ப்பதுபோல, மாநகர மேயரின் பணியும் பெருமை சேர்ப்பதாகவே அமைகிறது.



அய்யன் வள்ளுவப் பேராசான் உணர்ந்து சொல்வான், தமது மக்களின் அறிவுத் திறன், செயல் திறன், உழைப்பு முதலானவை மாநிலத்து மக்களுக்குப் பயன்படுவதைப் பார்த்து பெற்றவர்களின் கண்களை நீர் மறைக்கும் என்று.

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

அத்தகைய நிலையில்தான் தலைவர் கலைஞர் அவர்களும், தமிழ்த் தென்றல் பேராசிரியரும், மறையோரும் தம் குடும்பத்துப் பிள்ளையின் செயல் திறம் கண்டு இப்போது மகிழ்கின்றனர்.

நம்முடைய முதல்வர் அவர்கள் தஞ்சை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள் என்பது எங்களுக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற ஒன்று. 1971-ல் இரண்டாம் முறையாக அவர்கள் முதல்வர் பொறுப்பு ஏற்றபோது, தஞ்சைக்கு கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்காக ரூ.1 கோடி அனுமதி அளித்து உதவினார்கள். 1989-ல் அதே திட்டத்திற்காக நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இரண்டு generators வேண்டுமென்று கேட்டுக் கொண்டபோது, உடனடியாக வழங்கி உதவினார்கள். 1996-ல் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நகராட்சிகளில் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்பதற்கு முன்னாலேயே, தஞ்சையிலே சீரழிவைத் தந்துகொண்டிருந்த சங்கராந்தி வாய்க்கால் மற்றும் ஆதம்கான் வாய்க்கால் ஆகிய இரு வாய்க்கால்களையும் சீரமைக்க ரூ.70 இலட்சத்தையும், அதேபோல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியை வண்டிக்காரன் தெருவில் அமைப்பதற்கும் சேர்த்து ரூ.1.20 கோடி வழங்கி உதவினார்கள். கடந்த ஆண்டு தண்ணீர்த் தட்டுப்பாடு என்றவுடனே, கீழவாசல், அண்ணாநகர் மற்றும் மருத்துவக் கல்லூரிப் பகுதிகளிலுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்கி நமது அமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்துள்ளார்கள். இவற்றையெல்லாம் இந்த நேரத்திலே எண்ணிப்பார்த்து தொகுதி மக்களின் சார்பில் நன்றி கூறுவது எனது கடமையாகும்.

பிற்பகல் 12-05

இப்போதைய நிலையில் புயல், வெள்ளம் என்று வந்தால் அதிகம் பாதிக்கப்படுவது தஞ்சை மாவட்டமும், திருச்சி மாவட்டமும்தான்.

[திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா] [2000 மே 10

இடைவிடாத பெருமழையின்போதும், வெள்ள நேரங்களிலும், வடிகால்களும், சாக்கடைகளும் நிரம்பி, தெருக்களில் வந்து, வீடுகளிலும் நீர் நுழையக்கூடிய அபாயநிலை இருந்து வருகிறது. குறிப்பாக 6-வது வட்டத்தின் நிரந்தர நகர்மன்ற உறுப்பினரும், தஞ்சை நகர்மன்றத்தின் நிரந்தரத் துணைத் தலைவருமாகிய திரு. சுல்தான் அவர்களுடைய வடக்குவாசல் பகுதி, வடவாறு உடைப்பெடுத்து கரந்தை குளத்து மேட்டுத் தெரு, கீழவாசல் பாலோபா நந்தவனம் பகுதி, இராஜா மிராசுதார் மருத்துவமனை தொடங்கி மானம்புச்சாவடி, தொல்காப்பியர் சதுக்கம், புளியமரத்தடி கடைத்தெரு ஆகிய இடங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, மக்கள் மழைக்காலங்களில் அவதிக்கு உள்ளாகின்றனர். இவற்றை நேரில் பார்வையிடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வர இருந்த நாளில் திடீரென்று நமது மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் திரு. ஜே.எஸ். இராசு அவர்கள் இயற்கை எய்தியதால் பார்வையிட இயலாமல் போயிற்று. இவற்றைச் சீர் செய்ய நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் மேலான அனுமதியோடு நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தால் தஞ்சை மக்களுக்கு அது பெரிதும் நலம் பயக்கும் என்பதுடன் அவர்களின் வயிற்றில் பால் வார்ப்பதுபோல அமையும் என்று அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மக்களின் தேவைகளைக் கேட்டு அறிந்து, அவற்றைச் செய்து கொடுத்து அவர்களை அரவணைத்துச் செல்லும் ஆட்சியை, ஆட்சியாளரை மக்கள் பாராட்டி அவர்தம் நிழலில் அவ்வாட்சியைத் தாங்கி நிற்பர் என்பது குறள்.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு

என்ற குறளுக்கேற்ப அனைவரும் மெச்சுகின்ற குணத்தைத் தம் சொத்து சுகமாக்கிக் கொண்டிருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களே வருகிற 2001-லும் மீண்டும் நல்லாட்சியைத் தருவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்.



2000 மே 10]

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டினுடைய ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பில் எனது கருத்துகளைச் சொல்ல முன்வருகின்றேன். தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், "சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற சொல்லுக்குச் சொந்தக்காரராக, நடைபெறாது இருந்த உள்ளாட்சித் தேர்தல்களை முறையாக நடத்தி முடித்து, அந்த உள்ளாட்சி நிருவாகத்தின் சார்பாக நகராட்சி, பஞ்சாயத்து, பேரூராட்சி, சிற்றூராட்சியினுடைய முறையான தேர்தல்கள் நடைபெற்றதற்குப் பின்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆங்காங்கே இடம் பெற்றதற்குப் பின்னால், இப்போது ஆங்காங்கே இருக்கக்கூடிய மக்களுடைய அடிப்படைத் தேவைகள், அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய கூரிய நல்மதியின் காரணமாக இப்போது அனைத்து தரப்பினரும் பாராட்டும் வகையில் நல்ல கருத்துகளை எடுத்துச்சொல்லி, நல்லமுறையில் பணியாற்றி இந்த ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு அவரும் ஒரு காரணமாக இருப்பதால் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உள்ளாட்சித் தேர்தலிலே பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு என்பது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே தமிழகத்தைப் பொறுத்தவரை 6 மேயர்கள் இருந்தாலும், 2 பெண் மேயர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது முதல்வர் அவர்களுடைய கொள்கையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியும்தான் அதற்குக் காரணம் என்பதை எண்ணி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோன்று நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் சிற்றூராட்சிகளிலும் முறையாகப் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்திலே சிறுபான்மைச் சமுதாய மக்களின் சார்பாக எங்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பற்றியும் வலியுறுத்திச் சொல்வது எங்களுடைய கடமையெனக் கருதுகின்றோம். மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர்

அவர்கள் சிறுபான்மைச் சமுதாய மக்களுக்காக இஃப்தார் நிகழ்ச்சியில் உருது அகாடமியும், இட ஒதுக்கீட்டையும் தருவோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த அடிப்படையிலே உருது அகாடமி குறித்து அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். அதற்காக இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே எங்களுக்கு இட ஒதுக்கீட்டையும் அளிப்பீர்கள் என்று சிறுபான்மைச் சமுதாய மக்களின் சார்பாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்ற செய்தியினை இந்த உள்ளாட்சிமன்ற மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பைப்பெற்ற இந்த நேரத்திலேயும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

*பிற்பகல் 12-10*

இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுக்காக ஒதுக்கியிருக்கின்ற தொகையை ரூபாய் 50 இலட்சத்திலிருந்து 60 இலட்சம் ஆக உயர்த்தி அறிவிப்பு செய்திருக்கின்றீர்கள். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அதைக் கோடிட்டுக்காட்டி, அதை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை நானும் வலியுறுத்தி இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 50 இலட்சத்திலே 25 இலட்சம் ரூபாயை பள்ளிகளினுடைய கணினி மையக் கட்டடங்களுக்காகப் பெற்றுக்கொண்டு, 25 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கினார்கள். இப்போது சாலைகள் மேம்பாட்டுக்காக ஒதுக்குகின்ற நிதியானது கிலோமீட்டருக்கு 3 இலட்சத்திலிருந்து 4 இலட்சம் ரூபாயாகவும், தார்ச் சாலைப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை இப்போது கிலோமீட்டருக்கு 6 இலட்சத்திலிருந்து 7 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற தொகையான ரூபாய் 60 இலட்சத்திலே இருந்து 25 இலட்சம் ரூபாயும் அப்படிச் சென்றுவிட்டால் 4 அல்லது 5 கிலோமீட்டர் சாலைகளுக்கு மேல் எங்களால் வழங்கிட முடியாது. மேலும், மக்களுடைய மற்ற தேவைகளுக்காக ஒதுக்க முடியாத நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, நீங்கள் அந்தத் தொகையை ஒரு கோடி ரூபாயாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கித்தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.



அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்காகத் தொகுதியிலே ஒரு கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அந்தக் கட்டுமானப் பணிகள் சில தொகுதிகளிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பின்னர், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். ஏராளமான இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஓர் உதவியாளரை நீங்கள் நியமித்துத் தர வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறை சார்பாக நிறைவேற்றப்படும் பல திட்டங்கள், பல அடுக்குகளைக் கொண்டுள்ளன. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வள்ர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் என்று இப்படி பல திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்ற உள்ளாட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கையிலே சில நல்ல கொள்கை விளக்கங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே வழங்கியிருக்கிறார்கள். மாபெரும் மக்களாட்சி நடைபெறும் தமிழ்நாட்டில் ஊராட்சியினுடைய அமைப்புகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் என்னென்ன பணிகளைச் செய்திருக்கிறோம் என்பதைச் சொல்லி, இன்று வழங்க வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நன்றியையும், நல்வாழ்த்துகளையும் அமைச்சருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சில குறைபாடுகளை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியானது, பரந்த பெரிய தொகுதியாகும். 567 கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி. 3 ஊராட்சி ஒன்றியங்களிலே அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திலே 20 பஞ்சாயத்துக்களும், பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திலே 30 பஞ்சாயத்துக்களும், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்திலே 8 பஞ்சாயத்துக்களும் உள்ளடங்கியுள்ளன. ஆக, பரமத்தி ஊராட்சி ஒன்றியம் 30 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய பெரிய பகுதியாக

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மே 10

இருக்கின்ற காரணத்தினால் பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்திலேயுள்ள 8 பஞ்சாயத்துக்களோடு இணைத்துக் கொடுப்பார்களேயானால், வளர்ச்சிப் பணிகளுக்காக அது சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதிநிலையைப் பொறுத்தவரையில் அங்கே பற்றாக்குறை இருந்து வருகின்றது. வேலை செய்கின்ற அலுவலர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கே நிதி இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டு நிதி ஒதுக்குகின்றபோது அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்கென கூடுதல் தொகையை சிறப்பு நிதியாக ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்றவை மக்களிடத்திலே பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. நமக்கு நாமே திட்டத்தினுடைய பணிகளைத் தொடங்கிச் செய்து, வேலைகள் முடிக்கப்பட்டுவிட்ட பின்னரும் பணம் கிடைக்கவில்லை என்ற குறைபாடுகளை அங்கே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சமத்துவபுரம் திட்டமும் அங்கே சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. தொகுப்பு வீடுகளை சிற்றூர்களுக்கும், கிராம ஊராட்சிகளுக்கும் கொடுத்திருக்கின்றீர்கள். பேரூராட்சிகளுக்கும் இந்த ஆண்டு அதைச் செய்து கொடுத்தீர்களானால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-15

குடிதண்ணீர் வசதியைப் பொறுத்தவரையில், நீங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாப் பகுதி மக்களுக்கும் குடிநீர் மிகச் சிறப்பாக, பஞ்சமில்லாமல், தட்டுப்பாடில்லாமல் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக என்னுடைய பகுதியிலே உள்ள அஞ்சியூர் மற்றும் கார்வடி கிராமங்களுக்கு நீங்கள் ஆய்வுக்கு வந்த நேரத்திலேகூட துறையினுடைய அதிகாரிகளிடம் சொல்கிறபோது pipe line உடைந்துவிட்டது என்று குறிப்பிட்ட உடனே அதை மாற்றியமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தினீர்கள். அதுபற்றி அந்தப் பஞ்சாயத்தினுடைய தலைவர் திரு. சுப்பிரமணியன்



2000 மே 10] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

மூலமாக எழுதிக் கொடுத்தும்கூட, ஆய்வாளர்கள் சென்று பார்த்துவிட்டு, அதை இன்னும் மாற்றியமைத்துக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை மிக்க வேதனையோடு சொல்லி, அதை மாற்றி அமைத்துக் கொடுக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பள்ளப்பட்டியிலே உள்ள ஆடு அறுக்கும் தொட்டியை—Slaughter House—இடமாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, அதையும் மாற்றிக் கொடுக்கச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அந்த இடமும் இன்னும் மாற்றப்படாமல் இருக்கிறது. அதை மாற்றிக் கட்டுவதற்குரிய நிதியாதாரம் அந்தப் பேரூராட்சியிலே இல்லாமல் இருக்கிறது. அதையும் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குப்பை கொட்டுகின்ற இடம் ஊரினுடைய மத்தியிலே அமைந்துவிட்டதாலும், அருகிலே பெண்கள் படிக்கின்ற பள்ளிக்கூடம் இருக்கின்ற காரணத்தினாலும் சுகாதாரக்கேடு அங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த ஊர் வளர்ந்திருக்கிறது. வளர்ந்திருக்கின்ற ஊர்ப் பகுதியிலே குப்பைக் கொட்டுகின்ற நிலையைத் தவிர்த்து, ஊரை விட்டு அவற்றை அப்புறப்படுத்தி, ஊருக்கு வெளியிலே இனிமேல் கொண்டு சென்று கொட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறும், அதற்கு உரிய இடத்தை ஒதுக்கீடு செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று மாற்று வழிச்சாலை. புண்ணாக்குமருதூர் செல்கின்ற ரோடானது, வெளியிலே செல்லக்கூடிய ரோடானது பாதியிலேயே நின்றிருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.ஆர். வேடம்மாள்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர், எங்கள் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு உயர்ந்திட, நலம் பெற்றிட நடைபெறும் ஆட்சியில் 21 ஆம் நூற்றாண்டில் தமிழக அரசின் முதல் வரவு-செலவுத் திட்ட சட்டமன்றக் கூட்டத் தொடரில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மானியக்கோரிக்கைகள்மீது பேசும் வாய்ப்பு அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், [illegible] ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை [illegible]



V211, 31 (800) P00-104.1

முதலில் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழக ஆட்சி நடைபெறும் காலங்களில் மட்டுமே உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று வருவதை இந்த நாடு நன்றாக அறியும். அண்ணாவின் மறைவிற்குப் பின்பு தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், முதல்வராகப் பொறுப்பு ஏற்றதும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ளாட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன.

மீண்டும் 5 ஆண்டுகள் கழித்து உள்ளாட்சிமன்றத் தேர்தல்கள் நடக்க வேண்டிய நேரத்தில் மிசாவில் கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன் சிறிது காலம் கழித்து உள்ளாட்சி மன்றங்களையும் கலைத்துவிட்டார்கள். பிறகு 1977, 1980, 1984 ஆகிய கால கட்டங்களில் மறைந்த டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதல்வராக இருந்தபோது உள்ளாட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டும், கிராமப்புறங்களில் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை என்று தி.மு.கழகத்தின் செயற்குழு, பொதுக் குழுவில் தீர்மானம் போட்டுப் போராடியதன் விளைவாக, வேறு வழியின்றி எம்.ஜி.ஆர். அவர்கள் 1986 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுக்காக ஊராட்சிமன்றத் தேர்தல்களை நடத்தினார்கள்.

கிராமப்புற ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் மற்றும் நகர்மன்றங்களிலும் தி.மு.கழகம் பெருவாரியாக வெற்றி பெற்று, தலைவர் கலைஞர் அவர்கள் சாதனை படைத்தார்கள். 5 ஆண்டு காலமாக இருந்த உள்ளாட்சி மன்றங்களின் ஆயுளை 3 ஆண்டு காலமாகக் குறைத்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அன்று உத்தரவிட்டது. பிறகு 1989-ல் மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வரானதும் உள்ளாட்சிமன்றங்களுக்கு 5 ஆண்டு கால ஆயுளை வழங்கி ஆணை பிறப்பித்தார்கள். 1991 ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டு, ராஜீவ் காந்தி அவர்களின் மறைவு அனுதாப அலையால் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா 1996 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சிமன்றத் தேர்தலை நடத்தாமல் தமிழகத்தையே சுடுகாடாக மாற்றியது அனைவருக்கும் தெரியும்.

1996-ல் தலைவர் கலைஞர் அவர்கள் 4வது முறையாக மாண்புமிகு முதல்வராகப் பொறுப்பேற்றதும் தேர்தல் அறிக்கையில் கூறியபடி





'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்னும் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தி கிராமப்புற வளர்ச்சிக்கு வித்திட்டு, சரித்திரம் படைத்து வருகிறார் என்பதை நாடு நன்கு அறியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரு நாடு வளம் பெற்றிட, அந்த நாட்டு மக்கள் வாழ்வு சிறந்திட முதுகெலும்பாக உள்ளது கிராமப்புறங்களாகும். அந்த கிராமப்புறங்களில் குடியிருப்பு வசதிகள், மின்விளக்குகள், குடிநீர் வசதிகள், சாலை வசதிகள், பள்ளிக்கூட, சுகாதார வசதிகள் மற்றும் பல்வேறு நலத் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்றிட, மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டு, பணியாற்றினால்தான் முடியும். அந்த அடிப்படையில் இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் உள்ளாட்சிமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 4 ஆண்டுகளில் வரலாற்றுப் புகழ்மிக்க சாதனைகளைச் செய்து வருகின்றோம். அடிப்படையான குடிநீர் வசதி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, concrete சாலைகள், ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சிடும் சோடியம் வேப்பர் லைட்டுகள், தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், தாய்-சேய் நல விடுதிகள், கால்நடை மருத்துவமனைகள் என்று பல்வேறு நலத் திட்டங்களை இப்போது இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

பிற்பகல் 12-20

என்னுடைய அரூர் தொகுதிக்குட்பட்ட 68 ஊராட்சி மன்றங்களிலும், 2 பேரூராட்சிகளிலும் 1996-97, 1997-98, 1998-99, 1999-2000 ஆகிய நான்காண்டுகாலத்தில் 4,777 வளர்ச்சிப் பணிகள் எடுக்கப்பட்டு ரூ.1950.596 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மிகுந்த பெருமையுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2,79,434 பேர் கொண்ட மக்கள்தொகை உள்ள எனது தொகுதியில் மாண்புமிகு தலைவர் முதல்வர் கலைஞர் அவுர்களின் அரசு தனிநபர் செலவினமாக ரூ.698-ஐ ஒவ்வொரு குடிமகனுக்கும் செலவு செய்துள்ளதைப் பணிவுடன் இந்த நல்லநேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராக உள்ள என்னுடைய அரூர் ஒன்றியத்தில் 17 ஊரகக் குடிநீர் பணிகள் எடுக்கப்பட்டு அந்தப் பதினேழு பணிகளும் ரூ.69.95 இலட்சத்தில் சிறப்பாக முடிக்கப்பட்டுள்ளன.

குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடும் ஊத்தங்கரை ஒன்றியத்தில் 81 பணிகள் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் எடுக்கப்பட்டு, ரூ.241.26 இலட்சத்தில் நிறைவேற்றி, இப்போது அங்கு தண்ணீர்ப் பஞ்சம் இல்லை என்ற நிலைமையை நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முழுவதும் உறுதுணையாக இருந்து செயல்படுத்திக் கொடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும், எங்களுடைய மாவட்ட மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியினையும் இந்த நல்லநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமும் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதிக்குட்பட்ட அரூர் ஒன்றியத்தில் ஊரகக் குடிநீர்ப் பணிகள் ரூ.328.01 இலட்சத்திலும், ஊத்தங்கரை ஒன்றியத்தில் 36 ஊரகக் குடிநீர்ப் பணிகள் ரூ.274.25 இலட்சத்திலும், அரூர் பேரூராட்சியில் ரூ.170 இலட்சத்திலும், ஊத்தங்கரை பேரூராட்சியில் ரூ.248 இலட்சத்திலும், மொத்தத்தில் 79 பணிகள் ரூ.1,020.26 இலட்சத்தில் தற்சமயம் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீருக்காக மட்டும் கடந்த 4 ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் பொற்கால ஆட்சியில் என்னுடைய அரூர் தொகுதிக்கு மட்டும் ரூ.1,331.47 இலட்சம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடு ஒதுக்கப்பட்டு, பணிகள் நிறைவேறி வருவதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல என்னுடைய தொகுதியில் கடந்த 4 ஆண்டுகாலத்தில் அரசின் பல்வேறு திட்டங்கள் மூலமாக, தொகுப்பு வீடுகள், தொலைக்காட்சி அறைகள், நிழற்கூடங்கள், ஆழ்துளைக் கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், கல்வெட்டுகள், தடுப்புச் சுவர்கள், கால்வாய்கள், வெள்ளத் தடுப்புச் சுவர்கள், தார்ச் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், பொது விநியோகக் கடைகள், மயானப் பாதைகள், பால் சங்கக் கட்டடங்கள், சந்தைக் கட்டடங்கள், கைவினைக் கூடங்கள், pump rooms, கழிவுநீர்க்



குட்டைகள் போன்ற 4777 பணிகள் ரூ.1950.596 இலட்சத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினரால் நிறைவேற்றப்பட்டுள்ளதையும், நிறைவேற்றப்பட்டுவருவதையும் மக்கள் மனதாரப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

எங்களுடைய மாவட்டம், ஒசூரில் மலர் ஏற்றுமதிக்காக, மலர் ஏற்றுமதி அங்காடி ஏற்படுத்துவதற்காக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர், தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜவுளி ஏற்றுமதி செய்வதற்காக 432 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து எங்கள் மாவட்டத்திலும் ஜவுளி தொழிற்சாலை நிறுவப்படும் என்று அறிவித்த முத்தமிழறிஞர், தானைத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் நிரந்தரக் குடிதண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கவேண்டுமானால் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும் நிதியாண்டிலாவது நிறைவேற்றித் தந்து அவர்கள் பொற்கரங்களால் அடிக்கல் நாட்டி, எங்கள் மாவட்ட மக்களின் குடிதண்ணீர், பஞ்சத்தைப் போக்கிட வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில்தான் 1989 ஆம் ஆண்டிலேயே மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதை நன்கு அறிவோம். 6 கோடி ரூபாய் அளவில் இந்த மகளிர் குழுக்கள் வங்கியில் சேமிப்பு வைத்துள்ளன. ஆனால் தற்போது தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கடன் தரவேண்டும் என்று அறிவிப்பு வந்துள்ளது. தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு என்ற அளவில்தான் உள்ளன. எனவே, அரசு துறை அதிகாரிகளைவைத்தே கிராமப்புறங்களிலே குழுக்களை அமைத்து, மூன்று மாதங்கள் பயிற்சி கொடுத்து கடன் வழங்கினால் சிறப்பாக இருக்கும் என

தெரிவித்துக்கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். ஓர் அரசினுடைய செயல்பாடுகளை எடுத்துக்காட்டுகின்ற ஒரு துறையாக இந்தத் துறை அமைந்திருக்கிறது. மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அதன்மூலமாக ஓர் அரசின் செயல்பாட்டை வெளிப்படுத்துகின்ற துறை உள்ளாட்சித் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட இந்தத் துறையின் மூலமாக செய்யப்பட்டிருக்கின்ற வேலைத் திட்டங்கள் அனைத்தையும் தொகுதி வாரியாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தெரிந்துகொள்கிற அளவிலே, அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரும், அவருக்கு உறுதுணையாக அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் மிகத் தெளிவாகவே தந்திருக்கின்றார்கள்.

நான்கூட மிக ஆச்சரியத்தோடு ஒரு துறையிலே நடந்திருக்கின்ற அல்லது நடைபெறவிருக்கின்ற வேலைகளை எப்படி எடுத்து நமக்குக் கொடுத்தார்கள் என்கின்ற ஓர் எண்ணத்தோடு ஓர் ஊராட்சியை மட்டும் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றனவா அல்லது மிகையாகவோ, குறைவாகவோ சொல்லப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்த்தபோது அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் அத்தனையும் செய்யப்பட்டவை அல்லது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றவைதான் என்று தெரியவந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையில் இந்தப் பகுதியில் உள்ள உறுப்பினர்கள் அதிகாரிகளிடம் இங்கிருந்தே பேசக்கூடாது. வெளியில் போய்த்தான் பேசவேண்டும்.



**திரு. லா. சந்தானம்:** எந்தத் தவறும் இல்லாத அளவுக்கு மிகத் தெளிவாகவே அந்த விவரங்களை எடுத்துத் தந்து இருக்கிறார்கள். அதற்காக அந்தத் துறையையும், துறையைச் சார்ந்த அதிகாரிகளையும் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்'*

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதுபோல் அந்தத் துறையை இந்த அமைச்சரிடத்திலே ஒப்படைத்ததற்கு முதலமைச்சர் அவர்களும் ஒரு காரணம். இதை இவர் தெளிவாகச் செய்து முடிப்பார் என்ற எண்ணத்தோடு அந்தப் பொறுப்பினை இவரிடத்திலே ஒப்படைத்திருக்கின்றார்கள். அதை இவரும் ஏற்றுக்கொண்டு திறம்படச் செய்திருக்கிறார்.

இப்போதுகூட குஜராத், இராஜஸ்தான் போன்ற வடமாநிலங்களிலும் கிருஷ்ணா நதிநீரை சென்னை மாநகரத்திற்குக் குடிநீராக வழங்கிக்கொண்டிருக்கின்ற ஆந்திர மாநிலத்தினுடைய பல பகுதிகளிலும்கூட கடுமையான வறட்சியின் காரணமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பதால் அங்கே இருக்கின்ற கால்நடைகள் எல்லாம் மடிந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையில், தமிழ்நாட்டிலே குடிநீர்த் தட்டுப்பாட்டை அந்த அளவுக்கு இல்லாமல் தீர்க்கிற அளவிலே ஒரு தொலைநோக்குப் பார்வையோடு கடந்த நான்காண்டுகளாக எடுத்துக்கொண்ட அந்த சீரிய முயற்சி ஓரளவுக்குப் பலனை அளித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இருந்தாலும்கூட இன்னும் இராமநாதபுரம், விருதுநகர் போன்ற மாவட்டங்களில் ஆங்காங்கே தண்ணீர் தட்டுப்பாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு சிறந்த முயற்சியினை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது மூன்றடுக்கு ஊராட்சி முறை செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலே நமது மாவட்ட ஊராட்சிகளைப் பொறுத்த அளவிலே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகின்றபோது, அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்கின்ற நிலைதான் இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே, மாவட்ட ஊராட்சியைப் பொறுத்தவரையிலே அதுதான் ஒருசிறந்த, உயர்ந்த அங்கமாக விளங்குகின்றது. அந்த மாவட்ட ஊராட்சியின் தலைவரின் கீழே இருக்கின்ற அதிகாரியாக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைக் காட்டிலும் முதியவ்ரைதான்—Senior officer—நியமித்திருக்கிறார்கள். அதன்மூலமாக அங்கு கூட்டப்படுகின்ற வளர்ச்சிமன்றக் கூட்டத்திலே

அத்தனைத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் கூடுகிறார்கள். அந்த மாவட்டத்தைப் பொறுத்த திட்டங்களையெல்லாம் அந்த அதிகாரிகள் வகுத்துத் தருகிறார்கள். அதன்பேரிலே மாநில சட்டமன்றமும் அவற்றை ஏற்றுச் செயல்படுகின்ற ஒரு நிலையிருக்கிறது. அதைப்போல வருகின்ற காலத்திலாவது தமிழகத்திலே இருக்கின்ற .....

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகாரங்கள் போதவில்லை, அதிகம் கொடுக்க வேண்டுமென்று கூறுவதில் தவறில்லை. ஆனால் அடுத்து, பல மாநிலங்களிலே அதிகமாகச் செய்து இருக்கிறார்கள் என்று சொன்னது குறித்து மட்டும் நான் குறுக்கிடுகிறேன். நாம் செய்திருப்பதைவிட இன்னும் குறைவான அதிகாரங்களைக் கொடுத்திருக்கிற மாநிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. கணக்கு பார்த்தால் நாம் கொடுத்திருக்கின்ற அளவுக்கு அல்லது அதற்கு மேல் அதிகம் கொடுத்திருக்கிற மாநிலங்கள், ஒன்றிரண்டு இருக்கலாம். அதில் இருக்கின்ற இடர்பாடுகளையெல்லாம் கேட்டு அறிந்து, அதைப்போல நம்முடைய மாநிலத்திலே ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஆராய்ந்து, நிதானித்து, மெதுவாக அதிலுள்ள பலாபலன்களைத் தெரிந்து, இப்போது அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அதிகாரங்கள் அந்த நிர்வாகத்திற்குத் தற்போது போதுமானவை என்றுதான் இந்த அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு உள்ள அதிகார அமைப்பு பற்றிக் கூறினார்கள். பக்கத்தில் இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே, ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக் கூட்டத்திற்கும் தலைமை தாங்குகின்ற பொறுப்பே அமைச்சர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அத்தகைய நிலைமையை இங்கே உருவாக்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் எப்படியிருந்தாலும்கூட, மாவட்ட வளர்ச்சிமன்றக்



கூட்டத்தை மீண்டும் உருப்பெறச் செய்ய வேண்டுமென்று இந்த அவையிலே பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதையாவது செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே, இன்னும் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள சில கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு அதனை நிறைவு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். தண்டலை, மாயபுரம், பி. மேட்டுப்பட்டி ஆகிய கிராமங்களிலே ஓரளவுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கின்றது. அங்கு இந்த ஆண்டு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே நான்கு பேரூராட்சிகள் இருக்கின்றன. அதில் சோழவந்தான், வாடிப்பட்டி, பாலமேடு ஆகிய பேரூராட்சிகள் வளர்ந்து வருகிற பேரூராட்சிகளாக இருக்கின்றன. இந்தப் பேரூராட்சிகளின் extension a;ea-க்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதிலே தாமதம் ஏற்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து அதை நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே பணிபுரிகின்ற சிலருடைய பதவிகளை வரன்முறைப்படுத்தித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே மட்டும் குடிநீர் ஆதாரத்தைப் பெறுவதற்கு 833 ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு இருக்கின்றன. இதுபோன்று ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு கிராமத்திலும் குடிநீர் ஆதாரமாக இருப்பது இந்த ஆழ்துளைக் கிணறுகள்தான். அவற்றைப் பராமரிக்கின்ற பொறுப்பிலே இப்போது மாநில அளவிலே ஏறத்தாழ 1100 பேர் இருக்கிறார்கள். அவர்கள் தினக்கூலி அடிப்படையிலே பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக, ஏறக்குறைய 15 ஆண்டுகாலத்திற்கும் மேலாக அந்தப் பணிகளை அவர்கள் ஏற்று செய்துகொண்டு வருகிறார்கள். தொகுப்பூதிய அடிப்படையிலே அவர்களுக்கு ஊதியம் வழங்கி, அவர்களுடைய பணியை வரன்முறை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு .... (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 10 நிமிடங்கள் ஆகவில்லை.

காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலத்திலே, தியாகிகளுடைய குடும்பங்களைக் கௌரவிக்கின்ற வகையிலே, நலிந்துபோன தியாகிகளுடைய குடும்பங்களுக்கு

[திரு. லா. சந்தானம்] [2000 மே 10

வேலைவாய்ப்பு கொடுக்கின்ற அளவிலே, சமூகநலப் பணியாளர்கள் என்கிற முறையிலே ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டு பணியாளர்களை, அந்தத் தியாகிகளுடைய வாரிசுகளுக்கு வழங்கி இருக்கிறார்கள். இப்போது அவர்களெல்லாம் பணிமூப்பு அடைந்து ஓய்வு பெற்ற பின்பு, அந்தப் பணிகள் அந்தத் தியாகிகளுடைய வாரிசுகளுக்கு வழங்கப்படவில்லை. முன்பு 374 ஒன்றியங்களிலும் இரண்டு, இரண்டு பேர்கள்தான் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். தற்போது மொத்தமே 25 பேர்தான் பணியில் இருக்கிறோம் என்கிறார்கள். ஆகவே, இப்போது குடியரசு பொன்விழாவைக் கொண்டாடுவதற்குக் குழுக்களை அமைத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அந்தத் தியாகிகளின் குடும்பங்களின் பக்கமும் உங்களுடைய கவனத்தைச் செலுத்தி, அவர்களுக்கென்று ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க.வெ.வீ இராசமாணிக்கம்.

***திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் பற்றி பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மணிவர்மா, பேசுகின்ற உறுப்பினருக்கும், பேரவைத் தலைவருக்குமிடையில் குறுக்கே செல்லக் கூடாது. உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள்.

**திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** முன்னாள் அமைச்சர் கக்கன்ஜி அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்ததற்காக இந்த அரசுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்கின்ற ஒரு துறையாக விளங்குகின்ற ஊரக வளர்ச்சித் துறைக்கு அரசு 1,120 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. ஆனால் இந்தத் துறைக்கு இந்த ஒதுக்கீடு போதுமானதாகப்படவில்லை. ஏனென்றால், இந்தத் துறைதான் மக்களோடு இணைந்து செயலாற்றுவதுடன் குடிநீரையும்



2000 மே 10] [திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்]

வழங்கி வருகிறது. தற்போது நகராட்சி நிருவாகங்களை உள்ளடக்கி, ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் அளித்து, இந்தத் துறையும் மிக மிக வேகமாகச் செயல்படுவதால், இந்தத் துறைக்கு இன்னும் கூடுதலாக நிதியை ஒதுக்கி, வளர்ச்சித் திட்டங்களை அதிகமாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சி அமைப்புகளைப் பிரித்து அதன் மூலமாக மக்களுக்கு உரிய பயன்களை அளிக்கவேண்டுமென்று ஒரு சட்டத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். ஆனால் 10 ஆயிரம் ஜனத்தொகையையும், வருவாய்க் கணக்கையும் அடிப்படையாகக்கொண்டு உள்ளாட்சிகளைப் பிரிக்க வேண்டுமென்று அச்சட்டத்திலே ஒரு விதியையும் போட்டிருக்கிறார்கள். எனது தொகுதியில் கொட்டாம்பட்டி ஒன்றியத்திலே, கச்சிராயன்பட்டி என்ற கிராமம் இருக்கிறது, ஆனால், அது 18 உட்கடை கிராமங்களாக இருக்கின்றது. அதனால் அந்த ஊராட்சிகளை நாம் பிரிப்பதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அதற்குரிய நடவடிக்கையை எடுத்து, அந்த 18 உட்கடை கிராமங்களும் பயனடைய ஒரு சட்டமுன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வரவேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளை வழங்குகிறோம். 32 ஆயிரம் ரூபாய்க்கு அந்த வீடுகளைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் அது போதாத காரணத்தால், பயனாளிகளுக்கு அதைச் செய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். கான்ட்ராக்டர்களும் அந்த வீடுகளை நல்லமுறையில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல், அவசர, அவசரமாக ஒன்றியப் பொறியாளர்களும் கண்காணித்து சரிவரக் கட்டாததால், பயனாளிகளுக்கு அந்தப் பயன் கிடைப்பதில்லை என்று தெரிய வருகிறது. அதுபோல், கிராமங்களிலே கழிப்பிட வசதி செய்து கொடுப்பதற்கு 500 ரூபாய் வீதம் கோப்பை வடிவ குழாய்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால் அந்தப் பணம் போதாத காரணத்தால், அந்த கிராம மக்களுக்குச் சுகாதாரக் கேடு ஏற்பட்டு, அந்தப் பயன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, கூடுதல் நிதி அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து கழிப்பறைத் திட்டத்தினுடைய செயல்பாட்டை துரிதபடுத்த வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

எல்லா கிராமங்களுக்கும் இப்பொழுது தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அறைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சரிவர இயங்காமல் இருக்கின்றன. மாவட்ட அளவிலே அவற்றைப் பழுது பார்ப்பதற்காக இரண்டு பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். ஆனால், இருவர் ஒரு மாவட்டத்திற்குப் போதுமான பணியாளர்கள் அல்ல. அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திற்குச் செல்கிறார்கள். ஏதாவது கிராமத்தில் பழுது இருக்கிறது என்றாலே அந்தத் தொலைக்காட்சி பெட்டிகளைப் பயன் அற்றவை. என ஒதுக்கித் தள்ளிவிடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்னும் அதிகமான பணியாளர்களை நியமிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இதைக் கொஞ்சம் கவனித்து அனைத்து கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதுடன், அனைத்தும் சரிவர இயங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அனைத்து கிராமங்களிலும் தெரு விளக்குகள் 100% எரிய வேண்டுமென்று ஓர் அரசாணை போடப்பட்டிருக்கிறது. ஆனால், மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் அதிகமான விளக்குகள் பழுது அடைந்து 50% எரியாமல் இருக்கின்ற காரணத்தினால், மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதுடன் அதற்கான காரணங்களை அறிந்து, அதற்கேற்ற வகையில் ஓர் அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய கொட்டாம்பட்டி பகுதியிலே S.S. அமைப்பதற்குரிய இடம் தேர்வு செயப்பட்டபிறகும்கூட, மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு முடியாத நிலைமை இன்னும் இருக்கிறது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் எந்த வேலைத் திட்டங்களானாலும் ஊராட்சித் தலைவர், உறுப்பினர்கள், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் போன்றவர்களையெல்லாம் கலந்தாலோசித்த பிறகுதான் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வெவ்வேறு திட்டங்கள் இருந்தபோதிலும் ஒரே திட்டப் பணியை உள்ளாட்சி உறுப்பினர்களோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களோ



எடுத்துக்கொள்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, எல்லாவற்றையும் கலந்துபேசினால் வெவ்வேறு விதமான திட்டங்களை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்குமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களிலே இரண்டு ஒன்றியப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், வேலை முழு அளவில் நடக்கின்ற நேரத்திலே அவர்களுக்கு உதவியாளர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, 4 இடங்களிலோ, 5 இடங்களிலோ வேலை இருக்கும்போது, அவர்களுக்கு உதவியாக N.M.R. என்று சொல்லக்கூடிய உதவியாளர்களை நியமித்து வேலைகள் தரமுடன் நடைபெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மேலூர் நகராட்சியிலே குடிநீர்ப் பற்றாக்குறை அதிகமாக இருக்கிற காரணத்தினால், 1970-லே பாலாறு பகுதியிலேயிருந்து ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, செயல்பட்டு வந்தது. இப்போது வைகை ஆற்றுப் பகுதியிலே இருந்தோ அல்லது மேலூர் நகராட்சிக்குட்பட்ட பல்லவராயன்பட்டி அருகே பெரிய கிணறுகளை வெட்டியோ நீர் எடுத்து அங்குள்ள குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலிருந்து வீடுகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதால், தெருக் குழாய்களிலே தண்ணீர் எடுக்கின்ற ஏழை மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. அதைப் போக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.ஜி. சம்பத்.

***திரு. ஏ.ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கிய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, சில கருத்துகளை நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12-45*

There is no substitute for hard work. கடின உழைப்பிற்கு ஈடு-இணை எதுவும் இல்லை. இந்தப் பொன்மொழியை இந்த நாட்டிற்குச் சொல்லியவர் மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள். ஆனால், இந்தப் பொன்மொழிக்கு ஓர் இலக்கணம் வகுத்துக் கொடுத்தவர் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையிலே நான் மிகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்று சொல்வதைவிட, தன்னுடைய உழைப்பால் இந்தத் துறையை உயர்த்தி நிமிர்த்தியவர் அமைச்சர் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் என்பதை நான் இந்த அவையிலே பதியவைக்க விரும்புகிறேன். அப்படிச் சிறப்பாகச் செயல்படும் உள்ளாட்சித் துறையில் சுயாட்சி வழங்கியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எப்பொழுதெல்லாம் இந்த நாட்டிற்கு நிதிநிலை அறிக்கையைக் கொடுத்தாலும், அந்த நிதிநிலை அறிக்கையிலே சுயாட்சியினுடைய தத்துவத்தைக் குறிப்பிடாமல் இருந்ததில்லை. சொல்வதைச் செய்கின்ற ஓர் உன்னதமான தலைவர் நம்முடைய கலைஞர் அவர்கள்.

1996-ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறைக்குத் தேர்தலை நடத்தி, அதற்குப் பின்னால் அந்த உள்ளாட்சித் துறைக்கு சுயாட்சியும் கொடுத்து, அந்தத் துறைக்குப் போதுமான அளவிற்கு நிதியையும் கொடுத்து, அந்த நிதியினைச் செலவுசெய்து, திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் போதுமான அளவிற்கு அதிகாரங்களையும் வழங்கியவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். அப்படி சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வருகின்ற நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியை இந்த நாடே பாராட்டுகின்றது. அதோடு மட்டுமல்ல, உள்ளாட்சித் துறைத் தேர்தலை எவ்வளவு சீக்கிரமாக, எவ்வளவு குறுகிய காலத்திலே நம்முடைய அமைச்சர் நடத்திக் காட்டினார் என்பதை இந்தத் தமிழ்நாடே பார்த்து வியந்தது. ஆனால், தேர்தல் முறையிலே சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்பதை என்னுடைய கருத்தாக இந்த அவையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



ஒன்றியத் தலைவர்களைத் தேர்தல் மூலம் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்க சட்டத் திருத்தம் இந்த அவையிலே கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அதேபோன்று, மாவட்ட Council தலைவர்கள் நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். பொதுவாகவே, மக்களின் வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாக நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற ஜனநாயகத்திலே, indirect representative body அவ்வளவு ஆரோக்கியமானதாகக் கருதப்படவில்லை என்கின்ற காரணத்தினால்தான், நேரடியான தேர்தலை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதுகுறித்து இந்த அவையிலே ஒரு நல்ல விவாதம் நடைபெற்றால்கூட நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், நேரடியான தேர்தல் முறையிலேதான், grass-root-ல்தான் democracy கிடைக்கும் என்பதிலே அதிக நம்பிக்கை கொண்டவன் நான். எப்படி மேயர் தேர்தல் நேரடியாக நடக்கிறதோ, எப்படி நகராட்சியினுடைய தலைவர் தேர்தல் நேரடியாக நடைபெறுகின்றதோ, அவ்வாறே ஒன்றியத் தலைவர் மற்றும் மாவட்டத் தலைவர் தேர்தலும் நேரடியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் நடைபெறவேண்டுமென்ற கருத்தை நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மேயர் என்று சொன்னாலே, எங்களுடைய சென்னை மேயரைப்பற்றி நான் இரண்டு வரிகள் சொல்லியாக வேண்டும். வரலாற்றில், Architect of Modern China என்று மாவோ-வைச் சொல்வார்கள். அதாவது நவீன சீனாவை உருவாக்கிய சிற்பி மாவோ. நான் இப்போது சொல்ல விரும்புவது, Architect of சிங்காரச் சென்னை நம்முடைய மேயர் மு.க. ஸ்டாலின் (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அளவிற்குச் சிங்காரச் சென்னையை இப்போது ஒரு சிற்பி போல உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய நிர்வாகம் வெளிப்படையாக அனைவராலும் பாராட்டக்கூடிய அளவிற்கு இருக்கின்றது. இன்னும் நான் ஒருபடி அதிகமாகவே இந்த அவையிலே பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். Mr. Clean என்று சொல்லக்கூடிய அளவிற்கு நம்முடைய மேயர் அவர்களுடைய நிர்வாகம் இருப்பதை நான் பார்த்து வியப்பு அடைந்து இருக்கின்றேன். அவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

எனக்கு முன்னாலே பேசிய இந்த அவையினுடைய பல உறுப்பினர்கள் உள்ளாட்சித் துறையினுடைய சாதனைகளைப் பட்டியலிட்டுக் காண்பித்தார்கள். 5,326 பள்ளிக் கட்டடங்கள், 1,409 சத்துணவு மையங்கள், 6,652 நியாயவிலைக் கடைக் கட்டடங்கள், 26,848 கிலோமீட்டர் தார்ச் சாலை, 5000 கிலோமீட்டர் சிமெண்ட் சாலை என்று இங்கே பட்டியலிட்டு எனக்கு முன்னாலே பேசிய இந்த மாமன்ற உறுப்பினர்கள் மிக அழகாகச் சுட்டிக்காட்டினார்கள். நான் சுட்டிக்காட்ட விரும்புவது அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்து. ஒரு தொகுதிக்கு இரண்டு திட்டங்கள் கொடுத்தால் நலமாக இருக்கும். அண்ணன் அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன், உங்களுக்குத் தெரியாதா என்ன எங்கள் நிலைமை! (மணியடிக்கப்பெற்றது) எனவே, முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, ஒரு திட்டம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்றும், மற்றொரு திட்டம் கலைஞர் மறுமலர்ச்சித் திட்டம் என்றும் அறிவிக்க வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று 60 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கின்றீர்கள். சென்ற வருட estimate மற்றும் இந்த வருட estimate கொஞ்சம் raise ஆகி இருக்கிறது. எனவே, தயவுசெய்து அதை reconsider செய்து, ஒரு கோடி ரூபாயாக வழங்குவதற்கு அமைச்சர் அவர்களும், (மணியடிக்கப்பெற்றது) இந்த அவையினுடைய துணைத் தலைவர் அவர்களும் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வளவு சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் நம்முடைய கலைஞர் அரசை சமீபகாலமாக நம்முடைய T.M.C. உறுப்பினர்கள் . . . (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கிறேன். உள்ளாட்சித் துறை பற்றித் தான்; நான் அரசியலே பேசவில்லை. (குறுக்கீடுகள்) பாண்டிச்சேரியிலே அவர்களுடைய ஆதரவை வாபஸ்பெற்று எங்களுடைய கழக ஆட்சியைக் கலைத்தார்கள்; போகட்டும். கடந்த இடைத் தேர்தலின்போதுகூட . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாண்டிச்சேரிக்குப் போக வேண்டாம். மற்ற points பற்றிச் சொல்லுங்கள்.



**திரு. ஏ.ஜி. சம்பத்:** இப்போதும் தமிழ்நாட்டிலே தமிழ் மாநில காங்கிரஸை சேர்ந்த பலர் ஒன்றியத் தலைவர்களாகவும், மாவட்ட உறுப்பினர்களாகவும் வீற்றிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) எனவே, அதை அப்படியே விட்டுவிட்டு அவர்களுடைய துணை என்றைக்கும் எங்களுக்குத் தேவை என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்டி, அவர்கள் இந்த ஆட்சிக்குத் துணையாக நிற்க வேண்டும்; ஏனென்று சொன்னால், கலைஞருடைய ஆட்சிதான் காமராசருடைய ஆட்சி; கலைஞருடைய ஆட்சிதான் அண்ணாவினுடைய ஆட்சி.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய தலைவர் காமராசர் அவர்களை உயிரோடு கொலை செய்வதற்கு முயற்சி செய்த பாரதிய ஜனதாவோடு நீங்கள் கூட்டணி சேர்ந்த ஒரே காரணத்திற்காகத்தான் உங்களை விட்டு வெளியேறினோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பெரு மதிப்பிற்குரிய தலைவர் காமராசர் அவர்களுக்கு அந்த விபத்து ஏற்பட்டபோது, கண்டித்த கட்சிகளிலே திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,** (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-55*

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே காமராஜர் அவர்களைக் கொலை செய்ய முயற்சித்த நேரத்தில், அவரை அந்த வீட்டிலேயிருந்து காப்பாற்றியது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் என்பதை பத்திரிகைகளெல்லாம் அப்போது எழுதின. அதை நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் 18-5-2000 நாளைய ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஜி. பழனிசாமி:** துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி ஆளாளுக்கு எழுந்திருந்தால் எப்படி? பிறகு நேரம் அதிகமாகிவிடும்.

**திரு. ஜி. பழனிசாமி:** துணைத் தலைவர் அவர்களே, காமராஜர் அவர்களைக் கொலை செய்ய முயற்சித்த இயக்கம் எது? அதற்குப் பிறகுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பாதுகாப்பு முயற்சி செய்தது. யார் செய்தார்கள் என்பதை முதலில் சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை யார் செய்தார்கள் என்பதைப் பற்றி எங்களுடைய உறுப்பினரும் சொன்னார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் சொன்னார்கள். (குறுக்கீடு) இல்லையில்லை, அது இருக்கட்டும். அவர்களோடு கூட்டுசேர்ந்த காரணத்தினாலே நாங்கள் விலகினோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே சொன்னார். 1996-லே தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி பிரிந்து தி.மு.க.வோடு கூட்டணி வைத்ததற்குப் பின்னரா அந்தச் சம்பவம் நடந்தது? அதற்கு முன்னரே நடந்த சம்பவம் அது. அப்படியென்றால் 1996-லே எப்படி நீங்கள் கூட்டணி வைத்தீர்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து மானியக் கோரிக்கையின்மீது பேசினால் நன்றாக இருக்கும். விவாதம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஒன்றைச் சொன்னார்கள். தலைவர் காமராஜர் அவர்களை அந்த அராஜக சக்திகளிடத்திலேயிருந்து விடுதலை செய்தது, அவருடைய உயிரைக் காப்பாற்றியது 'அம்பி' என்கின்ற அவருடைய உதவியாளர் என்றுதான் நான் பத்திரிகையிலே படித்திருக்கிறேன். அதேநேரத்தில் நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு செய்தியைச் சொன்னார்கள். தலைவர் காமராஜர் அவர்களைக் கொலை செய்வதற்காக முயற்சி செய்த அந்தக் கூட்டத்தைக் கண்டித்து, அன்றே திராவிட முன்னேற்றக்



கழகத்தினுடைய தலைவர்கள் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. வேலாயுதன் ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், போதும். இதோடு இந்த விவாதத்தினை நிறுத்துங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில், காலையில் இந்த விவாதம் தொடங்கியதிலிருந்து அரசியல் கலப்படம் இல்லாமல் ஆக்கப்பூர்வமான யோசனைகளையே உறுப்பினர்கள் வழங்கி வந்தார்கள். நான் கேட்டுக்கொள்வது—நாளையதினம் இதை வைத்துக்கொள்ளலாம்—இன்றைக்கு ஒரு நாளாவது முழு சுதந்திரமாக நடப்போம் என்பதைத் தெரிவித்து, இனிமேல் விவாதத்திற்கு அந்தப் பிரச்சினையை இழுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி. (குறுக்கீடு)

**திரு. ஏ.ஜி. சம்பத்:** நான் இன்னும் பேசி முடிக்கவில்லை. பேசி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மோகன் கந்தசாமி, பேசுங்கள். 5 நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளிலே என்னைப் பேச அனுமதித்த எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்களுக்கும், முருகனுக்கும், உங்களுக்கும் நன்றி கூறி, ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகச் சிறந்த ஒரு திட்டம். கிட்டத்தட்ட, கடந்த 4 ஆண்டு காலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த

அந்தத் திட்டம் தற்போது சரியாக இயங்கவில்லை. 4 மாதமாக அங்கு குடிநீர் வரவில்லை. அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே ஒரு Action Hero, அதிரடி அமைச்சர். நான் இதே மாமன்றத்திலே அமைச்சர் வரும்போது தண்ணீர் வருகிறது, பின்னர் தண்ணீர் வருவதில்லை என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் வருத்தத்தோடு 'அப்போதே ஏன் நீங்கள் என்னிடம் சொல்லவில்லை, சொல்லியிருந்தால் அதைச் சரியாகச் செய்து இருப்பேனே' என்று அப்போது சொன்னார்கள். அதோடு மட்டுமல்லாமல் திருப்பூர் நகருக்கு அவர்கள் வந்தபோது என்னைப் பார்த்தவுடன் 'உங்களுடைய பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிட்டது' என்று என்னிடத்திலே சொன்னார்கள். அப்போது அங்கேயிருந்த துறை சார்ந்த நண்பர்களெல்லாம் பெருமையோடுப் பாருங்கள், அமைச்சர் எந்த அளவிற்கு கட்சிப் பாகுபாடு இல்லாமல் உங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள்' என்றார்கள்.

இந்த மாமன்றத்திலே மீண்டும் சொல்கிறேன், இன்றைக்குக்கூட தொலைபேசியிலே செய்தி வந்தது, ஒரு கடிதத்தினைக்கூட அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள், கடந்த 4 மாதங்களாகத் தண்ணீர் வரவில்லை, சென்ற வாரம் 3 நாட்கள் தண்ணீர் வந்தது, அதுவும் இப்போது முழுமையாக வரவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு நல்ல திட்டம், அரசாங்க அலுவலர்களின் அசட்டைத்தனத்தால், அவர்கள் அசட்டை செய்வதன் காரணமாக அந்த நல்ல திட்டம் இப்போது பாழ்பட்டுப் போய் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் உள்ள கிராமங்களுக்காக, பொங்கலூர் தொகுதிக்காக இந்தத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது இங்குள்ளவர்கள் தண்ணீர் இல்லாமல் மிகக் கடுமையாக வாடிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அழகாக எதையும் செய்யக் கூடியவர்கள். ஆனால், நான் பரிதாபமான சூழ்நிலையில் நிற்கிறேன். Water, water everywhere, but no water for drinking என்று ஒரு காலத்திலே படித்திருக்கிறேன். அருமையான திட்டத்தினை நாங்கள் பெற்றும்கூட அதன்மூலம் தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் முழுக்க முழுக்க அதிகாரிகளுடைய செயல்பாடுகள் தான் அதற்குக் காரணம். அதை நான் விரிவாக எழுதி ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-00

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த பல்வேறு ஊழியர் சங்கங்கள் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றன. அவர்கள் 18 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தக் கோரிக்கைகளை ஒத்துக்கொண்டதாகச் சொல்கிறார்கள். தயவுசெய்து, பாகுபாடு எதுவும் இல்லாமல் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த அரிய வாய்ப்பைக் கொடுத்ததற்காக உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மிக்க மகிழ்ச்சி. அடுத்து திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக அரசால் அறிவிக்கப்படுகின்ற திட்டங்கள் எல்லாம் மக்களை நேரடியாகச் சென்று அடைய வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்தி மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டே மக்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்கின்ற வகையில் இப்போது நிருவாகத்தை மிகச் சீராக ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்தவகையிலே பல்வேறு வகையான சாலைகளையும், குறிப்பாக தெருக்களில் சிமெண்ட் சாலைகளையும் அமைத்துக்கொடுத்து மிகச் சிறப்பான நிருவாகத்தை இப்போது நமது அரசு செய்து கொண்டிருக்கிறது.

1972 ஆம் ஆண்டு மின்சார வசதி இல்லாத கிராமங்களே கிடையாது என்ற நிலையை ஏற்படுத்தித் தருவோம் என்று உறுதி எடுத்து, அதைச் சிறப்பாக செய்து முடித்துக்காட்டிய அரசு நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. அதுபோலத்தான் இப்போது 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடன் குடிநீர்

தட்டுப்பாடு உள்ள கிராமங்களே கிடையாது என்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தித் தருவோம் என்று சொல்லி, ஒவ்வொரு நபருக்கும் 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு இப்போது கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டு மிகச் சிறப்பாக அந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. அந்தவகையில் என்னுடைய வேதாரண்யம் தொகுதியிலே சுமார் 135 கோடி ரூபாயில் வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டம் அறிவிக்கப்பட்டு tender விடப்பட்டு, இப்போது பணிகள் தொடங்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தலைஞாயிறு பேரூராட்சி, வேதாரண்யம் பேரூராட்சி மற்றும் வேதாரண்யம் ஒன்றியத்திலுள்ள அனைத்துக் கிராமங்களும் பயன்பெறும் வகையில் திட்டம் அமைக்கப்பட்டு, இப்போது அதற்கு tender கூட விடப்பட்டுள்ளது. அதிலே தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பல கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன. வேதாரண்யம் ஒன்றியத்தை ஒட்டியுள்ள தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சாக்கை, துளசாபுரம், உம்பளச்சேரி, தள்ளிமேடு, அவரைக்காடு, தாமரைக்குளம் போன்ற கிராமங்களில் மிகப் பெரும் அளவில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளது. வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இந்த கிராமங்களையும் சேர்த்தால் எளிதே மக்கள் பயனடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதைச் செய்து தர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகள் எல்லாம் மிகச் சிறப்பாக இருக்கின்றன. உள்ளாட்சிச் சாலைகளுடைய தரத்திற்கு இணையாக இப்போது கிராமச் சாலைகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் தாக்குப்பிடிக்கக்கூடிய அளவிற்கு கிராமச் சாலைகளுடைய தரம் மிகச் சிறப்பாக இருக்கிறது. தெருக்களிலே போடப்பட்டிருக்கின்ற சிமெண்ட் சாலைகள் இப்போது பலவகையில் பயன்படுகின்றன. முதலாவதாக போக்குவரத்திற்காகப் பயன்படுகிறது. இரண்டாவதாக, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடிமக்கள் எல்லாம் தங்களுடைய நெல், கடலை போன்ற தானியங்களை சிமெண்ட் சாலையிலே காய வைப்பதற்காகப் பயன்படுகிறது. மூன்றாவதாக, மேலே ஒரு பந்தல் போட்டுக்கொண்டு கீழே திருமணம் நடத்தி வைக்க ஒரு சிமெண்ட் தளமாகக்கூட அது பயன்படுகிறது. நான்காவதாக, இரவு வேளையில் வெளியே பாய் போட்டு காற்றோட்டமாகப் படுத்து தூங்குவதற்கான சிறப்பான சிமெண்ட்



தளமாகவும் அது பயன்படுகிறது. இப்படி நான்கு வகையில் அது பயன்படுகிறது. அந்த வகையில் நான் நமது அமைச்சர் அவர்களை மிகவும் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

*பிற்பகல் 1-05*

உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடித்துவிட்ட காரணத்தால் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், அதுபோல ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் எல்லாம் புதிதுபுதிதாக மக்களின் தேவைக்கேற்ப சாலைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்தச் சாலைகள் எல்லாம் இப்போது மண் சாலைகளாக இருக்கின்ற காரணத்தாலே அவை சைக்கிள் ஓட்டுவதற்குக்கூட லாயக்கு அற்ற நிலையில் இருக்கின்றன. இப்போது போடப்பட்டிருக்கின்ற சாலைகளுக்கு, 10 இலட்சம் ரூபாய், 11 இலட்சம் ரூபாய் என்று செலவாகின்ற காரணத்தாலே, இதுபோன்று புதிதாக எடுக்கப்பட்டிருக்கின்ற அனைத்துச் சாலைகளையும், மேம்பாடு செய்வதென்றால் கிட்டத்தட்ட 7 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை ஆகும். எனவே, இந்த மண் சாலைகளை சைக்கிள், கார் போன்ற இலகுவான வாகனங்கள் செல்வதற்காகவாவது, சிவப்புக் கப்பிச் சாலைகளாக மாற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 1 கி.மீ. தார்ச் சாலையை மேம்படுத்துவதற்கு ஆகும் செலவில் இந்த சிவப்புக் கப்பிச் சாலைகளை 8 கி.மீ. அல்லது 9 கி.மீ. அளவிற்கு மேம்பாடு செய்வதற்குரிய வாய்ப்பு இருக்கும். அதனாலே, இதிலே கவனத்தைக் கொஞ்சம் செலுத்தவேண்டும். மாண்புமிகு அமைச்சருக்கு எனது தொகுதியைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் காலடி வைக்காத கிராமமே அங்கே கிடையாது. எனவே, இதுபோன்ற மண் சாலைகளை கணக்கிட்டு, பட்டியலிட்டு, அனைத்து மண் சாலைகளையும் கார் செல்லுகின்ற அளவிற்காவது மேம்பாடு செய்து தரவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பேரூராட்சி, நிதி வசதி இல்லாமல் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறது. சாதாரணமாக ஊராட்சி ஒன்றியங்களிலே ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றம்கூட அந்தப் பேரூராட்சியிலே இல்லை. 1975 ஆம் ஆண்டு பவளவிழா கொண்டாடிய ஒரு பேரூராட்சி அது. இப்போது இந்த ஆண்டு

[திரு. எஸ்.கே. வேதரத்தினம்] [2000 மே 10

நூற்றாண்டு விழா கொண்டாடவிருக்கிறது. ஏற்கெனவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பவளவிழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அப்பகுதி மக்கள் எல்லாம் இந்த ஆண்டு நூற்றாண்டு விழாவிலேயும் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்வதற்கு அழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வேதாரண்யத்திலே பிரசித்திபெற்ற பிரகதீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தினுடைய திருப்பணிகள் எல்லாம் முடிந்து விரைவில் குடமுழுக்கு நடைபெறவிருக்கிறது. ஆனால், அந்தப் பேரூராட்சியிலே சரியான சாலை வசதி இல்லை. தெரு விளக்கு வசதி இல்லை. மற்றபடி அந்தப் பேரூராட்சிப் பகுதிகள் எல்லாம், 4 வீதிகளும் (மணியடிக்கப்பெற்றது) மிகவும் தாழ்வான பகுதிகளிலே இருப்பதால், தண்ணீர் தேங்கி, கொஞ்சம் மழை பெய்தால்கூட தண்ணீர் தேங்கி ஒரு பெரிய வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடுகிற காரணத்தாலே ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பேரூராட்சியிலுள்ள சாலைகளையும், தெருக்களையும் மேம்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நிர்வாகம் சிறப்படைவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தவகையிலே, ஊராட்சி ஒன்றியத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, வேதாரண்யம் பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருக்கின்ற காரணத்தினாலே அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதைப்போல வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற செண்பகராய நல்லூர் மற்றும் தேத்தாகுடி தெற்கு கிராமங்களையும், அதைப்போல தலைஞாயிறு ஒன்றியத்தில் இருக்கின்ற வெள்ளப்பள்ளம் ஊராட்சியையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்



2000 மே 10] [திரு. டி. அமரமூர்த்தி]

கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது 2 ஆணையர்கள் இருக்கின்றார்கள். 2 ஆணையர்களையும் பார்க்கவே முடியவில்லை. எப்போது சென்று கேட்டாலும் ஒரு நாளைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்கிறார்கள். ஒரு நாளைக்கு மாவட்ட திட்ட அலுவலர் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்கிறார்கள். ஒரு நாளைக்கு பஞ்சாயத்து இயக்குநர் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்கிறார்கள். வாரத்திற்கு 7 நாளும் ஆணையர் அலுவலகத்திற்கு வருவதேயில்லை. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட குடியிருப்பில் அவர்கள் தங்குவதேயில்லை. ஒருநாள் திருச்சியில் எங்காவது இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு சேலத்தில் இருக்கிறார்கள். அவர்கள் திருச்சியில் இருந்தால், காரில் திருச்சி போய் கூப்பிட்டு வர வேண்டும். அந்த Car, Union Office Car. திருச்சியில் இருந்து கூப்பிட்டு வருவதற்கும், திருப்பிக் கொண்டுவிடுவதற்கும்தான் அந்த Car சரியாக இருக்கிறது. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரிகின்ற ஆணையர்கள், அந்த ஒன்றிய அலுவலகத்திற்கு அருகிலே இருக்கின்ற குடியிருப்பில்தான் தங்க வேண்டுமென்று அரசு உடனடியாக உத்தரவிடவேண்டும். அப்போதுதான் அவர்கள் மக்கள் நலப் பணியைச் சரிவர செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அதோடு மட்டுமல்ல, ஒவ்வொரு ஆணையரும் வாரத்தில் ஒரு நாளைக்காவது கிராமத்திற்குப் போய் சுற்றிப் பார்க்கின்ற வகையில் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் கிராமங்களில் என்ன தேவை இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியவரும். எப்போது கேட்டாலும் கூட்டம் என்கிறார்கள். ஏதோ பேப்பரில் எழுதிவிட்டுப் போய்விடுகிறார்கள். கீழே உள்ள R.I., அல்லது Overseer சொல்வதைக் கேட்டுக்கொண்டுபோய் அவர்கள் கலெக்டரிடம் கூட்டத்தில் சொல்ல வேண்டியது. கலெக்டர் உடனே R.D., Director இடம் சொல்ல வேண்டியது. Secretary-யிடம் சொல்ல வேண்டியது. Secretary மந்திரி கிட்டே சொல்ல வேண்டியது. இதுதான் நடந்துகொண்டிருக்கிறதேயொழிய திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன, பண ஒதுக்கீடு எல்லாம் குறைவாக அல்ல, நிறையவே இருக்கிறது. அமைச்சர் மிகவும் கெடுபிடியாகத்தான் இருக்கிறார். இருந்தாலும் அதிகாரிகள் பயப்படுவதில்லை. ஏற்கெனவே, ஒரு ஆணையர் இருந்தபோது நடந்த வேலைகூட இப்போது நடைபெறவில்லை. ஏனென்றால், இப்போது அந்த ஆணையர் இந்த ஆணையரைச் சாட்டுவது, இந்த ஆணையர் அந்த ஆணையரைச் சாட்டுவது என்கிற நிலை இருக்கிறது. எப்போது கேட்டாலும் வருடம்

முழுவதும் meeting, meeting என்றும், கலெக்டர் meeting என்றும், P.O. Meeting என்றும் சொல்கிறார்கள். ஆணையர்கள் எந்த கிராமங்களுக்கும் போவதே இல்லை. எனவே, வாரத்தில் அவர்கள் 4 நாட்களுக்காவது கிராமங்களுக்குப் போக வேண்டும். இந்த அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

அதற்கடுத்து, 1997-98-லே என்னுடைய தொகுதியில் நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அரசு அறிவித்தது. அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கொஞ்சம் விரைவுபடுத்திக் கொடுக்க வேண்டும். அதோடுமட்டுமல்ல, திருமழவாடியிலிருந்து கொள்ளிடத்திலே தண்ணீர் எடுத்து, மேற்குப் பகுதியிலே இருக்கின்ற 57 கிராமங்களையும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விரைவிலே சேர்த்து, உடனடியாக குடிநீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஏலாக்குறிச்சியிலிருந்து, கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் எடுத்து, 50 கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எங்கள் பூமி எல்லாமே சுண்ணாம்புக்கல் நிறைந்த பூமி. அந்தத் தண்ணீரைக் குடித்துக் குடித்து, சிறுநீரகத்திலே எல்லோருக்கும் கல் அடைத்துக்கொள்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நான் கேட்டுள்ள இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூரில் விளக்குகள் ஜகஜோதியாக எரிகின்றன. அமைச்சரது மாவட்டம் முழுவதும் இரவில் பார்த்தால் பகல்போல் தெரிகிறது. நாங்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறோம். அங்கே என்ன இரகசியமோ, எந்தத் திட்டத்தின்கீழ் light கொடுத்ீர்களோ தெரியாது. அதே திட்டத்தைக் கொஞ்சம் அரியலூர் தொகுதிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் பேரூராட்சியிலிருந்து நெடுஞ்சாலைத் துறை சாலை வரை முன்பு எப்படி இருந்தது என்பதை, ஓர் எதிர்க்கட்சிக்காரனைப்போல நானே முதலமைச்சரிடம் எடுத்துத்



தெரிவித்து, வேலைகள் நடைபெற்ற பிறகு, அந்தச் சாலைகள் எப்படி இருக்கின்றன என்பதைச் சொல்லிவிட்டு, விளக்கு வெளிச்சத்தைப் பற்றி உறுப்பினர் பேச வேண்டும். ஏற்கெனவே எப்படி இருந்தது, இப்போது ஒரு வருட காலத்தில் அதை எப்படி செய்து இருக்கிறோம் என்பதைச் சொல்ல வேண்டும். எனவே, மெல்ல மெல்ல அரியலூரில் ஒளி விளக்குகள் வரும். அதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செய்வதெல்லாம் சிறப்பாக இருக்கிறது என்று பாராட்டுகிறோமே; அமைச்சர் செய்ததால்தான் சாலைகள் எல்லாம் கொஞ்சம் உருப்படியாக இருக்கின்றன. இன்னும் கொஞ்சம் முழுமையாகச் செய்து கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோம்.

ஏற்கெனவே, அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டதன்பேரில் அரியலூர் பேரூராட்சிக்கு 18 இலட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். பாக்கிப் பணம் கொஞ்சம் இருக்கிறது. உடனடியாக அமைச்சர் அவர்கள் அரியலூர் பேரூராட்சிக்கு அந்த 3 கோடி ரூபாயை கொடுத்துவிட்டார்கள் என்றால் கொஞ்சம் உருப்படியாக இருக்கும்.

ஏற்கெனவே, உள்ளாட்சித் துறை அமைச்சராக அன்பில் அவர்கள் இருந்தபோது அரியலூரை நான் நகராட்சி ஆக்குகிறேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு இப்போது உங்கள் ஆட்சிதான் நடக்கிறது. எனவே, இப்போதே அதை நகராட்சி ஆக்க வேண்டும். 3 கோடி ரூபாய் அல்ல, 5 கோடி ரூபாய்கூட கொடுக்கலாம். ஏனென்றால், அவ்வளவு தேவைகள் இருக்கின்றன. அங்குள்ள சாக்கடை பற்றியெல்லாம் உங்களுக்குத் தெரியும். அமைச்சரே என்னை அழைத்து சண்டை போட்டார். 'என்னய்யா அரியலூர் இப்படி இருக்கிறது, நீயே என்ன என்று கேட்கவில்லையே' என்று அமைச்சர் என்னை அழைத்து சண்டை போட்டார். அதனால் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த 3 கோடி ரூபாயை வழங்கவேண்டும். கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் அரியலூர் பேரூராட்சிக்கு வருகிறது. வருகின்ற வழியில் அது எல்லா கிராமங்களுக்கும் போகிறது. அதனால் அரியலூர் பேரூராட்சியில் இருக்கின்ற மக்களுக்குச் சரிவர கொள்ளிடம் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் கொடுக்கமுடியவில்லை. குடிநீர் வடிகால் வாரியம்

புதிதாக ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் உடனடியாக அரியலூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சியிலுள்ள கிராமப்புற சாலைகளை செப்பனிட்டவுடன் அவற்றை நெடுஞ்சாலைத் துறையிடம் கொடுத்தால் கொஞ்சம் சௌகரியமாக இருக்கும். ஏனென்றால், Union-ல் gang coolie எல்லாம் இப்போது இல்லை. ஒருவர், இருவர் இருக்கிறார்கள். அவர்களும் ஆணையருக்கு வேலை செய்வதற்கும், E.O.-வுக்கு வேலை செய்வதற்குமே சரியாக இருக்கிறது. சாலைகள் எல்லாம் போடப்பட்டவுடனே, மழை பெய்து விட்டால் பாழ்பட்டுப் போய்விடுகின்றன. ஆகவே, ஊராட்சிகள் செப்பனிடுகின்ற சாலைகளை உடனடியாக நெடுஞ்சாலைத் துறையிலே ஒப்படைக்கின்ற வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே மேலகாங்கியனூர், கீழகாங்கியனூர் என்கின்ற சாலை ஒன்று இருக்கிறது. அதை உடனடியாக ஊரக வளர்ச்சித் துறை எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோல, சாலைக்குறிச்சி சாலை, கொரத்தக்குடி, ஆங்கியனூர், சன்னாவூர் ஆகிய சாலைகளையும் ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10 வருடங்களுக்கு முன்பு கட்டி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் எல்லாம் மிகவும் ஒழுகுகின்றன. அவர்கள் அங்கே குடியிருக்கவே முடியவில்லை. என்னுடைய தொகுதியில் இந்தமாதிரி Complaints நிறைய இருக்கின்றன. கோவிந்தபுரம், மணக்கால், காரைப்பாக்கம், கள்ளங்குடி ஆகிய இடங்களில் ஏற்கெனவே ஓட்டு வீடுகள் அதிகமாக இருக்கின்றன. அதுபோல் பல்வேறு கிராமங்களில் நிறைய இருக்கின்றன. அந்த வீடுகளை எல்லாம் பழுதுபார்ப்பதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுகின்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடிநீருக்குப் பணம் ஒதுக்குகிறோம். குடிநீர் குழாய் போட்டுக் கொடுப்பதற்கு வருடக் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள். அவசரம் கருதித்தான் நாங்கள்



நிதியை ஒதுக்குகிறோம். ஒரு கிராமத்திற்குக் குடிநீர் வேண்டும் என்று சொன்ன உடனே அதற்குரிய பணத்தை ஒதுக்கினாலும்கூட குடிநீர் பிரச்சினை முடிந்து இரண்டு வருடங்கள் கழித்துத்தான் குழாய் போடுகிறார்கள். நாங்கள் குடிநீருக்காக வழங்குகிற பணத்தைக் கொண்டு உடனடியாக அந்த கிராமத்திற்கு Pipe போட்டுத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது எல்லோரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கேட்கிறோம். ஆனால், ஆடு, மாடுகளுக்குத் தண்ணீர் வசதி இல்லை. எல்லா கிராமங்களிலும் இருக்கின்ற ஏரிகள் அனைத்தும் தூர்ந்து போய் விட்டன. புல் மண்டிப்போய் விட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்பு E.A.S.-லே சேர்த்து சுத்தம் செய்து கொடுத்தார்கள். இப்பொழுது கிராமங்களிலே மழை நீர் தேங்குவதற்கு ஏரி ஒன்றுமில்லை. ஆடு, மாடுகளெல்லாம் Pipe-லே போய் தண்ணீர் குடிக்க முடியாது. ஆகவே, கிராமத்திற்கு .ஓர் ஏரி வீதம் தூர் வாரச் செய்து ஆடு, மாடுகள் தண்ணீர் குடிப்பதற்கும், மற்ற உபயோகத்திற்குப் பயன்படுத்துவதற்கும் ஏரிகளை அவசியம் சுத்தம் செய்து கொடுக்க வேண்டும். என்னுடைய கிராமத்தில் சிறிய சிறிய ஏரிகள் நிறைய இருக்கின்றன. ஆகவே, ஒரு ஏரியையாவது தூர் வாரித் தரவேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.எம். ராமசாமி.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையிலும் யாரும் செய்திராத, மேலும் செய்ய முடியாத அளவிற்குப் பல்வேறு திட்டங்கள் ஏழையெளிய மக்களின் இன்னலைப் போக்கும் வகையில் அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்புகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் போதிய நிதியாதாரம் இல்லாத நகரங்களுக்கு குடிநீர் மேம்பாட்டிற்காக அரசு பெருமளவில் அதாவது 80 கோடி ரூபாய் மானியம் வழங்கியுள்ளது. இதனால், பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினை குறையும். கிராமங்களின் இணைப்புச் சாலைகளுக்காக 90 கோடி ரூபாயும், மாவட்டச்

சாலைகள் என்ற வகையில் 4290 கிலோமீட்டர் முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.159 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பழுதடைந்த அனைத்துச் சாலைகளையும் அரசு புதுப்பிக்க உள்ளது.

தமிழகம் முழுவதும் பல்வேறு நதிகளின் குறுக்கே இணைப்புப் பாலங்களையும், தலைநகர் சென்னையில் சிங்கப்பூரில் அமைந்துள்ள பாலங்களைப் போன்று மிகப்பெரிய பாலங்களையும் அமைத்து சென்னை மாநகர மக்களுக்குப் போக்குவரத்துச் சிக்கல் வராவண்ணம், தலைநகரை சிங்காரச் சென்னையாக அரசு மாற்றியுள்ளது. அதுமட்டுமல்லாமல், நடப்பு ஆண்டில் என் தொகுதியான ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரேசமயத்தில் ஐந்து பாலங்களின் பணிகள் தொடங்கப்பட்டு, மூன்று முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயனடைகின்றனர். இரண்டு முடியும் தருவாயில் உள்ளன. பாசன வசதிக்காக நதிகளில் வாய்க்கால் அமைத்துக் கொடுத்ததும், ஏரிகளில் வாய்க்கால் அமைத்துக் கொடுத்ததும் மற்றும் தூர் எடுக்க ஆணையிட்டதும் விவசாயிகளின் மனம் குளிரும்படியாக உள்ளது. நடப்பு நிதி ஆண்டில் விவசாயிகளின் கடன்களுக்கு அபராத வட்டியினை அரசு தள்ளுபடி செய்தது, விவசாயிகளின் துயர் துடைப்பதாக உள்ளது. துல்லியமான விவசாயத்திற்கு உரிய நேரத்தில், உரிய அளவிற்கு இடுபொருளைப் பயன்படுத்தி, சாகுபடிச் செலவைக் குறைத்து, விவசாயிகளின் நலன் பேண வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்குப் பயற்சி அளிக்க அரசு நினைக்கும் முடிவு பாராட்டுக்குரியது.

இந்தியாவிலேயே தகவல் தொழில் நுட்பத்திற்காகத் தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்ற நிலையை அடைந்துள்ளது. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக தனியாகத் துறையும் உருவாக்கிய பெருமையையும் நம் அரசு பெற்றுள்ளது. இதன்காரணமாக இப்போதைய நிலையில் தமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே அதிகமான மென்பொருள் வல்லுநர்கள் உள்ளார்கள். கணினிக் கல்வித் திட்டம் நடப்பு ஆண்டு 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டதற்கும் வரும் நிதியாண்டில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசு கலை மற்றும் தொழிற் நுடபக் கல்லூரிகளிலும் ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதும், கல்வி அறிவியலில் நவீன வளர்ச்சியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.



அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலன், வருமுன் காப்போம், வாழ்ந்து காட்டுவோம், கால்நடைகளுக்கான சிகிச்சை முகாம் போன்றவை ஏழையெளிய நடுத்தர மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இப்போது சமத்துவபுரங்களினால், சாதி மறைந்து கொண்டிருக்கிறது. உழவர் சந்தைகளினால், விவசாயிகள் களிப்படைகின்றனர். ஏழையெளிய மக்கள் குறைந்த விலைக்குக் காய்கறிகளைப் பெறுகின்றனர். விற்பனையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

பிற்பகல் 1-20

ஆறாம் வகுப்பில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபு வகுப்பைச் சேர்ந்த முப்பதாயிரம் மாணவியருக்கு மாதமொன்றுக்கு தலா ரூ.100 வழங்கி அவர்களின் கல்வி நிலையை மேம்பாடு அடைய திட்டமிட்டுள்ளது. மகளிரின் முன்னேற்றத்தில் அரசுக்கு உள்ள நல்ல எண்ணம் தெரிகிறது. மூன்று ஆண்டுகளுக்கு மேல், புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஆணையிட்டதன்மூலம் இந்த அரசு ஏழைகளின் அரசு என்பதை நிரூபிக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

முதல்வரிடம் ஒரு கோரிக்கை. மேய்ச்சல் தரை நிலங்களை 30 ஆண்டுகளுக்குமேல் விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்குப் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனது தொகுதியில் கல்லாறு-இராமநாயக்கன்பாளையம் நீர்த்தேக்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், விவசாய நிலங்கள் சுமார் ஐயாயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுவதுடன், ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் அனைத்துக்கும் மற்றும் ஒன்றிய பகுதிகளுக்கும் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். இது ஆத்தூர் தொகுதி மக்களின் கோரிக்கையும், நீண்ட காலக் கனவுமாகும்.

மேலும், முதல்வரிடம் பணிவுடன் கேட்டுக்கொள்வது, ஆத்தூர் நகரில் உள்ள பழைய காவலர் குடியிருப்பானது, புதிய காவலர் குடியிருப்பு கட்டப்பட்டு உருவாக்கப்பட்டதால், பயன்படுத்தப்படாமல் வெறுமனே காலியாக உள்ளது. இதை அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அளிப்பதன்மூலம், மருத்துவமனை விரிவாக்கப்பட்டு,

[திரு. ஏ.எம். ராமசாமி] [2000 மே 10

பொது மக்களுக்கும், உள்நோயாளிகளுக்கும் பெருமளவில் உதவும் என்பதைத் தங்கள் கவனத்திற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இதைப் பொது மக்களும் விரும்புகிறார்கள். சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள பொது மக்களும் பயனடைவார்கள். காவலர் குடியிருப்புக்கு தற்போது ஒதுக்கப்பட்ட இடமே, பெரிய பரப்பளவில், நான்கு ஏக்கர் அளவில் அமைந்துள்ளது. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது புதிய தமிழகம் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, நான் சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சித் துறையில் 3 அடுக்குமுறை என்பது மாற்றப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்டப் பஞ்சாயத்து என்கிற அமைப்பில் மாவட்ட பஞ்சாயத்து என்பது, இப்போது ஆட்டுக்கு தாடியைப் போன்றதாக, அவசியமற்றதாக இருந்துகொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு எப்படி கிராமப் பஞ்சாயத்தினுடைய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அதைப்போல, மக்களால் நேரடியாக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டுமே தவிர, ஒன்றிய கவுன்சிலர்கள் மூலமாகத் தேர்ந்தெடுக்கிற நிலை இருக்கக்கூடாது. எனவே, இந்த முறைக்குத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஏறக்குறைய 4 வருடங்களுக்கு முன்னதாக ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடைபெற்றும்கூட, இன்னும் தமிழ்நாட்டிலே சில கிராமங்களில், குறிப்பாக, உசிலம்பட்டி பகுதியிலே, கிராமப் பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல் நடத்த முடியாமல் இருக்கக்கூடிய அவலநிலையைப் போக்கக்கூடிய வகையிலே, உடனடியாக அங்கு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மதுரை மாவட்டத்திலேதான் 2 ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறதே தவிர, வேறு இடங்களில் இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை.



2000 மே 10]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி அருகே, கீரிப்பட்டி, பாப்பம்பட்டி ஆகிய பகுதிகளில் இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1996-97-லே 70,000-க்கு மேல் தொகுப்பு வீடுகள் கொடுத்தீர்கள். இந்த ஆண்டு திடீரென்று 35,000 வீடுகள் மட்டும்தான் கொடுப்பதற்கு முடிவு செய்திருக்கிறீர்கள். என்ன காரணத்தால், 70,000 ஆக இருந்தது 35,000 ஆக குறைக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறைக்கப்பட்டது உண்மை. ஆனால், ஏற்கெனவே எடுக்கப்பட்ட வீடுகளுக்கு மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டிய நிதியை அனுப்பாமல், வீடுகளையும் குறைத்து அவர்கள் உத்தரவு போட்டதையொட்டி, நாம் அதே கணக்கில் தமிழ்நாட்டில் வீடுகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதன்பிறகு, வீடுகள் எல்லாம் கட்டி முடிக்கிற நேரத்தில்கூட நிதிஉதவி வராத காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் கோரிக்கை வைத்து, ஏறத்தாழ 50.00 கோடி ரூபாய்க்கு மேல் நிதியை தமிழ்நாடு அரசாங்கமே அதற்கு சேர்த்துக் கொடுத்து, அந்த வீடுகளைக் கட்டி முடித்து இருக்கிறோம். ஏற்கெனவே நமக்கு இருக்கிற கணக்கையும், இப்போது இருக்கிற கணக்கையும் பார்த்தால், ஏறத்தாழ நாம் 60 சதவிகிதம், அந்த வீடுகளைக் கட்டும் செலவிற்குச் செலுத்தியிருக்கிறோம். 40 சதவிகிதம்தான் மத்திய அரசாங்கத்தினுடைய பணம் அந்த ஆண்டு கிடைத்திருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கம் விதித்த விதியை நாம் இப்பொழுது மீறாமல் செய்திருக்கிறோம். இன்னும் சில திட்டங்களின்மூலம், 15 ஆயிரம் வீடுகள் கூடுதலாகக் கட்டுகிற அளவிற்கு இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பதை நீங்கள் படித்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு கனிவான வேண்டுகோள். உறுப்பினருக்கு நேரம் இல்லை. எனவே, உறுப்பினர் பேசுவதைக் குறித்துக்கொண்டு, பதிலுரையில் அதற்குப் பதில் அளித்தால் போதும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளின் கூரைகளுக்கு 7,000 ரூபாயிலிருந்து, 12 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அந்த 12 ஆயிரம்

ரூபாய் போதாது. அது குறைந்தது 25 ஆயிரம் ரூபாயாக கொடுக்கப்பட வேண்டும். அதுபோல், தொகுப்பு வீடுகளில் இருக்கக்கூடிய கூரைகளினுடைய வடிவம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எதற்காக அது கூம்பு வடிவிலே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதற்கு என்ன அவசியம் என்றும் எனக்குத் தெரியவில்லை. ஏறக்குறைய 4, 5-வது சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நான் இதை வலியுறுத்தி வந்திருக்கிறேன். அது தாழ்த்தப்பட்ட மக்கள் வாழுகின்ற பகுதியாக இருப்பதால், அதற்கு ஓர் அடையாளமாக அப்படி இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வைத்திருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால், அதை மாற்றுவதற்கு என்ன கஷ்டம் என்று எனக்குத் தெரியவில்லை. Concrete வீடுகள் கட்டுகின்றபோது, நாட்டிலே எந்த இடத்திலேயும் கூம்பு வடிவத்திலே அமைப்பது கிடையாது. எனவே, கூம்பு வடிவிலே அமைப்பதை மாற்றியமைத்து, சாதாரணமாக எங்கும் இருக்கக்கூடிய Concrete வீடுகளைப்போல கூரைகள் அமைக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய மயானங்களுக்குச் செல்ல சிறப்புப் பாதைகள் அமைக்கப்பட வேண்டும். அங்கு விளக்கு வசதிகள் செய்து தர வேண்டுமென்று இருந்தாலும்கூட, இன்னும் எண்ணற்ற கிராமங்களிலே விளக்கு வசதிகளும், சாலை வசதிகளும் அமைத்துத் தரப்படவில்லை. அதேபோல, இன்னும் முக்கியமான ஒன்று, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அது இடம் பெறவில்லை. மத்திய அரசு கொடுக்கக்கூடிய நிதியிலே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் நிதி சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழே (Special Component Plan) செலவழிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், எந்தெந்தப் பகுதிகளில், எந்தெந்தத் திட்டங்கள் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ளன? எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது என்பது சுட்டிக் காட்டப்படாதது வருத்தத்தை அளிக்கிறது. ஏனென்றால், கடந்த 20 வருடங்களாக இந்தச் சிறப்பு உள்ளடக்கத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டும் கூட, ஒட்டுமொத்தமாக பாலம் கட்டுதல், சாலை அமைப்பது அல்லது ஒட்டுமொத்தமான திட்டத்தில் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செலவழிக்கப்பட்டது என்று கணக்கு காட்டப்படுகிறதே தவிர, உண்மையாக எந்த நோக்கத்திற்காக சிறப்பு உள்ளடக்கத் திட்டம் கொண்டு வரப்பட்டதோ, அது நிறைவேற்றப்படவில்லை என்ற



குற்றச்சாட்டை நான் அவை முன்வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலேயும் எப்படிப்பட்ட வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று புத்தகம் கொடுத்திருக்கிறார்களோ, அதுபோல சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திலே, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் எந்தெந்தப் பகுதிகளில், இந்தத் திட்டத்தின் கீழ் வேலைகள் நடைபெற்று இருக்கின்றன, எவ்வளவு ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்களையும் இந்த அரசு கொடுத்தால்தான் அது சரியாக இருக்கும் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சமத்துவபுரத்திற்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படக்கூடிய நிதியிலேயிருந்து 40 சதவிகிதம் எடுத்துக்கொள்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் வீடு கட்டிக் கொடுப்பதற்கு, வேறு திட்டத்திலேயிருந்து நிதி ஒதுக்க வேண்டுமே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்காக ஒதுக்கக்கூடிய நிதியிலேயிருந்து எடுத்துக்கொள்வது எந்த விதத்திலேயும் நியாயம் இல்லை என்பதையும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். நேரமில்லை, இன்னும் ஒரேயொரு நிமிடம்தான் இருக்கிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** முக்கியம், அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பதிலுரையில் சொல்வார். இப்போது நீங்கள் பேசுங்கள். ஒரு நிமிடம்தான் இருக்கிறது. அமைச்சர் பேசினால் அந்த ஒரு நிமிடமும் போய் விடும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இன்னும் பல கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து தரப்படாமல் இருக்கிறது. அவற்றையெல்லாம் நான் தனியாகப் பட்டியல் போட்டுக் கொடுக்கிறேன். அவற்றை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 2-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 2-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் பிற்பகல் 2-30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களை சரியாக 3-30 மணிக்கு பேச அனுமதிக்க வேண்டும். அதற்குள்ளாக 15 பேருக்கு நான் பேச வாய்ப்புக் கொடுக்கப் போகிறேன். இரண்டு நிமிடம், மூன்று நிமிடத்திற்கு மேல் ஒருவரும் பேசக்கூடாது.

***திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எவ்வளவு நேரம் பேசுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் இரண்டு மணி நேரம் பேசுவார். ஏனென்றால், அமைச்சர் பேசுவது என்பது, நாம் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது. ஏராளமான அறிவிப்புகள் செய்யப் போவதாக எனக்கே வதந்தி வந்திருக்கிறது. (சிரிப்பு) திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுடைய இந்த மானியக் கோரிக்கைகளில் பல்வேறு விஷயங்கள் உள்ளன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய பல பிரச்சினைகள் குறித்து, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தந்திருக்கின்ற நேரம் மிகக் குறைவு. அதற்குக் காரணம் என்ன என்று ஒரு கருத்தையும் அவர்கள் சொல்லியுள்ளார்கள், அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகத்தான் இருக்கிறது. முதலாவதாக, மாவட்டப் பஞ்சாயத்தினுடைய தலைவர் என்ற ஒரு பொறுப்பு இருந்துகொண்டேயிருந்தாலும், அதிலே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறுக்கீடுகள் அதிகம் இருக்கின்றன. எனவே, அது சுயேச்சையாகச் செயல்படுகின்ற வகையில், மாவட்டப் பஞ்சாயத்தினுடைய தலைவர்தான் கூட்டத்தை வழி நடத்துவதற்கும், தலைமை ஏற்று நடத்துவதற்குமான ஓர் ஏற்பாட்டைச் செய்து, முழுப் பொறுப்பையும் அவரிடமே அளிக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.



அடுத்து, திட்டக் குழு. திட்டக் குழுவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பஞ்சாயத்துத் தலைவருடைய தலைமையிலே இயங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குப் பின்னாலே, மாவட்டத்திலே, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவருடைய பொறுப்பிலே அது வருகின்றபோது, ஒரு I.A.S. அதிகாரியைச் செயலாளராக நியமனம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்டத்தினுடைய ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்தின் மூலமாக அந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சி சம்பந்தமான முழுமையான பிரச்சினைகளை விவாதிப்பதற்கும், முடிவு எடுப்பதற்கும் ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். மேலும், ஜனநாயக மரபுப்படி, கிராமப் பகுதிகளில் இருக்கின்ற பிரச்சினைகளிலேயிருந்து, மேல்மட்டம் வரையில் இருக்கின்ற பிரச்சினைகள்வரை தீர்த்துக் கொள்வதற்கும், செயல்முறையிலே, நல்லமுறையிலே செயலாற்றுவதற்கும் அது ஒரு வாய்ப்பை அளிக்கும். அந்த அடிப்படையிலே பல மாநிலங்களிலே, அப்படிச் செய்து இருக்கின்றார்கள். அந்த வாய்ப்பை நாமும் எந்த அளவிற்குப் பயன்படுத்த முடியும் என்பதை அரசு பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, அந்தக் கூட்டமானது மாதத்திற்கு ஒருமுறை கூட்டப்படவேண்டும். அப்போதுதான் மாவட்டத்தினுடைய முழுமையான பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல தீர்வை நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பது என்னுடைய கருத்து.

அதற்கு அடுத்தபடியாக, குழித்துறை நகராட்சியைப் பற்றி நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல கருத்துகளைச் சொல்லியிருக்கின்றேன், கடிதங்களையும் தந்திருக்கின்றேன். எனக்கு முன்னால் இங்கே பேசிய தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பல்வேறு விஷயங்களை, வேறுவிதமாக சொன்னார். எப்பொழுது பார்த்தாலும், எந்த நாளிலே கேட்டாலும், அந்த நகராட்சியினுடைய ஆணையாளர், கூட்டங்கள், கூட்டங்கள் என்று மாவட்ட மையத்திற்கோ, இதர பகுதிகளுக்கோ சென்றுவிடுகிறார்களே தவிர, நாங்கள் sanction-க்காக ஒரு வரைபடம் கொடுத்தால், மூன்று மாதங்கள் வரையிலும் காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை மாற்றுவதற்கு, அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்வது என்று யோசனை செய்ய வேண்டும்.

அதற்கும் மேலாக, அந்த நகராட்சியிலே இருக்கின்ற அதனுடைய தலைவி ஒரு வழக்குரைஞர். என்னுடைய கட்சியைச் சார்ந்தவர். நான் ஏற்கெனவே அந்த ஆணையாளரிடம்போய், அந்தத் தலைவியையும் கூப்பிட்டு, மற்ற அதிகாரிகளையும் கூப்பிட்டு நகராட்சிக்கு ஆற்ற வேண்டிய பணிகள் சம்பந்தமாக மாதம் ஒரு முறை ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தி, அதன் அடிப்படையிலே நல்ல தீர்வை எடுப்போமேயானால், பிரச்சினைகளே வராது என்று பலமுறை கூறியும் அதை ஒத்துக்கொள்வதற்கு ஆணையாளர் தயாராக இல்லை. சமீபத்திலே அவரிடம் பேசும்போது, 'என்னைக் கொத்தடிமையாக வைத்துக் கொண்டிருக்கின்றீர்களா' என்ற சொற்களைப் பயன்படுத்தினார். அங்கே கடந்த மூன்று மாதங்களாகக் கடுமையான வறட்சி நிலவுகிறது. இருக்கின்ற தண்ணீரை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்னால் நகராட்சியில் ஒரு தீர்மானத்தைப் போட்டோம். அதாவது Pump house-ல் additional Pump-களை நாம் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தைப் போட்டு, அந்த அதிகாரி கையிலே கொடுத்தால், இதுவரையிலும், அவர் அதை வாங்குவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு— அரசு சார்பிலே நகராட்சியானாலும் சரி, உள்ளாட்சியானாலும் சரி, பணத்தைத் தருகிறீர்கள். இந்தப் பணத்தைக் கொண்டு முறையாக திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு அதிகாரிகளுடைய முழுமையான ஒத்துழைப்பு இருந்தால் மட்டும்தான் அவற்றை சீராக செயல்படுத்த முடியும். அதற்கு ஒத்துழைக்கிற அதிகாரிகள் பலரும் இல்லாத ஒரு நிலை இப்போது இருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அங்கே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குடிநீர்த் திட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட, தேசிய நெடுஞ்சாலையிலே போடப்பட்டிருக்கின்ற பெருவாரியான குடிநீர்க் குழாய்கள் 5 அடிக்குக் கீழே மண்ணுக்குள்ளே போய்விட்டன. இனி அவற்றை நாம் உடைத்து பழுது பார்க்கவோ அல்லது வேறு ஒன்றும் செய்யவோ முடியாது. அதனால்தான் அந்த நகராட்சி ஒரு தீர்மானத்தைப்போட்டு, 25 இலட்சம் ரூபாய் எங்களுக்கு மானியமாகத் தந்தால் மட்டும்தான் பிரதான குழாய்களை அங்கிருந்து கடைசி வரை கொண்டு செல்ல முடியும், அதன் மூலமாகத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தர முடியும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.



பிற்பகல் 2-35

அதுபோன்று, இன்னொரு பிரச்சினை. அங்கே இருக்கின்ற அந்த நகராட்சியினுடைய அலுவலகம் வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்டது. கட்டி கிட்டத்தட்ட 100 வருடம் இருக்கும் என்று நினைக்கிறேன். அது உடைந்து, விழுகின்ற தருவாயிலே இருக்கின்றது. எனவே, ஒரு புதிய கட்டடத்தைக் கட்டவேண்டுமென்று பலமுறை நிர்வாகத்தோடு நான் பேசினேன். அந்த நகராட்சியிலே பணம் கிடையாது. எனவே, பாதி மானியமாகக் கொடுங்கள், அல்லது கடனாகக் கொடுங்கள் என்று கேட்டதற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மீண்டும் அந்த நகராட்சி, செலவுகளைச் சுருக்கி 20 இலட்சம் ரூபாய் செலவிலே புதியதொரு கட்டடத்தை நகராட்சியினுடைய நிதியிலே இருந்து கட்டுவதற்கு முடிவு எடுத்தால், அதற்கான அனுமதியைப் பெறுவதற்கு 3, 4 தடவை தலைநகருக்கு வர வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இதிலே காலதாமதம் ஆகின்றது. அதைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நகராட்சியினுடைய சொந்த நிதியிலே இருந்து செய்கின்றபோது, அதனுடைய planning எப்படி இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு இங்கே இருக்கின்ற நம்முடைய பெரிய அதிகாரிகள் ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதன்படிதான் நீங்கள் கட்டடம் கட்ட வேண்டும் என்று சொல்வது நியாயமாக இருக்காது. அந்த மண்ணுக்கு ஏற்றவாறு, அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அனுமதி தர வேண்டும்.

அதுபோல, பேருந்து நிலையமும் பெரிய பிரச்சினைக்குரிய விஷயமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்கூட அந்த இடத்தை நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறார்கள். அப்போது மாண்புமிகு அமைச்சர்கூட அங்கேயுள்ள பள்ளத்தை நிரப்பிவிட்டு கட்டுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தினை வெளியிட்டார்கள். ஆனால், அந்தப் பள்ளத்தை நிரப்பி சீர் செய்ய வேண்டுமானால் பல இலட்சம் ரூபாய் வேண்டும். அதற்கான அனுமதியும் வேண்டும். அதற்கான பணத்தை கடனாகக் கொடுத்தாலும் சரி, மானியமாகக் கொடுத்தாலும் சரி, நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகத்திலிருந்து கிடைத்தால் மட்டும்தான் அதை பூர்த்தி செய்ய முடியும். அதுபோன்று, பஞ்சாயத்துக்களைப் பொறுத்தமட்டிலும் . . . . (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடத்திலே பேசி முடித்துக்கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [2000 மே 10

அடுத்து, மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவியாக இருப்பவர் ஒரு பெண்மணி. எந்த அதிகாரியும் அவரைக் கண்டுகொள்வதே இல்லை. இரண்டு வாகனங்கள் இருந்தும் அந்தத் தலைவிக்கு அந்த வாகனங்களைத் தருவதிலேகூட பிரச்சினை இருக்கிறது. அந்த அடிப்படையிலே செயல்படுகிற நிலை அங்கே இருக்கிறது. அந்த வாகனங்களை வெயிலும், மழையும் படாமல் நிறுத்துவதற்கு ஒரு shed கட்டக்கூட நிதி இல்லாத ஓர் ஊராட்சி ஒன்றியம் மேல்புரம் ஊராட்சி ஒன்றியம். எனவே, போதுமான நிதியை அதற்கு ஒதுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அதுபோன்று இன்னும் சில பேரூராட்சிகள் இருக்கின்றன.

அடுத்தபடியாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இடைக்கோடு பேரூராட்சியைப் பற்றியும், அதன் தலைவியைப் பற்றியும் ஒரு குற்றச்சாட்டை வைத்தார். நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னவென்றால், ஒரு பேரூராட்சித் தலைவியாலே அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாது. அங்கிருக்கிற நிருவாக அதிகாரிகள் அரசியல் ரீதியாகச் செயல்படுகிறபோதுதான் பிரச்சினை வருகின்றது. இங்கே குற்றச்சாட்டு வைக்கின்றபோது முறைகேடாக அல்லது corruption என்கிற ரீதியிலே சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் A.D. (Panchayat) போன்றவர்கள் எல்லாம் சென்று அங்கே பார்த்தார்கள், விசாரணை நடத்தினார்கள். ஆனாலும் எந்தக் குற்றச்சாட்டையும் அந்தத் தலைவிமீது சொல்வதற்கு முடியவில்லை. ஆகையினால், நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தேவை என்றால், ஒரு விசாரணை நடத்துங்கள், ஏதாவது தவறு இருக்குமேயானால், அதை நீங்கள் சுட்டிக்காட்டுவீர்களேயானால், அந்தப் பதவியை நாங்கள் இராஜினாமா செய்யச் சொல்வோம். அதற்கு மேலும் எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் என்ற முறையிலே, கட்சி சார்பாகக்கூட அந்தத் தலைவிமீது நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். எனவே, இப்படிப்பட்ட தவறான குற்றச்சாட்டுகளை இங்கே சொல்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். (மணியடிக்கப்பெற்றது) இன்னொன்று . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திற்குள் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.



2000 மே 10]

பிற்பகல் 2-40

**திரு. டி. மணி:** அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் முதலில் தூத்தூர் பஞ்சாயத்து என்றார்கள். அப்போது அதிகாரிகளை கூப்பிட்டு பஞ்சாயத்துத் தலைவரையும் கூப்பிட்டு, எதை எதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சில யோசனைகளைச் சொன்னேன். முதலில் பாதுகாக்கப்பட்ட குடிநீருக்கு ஏற்பாடு செய்தல், இரண்டாவது அங்கேயிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நான்கு அறைகள் கட்டுதல், அதற்குப் பிறகு 20 வீடுகள் கட்டுதல், அதன் பிறகு சாலைகள் அமைத்தல் என்கிற வகையில் தீர்மானித்து முடிவு செய்யப்பட்ட பிறகும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தினுடைய அதிகாரிகள் சரிவர கவனம் செலுத்தாததனுடைய விளைவாக இப்போது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக இந்த அரசாங்கம் தந்திருக்கின்ற தொகையிலே இருந்து சுமார் 16 லட்சம் ரூபாயை தூத்தூர் பஞ்சாயத்தினுடைய தலைவர் மோசடி செய்திருக்கின்றார். இதுவரையிலும் அதுகுறித்து யாரும் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இல்லை. அதனுடைய பின்னணியில் வேறு சில கதைகளை எல்லாம் இப்போது பேசுகிறார்கள். எனவே, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதுபோன்றுதான் வள்ளியூர் பஞ்சாயத்தினுடைய தலைவர், உதவித் தலைவருடைய ஒப்பத்தைத் தவறாக இட்டு, இப்போது அது ஒரு Criminal Case ஆக ஆகியிருக்கிறது. அதுகுறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுபோன்றுதான் மருதங்கோடு பஞ்சாயத்தினுடைய தலைவியும், மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து, 'ஓர் ஊமை, செவிடு பள்ளியை நடத்துவதற்கு ஒரு தொண்டு நிறுவனம் முன்வந்திருக்கிறது' அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு வரைபடத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டால், ஆறு மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரே நடவடிக்கை எடுத்ததற்குப் பின்னால்கூட, அதைச் செய்வதற்குத் தயாராகாத ஒரு நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்முடைய அரசாங்கம் எந்த அளவிற்கு பணம் தருகின்றது என்றால், ஓரளவிற்கு பெருவாரியான பணம் தருகின்றது! அதைச் சரிவர செயல்படுத்தி, ஒரு இலட்சம் ரூபாய் தருகின்றபோது 90,000 ரூபாயாவது மக்களுக்குச் சென்றடைகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மலைப்பாங்கான பகுதியான கடையாலுமூடு பேரூராட்சியிலே

பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. அந்த மலைப்பாங்கான பகுதியிலே குடிநீர் வடிகால் வாரியம் மூன்று 'Bore wells' போட்டது. அதிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு இந்தத் துறை அனுமதிக்கவில்லை. இப்படிப்பட்ட மலைப்பாங்கான பகுதி என்று வருகின்றபோது அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீரை அந்த கிராமத்து மக்களுக்குத் தருவதற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று குழித்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வேலை செய்தவர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்து அவர்களைப் பாதுகாக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் உளமார்ந்த நன்றியினை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றம் தொடங்கிய ஒருசில நிமிடங்களிலே இதுவரை எந்த அமைச்சரும் பெற்றிராத அளவுக்கு ஒரு பேரினைப் பெற்றிருக்கிறார்கள். நீங்கள் சிறப்பான முறையிலே, அவர் ஆற்றிய பணிகளுக்காகப் புகழ்ந்த பிறகு, இந்த 234 சட்டமன்ற உறுப்பினர்களிலே ஒருவனான இந்த கணேசன் புகழ்வது என்பது அவ்வளவு சிறப்பான காரியம் அல்ல. ஏனென்றால் எங்களுடைய சபைநாயகர் ஆகிய தாங்கள் அவ்வளவு சிறப்பாக அவர் ஆற்றியப் பணிகளுக்காக அவரைப் புகழ்ந்து இந்த உலகத்திற்கு எடுத்துச்சொன்னீர்கள் என்று எண்ணும்போது எங்கள் உள்ளம் எல்லாம் குளிருதய்யா, உள்ளம் எல்லாம் குளிருதய்யா. (சிரிப்பு)

அதுமட்டுமல்ல, கடந்த பல ஆண்டுகாலமாக அரசியல் வரலாறு தெரிந்த நாளிலிருந்து பார்க்கிறேன். நம்முடைய பேராசிரியர் அவர்கள் பெரியாரைப் புகழ்ந்தாலும் புகழ்வார்களே தவிர பேராசிரியரே ஓர் அமைச்சரை அழைத்து, நாட்டிற்கு நீ நல்லது செய்கிறாய், 234 சட்டமன்ற உறுப்பினர்களும் உன்னை தவறாமல் புகழ்ந்து வருகிறார்கள், தொடர்ந்து இப்படியே செய் என்று சொல்கிறார் என்றால், இந்த கணேசன் சொல்வதற்கு என்ன இருக்கிறது? (சிரிப்பு)



அவ்வளவு சிறப்பான முறையிலே அமைச்சர் செயலாற்றுகிறார் என்பதனை நினைக்கும்போது, ஆற்றல் படைத்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கிராமப்புற சமுதாயப் போரில் எவ்வளவு பெரிய வெற்றியினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை உளமார, நாட்டிலுள்ள நல்லவர்கள், வல்லவர்கள், நல் உள்ளம் படைத்தவர்கள் அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள், புகழ்கிறார்கள். உலக உத்தமர் மகாத்மா காந்தி அவர்கள் ... (குறுக்கீடு) காந்திக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மதியம் மணி 3-00 ஆகப் போகிறது. வெயில் வேகமாக எரிக்கின்றது. இருந்தாலும் ஏ.சி. ரொம்ப ஜில்லென்று, நன்றாகவே இருக்கிறது. ஆனால் இந்த ஜில் வேண்டாம் என்கிறேன் நான்.

*பிற்பகல் 2-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவருடைய இஷ்டம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் தவறாகச் சொல்லவில்லை. A.C. இருக்கிறது. A.C. இருக்கும்போது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு A.C. இருந்தாலும் பல நேரங்களில் தேவையில்லாத வெப்பத்தை நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள். அதற்கு பதிலாக இப்போது கணேசன் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் ஒரு தடவை என்னுடைய அறைக்கு வரவேண்டும். கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளை எல்லாம், அந்தக் குறிப்பேடுகளை எல்லாம் எடுத்துக்கொடுக்கிறேன். எப்படிப்பட்ட 'ஐஸ்' என்று அப்புறம்தான் தெரிந்துகொள்ள முடியும். இது ஒன்றும் அப்படி அல்ல, சாதாரணம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் அந்த விவகாரத்திற்கு வரவில்லை. இன்றைக்கு A.C. நன்றாக work பண்ணுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் இல்லை என்று சொன்னார்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆனாலும் அமைச்சருக்கு இந்த A.C. வேண்டாம். உடம்பு கெட்டுப்போய் விடும். ஏற்கெனவே சளி இருக்கிறது.

[2000 மே 10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாடு பூராவும் அமைச்சரைப் பாராட்டிக்கொண்டிருக்கிறது. நீங்கள் பாராட்டுங்கள், பரவாயில்லை. கணேசன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சினை சிலர் தடுப்பது அவர்களுடைய அநாகரிகச் செயல் என்பதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வேண்டாம். அவர் இன்னும்கூடச் சொன்னார், நீங்கள் அமைச்சரைப் பாராட்டி நன்றாகப் பேசினீர்கள் என்று. திரு. ஐ. கணேசன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** உலக உத்தமர் மகாத்மா காந்தி கண்ட கனவு கிராம ராஜ்யம். கிராம ராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டும் என்று இன்றைய காந்தி கலைஞர் கருணாநிதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திறமைவாய்ந்த, அப்பழுக்கற்ற, ஒரு மாவீரனாக வீறு நடை போட்டு, தன் உடலிலே இருக்கக்கூடிய அவ்வளவு பெரிய நோயைக்கூட சிறிதும் கருதாமல் (குறுக்கீடு) Operation செய்து நன்றாக ஆகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு ஒரு விளக்கமா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அப்படி பெரிய நோயிலே இருப்பதாகத் தெரியவில்லை. இன்று இவர் பெரிய நோய் இருப்பதாகச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேச்சினை இன்னும் முடிக்கவில்லை. அவர் மாண்புமிகு முதலமைச்சர் நோயைப் பற்றிச் சொல்லவில்லை. அவர் அமைச்சருக்கு ஏதோ நோய் என்று சொல்கிறார். அதுகூட வேண்டாம்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னெச்சரிக்கையாகத்தான் சொல்கிறேன். முதலமைச்சருக்கு நோய் என்று சொல்வதே மற்றவருக்கு நோய். அவர் 76 வயது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விடுங்கள். நீங்கள் சொல்ல வந்தது வேறு. ஆகையினால் நீங்கள் அதையே சொல்லுங்கள். இப்பொழுதே 7 நிமிடம் ஆகிவிட்டது. கொஞ்சம் சீக்கிரம் பேசி முடியுங்கள். அதாவது உங்கள் தொகுதிப் பிரச்சினைக்கு வாருங்கள்.



2000 மே 10]

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய எடப்பாடி தொகுதிக்கு முதல்வர் கலைஞர் இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகையினால் என்னுடைய தொகுதிப் பிரச்சினை அத்தனையையும் 10 நாட்களுக்கு முன்னாலே ஒரு File போட்டுக் கொடுத்துவிட்டேன். உள்ளாட்சித் துறை குறித்த கோரிக்கைகளை நிச்சயமாக அவர் செய்வார் என்று முழுமனதோடு நம்புகிறேன், என்னுடைய தொகுதி மக்களும் நம்புகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அன்றைய காலகட்டத்திலே இருந்த உலக உத்தமர் மகாத்மா கண்ட கனவை நனவாக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசு கிராமப்புற சமுதாய சீர்கேடுகளையெல்லாம் களைந்தெடுக்கக்கூடிய வகையிலே, மிகச் சிறப்பான முறையிலே இந்த காலகட்டத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அன்றைய காலகட்டங்களில் கிராமப்புறங்களிலே, வயல் வெளிகளிலே, மேடு பள்ளங்களிலே குடியிருந்த பெண்களில் மழைக்கால இரவுகளிலே சீமெண்ணெய் வாங்குவதற்காகச் சென்றபோது வயல் வரப்புகளிலே தடுக்கி விழுந்து அந்த எண்ணெயையும் கீழே விட்டுவிட்டு அடி வாங்கிய பெண்கள் எத்தனை பேர்? தன்னுடைய மகன்களுக்கும் குழந்தைகளுக்கும் அதே நிலை ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? அந்த வரலாறுகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது சமூகப் புரட்சியாக பல சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் கிராமப்புறங்களிலே 500 மக்களுக்கு மேலே ஆயிரம் மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கெல்லாம் நல்ல இணைப்புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்வந்து இவ்வளவு சிறப்பான முறையிலே காரியம் செய்ததற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். முன்பெல்லாம் கிராமங்களிலே பேய், பிசாசு இருப்பதாகச் சொல்வார்கள். அந்த பேய், பிசாசுகள் குடியிருக்கக்கூடிய சுடுகாடுவரை மின் விளக்குகளை அமைத்துக் கொடுத்தவர்கள் நம்முடைய ஆட்சியினுடைய முதல்வர் அவர்களும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஆவர். இப்போது கிராமங்களிலே பேய் பிசாசுகள் இல்லை. ஆனால், இப்போது (Mini) புகுந்திருக்கிறது. (சிரிப்பு) மினி புகுந்திருக்கிறது என்றால் Mini bus புகுந்திருக்கிறது (சிரிப்பு). இன்னும் பாக்கியிருக்கிற கிராமங்களிலேயும் அவை புக வேண்டும். பட்டி தொட்டியெல்லாம் புக வேண்டும். அதை எல்லா கிராமங்களிலும் விட வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆவல் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-50*

அடுத்து, மக்கள் நலப் பணியாளர்கள்—முதலமைச்சர் இருப்பதால் சொல்கிறேன்— மக்கள் நலப் பணியாளர்களைப் பொறுத்தவரை, பாவம், குறைந்த சம்பளத்திலே அவர்கள் வேலை பார்க்கிறார்கள். இந்த நிதியாண்டிலே அவர்களுக்குத் தகுதி வாய்ந்த வேலைகளைக் கொடுத்து, அவர்களை நிரந்தரமாக்கி, ஓரளவிற்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, குடிநீர் பிரச்சினை. ஒரு காலத்திலே பெண்களுக்கு இடுப்பை இறைவன் படைத்ததே குடத்தைத் தூக்குவதற்குத்தான் என்றிருந்தது. (சிரிப்பு) பல மைல் தூரத்திற்கு பெண்கள் குடத்தை இடுப்பிலே தூக்கிக்கொண்டு . . .(குறுக்கீடு) பல மைல் தூரம் பெண்கள் குடங்களை . . . .(குறுக்கீடு) என்ன Sir இது?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்கும் இடுப்பு இருக்கிறது. அப்படி என்றால், ஆண்களும் குடத்தைத் தூக்குகிறார்கள் என்று அர்த்தமா என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. சுப்பராயன், உங்களுக்கு ஒரு கருத்துச் சொல்கிறேன். உங்களுக்கும், மற்ற எல்லா உறுப்பினர்களுக்கும் அருமையான கருத்தோட்டங்கள் உண்டு. நீங்கள் அவருடைய கருத்தோட்டத்தைக் கெடுக்காதீர்கள். (சிரிப்பு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் இடையைப் பற்றிச் சொல்கிறார்கள், அதனால்தான் அவர் இடைப்பாடித் தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர்களெல்லாம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குடிநீர்ப் பிரச்சினையைச் சொல்லி உரையை முடியுங்கள்.



**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, மிகப் பிரமாதமான முறையிலே, அதுவும் இந்தக் கோரிக்கையிலே, கிட்டத்தட்ட 30 உறுப்பினர்கள் உளமார, மனதார, எதிர்க்கட்சி என்று சொன்னவர்களும், எதிரிக் கட்சி என்று சொன்னவர்களும்கூட இந்த மாமனிதன் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய ஆற்றலைப் புகழ்ந்திருக்கும்போது, அதுவும் நீங்களே புகழ்ந்த பிறகு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் சொல்வது என்ன? சாதாரணம்; சர்வ சாதாரணம்.

பெண்களுக்கு இறைவன் இடுப்பைப் படைத்தது குடத்தைத் தூக்குவதற்குத்தான் என்றிருந்த காலம்போய், இப்போது எங்கு பார்த்தாலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிதான். நிற்கிற இடத்திலே அப்படியே திருகித் திருகிப் பிடிக்கிற அளவிற்கு (சிரிப்பு) இந்த 4 ஆண்டுக்கால கலைஞர் ஆட்சியிலே தண்ணீர் . . . (குறுக்கீடு) நீங்கள் அந்தத் தண்ணீரை நினைக்கிறீர்களா? குடிதண்ணீர் பிடிக்கக்கூடிய நிலைக்கு, எங்கு பார்த்தாலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள். அதை உளமாரப் பாராட்டுகிறேன்; மனதாரப் பாராட்டுகிறேன்.

குடிநீர் வடிகால் வாரியம் என்பது இந்த அரசின் மிகச் சிறந்த வாரியம். இந்த வாரியம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் திறமையையும் உழைப்பையும் இந்த மாமன்றத்தின் வாயிலாக, உளமாரப் பாராட்டுகிறேன்; மனம்திறந்து பாராட்டுகிறேன்.

துணைக் கண்டத்தினுடைய முப்பக்கமும் கடல் சூழ்ந்த பகுதி. ஆனால், அந்தக் கடலுக்குக்கூட குடிக்கத் தண்ணீர் கொடுப்பதில் கஞ்சத்தனம். அப்படி இருக்கும்போது இயற்கை அருளிய அந்தக் குடிநீரை மற்ற மாநிலங்களும் நமக்குக் கொடுக்க முடியாத நிலையிலே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிஷம்தான்.

**திரு. ஐ. கணேசன்:** தயவுசெய்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணியைப் பார்க்காமல் என்னைப் பாருங்கள், (சிரிப்பு) என்னுடைய உணர்வுகளைப் பாருங்கள், சிந்தியுங்கள். நான் எந்த அரசியல் பிரச்சினைகளுக்கு உள்ளேயும் நுழையவில்லை. மற்றவர்களும் என்னுடைய பேச்சிலே குறுக்கிடுவது சுவையேற்றுவதற்குத்தானேயொழிய வேறு எந்தக் காரணமும் இல்லை. (குறுக்கீடு) ஆகையாலே, மணியை அடிக்காமல் சற்று அப்படியே கொஞ்சம்

பின்னாலே சாய்ந்து கொள்ளுங்கள் *(சிரிப்பு)* என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிகச் சிறப்பான முறையிலே, மிக அற்புதமாக குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுகிறது. *(மணியடிக்கப்பெற்றது)* இறைவன் மூன்று பக்கங்களிலும் நீரைக் கொடுத்தபோதும்கூட, தமிழ்நாட்டிலே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாதபோது, மற்ற மாநிலங்களிலிருந்து தண்ணீர் வருவதற்கு மனிதர்கள் எவ்வளவோ இடையூறு செய்தபோதிலும், விடமாட்டேன் என்று படைத்த பிரம்மனுக்கே சவால் விடக்கூடிய அளவிற்கு நம்முடைய முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் குடிநீரைக் கிராமம் கிராமமாக, வீடு வீடாக எடுத்துக்கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள் என்றால் இந்த நல்லவர்களுடைய ஆட்சியை மனம்திறந்து பாராட்ட வேண்டாமா? *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்கும் மணியடிக்க வேண்டுமா? *(சிரிப்பு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இன்னும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து ஒன்றே ஒன்று. 20 ஆண்டு காலமாக பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்தத் துறை ஊழியர்களுக்கு பதவி உயர்வு இல்லை என்று சொல்லப்படுகிறது. தயவுசெய்து அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை அழைத்துப் பேசி அது உண்மையாக இருந்தால் முதல்வரிடத்திலே பேசி அவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-55*

அடுத்தபடியாக துறை வாரி என்று சொன்னால், இந்தச் சிறப்பு வாய்ந்த உள்ளாட்சித் துறையிலே.... *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் இரண்டு நிமிடம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சின் சிறப்பு எல்லாம் கெட்டுப் போய்விடும், இன்னும் அதிகம் பேசவிட்டேன் என்றால். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தொகுதி பற்றிப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தொகுதியைப் பற்றி முதலிலே சொல்லிவிட்டு, கடைசியாக அமைச்சரைப் பாராட்டி இருக்கலாம்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை, தொகுதியைத் தலைவரிடம் விட்டுவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினைகளைத்தான் முதலமைச்சரிடம் விட்டுவிட்டீர்களே, பிறகு என்ன? உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, ஒரு நிமிடம், உள்ளதைச் சொல்லிவிட வேண்டும். தேர்தல் வந்தது. அது ஆள்தூக்கித் தேர்தல் என்று 1997-லே உள்ளாட்சித் தேர்தல் வந்தபோது நாங்கள் எதிர்த்து நின்றோம். கோழிக்குஞ்சை கழுகு தூக்குவதுபோல அந்தத் தேர்தலின்போது பல இன்னல்கள் ஏற்பட்டன. நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையில் ஒன்றியத் தலைவர்களை இந்த அரசு உருவாக்க வேண்டும். அதை விடுத்து சில பணக்காரர்களும், மற்றவர்களும் ஆட்களைத் தூக்குவது முறையல்ல, நியாயமல்ல. அதை மாற்ற இந்த மாமன்றம் முயற்சி எடுக்க வேண்டுமென்று பணிவோடு சொல்லிக்கொண்டு இங்கே.... *(மணியடிக்கப்பெற்றது)* இன்னும் ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)* முடித்துவிடுங்கள். *(குறுக்கீடு)* சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** முடித்துவிடுகிறேன். அடுத்தது சமத்துவபுரம். நம்முடைய முதல்வர் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு காலையிலே ஒரு குறிப்பு கொடுத்தோம். எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி வெற்றிபெற்றிருக்கக்கூடிய எடப்பாடி, பெண்ணாகரம், தாரமங்கலம் ஆகிய மூன்று தொகுகளிலும் பெரியார் சமத்துவபுரம் இதுவரை வழங்கப்படவில்லை. முதல்வர் அவர்கள் இந்த நிதியாண்டிலே அதை எப்படியாவது வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டு முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இதோ முடித்துவிடுகிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருடைய சிறப்பு, அவருடைய பெயர் மணியாக இருந்தாலும், அவருடைய செயல் மணி மணியாக நம்முடைய முதல்வர் காணக்கூடிய அற்புதமான காரியங்களை சிறப்பு வாய்ந்த பல திட்டங்களை தமிழ்நாட்டிலே நிறைவேற்றிக் கொண்டிருப்பதனால் அவரை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றோம். நான்

மட்டும் அல்ல, முக்கியமாக எங்களுடைய இனமானக் காவலர், தமிழினப் போராளி என்று சொல்லக்கூடிய டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்களும் மணி அவர்களுடைய பெயரை பலமுறை சொல்லி உளமாரப் பாராட்டியிருக்கிறார். அவர் எவ்வளவு கடுமையாக உழைக்கிறார் என்பதைத் தெரிந்து நீங்களும் அவர்போல் உங்களுடைய தொகுதி மக்களுக்குப் பாடுபட வேண்டும் என்று உதாரணம் காட்டக்கூடியவர் மாண்புமிகு திரு. கோ.சி. மணி ஐயா அவர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு (குறுக்கீடு) நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஊரக வளர்ச்சி குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் பற்றிய மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3-00*

மதுரை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால் அதன் வருமானம், வரவுக்கும் செலவிற்கும் ஈடு கொடுக்கின்ற வகையிலே இல்லையென்றாலும்கூட பல திட்டங்களுக்காக, குறிப்பாக பாலங்கள் கட்டுவதற்காகவும், ரோடுகள் போடுவதற்காகவும் தமிழக அரசு 200 கோடி ரூபாயைக் கொடுத்திருப்பதற்காக தமிழக அரசிற்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தச் செய்கைக்கு நமது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களும் துணையாக இருந்து செயலாற்றிக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் வாழ்த்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

சமீபத்திலேகூட எங்களது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும், மாமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து அடிப்படை வசதிகளுக்காகவும், நிர்வாக வசதிகளுக்காகவும் 12 கோடி ரூபாயைக் கொடுத்து உதவ வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, 12 கோடி ரூபாயை மதுரை மாநகராட்சிக்கு வழங்கி அந்த



அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும், நிர்வாக வசதிகளைச் சீர் செய்வதற்காகவும் அதைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொடுக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, நமக்கு நாமே திட்டத்தில் வைகையிலே கலக்கின்ற அசுத்த நீரைச் செம்மைப்படுத்தி, செயல்படுத்துகின்ற திட்டத்திற்கு இப்போது வழிவகுக்கப்பட்டுள்ளதுடன் அது நமது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரின்கீழ் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு 8 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது. அதிலே 2 கோடி ரூபாயை பொது மக்களிடமிருந்து வசூல் செய்துவதுடன் மொத்தத்தில் அந்த 8 கோடி ரூபாயை அரசு தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, இப்போது வருமானம் என்று பார்த்தோம் என்றால், மதுரை மாநகராட்சி Town Planning section-லே கிட்டத்தட்ட 20 files தேங்கிக் கிடக்கின்றன. அந்த file-களை எல்லாம் சரி செய்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு penalty, அபராதம் அல்லது வேறு ஏதாவது ஒரு வழியிலே ஒரு தொகையை பெறக்கூடிய வகையில் திட்டத்தை நிறைவேற்றினால், 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்று வசூலித்தால்கூட 10 கோடி ரூபாய் என்கிற அளவிற்கு வருமானம் வரக்கூடிய ஒரு section ஆக அது விளங்கிக் கொண்டிருக்கிறது. இப்போது சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். இங்கேகூட Town Planning section-லே அத்தகைய ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டு நல்லமுறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதே திட்டத்தை மதுரை மாநகராட்சியிலும் கொண்டு வந்து செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, மதுரை மாநகரத்திற்கு வைகை அணையிலேயிருந்து நேரடியாகக் குழாய் மூலமாக தண்ணீரைக் கொண்டு வருவதற்கு உலக வங்கி மூலமாக கிட்டத்தட்ட 48 கோடி ரூபாயைச் செலவழித்திருக்கின்றார்கள். அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலேயெல்லாம் இன்னும் தண்ணீர் சரியாக நிரப்பப்படாமல் அவை தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. சென்ற முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்து அவற்றைப் பார்த்துவிட்டு, கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். முன்பு அதை குடிநீர் வடிகால் வாரியம்

செயல்படுத்திக்கொண்டிருந்தது. இப்போது மாநகராட்சியே செயல்படுத்தலாம் என்று சொல்லியும், அந்தத் திட்டம் இன்னும் முற்றுபெறாத சூழ்நிலையிலேயே இருக்கிறது. ஏனென்றால், நகரத்திலே தண்ணீர் கஷ்டம் கொஞ்சம் கடுமையாக இருக்கிறது. இந்தத் தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலே தண்ணீரை நிரப்பி, அதை குழாய்கள் மூலமாகக் கொண்டு வந்து மக்களுக்குக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இப்போது வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் மதுரையிலே கூட்டப்படுவதேயில்லை. மொத்தமாக தமிழ்நாட்டிலே கூட்டப்படாத நிலைமை இருக்கிறது. வளர்ச்சி மன்றக் கூட்டம் 3 மாதத்திற்கு ஒரு முறை, 4 மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்பட்டால் இப்படிப்பட்ட யோசனைகளையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கின்றேன்.

நகரசுத்தித் தொழிலாளர்கள் குடியிருப்பில் இப்போது அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் குடியிருப்பிலே கிட்டத்தட்ட 30 வருடங்களாக, 40 வருடங்களாக குடியிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் retire ஆனவுடனே குடியிருப்பைக் காலி பண்ணச் சொல்கிறார்கள். அவற்றை அவர்களுக்கே நிரந்தரமாகத் தங்குவதற்காகக் கொடுக்க வேண்டும். இப்போது அதிகாரிகளும், நகராட்சிகளிலே, மாநகராட்சிகளிலே வேலை பார்ப்பவர்களும் அந்தந்தக் குடியிருப்புகளைச் சொந்தமாக்கிக் கொள்கிறார்கள். அதுபோலவே நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் அவர்கள் குடியிருக்கும் குடியிருப்பை சொந்தமாக்கிக் கொள்வதற்கான சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, மதுரையிலே மட்டுமல்ல, கோயம்புத்தூரிலேகூட அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு தடை விதித்துள்ளது. எனவே, அப்படிப்பட்ட மனைக்கட்டுகளை அங்கீகரிக்க அரசு ஏதேனும் ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் மதுரையிலே மாத்திரம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உங்கள் சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்துவிட்டார்கள்,



எங்களுடைய கோவையிலே பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது, அதையும் நீங்கள் கவனத்திலேகொண்டு நிறைவேற்றவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, கோயம்புத்தூரிலேயும் மதுரையைப் போல் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஊராட்சி ஒன்றியங்களில் 10, 15 ஆண்டுகளாக பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். Overseer-களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டதால் Road Inspector பணியிடங்கள் நிறைய காலியாக உள்ளன. அந்தக் காலிப் பணியிடங்களில் தொழில்நுட்பப் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். B.D.O. Offices எல்லாம் கடந்த நான்கு நாட்களாக மூடப்பட்டுள்ளன. அந்தத் துறை ஊழியர்களை அழைத்துப் பேசி, அதற்கு தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, இப்போது மதுரை மாநகராட்சியைச் சுற்றி இருக்கின்ற belt area விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அடிப்படை வசதிகளைக்கூட செய்து கொடுக்க முடியவில்லை. 72 வார்டுகளை 100 வார்டுகளாக மாற்றி, belt area-க்களை மாநகராட்சிக்குள்ளே கொண்டு வந்து சீர்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 3-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ம. அப்துல் லத்தீப், மிகச் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களுடைய செயல் திறனைப் பற்றி உறுப்பினர்கள் பலவாறு புகழ்ந்தார்கள். என்னைப் பொறுத்தவரையிலே சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், பொறுப்பு உணர்ந்து செயல்படக்கூடிய ஒருவர் என்ற அளவுக்கு, தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை பொறுப்போடு நிறைவுபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பதோடு அவருக்கு நான் செலுத்த வேண்டிய பாராட்டை முடித்துக்கொள்கிறேன், தாங்கள் மணி அடித்துவிடுவீர்கள் என்ற அச்சத்தின் காரணமாக.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 மே 10

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக என்னுடைய தொகுதியில் கண்ட, கேட்ட, ஒருசில பிரச்சினைகளைப்பற்றி மட்டும் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, உரியமுறையில் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். ஒன்று, வாணியம்பாடி நகரம், பாலாற்றால் பிரிவு பெற்று, கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி என்று இருப்பதை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள். கிழக்குப் பகுதியில்தான் இரயில் நிலையம், பஸ் நிலையம், நெடுஞ்சாலை எல்லாமே இருக்கின்றன. மேற்குப் பகுதியிலிருந்து இந்த இடங்களுக்கு வரவேண்டுமானால் ஒரே ஒரு இணைப்புப் பாலம்தான் இருக்கிறது. அந்த இணைப்புப் பாலமும் உடைந்ததோடு மட்டுமல்ல, நகரத்தின் நடுவில் இருக்கிற அது உடைந்து, நகரத்திற்கே ஒரு அகௌரவமான காட்சியை அளித்துக் கொண்டிருப்பதை நமது அமைச்சர் அவர்களே நேரடியாகப் பார்த்தார்கள். எனவே அது நகராட்சிப் பகுதிக்குட்பட்ட பகுதியாக உள்ளதால், அரசு எந்தத் துறையின் வாயிலாக அந்தப் பாலத்தைக் கட்டவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளிப்பார்கள் என்றும் நம்புகிறேன். கடன் பெற்று அந்தப் பாலத்தைக் கட்டக்கூடிய அளவிற்கு அந்த நகராட்சி மன்றம் தயாராக இல்லை. ஏனெனில் ஏற்கெனவே பல கடன்களைப் பெற்ற நகராட்சியாக அது இருக்கிறது. இது நெடுஞ்சாலைக்ளை இணைக்கின்ற ஒரு பாலமாக இருந்தாலும் நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலையை இணைக்கின்ற பாலம். அதுமட்டுமல்லாமல், கோலார், பெங்களூர் போன்ற இந்த நெடுஞ்சாலைகளை எல்லாம் நம்முடைய சென்னை நெடுஞ்சாலையோடு இணைப்பதற்கு இந்தப் பாலம் மிக இன்றியமையாதது. எனவே, இதைக் கருத்தில்கொண்டு, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு உரிய முறையில் மானியம் வழங்கி, அதைக் கட்டித்தரவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, குடிநீர்ப் பிரச்சினை. அது எல்லா இடங்களிலும் இருக்கிறது. வாணியம்பாடியிலும் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஆம்பூரிலே இந்தப் பிரச்சினை என்றைக்கு முடியுமோ என்று சொல்லும் அளவுக்கு மிக பூதாகரமாக உருவெடுத்து இருக்கிறது. காரணம், ஆம்பூரைச் சுற்றி பாலாறு ஓடுகிறது. பாலாற்றின் உப நதிகள் ஓடுகின்றன. ஆனால், பாலாற்றினுடைய மிக முக்கியமான பகுதியில் இருந்து குடிநீருக்காக,



2000 மே 10] [திரு. ம. அப்துல் லத்தீப்]

தண்ணீர் எடுக்கமுடியவில்லை என்பது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. பாலாற்று நீர் குடிப்பதற்கு ஏற்புடையதல்ல. மாசுபடிந்து விட்டது. எனவே குடிநீர் ஆதாரத்திற்காக அந்தப் பாலாற்றுப் பகுதியில் இருந்து தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆம்பூரில் மிகப்பெரிய கொந்தளிப்பு இருக்கிறது. நான்கூட ஊருக்குப் போவது என்றால், கொஞ்சம் யோசனை செய்த பிறகுதான் போகவேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். எப்பொழுதும் மக்கள் வருகிறார்கள், கோஷம் எழுப்புகிறார்கள். ஆக கொந்தளிப்பு நிலைமைகள் அங்கே தொடருகின்றன. கடையடைப்பு நடந்தது. உண்ணாவிரதம் இருந்தார்கள். இந்த நிலை எல்லாம் தொடர்கதையாகிவிட்டது. காரணம் என்னவென்றால், மக்களைக்கூட நான் குறை சொல்ல முடியாது. குடிப்பதற்கு நீர் இல்லை, சாதாரணமாக, அன்றாட புழக்கத்திற்குக்கூட தண்ணீர் இல்லை என்ற நிலை இப்போது அங்கேயிருக்கிறது. மற்ற நகரங்களுக்கு எல்லாம் நீங்கள் சிறப்பு மானியமாக வழங்கி இருக்கிறீர்கள். உதாரணமாக, எங்களுடைய மாவட்டத்திலேயே 2, 3 நகராட்சிகளுக்கு வழங்கியிருக்கிறீர்கள். வேலூருக்கு வழங்கியிருக்கிறீர்கள், ஆரணிக்கு வழங்கியிருக்கிறீர்கள். இந்த இடங்களிலே எல்லாம் இருக்கக்கூடிய நிலைமைகளைவிட மிகப் பெரிய சிக்கலான நிலைமையில் இருக்கிற நகரம் ஆம்பூர் நகரம். எனவே, அரசு இதில் ஒரு சிறப்பு கவனத்தைச் செலுத்தி உரிய முறையில் ஆவன செய்ய வேண்டும், சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன்புகூட.....

*பிற்பகல் 3-10*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகராட்சி குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிதி ஆதாரம்தான் குறுக்கிடுகிறது என்பதல்ல. மூன்று முறை அதற்காக முயற்சித்து, நீர் ஆதாரத்திற்காக முதலில் ஓர் இடத்தைத் தேர்வு செய்து, கொஞ்ச நாள் கழித்து அதற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்ய ஆரம்பிக்கும்போது மறுபடியும் அதிலே அசுத்த நீர் கலந்து அதையும் எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது சென்ற மாதத்தில் ஒரு புதிய நீர் ஆதாரம் தேர்வு செய்யப்பட்டு, அதில் இருந்து தண்ணீர் கொடுக்கலாமா என்ற முடிவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் அங்கு நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு நிதியாதாரம் முக்கியமல்ல, நீர் ஆதாரம்தான் முக்கியம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய நீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்ததாகச் சொன்னார்கள். ஆனால் என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாலாற்றுப் படுகையிலே 200 அடி ஆழத்திற்கு தண்ணீர் மாசு படிந்திருக்கிறது. ஆகவே, ஒகேனக்கலிலிருந்து காவிரி ஆற்றுத் தண்ணீரை ரூ.320 கோடியிலே நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்றால்தான், எங்களுடைய மாவட்டத்திலே எதிர்காலத்தில் குடிநீர்ப் பிரச்சினை தீரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒகேனக்கலில் இருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்கு ஆய்வு செய்ய ஆவன செய்ய வேண்டும். அதுதான் எங்களுக்கு நிரந்தர ஆதாரம் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் எப்படி உங்களுக்கு point வருகிறது? நினைத்த நேரத்தில் எழுந்து நின்று பேசிக்கொண்டு இருப்பதா? உங்களுடைய பேச்சை இப்போது குறிப்பேட்டிலிருந்து எடுத்து விடுவேன். இது கடைசி முறை. உங்களுக்கு என்ன? உறுப்பினர் பேசுகிறார், அமைச்சர் அதற்கு பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறார். அதற்குள் நீங்கள் ஏன் எழுந்து நின்று பேசுகிறீர்கள்? (குறுக்கிடு) வேலூரைப் பற்றி உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது பேசுங்கள். அவர் ஆம்பூரைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார், உட்காருங்கள். வேலூருக்குத் தேவையில்லாமல் பணம் கொடுத்து இருக்கிறார்கள் என்று அவர் சொல்கிறார். நான் ஏற்கெனவே அவரைச் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இடையிலே நீங்கள் வேறு குறுக்கிட்டுப் பேசுகிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு ஆம்பூர் நகராட்சி ஆணையர், ஆம்பூர் நகராட்சி மன்றத் தலைவி மற்றும் குடிநீர் வடிகால் வாரிய (T.W.A.D. Board) அதிகாரிகளோடு நாள் முழுவதும் கடுகடுக்கும் வெயிலில், சுட்டெரிக்கும் வெயிலில், நானும் மற்றவர்களும் கால் கடுக்க நடந்து சென்று சில நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து இருக்கிறோம். எனவே, மலட்டாறு மட்டுமல்ல, கொட்டாறு, பாலாற்றினுடைய சில துணை நதிகள், இவற்றிலே எல்லாம் மாசுபடாத நீர் ஆதாரத்தை கண்டுபிடித்து இருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுபற்றி நாங்கள் பேசியிருக்கிறோம். எனவே,



அதற்குச் சில கோடி ரூபாய் செலவாகும். அவ்வளவுதான். நிதி ஆதாரம் பிரச்சினை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி. நாங்கள் நீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்து இருக்கிறோம். எனவே, நீங்கள் நிதி ஆதாரத்தை எங்களுக்கு ஏற்படுத்தித் தாருங்கள். ஆனால் இது அவசரமாக, நெருக்கடி நிலையிலே செய்வதைப்போல செய்ய வேண்டிய ஒரு பிரச்சினை. இதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் மிகுந்த வற்புறுத்தலோடு கேட்டுக்கொள்கிறேன். பாலாற்றிலே இனிமேல் நீர் எடுக்க முடியாது என்ற நிலையிருக்கிறது. வாணியம்பாடிக்கு கொடையாஞ்சி என்ற இடத்திலே இருந்துதான் நீர் எடுக்கிறோம். எல்லா நகராட்சிகளுக்கும் அங்கிருந்துதான் நீர் போகிறது. Railway-க்கு நீர் கொடுக்கிறோம். Railway-க்கு நீர் கொடுத்தால், Bogies மூலம் சென்னைக்கு அனுப்புகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இது மிகுந்த ஆட்சேபணைக்குரியது. இங்கேயும் தண்ணீர் தேவைதான். ஆனால் Railway-க்குக் கொடுத்தால் ஜோலார்பேட்டையிலே பயன்படுத்துதற்குப் பதிலாக அங்கிருந்து Bogie-களிலே தண்ணீர் போகிறது. அதை வேறு எங்கேயும் அனுப்பவில்லை, இங்கே, சென்னையிலேயுள்ள Refinery-க்கு அனுப்புகிறார்கள். ஆகவே, அதைக் கொஞ்சம் கட்டுப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, Property Tax போடுகிறீர்களே, அதிலே ஒரு முறை வேண்டும், ஒரு வரையறை வேண்டும். 1993-லே நீங்கள் ஓர் அரசாணை போட்டீர்கள். அந்த அரசாணையின் அடிப்படையிலே 100 சதவிகிதம் உயர்த்த வேண்டும். 1998-லே 25% என்று போட்டீர்கள். அதாவது இவ்வளவு உயர்த்தலாம் என்பதுதான் G.O. முதல் G.O. பிரகாரம் 100% வரையிலே உயர்த்தலாம், இரண்டாவது G.O. பிரகாரம் 25% வரையிலே உயர்த்தலாம். அது ஒரு range of discretion தான். அந்த discretion-ஐ எப்படி பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றால், 100% என்று நீங்கள் சொன்னவுடனே 100% எல்லா இடத்திலேயும் விதித்துவிட்டார்கள். அதிலே discretion-ஐ பயன்படுத்தவில்லை. அதற்குப் பிறகு 25% ஆணை 1998-லே போடப்பட்டது. 25% என்றால்....

பிற்பகல் 3-15

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்து வரி என்பது பூதாகரமாக முதலில் பேசப்பட்டு,

பிறகு அதற்கான விளக்கங்கள் தரப்பட்டு, அது சாதாரணம் என்ற நிலைக்கு வந்துவிட்டது. காரணம், சொத்து வரி போடுகிறவர் அதிகமாக போட்டிருந்தால் appeal செய்வதற்கு இரண்டு வழிமுறைகள் இருக்கின்றன. ஒரு முறை, Committee இடத்திலே appeal செய்யலாம். அது தேவையில்லை என்றால் மேல்முறையீடு செய்யலாம். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் மனதில்வைத்து, பல இடங்களில் பார்த்ததில் சில இடங்களில் செய்யப்பட்ட தவறுகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு, அவை நிவர்த்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு பூராவிலும் நிரந்தரமாக ஒரு நல்ல முடிவுக்கு சொத்து வரி பற்றிய பிரச்சினை இப்பொழுது வந்திருக்கிறது. அதிலே ஏதாவது தவறுகள் இன்னும் இருக்குமானால், அந்த appeal Committee-யிலே கொடுக்கலாம். அதற்குமேல் அரசுக்கு வந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்குச் சொல்கிறேன். உங்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். நான் ஏற்கெனவே அறையிலே சொன்னேன், அப்பொழுது ஒரு வாக்குறுதி கொடுத்துவிட்டுப் போனீர்கள். Please finish your speech.

**THIRU M. ABDUL LATHEEF:** I know my limitations.

**HON. SPEAKER:** You know your limitations. Then, please finish your speech.

**THIRU M. ABDUL LATHEEF:** I have promised to the Hon. Speaker. I do not want to just transgress the limit prescribed by the Hon. Speaker already in his Chamber. Therefore, I am quite conscious of my responsibility. I thank you very much. I am just concluding. ஆகையால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, கடன் கொடுத்துவிட்டு கடனுக்கு வட்டி வாங்குகிறீர்கள். ஆனால் நிலைமை என்ன ஆகிறது என்றால், அரசு மானியம் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, கடனுக்காக மானியத்தை இரத்து செய்துகொள்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செய்துகொள்கிறீர்கள்' என்று எங்களைச் சொல்லக் கூடாது. எங்களுக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. கடனைக் கொடுக்கச் சொல்லி அங்கே அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.



அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் இரண்டு பேரையும் சம்பந்தப்படுத்தி, அவர்களிடத்தில் இருந்து திரும்பி வராது என்பதற்காக வங்கிகளில் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு அதை மட்டும் கொடுத்தால் போதும் என்று அவர்கள் வாங்கிக்கொண்டு போகிறார்கள். எங்களுக்கும் அந்த விவரத்திற்கும் தொடர்பே கிடையாது. தெரியவும் தெரியாது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் சொல்வது, அரசு மானியம் கொடுக்கிறது. அந்த மானியத்தின் அடிப்படையிலேதான் நகராட்சிகளின், ஸ்தல ஸ்தாபனங்களுடைய நிதிநிலை இப்போது தயார் செய்யப்படுகிறது. அந்த நிதிநிலையை நாம் தயார் செய்யும்போது, கடனுக்காக அதைச் சரிப்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் அந்த நகராட்சிகளெல்லாம், ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் செம்மையாகச் செயல்பட முடியாது. எனவே இதில் ஒரு வரையறை ஏற்படுத்துங்கள், ஒரு முறையை ஏற்படுத்துங்கள். கடனுக்கு வட்டி என்றால், அதற்குத் தனியான ஒரு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. வேல்சாமி, 3 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. க. வேல்சாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கைகளிலே பேசுகின்ற வாய்ப்பு நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1996 அக்டோபரில் தேர்தல் நடத்தி, பெண்களையும், ஆதிதிராவிடர்களையும், ஊராட்சிமன்றத் தலைவர்களாகவும், ஒன்றியப் பெருந்தலைவர்களாகவும், மாநகர மேயர்களாகவும் பணியில் அமர்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1997-98ஆம் ஆண்டு 662 கோடி ரூபாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 369.28 கோடி ரூபாயை வழங்கி பெருமைப்படுத்தியிருக்கிறீர்கள். 1998-99-லே 467 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1999-2000-த்தில் 455.56 கோடி ரூபாய் ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்குக்

கொடுக்கப்பட்டுள்ளது. இப்போது 2000-2001-ல் 1036 கோடி ரூபாயில் 577.86 கோடி ரூபாய் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்க இருக்கிறது. ஆண்டுக்காண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதி ஒதுக்கிய காரணத்தால், கிராமங்களில் தார்ச் சாலைகளும், concrete சாலைகளும், தெரு விளக்குகளும், குடிநீர் வசதியும் செய்துதரப்பட்டு மக்கள் மத்தியிலே கழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நற்பெயர் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்றால், அது தமிழக மக்களுக்கு கிடைத்திருக்கின்ற பெரிய வாய்ப்பு என்பதை நாட்டு மக்களெல்லாம் நன்கு அறிவார்கள்.

பிற்பகல் 3-20

அதுமட்டுமல்லாமல், நாமக்கல் சட்டமன்ற தொகுதி குடிநீருக்காக மட்டும் ஏறத்தாழ 4 ஆண்டுகளிலே 507.25. இலட்சம் ரூபாய் கொடுத்து பெருமைப்படுத்தியிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இப்போது எருமைப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 1,169 இலட்சத்தையும், ஆட்டோநகர் திட்டத்திற்கு 315 இலட்சத்தையும், நாமக்கல் நகராட்சிக்கு 28 இலட்சத்தையும் கொடுத்து எங்களுடைய நாமக்கல் தொகுதிக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் விரைவில் நடைபெறுவதற்கு தனி Division-ஐ ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆண்டுக்காண்டு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறார்கள். நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் சமத்துவபுரம், உழவர் சந்தை, வருமுன்காப்போம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், வாழ்ந்து காட்டுவோம், பூமாலை திட்டம் போன்ற திட்டங்கள் தமிழக மக்களுக்கு நேரடியாகப் பயனை அளித்து வருகின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை 1999-2000-ல் நாமக்கல் ஒன்றியம், பெரியபட்டி ஊராட்சிக்கு பரிந்துரை செய்திருந்தேன். ரூபாய் 99,76,652 மதிப்பீட்டில் தினமும் குடிநீர், சிமெண்ட், தார்ச் சாலைகள் போன்ற பல்வேறு நலத் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளதுடன், 46 சோடியம் விளக்குகளையும் நல்லமுறையிலே அமைத்திருப்பதற்காக பெரியப்பட்டி ஊராட்சியைப் பற்றி எல்லா பத்திரிகைகளும் இப்போது மிகப் பிரமாதமாக எழுதியிருக்கின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. வேல்சாமி:** இதுபோன்ற நல்ல பல திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்றுவதுடன், தமிழக மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியிலே சில குறைபாடுகளை எடுத்துச்சொல்ல மாண்புமிகு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறைபாடுகளை நேரே அமைச்சரிடம் சொல்லுங்கள், செய்வார். இப்போது உட்காருங்கள். திரு. மு. அப்பாவு, மூன்று நிமிடங்கள்தான் உங்களுக்கும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டு மத்திய அரசினுடைய 80 சதவீத மானியத்தோடு 65 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன. ஆனால், தற்போது இந்த ஆண்டு 31 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்படுகின்றன. எனவே, நம்முடைய தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தி அதிகமான வீடுகளைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசினுடைய முன்னணித் தலைவர் ஐக்கிய முன்னணி அரசிலே நிதி அமைச்சராக இருந்தபோது வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் நிதியை அள்ளி வழங்கினார்கள். ஆனால், இந்த ஆண்டு மத்திய அரசு ஓர் ஒன்றியத்திற்கு 7 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாய் என்ற அளவில்தான் நிதியை வழங்குகின்றது. இதன் காரணமாக நம்முடைய தமிழக உள்ளாட்சிகளுக்கு ஒதுக்குகின்ற நிதி கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் அளவிற்குக் குறைந்துள்ளது என்பதை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சிறப்பாக செயல்பட்டாலும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் 80 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ராட்சச ஆழ்குழாய்க் கிணறு அமைக்கின்ற இயந்திரம் வாங்கப்பட்டும், சாதாரணமாக அதுபற்றிய தொழில்நுட்பம் தெரிந்த ஒரு operator இல்லாத காரணத்தினால், மூன்று ஆண்டுகாலமாக பயன்படுத்தப்படாமல் அது கிடப்பிலே கிடக்கிறது. யாருமே அதை இயக்க முடியாமல் இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் இருக்கின்ற மண்ணில் சாதாரண இயந்திரங்கள் மூலம் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு சற்று கடினமாக

இருந்தபோது—பல இலட்சம் ரூபாய் கொடுத்து எங்களுடைய இராதாபுரம் ஒன்றியத்தில் உள்ள நவ்வலடியிலே இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகளை T.V.S. நிறுவத்தினர் அமைத்திருக்கிறார்கள். T.V.S. Rig-ஐக் கொண்டு வந்து உப்பச்சம்பாடு, இடையன்குடி, ஆனைகுடி, காளிகுமாரகோவில், குண்டல் போன்ற இடங்களுக்கும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்த்துத் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பணகுடி பேரூராட்சியில் கிட்டத்தட்ட 1977 ஆம் ஆண்டு 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டும், அந்த நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அங்கேயிருக்கின்ற 30 ஆயிரம் மக்களுக்கு நீர் வழங்க இதுவரையில் வெறும் 56 பொது நல்லிகள்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் .... (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். இப்போது பணகுடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளிலே இருக்கின்ற கிராமங்களில் பொது நல்லிகளே இல்லாத நிலையில், பணகுடி பேரூராட்சி மன்றத்தினுடைய நிர்வாக அதிகாரியும், பேரூராட்சி மன்றத் தலைவி அவர்களும் பணகுடியிலே 15 இலட்சம் லிட்டர் தண்ணீர் இருப்பதாகவும், அதிலே $11\frac{3}{4}$ இலட்சம் லிட்டர் தான் தற்போது முறைப்படி வழங்கப்படுகிறது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பரிந்துரை பண்ணி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பணகுடிக்கு நேரில் சென்று பார்வையிடாமலே $11\frac{3}{4}$ இலட்சம் லிட்டர் தண்ணீர் இருப்பதாக கருத்து தெரிவித்து, ஆயிரம் புதிய இணைப்புகள் கொடுப்பதற்குக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, தற்போது 300 இணைப்புகள் கொடுப்பதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் .... (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 3-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பணகுடி பற்றிப் பேசத்தான் அனுமதி கேட்டீர்கள். நான் மூன்று நிமிடங்கள் கொடுத்தேன். இப்போது ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. மு. அப்பாவு:** பணகுடி பற்றிப் பேசி முடிக்கவில்லை. இதோ முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.



**திரு. மு. அப்பாவு:** முடித்துவிடுகிறேன். 300 இணைப்புகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேரடிப் பார்வையில் பணகுடியில் தற்போது 11 அடி உயரமுள்ள, நான்கு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் வெறும் ஐந்து அடி உயரத்திற்கு, வெறும் இரண்டு இலட்சம் லிட்டருக்கும் குறைவான குடிநீர்தான் இருக்கின்றது. ஆகவே, ஒரு கிராமத்திற்குக்கூட குடிநீர் முழுமையாக வழங்க முடியாத நிலை இருக்கிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைப் பற்றி நேற்றுகூட, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா அவர்கள் கூறும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் தேவையில்லை. நீங்கள் உட்காருங்கள். திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் அறையிலே வந்து என்னிடம் கேட்கிறபோது ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் என்கிறீர்கள். நீங்கள் சொல்லவேண்டிய பிரச்சினைகளை விட்டுவிட்டு ஊர்ப் பிரச்சினைகளை எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இப்படி என்றால் உங்களைக் கூப்பிடவே மாட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் பேசியாகிவிட்டது. திரு. இரா. மணிமாறன்.

***திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, ஊராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் விநியோகம் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கான வாய்ப்பை அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். எனது தொகுதியில் திண்டுக்கல் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கிராமங்களுக்கும் ஏறத்தாழ 80 சதவீதம் குடிநீர் கிடைக்கக்கூடிய அளவுக்கு எங்கு பார்த்தாலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி என்ற அளவிலே அமைத்திருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்கு சென்றாலும் கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் இந்த நான்காண்டு காலத்திலே எங்களுக்குத் தேவையான குடிநீர் வசதி அளித்து தந்திருக்கிறீர்கள் என்று நன்றி சொல்லக்கூடிய அதேநேரத்தில், திண்டுக்கல் நகரத்தினுடைய நிலையை தங்களுடைய மேலான

கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். 1961 ஆம் ஆண்டு காமராஜர்சாகர் நீர்த்தேக்கம் அங்கே உருவாக்கப்பட்டது. அதற்குப்பின்னால் 1990 ஆம் ஆண்டு பேரணித் திட்டம் உருவாக்கப்பட்டது. இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டும் இன்னமும் திண்டுக்கல் நகரத்திலே மூன்று நாட்களுக்கு ஒரு முறையும், ஐந்து நாட்களுக்கு ஒரு முறையும் குடிதண்ணீர் விடப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, எங்களுக்கு நிரந்தரக் குடிநீர்த் தீர்வு என்ற அடிப்படையிலே காவிரி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு உங்களை நாங்கள் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். திண்டுக்கல் தொகுதிக்கு காவிரி நதியிலிருந்து குடிநீர் கொடுப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டச் செலவு ஏறத்தாழ 100 கோடி ரூபாய் என்ற அளவிலே இப்போது கோபபிலே இருக்கிறது. அதை நிறைவேற்றித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று, காமராஜர்சாகர் நீர்த்தேக்கத் திட்டத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களும் வந்து பார்த்தார்கள். அங்கே மண்போக்கி ஒன்று இருந்தது. அது அறுந்து விழுந்து, அடைப்பு ஏற்பட்ட காரணத்தினால், மணல் மேடாகக் காட்சி தருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் கண்கூடாகப் பார்த்து வந்தார்கள். அங்கே இருக்கக்கூடிய shutter-ஐ தூக்கி, மண்போக்கியை செம்மைப்படுத்தித் தருவதோடு, அதை ஆழப்படுத்தித் தருவீர்களேயானால், அதனுடைய கொள்ளளவு மீண்டும் அதிகமாகும். மக்களுக்கு அதிகமாக நீர் கிடைப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். எனவே அதைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆத்தூரிலிருந்து திண்டுக்கல் நகருக்கு வரக்கூடிய குடிநீர் குழாய்கள் 1961 ஆம் ஆண்டு ஜனத்தொகை அடிப்படையிலே போடப்பட்டவை. அந்தக் குழாய்கள் casting pipes. ஆனால் இப்போது திண்டுக்கல் நகர மக்களுடைய குடிநீர்த் தேவைக்கு அங்கேயிருந்து கொண்டு வரக்கூடிய தண்ணீர் போதுமானதாக இல்லை என்பதால் வழியிலே இருக்கக்கூடிய பைப்புகள் அனைத்தையுமே பெரிய பைப்புகளாக மாற்றித் தருவதன் மூலமாக அந்த நீர் ஆத்தூர் அணையிலே இருந்து திண்டுக்கல்லுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பு கிடைக்கும். அந்த பைப்பினுடைய காலம் 20 ஆண்டுகாலம் என்று நிர்ணயிக்கப்பட்டது. இப்போது



ஏறத்தாழ முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட காரணத்தினால், Air Pressure-ன் காரணமாக பைப்புகளில் உடைப்பு ஏற்பட்டு, பாதித் தண்ணீர் வீணாகக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, அதை மறுபரிசீலனை செய்து, ஆத்தூர் அணையிலிருந்து நீர் வரக்கூடிய அந்த பைப்புகளை எல்லாம் முழுமையாக மாற்றுவதன் மூலமாக திண்டுக்கல் நகருக்கு அதிகமான குடிநீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்து.... (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்றுதான்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே 1991 ஆம் ஆண்டுக் கணக்கின்பிரகாரம் ஒரு நபருக்கு ரூ. 630 அல்லது ரூ. 650 என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 2001 ஆம் ஆண்டு நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஜனத்தொகையும் அதிகமாகி இருக்கிறது. ஆகவே அதனுடைய மக்கள்தொகைக்கு 650 ரூபாய் என்று இருப்பதை 1,000 ரூபாயாக உயர்த்தித் தருவதன் மூலமாக அதிக வாய்ப்புகள் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு 60 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அது மக்கள் மத்தியிலே பெரிய வரவேற்பை அளித்துக் கொண்டிருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்புத் தன்மையை உருவாக்குகின்ற வகையில் நீங்கள் அந்தத் தொகையை ஒரு கோடியாக உயர்த்தித் தருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன். மூன்று நிமிடங்கள்தான்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய தொகுதியிலுள்ள குறைபாடுகளைப்பற்றி எடுத்துக்கூறுகின்ற வாய்ப்பு வழங்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற உள்ளாட்சித் தேர்தலை நடத்தி, உள்ளாட்சி நிர்வாகத்துக்கு ஓர் உயிரோட்டம் வழங்கிய தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அதேபோல, 1996 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு, உள்ளாட்சித்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2000 மே 10

தேர்தலை நடத்தியதன் மூலம் மக்களுக்கும், அரசு நிர்வாகத்துக்கும் இடையே ஒரு பாலத்தை ஏற்படுத்தியதுபோல நம்முடைய மாண்புமிகு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் இப்போது சென்னையில் சிறப்பாக பல பாலங்களை அமைக்கின்றார்கள். நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் இடையே தொடர்பு என்கிற பாலங்களை அமைத்து, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற, பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இப்போது பேரூராட்சிகளில் இருக்கின்ற சாலைகளில் முட்கள் முளைத்து, மூடி, மக்கள் செல்லமுடியாத அளவிற்கு இடையூறு ஏற்படுகிறது. ஆகவே, முட்களை எல்லாம் அகற்றுவதற்கு அந்த பேரூராட்சிகளுக்கு நீங்கள் அதிகாரம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3-30*

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு கடந்த ஆண்டைவிட அதற்கு முந்தைய ஆண்டு கூடுதலாக நிதி ஒதுக்கி, பல அடிப்படைத் தேவைகள் பூர்த்தி அடைந்து இருக்கின்றன. அதேபோல கடந்த ஆண்டும் முந்தைய ஆண்டு ஒதுக்கியதுபோல கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி மன்றங்களில் தேவையான நிதி இருக்குமானால், தொலைக்காட்சிப் பெட்டிகளை அவர்கள் வாங்குவதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல முந்தைய ஆட்சிக்காலத்தில் இருந்ததுபோல, மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டம் நடைபெறுவது இல்லை என்றாலும்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்களை வைத்து, உள்ளாட்சி மன்ற நிர்வாகிகளை வைத்து அடிக்கடி தொகுதிப் பிரச்சினைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் ஆய்வு செய்வதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய தொகுதிக்கு வரப்பிரசாதமாக அமைந்து இருக்கின்ற முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வெள்ளக்கோவில், மூலனூர், கன்னிவாடி ஆகிய 3 பேரூராட்சிகளிலும் பணிகள் நடைபெறுகின்றன. அப்பணிகளை துரிதப்படுத்தி, நிறைவேற்றி வருகின்ற 2, 3 மாதங்களுக்குள் அந்த கூட்டுக் குடிநீரை அந்த



2000 மே 10] [திரு. மு.பெ. சாமிநாதன்]

மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தத் திட்டத்தின்கீழ் மேட்டுக்கரை நீருந்து நிலையத்திலிருந்து வெள்ளக்கோவில் ஒன்றியத்தில் உள்ள மேட்டுப்பாளையம், வள்ளிஇறைச்சல், வேலம்பாளையம் ஆகிய 3 கிராம ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குகின்ற அந்தப் பணியை விரைவாக செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தத் திட்டத்தின் தொடர்ச்சியான குளத்துப்பாளையம் பேரூராட்சிக்கும் அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித்தர வேண்டும். அதுபோல் தாராபுரம் ஒன்றியத்திலுள்ள நஞ்சியம்பாளையம் ஊராட்சியில் முழுக்க இன்னும் குடிநீர்த் திட்டம் நிறைவேறாமல் அந்தப் பகுதி மக்கள் எல்லாம்கூட வருகின்ற 10, 15 தேதிகளில் சாலை மறியலை செய்யப்போவதாக அங்கே அறிவித்து இருக்கின்றார்கள். அதனால் நீண்டகாலமாக நிறைவேறாமல் இருக்கின்ற நஞ்சியம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைவாக செயல்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தொப்பம்பட்டி ஊராட்சியிலுள்ள சின்னைய கவுண்டம் பாளையம் சாலையை NABARD திட்டத்திலே தேர்வுசெய்து இருக்கிறார்கள். அந்தச் சாலையை மிக விரைவாக அமைத்துக் கொடுக்க வேண்டும். இன்னும் பல்வேறு திட்டங்கள் அங்கே நிறைவேறாமல் இருக்கின்றன; அவைகள்குறித்து அமைச்சர் அவர்களிடத்தில் விண்ணப்பங்கள் கொடுப்பதன்மூலம் பூர்த்தி செய்வேன் என்று கூறிக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். 3 நிமிடங்கள்தான்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பு அளித்ததற்கு முதலில் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். உள்ளாட்சித் துறை மானியங்களின்மீது இன்றைக்கு காலை மாலை இரண்டு வேளைகளிலும் விவாதம் நடைபெற்றாலும், உள்ளாட்சி அமைப்புகளான B.D.O. Offices எல்லாம் மூடிக்கிடக்கின்றன. ஆங்காங்கே இருக்கின்ற அலுவலகங்கள் எல்லாம் பூட்டிக் கிடக்கின்றன. ஏறக்குறைய 25 ஆயிரம் அலுவலர்கள், B.D.O. Rank முதற்கொண்டு, அனைத்து பணியாளர்களும் அங்கே கடந்த 4 ஆம் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் இருக்கிறார்கள். அதேபோல

வருவாய்த் துறையிலே இருப்பவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். இதை அரசு உடனடியாக கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். B.D.O. Office-லே இருக்கின்ற Technical Assistants எல்லாம் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வலியுறுத்த விரும்புகிறேன்.

நேற்றையதினம் மத்திய அரசு மாநிலங்களினுடைய பங்காக 29 விழுக்காட்டை தங்களுடைய வருவாயில் இருந்து ஒதுக்கித் தருவதாகச் சட்டம் நிறைவேற்றி இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த 29 விழுக்காடு மாநில அரசினுடைய பங்காகத் தருகின்றபோது, மொத்த வரி வருவாயில் இருந்து நீங்கள் கணக்கு எடுக்க வேண்டும்; நிகர வரி வருவாயில் இருந்து கணக்கு எடுக்கக்கூடாது என்று பிரதமரை கேட்டுக்கொண்டதாக தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே கூறி இருக்கின்றார்கள். இது நிறைவேறியதா என்று தெரியவில்லை; இதை விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அப்படி அதிக வருவாய் வருகின்றபோது, உள்ளாட்சி அமைப்புகளுக்காக இப்போது 2,401 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்களே அதை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இப்போது இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள் 3 Tier System-லே மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், கிராம ஊராட்சி என்ற 3 நிலைகளிலே, திரிசங்கு சொர்க்க நிலையிலே இருக்கின்றன. ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாமலும், முழுமையாக தொடர்பு இல்லாமலும் இருக்கின்றன. இதை மாற்றி அமைப்பதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதை நான் பதிலுரையில் எதிர்பார்க்கிறேன். இது மத்திய அரசினுடைய கடமையாக இருந்தாலும்கூட, மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி, அதை நிறைவேற்ற வேண்டிய கடமை, பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு என்பதை இங்கே கூறிட விரும்புகின்றேன்.

அதேபோல மாவட்ட வளர்ச்சி மன்றம் —District Development Council— 1994 ஆம் ஆண்டு பஞ்சாயத்து சட்டப்பிரகாரம் அமைக்கப்படவில்லை. அதனுடைய வெற்றிடம் அங்கே நிரம்ப இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல்வேறு துறைகளில்



இருக்கின்ற அதிகாரிகளிடம் கலந்து ஆலோசித்து செயல்பட முடியவில்லை. இதை நீக்குவதற்கு, இதைப் போக்குவதற்கு மறுபடியும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தை அமைக்க வேண்டும்; அல்லது மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு ஈடான ஓர் அமைப்பை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமக்கு அருகில் இருக்கின்ற கர்நாடகா, ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களிலும் உள்ளாட்சி அமைப்புகள் மிகவும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. சொல்லப்போனால், சுயராஜ்யம் —Self-Government— என்று சொல்லப்படுகின்ற.... (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 3-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டிலேயும் வெற்றிகரமாகச் செயல்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி.... (குறுக்கீடு) டாக்டர் இராமன், நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம் உங்களுக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதை நானே சொல்லிவிட்டேன், நானே உணர்ந்துதான் சொல்கிறேன். நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால் சுருக்கமாக ஒன்றிரண்டு விஷயங்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கீகரிக்கப்படாத மனைப் பட்டாக்களை அங்கீகரிப்பதுடன், அவர்களிடமிருந்து கட்டணம் வாங்காமல் அந்தத் திட்டத்தினை நிறைவேற்றித் தர வேண்டும்.

தேசிய நீர்வள ஆணையம் தென் மாநிலங்களிலே, அதுவும் தமிழகத்திலே குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு மிகப் பாதகமான ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று கவலையைத் தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரைப் பொறுத்தவரையில் 4 ஆண்டுகாலமாக, இவர் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால், கிராமங்கள், நகரங்கள் பூராவும் 90 சதவீதம் இப்போது குடிநீர்

பிரச்சினை இல்லாத அளவிற்கு தீர்வு காணுகிற வகையில் கடும் முயற்சிகளை மேற்கொண்டதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்தப் பிரச்சினையில் முழுக் கவனம் செலுத்தியதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. கோடைக் காலங்களில் நாங்களெல்லாம் சட்டமன்றம் முடிந்து ஊர்களுக்குச் செல்லும்போது, அங்கே நிலவுகிற குடிநீர்ப் பிரச்சினை கடுமையாக இருக்கும். இப்போது அதிகாரிகளை நியமித்து, அந்தப் பணிகளை முற்றிலுமாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் இரண்டு புத்தகங்களை அளித்திருக்கிறீர்கள். அதில் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, மாவட்டப் பஞ்சாயத்துகளிலே செய்திருக்கின்ற பணிகள் பற்றிய விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அநேகமாக எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இந்த விவரங்கள் தெரியாது. எனக்கும் தெரியாது. சில ஊராட்சி ஒன்றியங்களில் செய்திருக்கிற வேலைகள் அல்லது ஒரு பேரூராட்சியில் செய்திருக்கிற வேலைகள் பற்றி எனக்குத் தெரியாது. சம்பந்தப்பட்டிருக்கிற உறுப்பினரின் தொகுதியில் நடைபெற்ற பணி என்கிற முறையில் இருந்தும்கூட, அது உறுப்பினருக்கே தெரியாது. இத்தனை பணிகள் அந்தந்த தொகுதிகளில் நடைபெற்றிருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பது மிக அவசியமானது. இது மற்ற துறைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டான முறையிலே இப்போது வந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இது ஒரு நல்ல விஷயம். அதிகாரிகளின் நல்ல ஒத்துழைப்போடு இந்தப் பணிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சூழ்நிலையில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

குடிநீர் ஆதாரத்தைப் பொறுத்தமட்டில், இப்போது தேசிய நீர்வள ஆணையம் தெரிவித்திருக்கிற கவலையைப் போக்குவதற்கு நம்முடைய அரசு மாற்றுத் திட்டங்களை எப்படிக் கொண்டுவருவது என்று திட்டமிட்டு, எதிர்காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால் வற்றாத ஜீவ நதிகள் நம்முடைய மாநிலத்தில் ஓடவில்லை. தண்ணீரைக் கர்நாடகாவிலிருந்து கேட்க வேண்டியிருக்கிறது, கேரளாவைக் கேட்க வேண்டியிருக்கிறது இல்லையென்றால் ஆந்திராவிலிருந்து நாம் குடிநீருக்காக கிருஷ்ணா நீரைக் கொண்டு வருவதற்கான அவசியம் ஏற்பட்டிருக்கிறது இல்லையென்றால் மழை நீரைப் பாதுகாத்து குடிநீர் பிரச்சினையைத்



தீர்க்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில்கூட கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்றமுறை சொன்னார்கள்.

2000 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்குள்ளாக வரலாறு காணாத அளவிற்கு குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, குடிநீர் இல்லாமல் மக்கள் மிகப் பெரிய கஷ்டத்திற்கு உள்ளாவார்கள் என்றும், அதில் தமிழ்நாடும் ஒன்று என்றும் தேசிய நீர்வள ஆணையத்தால் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்ல முயற்சிகளை எடுத்திருக்கின்றார்கள். ஆனால் ஒரு கவலைக்குரிய விஷயத்தை சொல்லாமல் இருக்க முடியாது. இவ்வளவு நிதி ஆதாரங்கள் இருந்தும், இவ்வளவு சிறப்பாகப் பணிகள் நடைபெற்றும் சமீபத்தில் தமிழ்நாட்டில் வந்திருக்கிற செய்தியானது கவலைக்குரிய ஒரு செய்தியாக இருக்கிறது. குடிநீர் மாசுபட்ட காரணத்தால் பல பேர்களுக்கு உயிர் இழப்பு ஏற்படுகிறது என்கிற ஒரு நிலை வந்திருக்கிறது என்று சொன்னால் இதை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. மேலெழுந்தவாரியாக இதைப் பார்த்து ஒதுக்கிவிட முடியாது. எவ்வளவோ பெரிய பாதுகாப்புத் திட்டங்கள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டும், இப்போது பல மாவட்டங்களில் தண்ணீரால் காலரா நோய் ஏற்பட்டு பல பேர்கள் சாகிறார்கள் என்கிற நிலை இருக்கிறது. இதை முற்றிலுமாக அகற்றுகிற ஒரு நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—உங்கள் காலத்தில் தமிழ்நாட்டிலே செய்யாமல் விட்டுவிடக் கூடாது—எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

நேரத்தின் அருமை கருதி ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் பேராதரவோடு செயல்படுகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதி ஆதாரத் திட்டம் 25 இலட்சம், 30 இலட்சம், 50 இலட்சம் என்று முன்பு இருந்தது. 60 இலட்சமாக அதை இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அநேகமாக அதை இப்போதே அதிகரித்து அறிவிப்பார்கள்.

(உறுப்பினர்கள் அனைவரும் கையை உயர்த்தி தங்களுடைய பேராதரவைத் தெரிவித்தனர்).

யாரும் ஒன்றும் சொல்ல வேண்டாம். ஏன் நீங்கள் எல்லாம் கையைத் தூக்குகிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை ஒரு கோடி ரூபாயாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வேறு ஒன்றுமே இல்லை. எப்படி பஞ்சாயத்துக்கும், ஊராட்சி ஒன்றியத்துக்கும் சம்பந்தம் இல்லையோ, ஊராட்சி ஒன்றியத்துக்கும், மாவட்டப் பஞ்சாயத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையோ, அதுபோல சட்டமன்ற உறுப்பினருக்கும், கீழேயிருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் எதிலும் சம்மந்தம் கிடையாது. இது ஒன்றுதான் நேரடியாக சம்மந்தப்படுத்தக்கூடிய திட்டமாக, தொடர்புடையதாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோ அல்லது நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களோ அல்லது யார் கொடுத்தாலும் சரி, அந்தத் திட்டத்தினை சட்டமன்ற உறுப்பினர் வாயிலாக கொடுக்கிறபோதுதான் கீழே இருக்கக்கூடிய அந்த மக்களிடத்தில் அந்த சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு நெருக்கமும் தொடர்பும் ஏற்படும். அப்போதுதான் சட்டமன்ற உறுப்பினருக்கான அணுகுமுறையே வருகிறது. இல்லையென்று சொன்னால் யாரும் பார்க்க வரமாட்டார்கள். அமைச்சர்கள் வேண்டுமென்றால் நான் செய்து கொடுத்துவிடுகிறேன், நீங்கள் போய்விடலாம் என்று சொல்லலாம்.

*பிற்பகல் 3-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு மிகவும் நெருக்கமானவர்கள். அவர்கள் நினைத்துக்கொண்டு இருப்பார்கள் நான் மதுரையில்தானே இருக்கிறேன், அதனால் திருவாரூர் மாவட்டத்திற்கு என்ன என்று. திருவாரூர் மாவட்டத்திற்கு மிகவும் நெருக்கமானவர்கள், தொடர்புள்ளவர்கள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்களுக்கும் சேர்த்து நான் கேட்கிறேன் அந்தக் காரணத்தினாலேயே 1 கோடி ரூபாய் வழங்குகின்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். உள்ளாட்சி அமைப்புகளுடைய பணியாளர்கள், ஊராட்சிப் பணியாளர்கள் பல்வேறு பணிகளை செய்துகொண்டு 32 வகையான ஆவணங்களைப் பராமரித்து வருகிறார்கள். அவர்களை கட்டாயமாக நிரந்தரப்படுத்த வேண்டுமென்று நான் உங்களை பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, சமூக அமைப்பாளர்கள் 15 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒருவர் என்ற முறையில் 15 பெண்கள் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் 10 வருடங்களாக, 15 வருடங்களாக பணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது நேர்முகத் தேர்விலே அவர்கள் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். பல பேருக்கு திருமணமாகி வயது முதிர்ந்து போய் இருக்கிறார்கள். இப்போது அவர்களை நீக்கிவிடக்கூடாது. 15 மாவட்டங்களில், 15 பெண்கள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்தக்கூட வேண்டாம். சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஈடான இணையான சம்பளத்தையாவது வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு க. மணிவர்மா, மூன்று நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே, கடுமையான வறட்சி இருந்தாலும், சாத்தூர் பகுதி தவிர மற்றப் பகுதிகள் அனைத்திலும் குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல் நல்ல குடிநீர் கிடைக்கிற வாய்ப்பை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தந்தார்கள். அதற்காக என்னுடைய தண்டராம்பட்டுத் தொகுதியினுடைய மக்களின் சார்பாக அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணையிலிருந்து நீர் எடுத்துச்சென்று திருவண்ணாமலை மற்றும் பல பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சாத்தனூர் கிராமத்திலுள்ளவர்கள் குடிநீர் இல்லாமல் பெரும் அவதிக்குட்பட்டு 2 கி.மீ. முதல் 3 கி.மீ. தூரம் வரை சென்றுதான் குடிநீர் பெறுகிறார்கள்.

இந்த ஆண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை இப்போதே அறிவித்து செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வோர் ஊராட்சியிலும் குறைந்தது 25 முதல் 50 வரையில் ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டும் அனேகமாக அனைத்து ஆழ்துளைக் கிணறுகளும் பழுதடைந்துள்ளன. ஓர் அதிரடி நடவடிக்கையாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்களை வைத்து அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கிற ஆழ்துளைக் கிணறுகளை பழுதுபார்த்து ஊராட்சிகளிடம் நல்லபடியாக ஒப்படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், ஆழ்துளைக் கிணறுகளை ஒழுங்கான முறையில் பழுதுபார்த்து மக்கள் பயன்படுத்துவதற்காக கொடுக்க முடியாத நிலையிலேதான் உள்ளாட்சி அமைப்புகள் இருக்கின்றன. ஆகவே, அதிரடியாக ஒரு மாதத்திற்குள்ளாக குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்களை வைத்து அனைத்து ஆழ்துளைக் கிணறுகளின் பம்புகளையும் பழுதுபார்த்து ஊராட்சிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நலிந்து கிடக்கிற பல்வேறு ஊராட்சிகளில் எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. நலிந்த ஊராட்சிகளை உள்ளாட்சித் துறையே தத்து எடுத்து அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர வேண்டும். நலிந்துள்ள ஊராட்சிகளிலும் குடிநீருக்காக தண்ணீர் இறைக்கப்படுகின்ற காரணத்தால் அதற்கு ஆகும் மின்சாரக் கட்டணத்தைக்கூட அவைகளால் செலுத்த முடியவில்லை. மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் ஆலோசனை செய்து நலிந்த ஊராட்சிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் தார்ச் சாலைகள்தான் அமைக்க வேண்டிய நிலை உள்ளது. சின்ன சின்ன இடுகாட்டிற்குச் செல்கின்ற சாலைகள் குளத்திற்குச் செல்கின்ற சாலைகள், நிலத்திற்குச் செல்கின்ற சாலைகள் இப்படிப்பட்ட சாலைகளையெல்லாம் தார்ச் சாலைகளாக அமைக்க அரசு அதிகாரிகள் முன்வரவில்லை, அதனால் அவற்றையெல்லாம், குறிப்பாக, இரண்டு furlong, மூன்று furlong தூரம் உள்ள சாலைகளை எல்லாம் கப்பிச் சாலைகளாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாவட்ட ஊரக வளர்ச்சி நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் திட்ட அலுவலர் (Project Officer) இருக்கிறார். நிச்சயமாக முழுமையாக அதிகாரிகளை விரட்டி வேலை வாங்க முடியாத நிலையிலேதான் அவர் இருக்கிறார். எல்லா மாவட்டங்களிலும் ஊரக வளர்ச்சிக்குக் கூடுதல் மாவட்ட ஆட்சித்தலைவர்களை நியமனம் செய்து அரசு உள்ளாட்சி நிருவாகத்திற்குத் தேவையான திட்டப் பணிகளையெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஊராட்சிகளுக்குக் குடிநீர் இணைப்பு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 3-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

என்ற அய்யன் திருவள்ளுவன் வாய்மொழிக்கேற்ப, மாறிவரும் கால சூழ்நிலைகளை அறிந்து, நீண்ட காலத்திற்கு நன்மை பயக்கும் திட்டங்களை வகுத்து, அனைத்து மக்களுக்கும் இருக்க இடம், நடக்கப் பாதை, குடிக்கத் தண்ணீர், பார்க்க வெளிச்சம், படிக்கப் பள்ளி, உயிர் காக்க சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைத்திட வேண்டுமென்ற அவரது இலட்சியம் ஈடேறும்வரை அவற்றையெல்லாம் நிறைவேற்றத் தகுந்த அறிவுரைகளையும் தந்து, எங்களை வழிநடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், கலைஞர் அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 34 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றி இருக்கிறார்கள். இன்றையதினம் இந்த அவையைத் தொடங்கி வைக்கின்ற நேரத்தில் எனக்கு ஒரு நல்ல சிறந்த வாழ்த்தை நீங்கள் தெரிவித்தீர்கள். அதையொட்டி இந்த மாமன்றத்தில் பல்வேறு உறுப்பினர்கள் அறிவுரைகளை வழங்கி, ஆலோசனைகளை தெரிவித்து, வாழ்த்தியும் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்த்தி இருப்பது, இனிமேல் நான்

ஆற்ற இருக்கிற பணிக்கு மேலும் உற்சாகம் அளித்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், 4 ஆண்டுகாலம் இந்த துறையில் இருந்து பணியாற்றி வுருகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழிநின்று, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும், மக்கள் நலம் பற்றியே சிந்தித்துச் செயல்படும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்த இந்த அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் முழுமைப் பெற்றுள்ளது. ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்தத் தருணத்தில் கடந்த 4 ஆண்டுகளில் வேறு எந்த அரசும் செய்ய முடியாத பல சாதனைகளை, டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த அரசுதான் செய்துள்ளது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) யாராலும் மறுக்க முடியாது. இந்த இலக்கையும் மிஞ்சுவது என்றால், மீண்டும் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசால் மட்டும் தான் முடியுமே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த அரசாலும் முடியாது என்பதையும் உங்களோடு சேர்ந்து நானும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் முழுக்க, முழுக்க மாநில அரசு நிதியோடு உன்னதமான பல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்துகிறது. உதாரணமாக, ஒட்டுமொத்த கிராம வளர்ச்சிக்கு 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்', மக்கள் பங்கை ஊக்குவிப்பதற்கு, வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்த 'நமக்கு நாமே திட்டம்' சாதி சமய பூசலை ஒழித்து, சமத்துவ சமுதாயம் மலர 'பெரியார் நினைவு சமத்துவப்புரத் திட்டம்', கிராம மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பயன்பெற கிராமம்தோறும் 'அய்யன் திருவள்ளுவர் நூலகங்கள்' அமைத்தல், வறுமைக் கோட்டிற்குக்கிழே உள்ள குடும்பங்கள், குறிப்பாக பெண்கள் பயன்பெற 'சுயவேலைவாய்ப்புத் திட்டம்', அவர்கள் தயாரிக்கின்ற பொருட்களுக்கு பூமாலை வணிகச் சின்னம் அளித்தல், சட்டமன்றத் தொகுதியில் உள்ள அடிப்படை வசதிகளை வலுப்படுத்த, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியிருக்கிறது, டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த அரசுதான் என்பதை ஒளிவு மறைவின்றி சொல்லிக்கொள்ள



விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டங்களின் செயல்பாட்டை மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பாராட்டுகின்றன. அவர்களுக்கு இத்திட்டங்கள் முன்னோடியாகவும் உள்ளன என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு, சந்தேகங்களுக்கு முடிந்தவரை உரிய விளக்கங்களை, இத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பிலும் வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலும், தெளிவாகவும் விரிவாகவும் குறிப்பிட்டுள்ளேன். இதற்குமேலும் விளக்கத்திற்குத் தேவை இருக்காது என்று நான் நம்புகிறேன். கடந்த 4 ஆண்டுகளில் இந்த அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் பல என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். கிராமந்தோறும் நடைபெற்ற பணிகளை தொகுத்து வழங்கினால், அது உறுப்பினர்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதி அவற்றைத் தொகுத்து, சட்டமன்ற தொகுதி வாரியாக கையேடுகளாகத் தயாரித்து இந்த ஆண்டு வழங்கியுள்ளோம். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முகவுரையுடன், 'மலரும் மக்களாட்சி' என்ற தலைப்பில் இரண்டு கையேடுகள் தயாரிக்கப் பெற்று அவற்றையும் உறுப்பினர்களுக்கு வழங்கியுள்ளோம். எனினும் இந்தச் சாதனைகளில் சிலவற்றையேனும் இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டுக் கூறுவது மரபு என்பதால் ஒருசிலவற்றை மட்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

புதிதாக 9 ஊராட்சிகளுடன் ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட்டது. 25 பேரூராட்சிகள், கிராம ஊராட்சிகளாக மாற்றப்பட்டன.

பிற்பகல் 3-50

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமாத்தூர் ஊராட்சி புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டது. மூன்று அடுக்கு உள்ளாட்சிகளுக்குப் பல்வேறு நிலைகளில் அதிகாரங்களை வழங்கியதோடு இரண்டாம் கட்ட அதிகாரப் பரவலாக்கும் குழுவை அமைத்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மாவட்ட திட்டக் குழுவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்போது அறிவித்தபடி மாவட்ட ஊராட்சித் தலைவரையே தலைவராக நியமிப்பது உட்பட உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. ஊராட்சி அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்பட,

ஊராட்சித் தலைவரையே நிருவாக அதிகாரியாக நியமித்து, அடிப்படை வசதிகளான, தெருவிளக்கு, குடிநீர் போன்றவற்றில் ஊராட்சிகள் சுதந்திரமாகச் செயல்பட்டு பராமரிப்பதன் மூலம், 3 அடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் தடையின்றி பணிகளைத் தேர்வு செய்யவும், செயல்படுத்தவும் உரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஊராட்சிக்குத் தனியாக ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மாநில நிதி வருவாயில் 8 விழுக்காடு நிபந்தனையற்ற நிதியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 1997-98-ல் ஊராட்சிகளுக்கு 369 கோடியே 28 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001-ல் இது 577 கோடியே 20 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

சமன்பாடு மற்றும் ஊக்க நிதி மூலம் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1997-98-ல் சுமார் 10 கோடி ரூபாயாக இருந்த வீட்டு வரி ஊக்க வசூலை 1999-2000-ல் 24 கோடி ரூபாயாக உயர இந்த அரசு வழி வகுத்திருக்கிறது. ஊராட்சி நிதியைப் பெருக்க, விளம்பர வரி, கேபிள், தொலைக்காட்சி மீதான கேளிக்கை வரி போன்றவற்றை ஊராட்சிகளே வசூலித்துக்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தல வரி, தல மேல்வரி, சிறு கனிமம் மீதான வரி, முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி போன்றவற்றை முழுமையாக ஊராட்சிகளுக்கே பகிர்ந்து அளித்தது வரை பல்வேறு நிதி ஆதாரங்களும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரையில், குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அமைக்கப்பட்ட விசைப்பம்புகள் தவிர, இந்த 4 ஆண்டுகளில் 31,931 புதிய கைப்பம்புகளை இந்த ஆட்சி அமைத்திருக்கிறது. கிராமப்புறங்களில் குடிநீர் வீட்டு இணைப்புகள் புதிதாக வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. வரலாறு காணாத அளவில் கிராமங்களில் சுமார் 20,900 கிலோமீட்டர் கிராமச் சாலைகளை தார்ச் சாலைகளாக இந்த அரசு மாற்றியிருப்பதுடன் 2900 கிலோமீட்டர் கிராமத் தெருக்களை cement concrete தெருக்களாகவும் மாற்றியிருக்கிறது.

சுமார் 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 12 ஆயிரம் தெருவிளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றியமைத்துள்ளோம். தெரு விளக்குகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் பராமரிப்பைத் தீவிரப்படுத்தி, அவற்றின் 100



சதவிகித செயல்பாட்டைக் கண்காணிக்க, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் காலாண்டுக்கு ஒருமுறை சென்னையிலிருந்து இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் அனுப்பப்படுவார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து இத்தகைய ஆய்வுகள் இதுவரை இரண்டு முறை செய்யப்பட்டுள்ளன.

வீடுகள் அற்ற ஏழைகளுக்கு 2,13,092 concrete தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 5,326 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு மட்டும் 552 கணினி பிரிவுகளுக்கான கட்டடங்களையும் 1289 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்களையும் கட்டியுள்ளோம். 2238 பள்ளிகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். 701 புதிய ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டியுள்ளோம். 6652 பொது விநியோகக் கட்டடங்கள் கட்டியுள்ளோம். 1409 புதிய அங்கன்வாடி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 22053 தொலைக்காட்சி அறைகள் கட்டியுள்ளோம். 35,596 நீர்நிலை ஆதாரப் பணிகளை ஏற்படுத்தியுளளோம். ஏழைக் குடும்பங்களுக்கு 13,513 ஜீவன்தாரா கிணறுகள் வெட்ட மானியம் வழங்கப்பட்டுள்ளது. தனிநபர் பயன்பெறும் வகையில் 1,28,626 தனிநபர் கழிவறைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 3,92,543 புகையில்லா அடுப்புகளும், 5993 கரிமவாயுக் கலன்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சுய தொழில் செய்ய 4,66,984 குடும்பங்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், 13 -5-1996-க்கு முன்பு நிலுவையில் இருந்த 1,16,141 பணிகளுடன், கடந்த 4 ஆண்டுகளில் புதிதாக எடுக்கப்பட்ட பணிகளையும் சேர்த்து மொத்தம் 9,89,159 பணிகளில் 9,36,123 பணிகளைச் செய்து முடித்துள்ளது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-55

ஊரக வளர்ச்சித் துறை உருவான காலத்திலிருந்து இதுவரையில் இல்லாத சாதனையாக, இத்துறைக்கென்று தனியாக ஒரு பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. நிர்வாகத்தைப் பொறுத்தவரை, பொறியியல் துறையில் மேலும் 15 புதிய துணைக் கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கூடுதல் பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். 28 மாவட்டங்களிலும்

கூடுதலாக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் உதவித் திட்ட அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட ஊராட்சிகளுக்குத் தனியாகச் செயலர்களை நியமித்து, 28 உதவி இயக்குநர் பணியிடங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊர்நல அலுவலர்கள் மீண்டும் களப்பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஊரக வளர்ச்சித் துறைக்கென கூடுதலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்று ஏற்கெனவே இருந்த வாகனங்களோடு, மேலும் ஒரு வாகனத்தை வாங்கி, வழங்கியதோடு, மொத்தம் 621 புதிய வாகனங்களை ஊரக வளர்ச்சித் துறைக்குப் பெற்றுத் தந்துள்ளோம். இதுவரை ஊரக வளர்ச்சித் துறையில் இல்லாத அளவிற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 338 வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உதவி இயக்குநர்களாகவும், 65 உதவி இயக்குநர்களுக்கு இணை இயக்குநர்களாகவும் பதவி உயர்வு வழங்கியுள்ளோம். இதுதொடர்பாக பொறியியல் பிரிவில் பல்வேறு கட்டங்களில் உள்ளவர்களுக்குப் பதவி உயர்வினையும் வழங்கியுள்ளோம். ஆக, பயனுள்ள வகையில் நிர்வாகச் சீரமைப்பில் அரசு மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துக் கிராம மக்களும், குறிப்பாக இளைஞர்கள் பயன்பெற அனைத்து ஊராட்சிகளிலும் அய்யன் திருவள்ளுவர் நூலகங்களை அரசு அமைத்துள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலமாக 634 கிராமங்களில் 519 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 74,810 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மக்கள் பங்கேற்பை ஊக்கப்படுத்தி, 107 கோடி ரூபாய் செலவில் நமக்கு நாமே திட்டத்தின்மூலம் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக மக்கள் பங்காக 47 கோடியே 96 இலட்சம் ரூபாய் பெறப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் 257 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 18,556 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 66 கிராமங்களில் சுமார் 6,600 குடும்பங்கள் பயன்பெறத்தக்க வகையில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் மூலம் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. அவ்வப்போது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு அதன் செயல்பாட்டைச் சிறப்புறச் செய்திட பல்வேறு விதிகளை வகுத்து, கூடிய விரைவில் பஞ்சாயத்து கையேடு தயாரித்து வெளியிட உள்ளோம் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



இத்தனை சாதனைகளை நான்கு ஆண்டுகளில் நிகழ்த்தியுள்ள இந்த அரசு, தனது செயல்பாட்டை மேலும் தீவிரப்படுத்த உங்களது அன்பான அறிவுரைகள் எனக்கு மிகவும் தேவைப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரையில் ஊரக வளர்ச்சித் துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் செய்யப்பட்ட சாதனைகளில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட்டேன்.

இனி, பேரூராட்சித் துறையில் நடந்துள்ள சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுமக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளான நல்ல சாலை வசதி, போதுமான குடிநீர் வசதி, தேவையான அளவிற்குத் தெரு விளக்குகள் போன்றவற்றை மேம்படுத்திட தீவிர கவனம் செலுத்தி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் அரசு நிதியிலிருந்து வழங்கப்படும் தொகை அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது. 8 சதவிகிதம் என்பது போதுமானதா? கூடுமானவரையில் அதிக நிதியே ஒதுக்கப்படவில்லை என்று சொல்பவர்களுக்கு ஓரிரண்டு உதாரணங்களைச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலுள்ள பேரூராட்சிகளுக்கு 1966-67 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதி 38 கோடி ரூபாய். ஆனால் 1997-98 ஆம் ஆண்டில் 141 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1998-99-ல் 175 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 1999-2000 ஆம் ஆண்டில் 186 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு சுந்தரத்திற்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). 1967-ல் 38 கோடி ரூபாயிலிருந்து, 1999-2000-ல் 186 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்றால், அந்த மக்களுக்கு எவ்வளவு சிரமப்பட்டு இந்த நிதியை முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் அவர் கவனத்தில் கொள்ள வேண்டும். நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகைக்கு எத்தனை பணிகள் உண்டோ, எத்தனைப் பணிகள் எடுத்துக்கொண்டோமோ, அத்தனை பணிகளையும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் செய்து முடித்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-00

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டப் பேரவையில், மனிதக் கழிவை மனிதனே சுமக்கும் அவலநிலை போக்கப்பட

வேண்டுமென்று அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாக அதை ஏற்று, அனைத்துப் பேரூராட்சிகளிலும் இருந்த 417 உலர் கழிப்பிடங்களை, நவீன கழிப்பிடங்களாக ஆக்க, 10 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவு செய்து அனைத்தையும் மாற்றி பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை மன நிறைவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் மட்டுமின்றி, அனைத்து மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வந்து செல்லும் சுற்றுலா மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களான கன்னியாகுமரி, மாமல்லபுரம், திருத்தணி போன்ற பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன், சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்ந்து பயன்படத்தக்க வகையில், அழகுமிக்க பூங்காக்களில், தமிழ் மக்களின் பண்டைய நாகரிகத்தையும், சிறப்பையும் விளக்கும் வகையில் வரலாற்று நாயகர்கள் மற்றும் தமிழன்னையின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்து, திருப்பரங்குன்றம். வேளாங்கன்னி, சுவாமிமலை, திருச்செந்தூர், திற்பரப்பு, திருவட்டாறு, ஆரல்வாய்மொழி, சமயபுரம் மற்றும் முதல் தமிழ் அச்சுக்கூடம் எங்கு உருவானதோ அந்த தரங்கம்பாடி என்ற பேரூராட்சி ஆகியவற்றில், ஒளிமிக்க தெரு விளக்குகளையும், குடிநீர் வசதியையும் ஏற்படுத்தி, தெரு சுத்தமும் அதேபோல் சாலை சுத்தமும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இராமேஸ்வரம், குற்றாலம் மற்றும் மகாகவி பாரதியார் பிறந்த மண்ணான எட்டயபுரம் போன்ற பேரூராட்சிகளிலும் அடிப்படை வசதிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி முடித்திடவும், அழகுபடுத்திடவும் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. வள்ளலார் இராமலிங்க அடிகளார் வாழ்ந்து, அவர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட, இன்றளவும் தொடர்ந்து உலகுக்கு வழிகாட்டியாக விளங்கும் 'சத்திய ஞான சபை' அமைந்துள்ள வடலூர் பேரூராட்சியில் அழகுமிக்க ஒளிதரும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இராமலிங்க அடிகளார் வாழ்வை நினைவுகூரத்தக்க வகையில் அலங்கார வளைவுகள் அமைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில், 1999-2000 ஆண்டில் மடத்துக்குளம், குளத்தூர், அன்னூர், சர்க்கார் சாமக்குளம், சோழவந்தான், விக்கிரவாண்டி மற்றும் கண்டமங்கலம் ஆகிய பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும், மோகனூர், நங்கவல்லி, சென்னிமலை, வல்லசமுத்திரம் ஆகிய பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எ.கண்ணனூர், அரிமலம், அம்மாப்பேட்டை, பூதப்பாண்டி, பெரியநாயக்கன்பாளையம், வைத்தீஸ்வரன்கோயில், வடலூர், பணக்குடி மற்றும் புதுப்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் வணிக வளாகம் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 4 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையங்களும், வணிக வளாகங்களும் ஏற்படுத்தப்பட்டு, வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்திசெய்வதுடன், பேரூராட்சிகளுக்கு நல்ல வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய அசையாச் சொத்துகளும் உருவாக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில், 1996-97 ஆம் ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகளின்மூலம், சிமெண்ட் சாலைகளின் நீளம் 380 கிலோமீட்டரிலிருந்து 909 கிலோமீட்டராக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோல், தார்ச் சாலைகளின் நீளம் 2733 கிலோமீட்டரிலிருந்து 3421 கிலோமீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது 909 கிலோமீட்டர் சிமெண்ட் சாலைகளும், தெருக்களும், 3421 கிலோமீட்டர் தார்ச் சாலைகளும், 4100 கிலோமீட்டர் கருங்கல் கப்பிச் சாலைகளும், 5513 கிலோமீட்டர் செம்மண் மற்றும் மண் சாலைகளும், ஆக மொத்தம் 13,943 கிலோமீட்டர் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், பேரூராட்சிகளில் 1996-97 ஆம் ஆண்டு சொத்து வரி, 10 கோடி ரூபாயாக இருந்தது. கடந்த ஆண்டு 62 கோடி ரூபாய் அளவில் கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தொழில் வரி 15 கோடி ரூபாயும், குடிநீர்க் கட்டணம், குத்தகை மற்றும் இதர கட்டணங்கள் மூலம் 74 கோடி ரூபாயும் வசூல் செய்யப்பட்டதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தொகையைக்கொண்டு நல்லபல பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன என்ற செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த சிறிய, நடுத்தர, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வணிக வளாகங்கள், அலுவலக வளாகங்கள், வாராந்திர சந்தை மற்றும் சமுதாயக் கூடங்கள் போன்ற வருவாய் ஈட்டித் தரக்கூடிய பணிகளுடன் சாலை வசதி, வடிகால் வசதி போன்ற செயல் திட்டங்களும் 25 பேரூராட்சிகளில், 12 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிச்சி, திருத்தங்கல், பர்கூர், ராசிபாளையம், பொன்னேரி, மானாமதுரை, சத்துவாச்சாரி, பூந்தமல்லி, நாட்டரசன்கோட்டை, வீரப்பன்சத்திரம், அரூர், பள்ளிப்பாளையம் ஆகிய பேரூராட்சிகளில் பணிகள் முடிவுற்று பலன் தர ஆரம்பித்துள்ளது. இன்னும் காங்கேயம், திருச்செந்தூர், சோளிங்கர், பொன்னமராவதி, ஓமலூர், தாத்தையாங்கர்பேட்டை, மண்டபம், தேன்கனிக்கோட்டை, இனாம் கரூர், கீரனூர், அந்தியூர், சூரம்பட்டி மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய பேரூராட்சிகளில் பணிகள் தொடங்கப்பட்டு, பல நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன என்கிற நல்ல செய்தியையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன. இப்பணிகள் இப்பேரூராட்சிகளுக்கு நல்ல வருவாயை ஈட்டித் தருவதுடன், நகர்ப்புற வளர்ச்சியையும் ஏற்படுத்திக் கொடுக்கும் என்றும் நம்புகிறேன். இதுவரை பேரூராட்சிகளின் சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிட்டேன். தொடர்ந்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் சாதனைகள் சிலவற்றைத் தெரிவிக்கலாம் எனக் கருதுகிறேன்.

பிற்பகல் 4-05

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளிக்கையில், நகராட்சிகள் சம்பந்தமாக 15 அறிவிப்புகளும், மாநகராட்சிகள் சம்பந்தமாக 8 அறிவிப்புகளும் செய்யப்பட்டன. அனைத்து அறிவிப்புகள் சம்பந்தமாகவும் தேவையான அரசாணைகள் வழங்கப்பட்டு, நகராட்சிகளுக்கு 52,45,00,000 ரூபாய் நிதி ஒதுக்கீடும், மாநகராட்சிகளுக்கு 29,22,00,000 ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டன. இந்த நிதி ஒதுக்கீட்டை வைத்தும், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தங்களது சொந்த நிதியை வைத்தும் தார்ச் சாலைகள் அமைத்தல், சிமெண்ட் தெருப்பாதைகள் அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், சந்தைகள்





அமைத்தல், இறைச்சிக் கொட்டில்கள் அமைத்தல், வணிக வளாகங்கள் கட்டுதல், வாகனங்கள் வாங்குதல் போன்ற 4,433 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 55,99,00,000 ரூபாய் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றைத்தவிர, 12,525 தெரு விளக்குகள் சென்ற ஆண்டு அமைக்கப்பட்டுள்ளன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, மாநகராட்சிகளில் 958 பணிகள் 31,72,00,0000 ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பொது உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் தண்ணீர் வசதி உள்ளவைகளாக மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்து இருந்தார்கள். அதன்படி, 1-4-1999 அன்று நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் இருந்த 238 உலர் பொதுக் கழிப்பிடங்கள் அனைத்தும் நீர் வசதி இருக்கக்கூடிய கழிப்பிடங்களாக 2,90,00,000 ரூபாய் செலவில் மாற்றப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம் ஈடேறி, அவர்களுடைய உத்தரவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்சமயம் எந்த ஒரு நகராட்சியிலும், மாநகராட்சியிலும் நீர் வசதி இல்லாத பொது உலர் கழிப்பிடம் எதுவும் இல்லை என்று திடமாக இங்கே நான் அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்.

சென்னையில், மாநகராட்சி மூலம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 10 மேம்பாலப் பணிகளில், 5 மேம்பாலப் பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட்டு, வாகனப் போக்குவரத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4 மேம்பாலங்களின் பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 10 பாலங்களில் எஞ்சிய ஒரு பாலப் பணி வரும் 2001 மார்ச் திங்களுக்குள் முடிப்பதற்கான துரித நடவடிக்கையை மாண்புமிகு மேயர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் சாதனைகள் சிலவற்றை இதுவரை குறிப்பிட்டேன்.

அடுத்ததாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தும் குடிநீர்த் திட்டங்களைப்பற்றி நன்றாக அறிவீர்கள். அதனுடைய முனைப்பான வேகம் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக கடந்த ஆண்டு 450 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை 500 கோடி ரூபாயாக உயர்த்தி உத்தரவிட்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையின்போதே அவர்கள் உரையிலே இதைத் தெரிவித்தார்கள். நகர்ப்புற குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் நிதி உதவியை இந்த ஆண்டு 50 கோடி ரூபாயிலிருந்து, 80 கோடி ரூபாயாக அரசு உயர்த்தியிருக்கிறது. 50 கோடி ரூபாயிலிருந்து, 80 கோடி ரூபாய் உயர்வு என்பது 30 கோடி ரூபாய் கூடுதலாக இதற்கு வழங்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, சென்ற ஆண்டு 37 நகராட்சிகளுக்கு புதிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென்று உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 76 நகராட்சிகளில் புதிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற உத்தரவை எங்களுக்குப் பிறப்பித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலேயே முதல்வர் அவர்கள் இதைத் தெரிவித்து இருக்கிறார்கள். அது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதற்குரிய நடவடிக்கை, பூர்வாங்கப் பணிகள் அத்தனையும் தொடங்கி விட்டன என்ற செய்தியையும் நான் உங்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஊரகக் குடியிருப்புத் திட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த ஆண்டு 6,300 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதாக இந்த மாமன்றத்தில் நான் அறிவித்திருந்தேன். அப்படி கடந்த ஆண்டு அறிவித்திருந்தபடி இதுவரை 6,300 குடியிருப்புகளுக்கும் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்கும் கொண்டுவரப்பட்டுவிட்டது என்பதையும், இதற்காக 378 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு 6,500 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நகர குடியிருப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு 8 நகராட்சிகளிலும்,



34 பேரூராட்சிகளிலும் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக, 119 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இப்படி, கடந்த ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரப் பகுதிகளில் சிறப்பாகப் பணிபுரிந்து, குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. இதனைப் பாராட்டி, இந்தியாவிலேயே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் தலைசிறந்த வாரியமாகத் திகழ்கின்றது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்று HUDCO நிறுவனம் நற்சான்றிதழையும், கேடயத்தையும், அந்த வாரியத்திற்கு வழங்கியிருக்கிறது என்ற சிறப்புமிக்க செய்தியை இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 4-10

அடுத்து, சென்னைக்கு குடிநீர் விநியோகம் செய்வதைப் பொறுத்தவரையில் என்னதான் பெரும் பஞ்சம், செயற்கையாக, இயற்கையாக எப்படி வந்தாலும், அதைச் சமாளிக்கின்ற முயற்சிகள், எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவையெவை என்பதை மட்டும் இங்கே குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். சென்னை நகருக்கு செப்டம்பர் 1996 வரை நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு சராசரியாக, தண்ணீர் 70 லிட்டர் வீதம், மொத்தம் 29 கோடி லிட்டர், தொழிற்சாலைகள் உட்பட வழங்கப்பட்டு வந்தது.

கிருஷ்ணா நதிநீர் வந்த பிறகு அக்டோபர் 1996 முதல் நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றிற்கு தண்ணீர் 90 லிட்டர் வீதம், மொத்தம் 48 கோடி லிட்டர், தொழிற்சாலைகள் உட்பட வழங்கப்பட்டது. இந்த வருடம், கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த மழை, சராசரி ஆண்டு மழையில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாக மழை பொய்த்துப்போன காரணத்தாலே, பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஏரிகளில் 1-12-1999-ல் இருப்பில் இருந்த, 5983 கோடி லிட்டரை, கணக்கில் வைத்துக்கொண்டும் மற்ற குடிநீர் ஆதாரங்களான, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 2123 கோடி லிட்டரும், இரட்டை ஏரியிலிருந்து, 99 கோடி லிட்டரும் மற்றும் நிலத்தடி நீர் 4 கோடி லிட்டரும், கூடுதலாக எடுத்து, அடுத்த பருவ மழை வரை தொடர்ந்து, தினசரி தடையின்றி குடிநீர் வழங்கலாம் என்று உத்தேசிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கோ.சி. மணி] [2000 மே 10

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து போரூர் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு செல்ல இரு ஏரிகளையும் இணைக்கும் 11 கிலோமீட்டர் நீளமான நம்பி வாய்க்காலில் தூர் வாரும் பணியை பொதுப் பணித் துறையினர் 23-12-1999 அன்று முடித்துத் தந்தனர். அதன்பிறகு, போரூர் ஏரிக்கரையில், 250 குதிரைத் திறன் கொண்ட மூன்று இறைப்பான்கள் நிறுவப்பட்டு 21-1-2000 முதல் செங்குன்றத்திலிருந்து, போரூர் வழியாக ஈக்காட்டுதாங்கல் வரை அமைக்கப்பட்டுள்ள Cement Concrete-ன் குழாய்களைப் பயன்படுத்தி, நாள் ஒன்றிற்கு, 7.5 கோடி லிட்டர் முதல் 10 கோடி லிட்டர் வரை, தண்ணீர் 18.5 metre reverse pumping மூலம், தலைகீழாக, தண்ணீரை ஏற்றி, செங்குன்றம் அருகேயுள்ள கீழ்பாக்கம் சுத்திகரிப்பு நிலையம் வரை கொண்டு சென்று, மூடுகால்வாயில் விட்டு, பின் சுத்திகரிக்கப்பட்டு, நகருக்கு குடிநீராக வழங்கப்படுகிறது. தமிழக அரசு எடுத்த இந்தப் புது முயற்சியினால், இதுவரை இல்லாத புது முயற்சியினால், முதல்முறையாக, நாள் ஒன்றிற்கு 7.5 கோடி லிட்டர் முதல் 10 கோடி லிட்டர் வரை, செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீர், சென்னை நகருக்குப் பயன்படுத்தப்படுகிறது. தற்போதுள்ள, குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க இது மிகவும் பேருதவியாக அமைந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுதவிர, கொளத்தூர் அருகே உள்ள இரட்டை ஏரியிலிருந்து நாள் ஒன்றுக்குச் சுமார் 1.8 கோடி லிட்டர் த்ண்ணீர் எடுத்து, டிசம்பர் 1999 முதல் உபயோகப்படுத்தப்படுகிறது. பஞ்சட்டி, மீஞ்சூர் போன்ற பகுதிகளிலுள்ள பெரிய ஆழ்துளைக் கிணறுகளை மேம்படுத்தியதன் மூலமும், புதிதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டதன் மூலமும், முன்பு எடுக்கப்பட்ட சுமார் 4 கோடி லிட்டர் அளவு உயர்த்தப்பட்டு தற்போது 8 கோடி லிட்டர் வரை நிலத்தடி நீர் சென்னை குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், சென்னை நகருக்குள் உள்ள வாரியத்தின் கிணறுகளிலிருந்து, நாள் ஒன்றிற்கு 1 கோடி லிட்டர் தண்ணீர் எடுத்து விநியோகிக்கப்படுகிறது. குடிநீர்ப் பற்றாக்குறையால் சில பகுதிகளில் குழாய் மூலம் குடிநீரை வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைச் சமாளிக்க 338 லாரிகள் மூலம் நாள் ஒன்றிற்கு 2880 நடைகள் வீதம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. ஏற்கெனவே இருந்த 2525 தொட்டிகளுடன், புதியதாக 2000 குடிநீர் தொட்டிகள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப பயன்படுத்த கூடுதலாக, 1000 தொட்டிகள் வாங்கி வைக்கவும் ஏற்பாடு



2000 மே 10] [திரு. கோ.சி. மணி]

செய்யப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுகளில், ஒருசில வருடங்கள் பருவ மழை அளவு குறைந்து நகரில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்ட காலகட்டங்களில், பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்ட குடிநீர் அளவைவிட, நடப்பு காலத்தில் அதிக அளவில் விநியோகிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு 1992 ஆம் ஆண்டு பருவ மழை பொய்த்தது. 848 மில்லிமீட்டர் மழை பெய்தது. இதனால், 1993 ஆம் ஆண்டு முழுவதும், சராசரியாக நாள் ஒன்றுக்கு 105 மில்லியன் லிட்டர் மட்டுமே விநியோகிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு பருவ மழையின் அளவு அதைவிடக் குறைவு, அதாவது 607 மில்லிமீட்டர். ஆனால், இவ்வரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளினாலும், 3 ஆண்டுகள் தொடர்ந்து ஆந்திர மாநிலத்திலிருந்து கூடுதலாகத் தண்ணீர் பெறப்பட்டதாலும், இன்னும் நாள் ஒன்றுக்கு 250 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. அதைவிட மக்கள்தொகை எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், பல நெருக்கடிகளுக்குப் பிறகும், 250 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் குறைக்காமல் தொடர்ந்து விநியோகிக்கிறோம். இந்த நிலைமையை இந்த ஆண்டு வட கிழக்குப் பருவ மழை பெய்யும் வரையில் தொடரலாம் என்று நம்பிக்கையோடு இருக்கிறோம். ஏற்கெனவே உள்ள சுமார் 4,000 இந்தியா மார்க் பம்புகளைப் பழுது பார்த்ததுடன், புதியதாக 500 இந்தியா மார்க் பம்புகள் நிறுவப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளன. மேலும் தேவையைக் கருத்திற்கொண்டு, கூடுதலாக சுமார் 1,000 பம்புகள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். அவற்றை அமைப்பதற்கான சீரிய நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். தேவைக்கேற்ப கூடுதல் தொட்டிகள் வைத்தும், அதிக லாரிகள் மூலம் குடிநீர் வழங்கியும், கூடுதலாக புதிய இந்தியா மார்க் பம்புகள் அமைத்தும் நிலைமையைச் சமாளிக்க சென்னை குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

பிற்பகல் 4-15

குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக இதுவரை சுமார் 10 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இவ்வாவு பெரிய நெருக்கடியைச் சமாளிக்க இவ்வளவு புதிய திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியதற்கு 10 கோடி ரூபாய் மட்டுமே செலவழித்து இருக்கிறோம். இதேபோல குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்ட கடந்த ஆண்டுகளில், உதாரணத்திற்கு

1993 ஆம் ஆண்டு 49 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தபோதிலும், ஒரு நாள்விட்டு, ஒரு நாள்தான் தண்ணீர் கொடுத்தார்கள். அதுவும் 22 கோடி லிட்டர்தான் கொடுத்தார்கள். அந்தக் கணக்குப்படி பார்த்தால், ஒரு நாளைக்கு 11 கோடி லிட்டர் தண்ணீர்தான் அப்போது வழங்கப்பட்டது. பெருகி வரும் மக்கள்தொகையைக் கருத்திற்கொண்டு, உரிய காலத்தில் இந்த அரசு எடுத்த பல்வேறு துரித நடவடிக்கைகளினால், 10 கோடி ரூபாய் செலவிலேயே 25 கோடி லிட்டர் தினசரி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரில் அமைந்துள்ள பக்கிம்காம் கால்வாய், கூவம் நதி, அடையாறு நதி, ஆகியவற்றை நகரின் கழிவுநீர் மாசுபடுதலினின்றுத் தவிர்க்க வாரியம் ஒரு பெரிய திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. மத்திய அரசின் ஆய்வில் இத்திட்டம் தற்போது உள்ளது. இதற்கிடையே வாரியம் தனது சொந்த நிதியிலிருந்தும். TUFIDCO, HUDCO போன்ற நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றும், கொடுங்கையூர், கோயம்பேடு, வில்லிவாக்கம் மற்றும் நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்களை 51 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகளைத் தொடங்கியுள்ளது.

இவைதவிர, அடையாறு, கூவம் நதிகள், பக்கிங்காம் கால்வாய் மற்றும் ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றின் கழிவு நீர் கலக்கும் சுமார் 350 இடங்களை அடைத்து, கழிவுநீரை மறுபடியும் கழிவுநீராகத் திரும்பிச் செலுத்தவும் 17 கோடி ரூபாய் செலவில் பணிகள் தொடங்கப்பட்டு ஒரு வார காலமாக நடைபெற்று வருகின்றன என்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுவரையில் கடந்த 4 ஆண்டுகளில் இந்த அரசு நிகழ்த்திய சில சாதனைகளை, நிறைவேற்றப்பட்ட சில சாதனைகளை, மாண்புமிகு உறுப்பினர்களாகிய உங்களுக்குத் தெரிவித்தேன். சரி, நடப்பு நிதி ஆண்டில் நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்ற எதிர்பார்ப்பு உங்கள் அனைவருடைய உள்ளங்களிலும் உள்ளதை நான் நன்கு அறிவேன். அதற்குத்தான் இதை முதலில் சொல்லி, அதை இரண்டாவதாகச் சொல்கிறேன். என்ன நடந்தது என்பது இருக்கட்டும். நடக்கப் போவது என்ன என்று அறிய எல்லோருக்கும் ஆவல் இருப்பது இயற்கை. அதன் அடிப்படையில் இந்த



நிதியாண்டில் நாங்கள் செய்யப்போகும் முக்கியத் திட்டப் பணிகளை துறை வாரியாகப் பின்வரும் அறிவிப்பு வாயிலாகத் தங்களுக்குத் தெரிவிக்கலாம் என விரும்புகிறேன்:

கிராமப்புறங்களுக்கு மிக அவசியமான தேவை குடிநீர், சாலைகள், தெரு விளக்குகள், கல்வி, சுகாதாரம் ஆகும். கிராமப்புற சாலைகள் தரமான தார்ச் சாலைகளாக இருக்க வேண்டும் என்பதால் இறுக்கம் ஆக்கப்பட்ட கனத்துடன் இருப்பதாக இங்கேகூட ஒருசில உறுப்பினர்கள் பேசினார்கள். முதலிலே ரூபாய் 3 இலட்சத்துக்கும் அதிகமாக ஒரு கிலோமீட்டருக்குச் செலவானது. இப்போது 6 இலட்சமாக உயர்ந்துவிட்டது. அவ்வளவு உயர்ந்த பிறகு 60 இலட்சம் ரூபாய் போதுமா என்று தொகுதி மேம்பாட்டு நிதியைக் குறிப்பிட்டுக் காட்டி பேசியபோது சொன்னார்கள்.

நான் இங்கே அதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இப்படி அந்தத் தொகையிலே போடப்பட்ட சாலைகளின் நிலைபற்றி இந்த அரசுக்குத் திருப்திகரமாக இல்லை. உண்மையை மறைக்காமல் சொல்கிறேன். ஓர் இறுக்கமான சாலைதான் தேவை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தவுடன், அவரும் சில இடங்களில் அந்தச் சாலைகளை நேரில் பார்த்து, அது சரிதான், மாற்றிக்கொள்ள வேண்டியதுதான் என்று குறிப்பிட்டதாலேதான் இறுக்கமான சாலைகளாக இருக்க வேண்டுமென்று முடிவு எடுத்தோம். 1999-2000 மற்றும் 2001-ல் அந்த காலக்கெடு நெருங்கி வந்து, இப்போது இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரு திட்டத்தைத் தயாரித்து, முதலமைச்சரிடத்திலே அனுமதி பெற்றிருக்கிறோம்.

பிற்பகல் 4-20

1999-2000 மற்றும் 2001-ல் 11,651 கிலோமீட்டர் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றவும், அதேபோல் 5,000 கிலோமீட்டருக்குக் குறையாமல் தெருக்களை கான்கிரீட் தெருக்களாக மாற்றவும், ரூ.888 கோடி நிதியாதாரத்தைத் திரட்டி செலவிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை ஊராட்சி நிறுவனங்கள் அனைத்தும் சேர்ந்து செலவு செய்து நூறு கோடி ரூபாயைத் தாண்டவில்லை. அரசு கொடுத்திருக்கிற மானியம், அரசு கொடுத்திருக்கிற கடனுதவி, வெளியிலிருந்து வாங்கி செய்யக்கூடிய கடனுதவி அனைத்தும் சேர்த்து, ரூ.888 கோடி நிதியாதாரத்தைத் திரட்டிச் செலவிடலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த உத்தரவின்பேரில்

ரூ.773.50 கோடியில் 7669 கிலோமீட்டர் தார்ச் சாலைகள் மற்றும் 3000 கிலோமீட்டர் சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.79.30 கோடி செலவில் 1500 பள்ளிக் கட்டடங்கள் மீண்டும் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.34 கோடி செலவில் 2000 பொது விநியோகக் கட்டடங்கள் மீண்டும் இந்த ஆண்டு கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.8 கோடி செலவில் 300 புதிய சத்துணவு அங்கன்வாடி கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 84 சமையல் அறைக் கட்டடங்கள், 1529 சத்துணவு மையம் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட மையக் கட்டடங்கள் முழுவதும் பழுது பார்க்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ரூ.155.61 கோடி செலவில் 31,000 புதிய இலவச concrete தொகுப்பு வீடுகள், கச்சா வீடுகள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் மீண்டும் 15,589 வீடுகள். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு மத்திய அரசிலிருந்து குறைந்த நிதியைப் பெற்றோம். அறிவித்தபடி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட உத்திரவின்பேரில் ஏறத்தாழ ரூ.50 கோடி நிதியை அதற்காகக் கொடுத்து, 80:20 என்ற வீதத்தை மாற்றி, 60% மாநில சர்க்காரும், 40% மத்திய சர்க்காரும் என்ற நிலை உருவாக்கப்பட்டு, அந்த வீடுகளைக் கட்டி முடித்தோம். எதற்காகக் குறைத்தீர்கள்? ஏன் குறைத்தீர்கள்? என்ன நியாயம்? என்று கேட்டார். குறைத்தவர்களுக்கும் நாங்கள் இளைக்காமல், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்கு செய்து முடித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு அவருடைய பெருமுயற்சியால் பலமுறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, எங்கள் அதிகாரிகள் எல்லாம் அங்கே சென்று, அவர்களிடத்திலே வலியுறுத்திப்பெற்ற நிதியின்மூலம் ஏறத்தாழ 2 வது கட்ட நிதியின்மூலம் பழைய வீடுகளைப் புதுப்பிக்கலாம் என்ற திட்டத்தின்கீழ் அதற்கும் சேர்த்து மொத்தமாக, 15,589 வீடுகளைக் கட்டுவதற்குப் பெற்றிருக்கிறோம். 31,000 வீடுகளைக் கூடக் கட்டக் கூடாதா என்று கேட்ட டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கு இந்த 15,589-ஐயும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல மானியத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் 7,500 வீடுகள் மற்றும் நூதன தொழில்நுட்பத்தின்கீழ் 500 வீடுகள் ஆகியவை இந்த



ஆண்டு ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் புதியதிட்டங்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வறுமை ஒழிப்பு முயற்சியில் சுயஉதவித் திட்டத்தில் 15,000 சுயஉதவி குழுக்களுக்கு சுழல்நிதி மானியம் மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்கு ரூ.60 கோடி செலவழிக்கப்படும்.

ஊரக உற்பத்திப் பொருட்கள், பூமாலை வணிகச் சின்னத்துடன் விற்பனை செய்ய மாநிலம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் விற்பனை அரங்கங்கள் அமைக்க, ரூ.14.64 கோடி செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துகொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலையற்ற இளைஞர்களுக்கு ஆயிரம் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும். மொத்தம் 3 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டங்களினால் பயன்பெறும். ஒட்டுமொத்த மத்திய சுகாதார இயக்கத்திற்கு ரூ.12 கோடி மாநில அரசால் ஒதுக்கப்படும். நடப்பு நிதியாண்டில், மாண்புமிகு பாரதப் பிரதமரின் கிராம முன்னேற்றத் திட்டத்தின்கீழ், தமிழகத்திற்கு வழங்க இருக்கும் 104 கோடி ரூபாயும், ஆரம்ப சுகாதாரம், ஆரம்பக் கல்வி, ஊரகக் குடியிருப்பு, ஊரகக் குடிநீர் மற்றும் சத்துணவு போன்ற பணிகளுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள்மூலம் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவைதவிர, சாலை வசதிக்காக மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். அது கிடைக்குமானால் சாலையினுடைய வசதிகள் இன்னும் சற்று அதிகரிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 4-25

10,000 தெரு விளக்குகள் மற்றும் 2 ஆயிரம் சோடியம் ஆவி விளக்குகள் புதிதாக 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். 9 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் 3 ஆயிரத்து 850 கிராமப்புற விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் ஒவ்வொன்றும் 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 மாதத்திற்குள்ளாக இன்னும் ஒரு புதிய இலாகாவை உருவாக்க இருக்கிறார்கள். அதற்காக இந்தத் திட்டத்தை அறிவித்து, இந்த மாதத்திற்குள்ளேயே அதுகுறித்து

நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று இட்ட உத்திரவின் அடிப்படையில் 9 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில், 3 ஆயிரத்து 850 கிராமப்புற விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள், ஒவ்வொன்றும் 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு புதிதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகளுக்கு தலா இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஊக்க நிதி வழங்கப்படும். இத்திட்டத்திற்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். சென்ற ஆண்டு 125 இடங்களில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. எண்ணிக்கை சற்று குறைவாக இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நோக்கத்திற்காக இதை அறிவித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, 125 ஊராட்சிகள் இதைப் பயன்படுத்தி 1 இலட்சம் ரூபாய் வீதம் சென்ற ஆண்டு பெற்றன, இந்த ஆண்டு அப்படிப்பட்ட நிலையை இன்னும் சற்று அதிகரிக்கலாம் என்ற நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை அறிவித்து இருக்கிறோம்.

100% வீட்டு வரி வசூல் செய்யும் ஊராட்சிகளுக்கு இதுவரை ஒரு ரூபாய் ஊக்கநிதி என்று இருந்தது. இந்த அரசால் அது 2 ரூபாய் என வழங்கப்பட்டது. இந்த ஊக்கநிதி இனிமேல் 3 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 80 சதவீதத்திற்குமேல் வரி வசூல் இருந்தால் 2 ரூபாயும், அதற்குக் குறைவான விழுக்காடு இருந்தாலும்கூட, மொட்டையாக அப்படியே மொத்தமாக செய்தால்தான் என்பதுகூட அல்ல, அத்தகையவர்களுக்கு ஊக்கம் அளிப்பதை 3 வகையாகப் பிரித்திருக்கிறோம். விழுக்காடு வசூல் இருந்தால் ஒரு ரூபாயாவது ஊக்க நிதி வழங்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு உத்தரவு இட்டிருக்கிறது.

இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் முக்கிய நகரங்களை ஒட்டிய கிராமங்களில் அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த 18 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள 52 வட்டார வளர்ச்சி அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும். நலிந்த ஊராட்சிகள்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள், மின் கட்டணம் குறித்து ஒரே ஒரு வாக்குறுதியை உங்களுக்காக முதலமைச்சரை நம்பி செய்திருக்கிறேன், அவர் ஏற்கெனவே சொன்னதைத்தான்



தெரிவிக்கிறேன். எந்த ஊராட்சி நலிந்திருந்தாலும்கூட, குடிதண்ணீருக்கும், தெரு விளக்குக்கும் தட்டுப்பாடு இல்லாமல் இந்த அரசு அதைக் காப்பாற்றும் என்ற உறுதியை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டணம், குடிநீர்க் கட்டணம் செலுத்த சிறப்பு நிதியாக தற்போது ஒதுக்கியிருந்தது 5 கோடி ரூபாய். இந்த ஆண்டு அதை 7 கோடி ரூபாயாக உயர்த்தி உத்திரவிட இருக்கிறோம். நலிவுற்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவிட 2 கோடி ரூபாய் மொத்தமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு 75 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். நமக்கு நாமே திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். இது போதுமா என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படும். ஆனால் இது செலவழிந்து விடுமேயானால் அதற்குப் பிறகு மக்கள் தருகிற பங்குக்கு ஏற்ப, தொகை தேவைப்படுமேயானால் அந்த பங்களிப்புக்கேற்ப கூடுதல் நிதியை ஒதுக்குவதற்கு, அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்ற செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 141 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 50 லட்சத்தைத்தாண்டி, 10 லட்சத்தை சேர்த்து 60 லட்சத்தில் கணக்கிட்டு இந்தத் தொகையை ஒதுக்கீடு செய்திருக்கிறோம். உங்களுடைய பேச்சுக்கும், முதலமைச்சருடைய எழுத்துக்கும், எனக்கும் இதில் தொடர்பு இல்லை. நான் குறிப்பிடுவது நிதிநிலை அறிக்கையிலே உள்ளதை. காரணம், என்னிடத்திலே பலபேர் எனக்கு என்னவோ அந்த அதிகாரம் இருப்பதைப்போல வந்து கேட்கிறார்கள். அதற்காகச் சொல்கிறேன். அவர் அறிவித்த 60 இலட்சத்தின்படி கணக்கு பார்த்து 141 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த குறியீடான 150 பெரியார் நினைவு சமத்துவபுரங்களில், கட்டி முடிக்கப்பட்ட 66 சமத்துவபுரங்களைத் தவிர்த்து மீதமுள்ள 84 சமத்துவபுரங்களும் இந்த ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் என் தொகுதியிலே இல்லையே என்று கேட்டார்கள். இது மாவட்ட ரீதியாக அறிவிக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகிற ஒன்று. எல்லா தொகுதிகளுக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்போல ஒன்று, இரண்டு என்று இதை அறிவிக்கவில்லை. வாய்ப்புள்ள இடங்களில் செய்ய வேண்டுமென்றும், அதுவும் விரைவாகச் செய்யப்பட வேண்டுமென்றும் உத்திரவிடப்பட்டதால் அதைச் செய்திருக்கிறோம். நிச்சயம் எடுத்துக்கொண்டதிலே தவிர்க்கமுடியாமல் ஏதாவது விடுப்பட்டிருக்குமேயானால், அவருடைய தொகுதியில், அவர் தகுதியான இடத்தைத் தேர்வு செய்து தருவாரேயானால், முதலமைச்சர் அவர்களின் அனுமதிபெற்று அதையும் ஈடேற்றித் தரலாம் என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

*பிற்பகல் 4-30*

NABARD தார்ச் சாலைப் பணிகளைத் துரிதப்படுத்த கூடுதல் பொறியாளர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். ஊரகப் பொறியியல் பிரிவில் தகுதியுள்ள சாலை ஆய்வாளர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படும். Road Inspector, Road Inspector ஆகவே இருக்கிறார்; Overseer, Overseer ஆகவே இருக்கிறார், A.E., A.E. ஆகவே இருக்கிறார்; இதற்கொரு வழிமுறையை ஏற்படுத்த முடியாதா என்றெல்லாம் இங்கே கேட்டார்கள். இதை வெளியிலே இருக்கிறவர்கள் துர்ப்பிரச்சாரம் செய்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தைப் புரியாமலும், சிலபேர் புரிந்து கொண்டும் அந்தத் தவறைச் செய்கிறார்கள். கீழே இருப்பவர்களில் சிலர், அவர்களுக்குப் புரியாமலும் இந்தத் தவறுக்குத் துணைப் போகிறார்கள். இப்போது, இங்கேகூட வேலைநிறுத்தம் நடைபெறுகிறது; Strike பண்ணுகிறார்கள்; பூட்டுப் போட்டு பூட்டிக் கிடக்கிறது என்றார்கள். பூட்டு போடுகிற அதிகாரம் அவர்களுக்கு இல்லை. வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருந்தாலும் இருக்கலாமே தவிர, அந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைப் பூட்டுகிற அதிகாரம் அவர்களுக்கில்லை என்பது உங்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். இன்றைய கணக்குப்படி ஏறத்தாழ 3000 பேர் வேலைக்கு வந்திருக்கிறார்கள். கணக்குப் பார்த்தால், இப்படி சட்டமன்றம் கூடி நிதிநிலை அறிக்கை விவாதம் வருகிறபோதெல்லாம்—அவர்கள்



வைத்திருக்கிற சங்கம்கூட பதிவு ஆகாத சங்கம்—அந்தச் சங்கத்தின் பெயரால் மீண்டும் அதை வலியுறுத்துவது முறை என்று கருதி அவர்கள் இப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். நான் நேரிலேயே அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். ஏதோ நண்பர்களைப்போலப் பேசினோம். முதலமைச்சரைப்பற்றி உங்களுக்குத் தெரியும். இது வரையில் அவர்கள் பொறுப்பிற்கு வந்த ஒவ்வொரு காலத்திலேயும் அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு செய்திருக்கிறார்கள்; எவ்வளவு விஷயங்கள் முடிந்திருக்கின்றன; எவ்வளவு பணம் பெற்றிருக்கிறீர்கள்; இப்படிப்பட்ட நிலையில் இப்படி நீங்கள் நெருக்கடி கொடுக்கிறீர்களே, இது நியாயமா? நீங்கள் பொறுத்துக் கொண்டிருங்கள், பிறகு பார்க்கலாம், அவற்றிலே எவை எவை முடியுமோ அவற்றையெல்லாம் பார்த்து, நியாயமானவற்றைச் செய்து கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொன்னேன். பாதிப் பேர் ஒத்துக்கொண்டு பணிக்கு வந்திருக்கிறார்கள். மீதிப்பேர் அதையும் மீறி, பணிக்கு வராமல் இருக்கிறார்கள். அவர்கள் அதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகள் பராமரிப்பு புதிய அணுகுமுறையில், பரிசோதனை முறையில்....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுபவர்கள் என்ன கோரிக்கை வைக்கிறார்கள் என்று சொன்னால், D.D.O. Office என்று முன்பெல்லாம் இருந்தது. அதை ஒழித்துவிட்டீர்கள். அதையாவது கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அது ஓரளவு நியாயம் என்றுதான் நான் கருதுகிறேன். மறுபடியும், D.D.O. என்று சொல்லக்கூடிய கோட்ட வளர்ச்சி அலுவலகத்தை உருவாக்குவீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அவர்களுடைய அனுமதியோடுதான் ஏற்கெனவே பேசப்பட்டு, அவையெல்லாம் திருத்தப்பட்டன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, எதற்காகக் கேட்கிறீர்கள், ஏன் கேட்கிறீர்கள், இதனால் உங்களுக்கு என்ன லாபம், மக்களுக்கு என்ன லாபம், அரசுக்கு என்ன லாபம் என்றெல்லாம் கேட்டு அவர்களோடு உட்கார்ந்து பேசி விவாதித்திருப்பீர்களானால், நீங்களே இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்க மாட்டீர்கள். அது இப்போது பஞ்சாயத்து

ராஜ்யத்திற்குத் தேவையில்லாத ஓர் அமைப்பு. அதனால் அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. இன்னும் உங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்கிறேன், பதவி உயர்வைப் பொறுத்த வரையில் அதிகமான பதவிகளை உருவாக்கியிருக்கிறோம். அதன்மூலம் நிறையபேர்களுக்கு பதவி உயர்வு இதுவரை கிடைத்திருக்கிறது. வேண்டுமானால் தனியாக முதலமைச்சரைக் கலந்துகொண்டு அதுபற்றி ஓர் அறிக்கைக்கூட விடலாம் என்றிருக்கின்றேன்.

அவ்வளவு பெரிய 47 கோரிக்கைகளில், ஏறத்தாழ 18 கோரிக்கைகளை, அவர்கள் சொன்னதையும், சொல்லாததையும் நிறையவே நிறைவேற்றியிருக்கிறோம். அதை அவர்கள் பெருமனது வைத்து ஒத்துக்கொண்டிருக்கலாம். ஏனோ தெரியவில்லை, அதை மறைத்து அவர்கள் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம்.

அதிக சாலை அடர்த்தி மற்றும் வாகன நெரிசல்கள் உள்ள ஒன்றியங்களில் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு பிற பகுதிகளுக்கும் வழங்கப்படும்.

*நிலை-1 ஊராட்சிகளில்....*

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சில கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். B.D.O.-க்களை அவர்கள் அழைத்துப்பேசி....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இல்லை, இல்லை, நீங்கள் அப்படிச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) இல்லை, அப்படிச் சொல்லாதீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் அவர்களை அழைத்துப்பேசி 4 நாட்களாகப் போராட்டம், நடைபெற்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளிலே சொன்னதையும், சொல்லாததையும் ஆக 18 கோரிக்கைகளை ஏற்கெனவே நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மீதியுள்ளவற்றைக் குறித்தும் அவர்களைக் கூப்பிட்டுப் பேசுகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிட்டதற்கப்புறம் நீங்கள் சொல்லுங்கள்



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இல்லை, இல்லை, நான் பதிலை முடித்துவிடுகிறேன். நான் yield ஆகவில்லை. (குறுக்கீடு) நான் பதிலை முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு வேண்டுமானால் கேட்கலாம். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரேயொரு கருத்து, தொழில் நுட்பப் பணியாளர்களைப் பற்றி...

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பப் பணியாளர்களைப் பற்றி...

**திரு. ஜி. பழனிசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பப் பணியாளர்களைப் பற்றிய ஒரேயொரு....

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான, நியாயமான ஒரு கோரிக்கையும் இருக்கிறது. ஊராட்சி உதவியாளர்கள் பகுதி நேர ஊழியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஊராட்சிகளில் 32 வகையான ஆவணங்களைப் பராமரிக்கிற பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

32 வகையான ஆவணங்களைப் பராமரிக்கின்ற அந்த ஊராட்சி உதவியாளர்களைப் பகுதி நேர ஊழியர்கள் என்பதை மாற்றி முழு நேர ஊழியர்களாகப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று பணியின் அடிப்படையிலே அதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்களே, அது நியாயமான கோரிக்கையா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

*பிற்பகல் 4-35*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எந்த அளவுக்கு நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறாரோ அந்த அளவுக்குப் பஞ்சாயத்தின் நிதி நிலைமையையும் கருத்தில்கொள்ள வேண்டும். பஞ்சாயத்தின் நிதி நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்துச் சொல்வதுதான் நியாயமே தவிர, ஒருவழிப் பாதையாக இதைப்

பேசக்கூடாது. உங்களுக்கு இருக்கின்ற எண்ணத்தைவிட முதலமைச்சர் அவர்கள் கடுகளவும் குறைந்தவர் அல்ல அது உங்களுக்கே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அவர்கள் அவசரப்படுகிறார்கள். வேறு ஒன்றும் இல்லை. அவசரப்பட்டு இந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள். பிறகு அதுபற்றி பரிசீலிப்பது என்றால், நியாயமாக இருந்தால் ஏற்றுக்கொண்டு செய்யலாம் என்றுகூட நான் சொல்லியிருக்கிறேன். இதுவரையிலே அதைப்பற்றி அவர்கள் எந்த கவலையும் கொள்ளவில்லை. போராட்டத்திற்கான தேதியையும் அறிவித்துவிட்டு என்னிடத்தில் பேச்சுவார்த்தைக்கு வந்தார்கள். அப்போதுகூட நான், முதலில் உங்களை வைத்துப் பேசுகிறேன். அதற்குப்பிறகு முதலமைச்சரை நான் சந்தித்து உங்களது கோரிக்கைகளைப் பற்றி பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எனவே நான் அந்தப் பாதையை மாற்றவில்லை. ஆனால், ஊராட்சி தாங்குமா? அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதில் எந்தவிதமான முறையைக் கையாளுவது? எது நியாயம் என்றெல்லாம் பார்த்து பேசித் தீர்க்கலாம். அதைப்பற்றிக் கவலை இல்லை. எந்த நேரம் வேண்டுமானாலும் பேசலாம்.

பஞ்சாயத்து உதவியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஒருசாராருக்கு நிலை 1 கொடுக்கின்ற நிலைமை. நிலை ஒன்று என்றால் ஒரு கூடுதலான வருவாய் உள்ள பஞ்சாயத்துக்களை இரண்டாக தரம் பிரித்து முதல் நிலையில் இருப்பவர்களை ஏற்றுக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்து, அரசாணைப் போடப்படாமல் இருந்தது, அதற்குப்பிறகு அரசாணையும் போட்டிருக்கிறோம். இவர்களுக்கு 1800 ரூபாய்க்கு மிகாமல் சம்பளம் கொடுக்கலாம் என்பதையும் வரையறுத்திருக்கிறோம்.

இரண்டாம் நிலை ஊராட்சிகள் என்பதுதான் அடுத்த கட்டம். அவர்களுக்கு என்ன வருவாய், எவ்வளவு அரசாங்க நிதி கொடுத்தாலும் பணிக்கென கொடுப்பது எவ்வளவு, திட்டத்திற்கென கொடுப்பது எவ்வளவு, அவர்கள் செலவுக்கென கொடுப்பது, அரசு நிதியிலிருந்து கொடுப்பது எவ்வளவு, மானியத்திலிருந்து கொடுப்பது எவ்வளவு, மத்திய அரசு வழங்குவது எவ்வளவு, என்று பல நிலைகளில் நிதியை நாம் கணக்கிட வேண்டியிருக்கிறது. ஆகையால் திரும்பச் சொல்கிறேன், நிலை 1 ஊராட்சிகளில் இருப்பவர்களுக்கு 1800 ரூபாய்க்கு மிகாமலும், நிலை இரண்டு ஊராட்சிகளில்



காலமுறை ஊதியம் பெறும் எழுத்தர்கள், உதவியாளர்கள் உள்ள ஊராட்சிகள் தவிர்த்து, இதர ஊராட்சிகளில் உள்ள பகுதி நேர எழுத்தர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு 800 ரூபாய்க்கு மிகாமல் மதிப்பூதியம் நிர்ணயித்து வழங்க ஊராட்சிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலே ஒன்றும் மாற்றமே இல்லை. ஊராட்சி துப்புரவுப் பணியாளர்களை தேவைக்கேற்ப வீட்டு வரி வசூலில் 20 விழுக்காட்டிற்கு மேற்படாத செலவில் தொகுப்பூதிய அடிப்படையில் நியமித்துக்கொள்ள ஊராட்சிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களே வேலைக்கு வைத்துக்கொள்ளலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அந்த வீட்டு வரி வசூலில் ஒரு குறிப்பிட்ட வசூல் நிர்வாகச் செலவிற்கென இருப்பது, அவர்களுடைய சொந்த வசூல். அதிலிருந்து 20 விழுக்காட்டிற்கு மிகாமல் சம்பளம் கொடுத்து வைத்துக்கொள்ளலாம் என்ற உத்தரவை இந்த அரசு வழங்கியிருக்கிறது.

விசைப்பம்பு இயக்குபவர்களுக்கு மதிப்பூதியமாக 400 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்களின் அடுத்த ஊர் பக்கத்திலே இருக்கிறது, 8 மணிக்கு இங்கே திறந்தால் அடுத்ததிலே 9 மணிக்கு திறக்கலாம் என்கிற வகையில் புதிதாக ஒரு வழியை கொடுத்திருக்கிறோம். அதையும் நீங்கள் திறந்தால் அதற்கு 150 ரூபாய் கூடுதலாகத் தருகிறோம் என்று ஒருசிலரை அழைத்து வைத்துக்கூட பேசியிருக்கிறோம். அவர்களும் அதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, ஊராட்சி ஒன்றியங்களில் கைப்பம்பு பொருத்துநர்கள் மற்றும் பொருத்துநர்களின் உதவியாளர்களுக்கு நாங்கள் கொடுக்கின்ற 3 கோடியே 85 லட்ச ரூபாயை சுழல்நிதியாக வைத்து அதில் வட்டி மூலம் கிடைக்கக்கூடிய தொகையில் இருந்து சம்பளம் கொடுக்கின்ற நிலையை உருவாக்கலாம் என்று தெரிவித்திருக்கிறேன். அதைப் பலர் ஏற்று இருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரை ஊரக வளர்ச்சித் துறை சம்பந்தமான அறிவிப்புகளைத் தெரிவித்தேன். இனி பேரூராட்சித் துறை தொடர்பான அறிவிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நடப்பாண்டில் பேரூராட்சிகளின் பல்வேறு மூலதனப் பணிகளுக்கும், பராமரிப்பு பணிகளுக்கும் 158 கோடி ரூபாய் அரசு நிதி ஒதுக்கீடு அளிக்கும். சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த

நகரங்களுக்கு வரும் பயணிகளின் வசதிக்காக அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சென்ற ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம். மக்களிடம் இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது என்ற காரணத்தினால், இந்த ஆண்டு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) பேரூராட்சிகளில் மயானங்கள் அமைக்குமாறு இங்கே பல உறுப்பினர்கள் சொன்னார்கள். மயானங்கள் போதிய பராமரிப்பு இன்றி உள்ளதை கவனத்தில் கொண்டு தண்ணீர் வசதி, விளக்குவசதி, பாதை வசதி இவைகளைச் செய்துகொள்வதற்கு பேரூராட்சிகளுக்கு நடப்பாண்டில் 3 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள சாலைகளிலும், பேரூராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்களிலும் சுற்றுப்புற சூழலை பாதுகாத்திடவும், மாசுக் கட்டுபாடு செயல்பாடாகவும், சாலைகளில் நல்ல நிழல் தரும் வகையில் மரங்களையும், பேரூராட்சிகளுக்கு வருவாய் ஈட்டக்கூடிய வகையிலும், ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் தவிர்க்கவும், பலன் தரத்தக்க மற்றும் நிழல் தரக்கூடிய 1 இலட்சத்து 28 ஆயிரத்து 833 மரக்கன்றுகள் 1999-2000 ஆண்டில் நடப்பட்டுள்ளன.

மேலும், இவ்வாண்டு ஒவ்வொரு பேரூராட்சியிலும் முனைப்போடு மரம் நடும் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று தெரிவித்திருக்கிறோம்.

பிற்பகல் 4-40

பேரூராட்சிகளில் பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் மேம்பாட்டிற்கு 4 கோடி ரூபாயும், வடிகால்கள் அமைத்திட 4 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். 2000-2001 ஆம் ஆண்டில் பேரூராட்சிகளில் சுமார் 120 கோடி ரூபாய் அளவிற்கு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் அளவில் 29 பேரூராட்சிகளில் குடிநீர் உட்பட அனைத்து அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். இதுவரை பேரூராட்சிகள் சம்பந்தமான அறிவிப்புகளை நான் தெரிவித்தேன். இனி நகராட்சிகள், மாநகராட்சிகள் தொடர்பாக அறிவிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.





நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் மழைக் காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும், சாலைகளைப் பாதுகாக்கவும் நகராட்சிகளில் 7 கோடி ரூபாய் செலவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். கடந்த ஆண்டு நகராட்சிப் பகுதிகளிலுள்ள சந்தைகளை மேம்படுத்தவும், புதியதாகக் கட்டவும் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், நடப்பு நிதியாண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இப்பணிகள் மேலும் பல நகராட்சிகளில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. நகராட்சிப் பகுதிகளில் ஆடு அடிக்கும் தொட்டிகளைக் கட்டவும், மேம்படுத்தவும், கடந்த ஆண்டு 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 26 நகராட்சிகளில் இப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

நகராட்சி பள்ளிக் கட்டடங்களை மேம்படுத்தவும், அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பிடவசதி, ஆய்வுக் கூடவசதி போன்றவற்றை ஏற்படுத்தவும், கூடுதல் வகுப்பறைகள் கட்டி மேம்படுத்தவும் 5 கோடி ரூபாய் செலவிடப்படும். நகராட்சிகளில் திடக்கழிவு நிருவாகத்திற்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உரக்கிடங்குகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நகராட்சிகளில் நடப்பாண்டில் சிறப்பு சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் பராமரிக்கப்படாத சாலைகளைப் பராமரிக்கவும், தார்ச் சாலைகளை அமைப்பதற்கும், பெரும்பாலான மண் சாலைகளை இறுக்கமான தார்ச்சாலைகளாக மாற்றவும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு முதல் நகராட்சிப் பகுதிகளில் தினந்தோறும் 100 விழுக்காடு கழிவுகளை அகற்றுவதற்காக சில சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ஒவ்வொரு நகராட்சிகளிலும் குறைந்தது இரண்டு வார்டுகளில் உள்ள வீடுகள்தோறும் சென்று கழிவுகளைச் சேகரிக்கும் பணிகள் நகராட்சி ஊழியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் துறையினர் மற்றும் சமுதாய பங்கேற்பு நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2-ன்கீழ் ஏழை மக்கள் வசிக்கும், 25 பகுதிகளில் ஒருங்கிணைந்த சுகாதார வசதியை ஏற்படுத்தும் நோக்கத்தில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பொதுக் கழிப்பிடம் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தி, அவ்வசதிகளை அப்பகுதி மக்களினால் பயனாளிகளைக் கொண்ட குழுக்கள் பராமரிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும். நகராட்சிகளால் பராமரிக்கப்படும் சுடுகாடு, இடுகாடுகளில் போதிய அடிப்படை வசதிகள், சாலை வசதிகள் முதலியன இல்லாமல் இருப்பதை கவனத்தில்கொண்டு 3 கோடி ரூபாய் செலவில் தேவையான நகராட்சிகளில் இப்பணிகள் செய்து மேம்படுத்தப்படும். பழனி நகராட்சியிலும், கம்பம் நகராட்சியிலும் புதிய பேருந்து நிலையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நகராட்சிப் பணிகளை கணினிமயமாக்கும் முயற்சியில் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. இந்த ஆண்டு ஜுலை மாதம் முதல், முதற்கட்டமாக பிறப்பு-இறப்பு விவரங்களை கணினி மூலமாக பதிவு செய்து, சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் வரி விதிப்பு, உரிமங்கள் வழங்குவது போன்ற மீதமுள்ள பணிகள் கணினி மூலமாகவே செயல்படுத்தப்படும். சுற்றுலா நகரங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த கடந்த ஆண்டு 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 8 நகராட்சிகளில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து நடப்பு ஆண்டில் இதற்கென 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு மத்திய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நகர்ப்புறங்களில் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின்கீழ் தனியார் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் 99 நகராட்சிகளில் 'பசுமைத் திட்டம்' மரம் வளர்த்தல்—2000-2001 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நகராட்சி தெருக்கள், பள்ளிகள், அரசு அலுவலக வளாகங்கள் மற்றும் பொது இடங்களில் 4 இலட்சத்து 83 ஆயிரம் மரக் கன்றுகள் நடப்பட்டு பாதுகாக்கப்படும்.

இந்த ஆண்டு 10 நகராட்சிகளுக்கு நகர்மன்றக் கூட்டம் நடத்துவதற்கு புதிய கட்டடங்கள் கட்டிக்கொடுக்க 2 கோடி ரூபாய்



ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 30 நகராட்சிகளில் 3 கோடி ரூபாய் செலவில் சிறுவர்கள் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதியுடன்கூடிய பூங்காக்களை அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கு ஆகும் செலவில் நகராட்சியின் பொது நிதியிலிருந்து 25 விழுக்காடும், அரசு நிதியிலிருந்து 75 விழுக்காடும் ஒதுக்கப்படவுள்ளது. நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சத்துணவுக்கூட கட்டடங்களைப் பழுதுபார்த்து தேவையான அடிப்படை வசதிகள் செய்துதர 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சிகளால் பராமரிக்கப்படும் பேருந்து நிலையங்களில் ஓடுதளத்தை சிமெண்ட் கான்கிரீட் தளமாக மாற்ற 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். சம்பந்தப்பட்ட நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து 25 விழுக்காடு நிதி இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்படும்.

பிற்பகல் 4-45

இவற்றில் கடைசியாக அறிவிக்கப்பட்ட நான்கு அறிவிப்புகளுக்கான ஒதுக்கீடு மத்திய 11-வது நிதிக்குழுவின் பரிந்துரையின்பேரில் மத்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டதும் இந்த வேலைகள் தொடங்கப்படும்.

அடுத்து மாநகராட்சிகள். மாநகராட்சிகளில் சிறப்புச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடந்த மூன்றாண்டுகளில் பராமரிக்கப்படாத தார்ச் சாலைகளைப் பராமரிக்கவும், பெரும்பாலான மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும். திருநெல்வேலி மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் பூங்காபோல மற்ற மாநகராட்சிகளிலும் 30 சிறுவர் பூங்காக்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் 829 குழல் விளக்குகளும், 1185 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில், மதுரை-திருச்சி சாலையையும், மதுரை-திருநெல்வேலி சாலையையும் இணைக்கும் சுற்றுச்சாலை சுமார் 47 கோடி ரூபாய் செலவில் அமைக்க, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று, 90 விழுக்காடு பணிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. இச்சுற்றுச்சாலை விரைவில் திறக்கப்படும்.

கோவை மாநகராட்சியின் மேல்நிலைப் பள்ளிகளில் 15 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கணிப்பொறி மையம் அமைக்கவும், வெளித்தொடர்பு Internet—வசதி செய்து கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏனைய மாநகராட்சிகளிலும் படிப்படியாக மேற்கொள்ளப்படும். திருச்சி மாநகராட்சியில் அனைத்து சுடுகாடு, இடுகாடுகளில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும். திருச்சி மாநகராட்சியில் 20 பள்ளிகளுக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சேலம் 'திருமணிமுத்தாறு மேம்பாடு திட்டம்' 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. சேலம் மாநகராட்சியின் 6-வது மண்டலத்தில் அடங்கும் பகுதிகளிலும், குகை பகுதிகளிலும் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் அமைத்து, குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

சென்னை மாநகராட்சியில் சாலைப் பணிகளுக்காக, குறிப்பாக, உட்புறச்சாலைகள் பராமரிப்பதற்காக, 75 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய மழைநீர் வடிகால்களைக் கட்டவும், தற்போதுள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்தவும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 'தூய்மைத் திட்டம் சென்னை 2000' மண்டலம் 6-ல் தொடங்கப்பட்டு, தற்போது மண்டலம் 10-லும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து, மண்டலம் 8-க்கும் விரிவாக்கப்பட உள்ளது.

மருத்துவக் கழிவுகளை அகற்றி, அழிக்க, ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். சென்னை மாநகராட்சிப் பள்ளிகளின் தரம் ஆண்டுக்காண்டு உயர்வதைக் கருத்திற்கொண்டு, இப்பள்ளிகளின் அடிப்படை வசதிகளுக்காக இவ்வாண்டு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல்வேறு பணிகள் செய்யப்பட இருக்கின்றன. மேலும் பாடங்கள் கற்பிக்கும் முறையினை மேம்படுத்தவும், கல்வியின் தரத்தினை உயர்த்தவும், புதிய கணினி முறை கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். சென்னை மாநகரில் சுற்றுப்புறச்சூழலை மேம்படுத்தும் வகையில் 1,30,000 மரக்கன்றுகள், வனத் துறை மூலமாக நடப்படும்.



எலிகள் பெருக்கத்தைத் தடுப்பதற்கு 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு விரிவான திட்டம், எலிகள் மிகுதியாகக் காணப்படும் வடசென்னையில் செயல்படுத்தப்படும். இது 'LEPTOSPIROSIS' என்ற கொடிய நோய் பரவுவதைப் பெரிதும் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் சம்பந்தமான அறிவிப்புகளைத் தெரிவித்தேன். இனி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான அறிவிப்புகளைத் தெரிவிக்கலாம் என்று விரும்புகிறேன். (குறுக்கீடு)

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள், மாநகராட்சிகள் என்ற முறையிலே ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நான் கடந்த நான்காண்டு காலமாகத் தொடர்ந்து வாதாடி வருகிறேன். நகராட்சிகள், மாந்கராட்சிகள் பகுதிகளில் 'unapproved layouts' இருக்கின்றன. 'Unapproved layouts' உருவாவதற்கு பொது ஜனங்கள் ஒருபோதும் காரணமாக இருந்ததில்லை. ஆனால் அந்தப்பகுதிகளில் சாலைகள் அமைப்பது, விளக்கு வசதிகள் ஏற்படுத்துவது மற்றும் பல அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் நகராட்சிகளால் சட்டரீதியாக இயலவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இங்கே அவையில் இருக்கிறார்கள். எனவே நான் குறிப்பிட விரும்புவது இதுவரையிலும் தமிழ்நாட்டில் உருவான 'unapproved layouts' முழுவதையும் ஒரு 'special order' மூலம் அங்கீகாரம் செய்யவேண்டும். இனிமேல் 'unapproved layouts' உருவாகாமல் சட்டரீதியாகவும், பத்திரப்பதிவு சட்டத்திலே ஒரு பொருத்தமான திருத்தத்தைக் கொண்டுவந்தால், unapproved layouts உருவாகாது. இந்த 'unapproved layouts'—களில் சாமானியப்பட்ட பொதுமக்கள்தான் குடியிருக்கிறார்கள். அவர்களிடம் பணம் பெற்று, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது என்பது நடைமுறையில் பெரும் சிக்கல் என்பதை நகராட்சிப் பகுதிகளில் இருந்து பெற்ற அனுபவத்திலிருந்து உணர்ந்து இதை நாங்கள் வலியுறுத்துகிறோம். இதுகுறித்து அரசு உரிய சிந்தனையைச் செலுத்தி, இதை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் கோவை மாநகராட்சியின் மேயர் அவர்களும், நம்முடைய மேயர் அவர்களும், இது சம்பந்தப்பட்டவர்களும் வந்து கலந்து முதலமைச்சர் அவர்களிடத்திலே

பேசியிருக்கிறார்கள். ஒரு பகுதி பேச்சு முடிவுற்று இருக்கிறது. அதில் இன்னும் சில சட்டப்பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பரிசீலனை செய்து, ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறார்கள். அதைப்பற்றி நாம் மீண்டும் பேசி ஒரு முடிவு எடுக்கலாம். இதுவரை மாநகராட்சிகள், நகராட்சிகள் சம்பந்தமான அறிவிப்புகளைத் தெரிவித்தேன்.

பிற்பகல் 4-50

இனி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடர்பான அறிவிப்புகளை தெரிவிக்க விரும்புகிறேன். இதைப் பொறுத்தவரையில் முதலில் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி என்னிடத்திலே தகவல் தெரிவித்தவைகளில் ஒருசில விடுபட்டிருக்கலாம். நீங்கள் சொல்லாத சில வரிகள் சேர்ந்திருக்கும். ஆனால் இப்போது சொன்ன அத்தனையும் மட்டும்தான் செய்யப் போகிறார் என்பதல்ல, சொன்னதைக் கண்டிப்பாகச் செய்வோம் என்று உறுதி தருகிறேன். ஆனால் இதிலே சில விதிமுறைகளுக்கு உட்பட்டு பரிசீலனையில் இருக்கின்றன. நிதி ஆதாரத்திற்கு நிதித் துறையிலிருந்து நாங்கள் அனுமதி பெற வேண்டும். அதையெல்லாம் பெற்றவுடன் இன்னும் சில திட்டங்களை கூடுதலாக ஏற்றுக்கொள்வோமேதவிர, இப்போது நான் அறிவிப்பனவற்றில் ஒன்றைகூட விட்டுவிட மாட்டோம் என்ற உறுதியை மட்டும் நான் உங்களுக்கு அழுத்தமாகச் சொல்லிக் கொண்டு இதை ஆரம்பத்தில் இருந்து தொடங்குகிறேன்.

நடப்பு ஆண்டில் முடிக்கப்படவுள்ள முக்கிய திட்டங்களைப் பொறுத்தவரை திருநெல்வேலி மாவட்டத்தில் 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாளையங்கோட்டை கூட்டுக் குடிநீர் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாசுதேவநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெருங்குளம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடம்பூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



விருதுநகர் மாவட்டத்தில் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விருதுநகர் ஒன்றியத்தில் ரோசர்பட்டி மற்றும் 11 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். மதுரை மாவட்டத்தில் 14 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பேரையூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழனி நகராட்சி குடிநீர்த் திட்டம். கோவை மாவட்டத்தில் 9 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம். நீலகிரி மாவட்டத்தில், ஒரு கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குன்னூர் ஒன்றியத்திலுள்ள மசினக்குடி மற்றும் இரண்டு குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளக்கோவில் மற்றும் காங்கேயம் ஒன்றியத்தைச் சேர்ந்த 127 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். 6 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காங்கேயம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கன்னிவாடி பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூலனூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். நாமக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குமாரபாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம். 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொத்தனூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பரமத்தி பேரூராட்சி குடிநீர்த் திட்டம். 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எருமைப்பட்டி பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். சேலம் மாவட்டத்தில், 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் உள்ள 49 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டத்தில், 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாரண்டஹள்ளி பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாப்பிரெட்டிபட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் 80 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சேண்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காவேரிப்பாக்கம் பேரூராட்சி

குடிநீர்த் திட்டம். 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலூர் நகராட்சி குடிநீர் உடனடி மேம்பாட்டுத் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில், 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போளூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 80 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சிட்லப்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செவிலிமேடு பேரூராட்சி குடிநீர்த் திட்டம். 66 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாலாஜாபாத் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். 3 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சோளிங்கநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நந்திவரம்-கூடுவாஞ்சேரி பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாங்காடு பேரூராட்சி குடிநீர்த் திட்டம். 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உத்திரமேரூர் ஒன்றியத்தில் வளையாங்குளம் மற்றும் 15 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். திருவள்ளூர் மாவட்டத்தில், 3 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புழல் பேரூராட்சி மற்றும் 10 ஊரகக் குடியிருபபுகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநின்றவூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில், ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தியாகதுர்க்கம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். 5 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். 5 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சின்னசேலம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். கடலூர் மாவட்டதில், 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலபட்டாம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். பெரம்பலூர் மாவட்டத்தில், 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேப்பூர் ஒன்றியத்திலுள்ள குன்னம் மற்றும் குன்னம் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். கரூர் மாவட்டத்தில், 4 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாந்தோனி பேரூராட்சி குடிநீர்த் திட்டம். திருச்சி மாவட்டத்தில் 14 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.



பிற்பகல் 4-55

84 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மணச்சநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். 22 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கல்லக்குடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணல்மேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிறுவறை மற்றும் 10 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆவுடையார்கோயில் ஒன்றியத்தில் இசைமங்களம் மற்றும் 11 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணந்தாள் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேப்பத்தூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய 48 குடிநீர்த் திட்டங்கள் சுமார் 129 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் முடிக்கப்படவுள்ளன. இதனால் சுமார் 21 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

இந்த அரசு நினைத்த நேரத்தில் அறிவித்துவிட்டு, வீட்டுக்குப் போவது அல்ல. சொல்கிறதை செய்கிற அரசு என்பதுதான் முக்கியம். மனுக்களை கொடுத்தவுடனே திட்டங்களை அறிவித்துவிட்டு, கைத்தட்டல்களை வாங்கிவிட்டு, நாளைக்கு என்ன, எதற்காக என்பதற்காக அல்ல, அவையெல்லாம் முறையாகச் செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் இதைக் கருதுவார்கள் என்பதால்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இன்னொருமுறை நான் முதலமைச்சரை கலந்துபேசுவதாக இருக்கிறேன். அதில் ஒன்றும் சந்தேகம் வேண்டாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஐ. கணேசன் அவர்களும், ஜி.கே. மணி அவர்களும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்ட தொடக்கப் பணிக்கு குறைந்த அளவாவது நிதியை ஒதுக்குங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். முதலில் இரண்டு முறையாக அந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. முதலில் அது தடை செய்யப்பட்டு, மத்திய சர்க்காரில் இருந்தது. அதற்குபிறகு அவர்கள் தடையை நீக்கினார்கள். அதன்பிறகு கடன் கொடுக்கிறேன் என்று சொன்னவர்கள்

மறுத்திருக்கிறார்கள். இவ்வளவு பிரச்சினைகள் அதற்குள்ளே அடங்கியிருக்கின்றன. ஆகவே, அவற்றையெல்லாம் பரிசீலித்து, ஓரளவுக்கு முதல்வர் அவர்கள் இதில் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களிடத்தில் நானும் தெரிவித்து, முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரையில் நடப்பாண்டில் முடிக்கப்பட்டுள்ள முக்கியமான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப்பற்றி தெரிவித்தேன். இனி நடப்பு ஆண்டில் அதாவது இந்த வருடம் எந்தெந்த திட்டங்களை எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்பதைத் தெரிவிக்கிறேன். எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்பவை கைவிடப்பட மாட்டாது. ஆனால் சொல்லாமல் இருக்கிற சில திட்டங்களும் இதில் சேர்க்கப்படும். இதில் எந்தச் சந்தேகமும் உங்களுக்கு இருக்க வேண்டாம். இதிலே நிதியாதாரம், நீர் ஆதாரம், கடன் பெறுகிற நிலை, இதோடு ஒட்டிய பணிகளின் சுமை, இவற்றையெல்லாம் கலந்துபார்த்து, இதைச் செய்யவிருக்கிறேன் என்பதை நான் முதலிலேயே உங்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, நான் உட்கார்ந்த பிறகு, நீங்களெல்லாம் தலைக்கு தலை எழுந்து நிற்கக் கூடாது என்பதற்காக ஆரம்பத்திலேயே குறிப்பிடுகிறேன்.

ஊரகக் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில், சென்றமுறை 6300 குடியிருப்புகளை எடுத்தோம். இந்த ஆண்டு 6500 குடியிருப்புகளை எடுத்திருக்கிறோம். அரைகுறையாக இருந்தவை அத்தனையும், 40 லிட்டர், 55 லிட்டருக்கு தகுதியாக வருங்காலத்திலே, 20 வருடங்களுக்கு மேற்பட்டு குடிநீர் அளவு சரியாக இருக்கிற அளவுக்கெல்லாம் கணக்கு பார்த்து திட்டங்களை எடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக 500 கோடி ரூபாயை முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதனால் நான் நான் இதையெல்லாம் இங்கே திடமாக உங்களிடத்திலே சொல்ல முடிந்தது. அதற்காக நானும், நீங்களும் சேர்ந்து அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஏன் இதற்கு மட்டும் நான் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நிதி நெருக்கடியிலும் நகரக் குடியிருப்பு, ஊரகக் குடிநீர்த் திட்டம், நகரக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றிற்கு மூன்று வகையில் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார். அதற்காகத்தான் நான் குறிப்பிடுகிறேன்.



அடுத்து நகரக மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பூதப்பாண்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், தாளக்குடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், ஆரல்வாய்மொழி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருவட்டாறு பேரூராட்சி குடிநீர்த் திட்டம், மணவாளக்குறிச்சி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், புதுக்கடை பேரூராட்சி குடிநீர்த் திட்டம். திருநெல்வேலி மாவட்டத்தில், செங்கோட்டை நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், பணகுடி பேரூராட்சி மற்றும் 145 வழியோர கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டம். நம்முடைய உறுப்பினர் அப்பாவு அவர்களுக்கும் எனக்கும் இதுபற்றி ஒரு பிரச்சினையே ஏற்பட்டது. விவரம் புரியாமல் அவர் பேசினார். நான் இப்பொழுது விவரத்தோடு பேசிக் கொண்டிருக்கிறேன் (சிரிப்பு) குற்றாலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வீரவநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நாசரேத் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கருங்குளம் ஒன்றியத்தில் 42 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். இராமநாதபுரம் மாவட்டத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே இது அண்டை மாநிலமா, நம்முடைய இந்தியாவில் தமிழ் மாநிலத்தில் இப்போது தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக வந்திருக்கிறதே, குஜராத் மாநிலத்தைவிட மோசமாக போய்விடும் தமிழ்நாடு என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே குறிப்பிட்டார்கள். நான் உங்களுக்கு நிச்சயமாக இங்கே ஒன்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குஜராத்தைப் போல ஆக்க மாட்டார், இஸ்ரேல் நாட்டைப்போல ஆக்க இருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு என்னிடத்தில் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில், திருவைகுண்டம் பேரூராட்சித் திட்டம். மன்னிக்கவும் இராமநாதபுரம் மாவட்டத்தில்- இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையாகவே வறட்சிக்குள்ளாகும் மாவட்டமாகும். இப்போது பல மாவட்டங்கள், திருவண்ணாமலை....

பிற்பகல் 5-00

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** உங்களை நான் மறக்கவே மாட்டேன். உட்காருங்கள், எனக்கு வேண்டியவர். (சிரிப்பு)

[திரு. கோ.சி. மணி] [2000 மே 10

அதற்காகத்தான் முதலிலேயே சொல்லியிருக்கிறேனே. இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையாகவே வறட்சிக்கு உள்ளாகும் மாவட்டமாகும். இந்த அரசு பதவிக்கு வந்தவுடன் முதலில் இராமநாதபுரத்திற்குத்தான் முதலமைச்சர் என்னை அனுப்பி வைத்தார். இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலத்தடி நீர் கிடைக்கும் குடியிருப்புகளில் எல்லாம் குடிநீர் வசதி செய்து கொடுத்திருப்பது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அவ்வளவுதான் முடிந்திருக்கிறது. இயற்கையாக கிடைத்த நீர் வளத்தை வைத்து எல்லா இடங்களுக்கும் சரி செய்திருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் இப்போது நிலத்தடி நீர் இல்லாத குடியிருப்புகள், நிலத்தடி நீர் இருந்தும் குடிப்பதற்கு உபயோகமற்ற உவர்ப்புத் தன்மை கொண்ட நீராக இருப்பது என்கின்ற நிலைமைகளை எல்லாம் மனதிலேகொண்டு, ஏற்கெனவே, சில இடங்களில் உப்பு நீரை நன்னீராக்குவது, உவர்ப்பு நீரை நன்னீராக்குவது போன்ற திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறோம். அதற்கு மத்திய அரசு சில விதிமுறைகளை வகுத்து இருந்தது. அதற்கு உட்பட்டு, பல காரியங்களைச் செய்தோம். முதலமைச்சர் இப்படியெல்லாம் ரொம்பவும் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் நீண்ட தூரத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்குக் காலமாகுமே, இப்படி ஏதாவது குறைந்த அளவாவது தண்ணீர் கொடுப்பதற்கு ஓர் இடைக்கால நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்யலாமே, இதைப்பற்றி யோசித்துப்பார் என்று சொன்னதன் அடிப்படையில் ஒரு நிலைமையை உருவாக்கினோம். அதன்படி 47 இடங்களைத் தேர்வு செய்து, 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உவர்ப்பு நீரை நன்னீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இதில் முதல் கட்டமாக உவர்ப்பு நீரை நன்னீராக்கும் 8 கலன்கள் அமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மீதமுள்ள 39 கலன்களுக்கான பணிகளும் நடப்பு நிதியாண்டிலேயே மத்திய அரசு நிதி உதவிக்கேற்ப தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். உப்பு நீரை நன்னீராக்கும் திட்டத்தில் பணியாற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுக்கும் இது சம்பந்தமாக போதிய பயிற்சி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இனி எதிர்காலங்களில் உள்ளாட்சித்



2000 மே 10] [திரு. கோ.சி. மணி]

துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும் இந்தப் பயிற்சியை அளிக்க இருக்கிறோம். காரணம், திட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்களுக்குப் பராமரிப்புக்கான பயிற்சி அளிக்க வேண்டுமென்று கருதுகிறோம். அதற்கான விவரங்களை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இராமநாதபுரம் ஒன்றியத்திலே தேவிப்பட்டினம் மற்றும் 3 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்புநீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும். இராமநாதபுரம் ஒன்றியத்தில் மருந்துவார்கொண்டான் மற்றும் மூன்று குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்பு நீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும். இராமநாதபுரம் ஒன்றியத்தில் கழனிக்குடி குடியிருப்பு பயன்பெறும் வகையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்பு நீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும். இராமநாதபுரம் ஒன்றியத்தில எம்.எஸ்.கே நகர் மற்றும் இரண்டு குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்புநீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும்.

கடலாடி ஒன்றியத்தில் மேலக்கிடாரம் மற்றும் இரண்டு குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 ஆயிரம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்பு நீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும். கடலாடி ஒன்றியத்தில் மாரியூர் மற்றும் 5 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்பு நீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும்.

திருவாடானை ஒன்றியத்தில் கடலங்குடி-உசிலங்காடு குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்புநீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும். திருவாடானை ஒன்றியத்தில் தளிர் மருங்கூர் குடியிருப்பு பயன்பெறும் வகையில் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொடுதிறன் கொண்ட உப்புநீரை நன்னீராக்கும் கலன் நிறுவப்படும்.

*பிற்பகல் 5-05*

சிவகங்கை மாவட்டத்தில் இளையாங்குடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருவில்லிப்புத்தூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திருத்தங்கல் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நரிக்குடி ஒன்றியத்தில் கண்டனூர் மற்றும் 29 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மதுரை மாவட்டத்தில், உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், மேலூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பரவை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருப்பரங்குன்றம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். தேனி மாவட்டத்தில், தேனி-அல்லிநகரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், பூதிப்பூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், அகரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பட்டிவீரன் பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திலுள்ள பழங்கானூர் மற்றும் 18 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். கோவை மாவட்டத்தில், குறிச்சி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், குனியமுத்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், சிறுமுகை பேரூராட்சி குடிநீர்த் திட்டம். ஈரோடு மாவட்டத்தில், தாராபுரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், காசிபாளையம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், புஞ்சைப்புளியம்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

நாமக்கல் மாவட்டத்தில், பள்ளிப்பாளையம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். சேலம் மாவட்டத்தில் சேலம் மாநகராட்சி, குகை பகுதியில், பகுதி 9-ல் விடுபட்ட தெருக்களுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். சேலம் மாநகராட்சி ஜாகிர் அம்மாபாளையம் பகுதி 6-ல், புதிய குடிநீர்த் திட்டம், பேளூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பூலம்பாடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பனமரத்துப்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், செந்தாரம்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பூலாம்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கெங்கவள்ளி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வீரகனூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கீரிப்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், மேச்சூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, வீரபாண்டி, சேலம், தாரமங்கலம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள இருப்பாளி மற்றும் புளோரைடால் பாதிக்கப்பட்ட 236 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், காடையாம்பட்டி



மற்றும் ஓமலூர், மேச்சேரி, நங்கவள்ளி, ஒன்றியங்களில் உள்ள புளோரைடால் பாதிக்கப்பட்ட 136 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், ஓசூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், பாலக்கோடு பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நாகஜனஹள்ளி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், அரூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கௌமங்கலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், காரிமங்கலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். வேலூர் மாவட்டத்தில், வாணியம்பாடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், வேலூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், ஆம்பூர் நகராட்சி குடிநீர்த் திட்டம், பெண்ணாத்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திமிரி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கலவை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், சத்துவாச்சேரி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், ஆலங்காயம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், சோளிங்கபுரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், கீழபெண்ணாத்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், செங்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கண்ணமங்கலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வேட்டவலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வந்தவாசி ஒன்றியத்தில் கீழக்கொடுங்காலூர், தெள்ளார் ஒன்றியத்தில் நல்லூர் மற்றும் 206 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், மதுராந்தகம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், மாடம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், உத்திரமேரூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருப்பெரும்புதூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்தில் பெருநகர் மற்றும் 9 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், பூவிருந்தவல்லி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பொதட்டூர்பேட்டை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், மீஞ்சூர் ஒன்றியத்தில் அனுப்பம்பட்டு மற்றும் 50 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், விழுப்புரம் மாவட்டத்தில், சங்கராபுரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வடக்கனேந்தல் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருவெண்ணெய்

நல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், மரக்காணம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கடலூர் மாவட்டத்தில் திருமுட்டினம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கிள்ளை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பெண்ணாடம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திட்டக்குடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்,

பெரம்பலூர் மாவட்டத்தில், அரும்பாவூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், அரியலூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், ஜெயங்கொண்டம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வரகூர் மற்றும் 4 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். கரூர் மாவட்டத்தில், குளித்தலை நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், பள்ளப்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், அரவக்குறிச்சி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், புஞ்சை புகளூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம். திருச்சி மாவட்டத்தில் கண்ணனூர் பேரூராட்சி, சமயபுரம் குடிநீர்த் திட்டம் லால்குடி பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், தொட்டியம் ஒன்றியத்திலுள்ள திருராமசமுத்திரம் மற்றும் 28 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், முசிறி ஒன்றியத்திலுள்ள தண்டலை மற்றும் 26 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொட்டியம் ஒன்றியத்தில் உள்ள திருநாராயணபுரம் மற்றும் 6 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*பிற்பகல் 5-10*

தஞ்சாவூர் மாவட்டத்தில், வல்லம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருப்பனந்தாள் ஒன்றியத்தில், வேட்டமங்கலம், பந்தநல்லூர் மற்றும் 2 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருவாரூர் மாவட்டத்தில், நீடாமங்கலம் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில், சீர்காழி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், குத்தாலம் பேரூராட்சி மற்றும் குத்தாலம் ஒன்றியத்திலுள்ள 10 வழியோர கிராம ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். புதுக்கோட்டை மாவட்டத்தில், மணல்மேல்குடி ஒன்றியத்திலுள்ள சாத்தமங்கலம் மற்றும் 7 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மேற்கூறிய 119 புதிய திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இக்குடிநீர்த் திட்டங்கள் மூலம் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



கடந்த ஆண்டு அறிவித்த திட்டங்களில் இரண்டு திட்டங்கள் சென்ற ஆண்டு எடுத்துக்கொள்ளப்படுவதாக அறிவித்து விடுபட்டுப் போனது. அது, விழுப்புரம் மாவட்டத்தில் ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரி, வையம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம். அவை மிகப் பெரிய திட்டங்களாக இருந்த காரணத்தால், விழுப்புரம் மாவட்டத்தில் ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஒரு பகுதியிலே ஆரம்பித்து வருகிறபோது சம்பந்தப்பட்ட . . . (குறுக்கீடு) (திரு. கே. மணிவர்மா எழுந்து நின்றுகொண்டிருந்தார்) நான்தான் முதலிலேயே சொன்னேன் அல்லவா பரிசீலிக்கிறோம் என்று; அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. நிதித் துறை அனுமதி வழங்காமல் அறிவிக்கிற பழக்கம் இல்லை. அதனாலே அதுபற்றி கலந்துபேசி, இன்னும் சில திட்டங்களை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்; அப்போது பரிசீலிக்கிறோம். (குறுக்கீடுகள்)

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே நிலைமை ரொம்ப மோசமாகப் போய்விட்டதால், அந்தத் திட்டத்தை அறிவித்துவிட்டால் நிச்சயமாக என் வேலை முடிந்துவிடும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** திரு. மணிவர்மாவினுடைய கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும்; அதிலே சந்தேகமே வேண்டாம். நான் ஏற்கெனவே அது சம்பந்தமாக பரிசீலித்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதுபற்றி அவர் முதலில் பேசிவிட்டார்; அதுபற்றி 3 தடவை எழுதிக் கொடுத்து இருக்கிறார்; (குறுக்கீடு) உங்கள் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மூலமும் ஒரு தடவை கொடுத்து இருக்கிறார்; ஞாபகம் இருக்கிறது.

மருங்காபுரி, வையம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் என்னால் அறிவிக்கப்பட்டிருந்தும், சில தவிர்க்க முடியாத காரணங்களால் செயலுக்கு நடப்பாண்டில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதேபோல ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பெரிய திட்டமாக இருப்பதால், 60 கிலோமீட்டர் தூரத்திற்கு குழாய்கள் மூலம் குடிநீர் எடுத்துவர வேண்டியிருக்கிறது; அதற்கு level எடுப்பதில் கொஞ்சம் காலதாமதம். இரண்டாவது போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்முடி மற்றும் சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இன்னும் சில தொடர்புடைய கிராமங்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று

[திரு. கோ.சி. மணி] [2000 மே 10

2, 3 முறை ஏற்கெனவே தெரிவித்த காரணத்தால்; நானும் 2 முறை அங்கே சென்று பார்த்து அவை வழியோரக் கிராமங்களாக இருந்ததால் அவற்றையும் சேர்த்துக்கொண்டோம். அவற்றை சேர்த்துக்கொண்ட அடிப்படையில் இப்போது ஓரளவுக்கு, முக்கால்வாசி பணி முடிந்து இருக்கிறது. வடிவமைப்புத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, முடிவடைந்துவிட்டது; வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது. அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அநேகமாக இன்னும் 2 மாத காலத்திற்குள் அந்தத் திட்டத்தைத் தொடங்கிவிடுவோம் என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல திருச்சி மாவட்டம் மருங்காபுரி-வையம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 633 குடியிருப்புகளுக்கான மிகப் பெரிய திட்டம். இந்தத் திட்டத்தின் அளவைப் பொறுத்தும், நிதி ஆதாரத்தைக் கருத்தில்கொண்டும் இப்பகுதிகளை இரண்டாகப் பிரித்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. முதல் பகுதிக்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. இரண்டாம் கட்டப் பணிகள், நிலமட்ட அளவுகள் சுமார் 1300 கிலோமீட்டர் நீளத்திற்கு எடுக்க வேண்டி இருந்ததாலும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. செங்குட்டுவன் அவர்கள் இன்னும் சில வழியோரக் கிராமங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அடிக்கடி வலியுறுத்திய காரணத்தாலும், அவை சேர்க்கப்பட்டு, இப்போது மறு வடிவமைப்பு செய்துவருவதாலும், அதில் லெவல் எடுக்க வேண்டிய பணி நாளாகும் என்ற காரணத்திற்காக, அவசியத்தைக் கருதி அதற்கு பிரைவேட்டில் டெண்டர் விடப்பட்டு, 31-3-2000-ல் வாரியக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இரண்டாம் கட்டத்திற்கான மதிப்பீடு செப்டம்பர் 2000-க்குள் முடிவுறும்; அரசு ஒப்புதல் பெற்று திட்டம் இந்த ஆண்டு கண்டிப்பாக செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இங்கே இந்த ஆண்டு எடுத்துக்கொண்டு முடிக்கப்பட வேண்டிய திட்டங்களைப்பற்றிச் சொன்னேன்; இந்த ஆண்டு எடுத்துக்கொண்டு செயல் நடத்தக்கூடிய திட்டங்களைச் சொன்னேன். இப்போது வெறும் ஆய்வுப் பணிகள், அவற்றை எடுத்து படிப்படியாக பணிக்குக் கொண்டு வருவதற்கான திட்டங்களை ஆய்வு செய்வதைப்பற்றிக் குறிப்பிடுகிறேன்.



2000 மே 10] [திரு. கோ.சி. மணி]

பிற்பகல் 5-15

கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு பேரூராட்சி குடிநீர்த் திட்டம், வெள்ளிமலை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், கடையால் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், அருமனை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களிலுள்ள 169 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாளையங்கோட்டை ஒன்றியத்திலுள்ள 26 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆழ்வார்திருநகரி மற்றும் உடன்குடி ஒன்றியங்களிலுள்ள 125 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிக்கை வருவதற்கு 6 மாத காலமாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராசசிங்கமங்கலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், இராசசிங்கமங்கலம் ஒன்றியத்திலுள்ள பாவனக்கோட்டை மற்றும் 18 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் மல்லாங்கிணறு பேரூராட்சி குடிநீர்த் திட்டம், காரியாப்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், அலங்காநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், தேனி மாவட்டத்தில் சின்னமனூர் நகராட்சி குடிநீர்த் திட்டம், திண்டுக்கல் மாவட்டத்தில் பாளையம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம், அய்யம்பாளையம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பட்டிவீரன்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் நிலாக்கோட்டை மற்றும் 42 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஈரோடு மாவட்டத்தில் இலக்கம்பட்டி பேரூராட்சி மற்றும் 2 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், சிவகிரி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், தும்பம்பட்டி பேரூராட்சி குடிநீர்த் திட்டம், நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர் பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திருச்செங்கோடு பள்ளிப்பாளையம் ஒன்றியங்களில் அடங்கிய 131 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் பேரூராட்சி மற்றும் வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரணமல்லூர் பேரூராட்சி மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தச்சூர், வடுக்கன் சாத்தூர் மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்தில் உள்ள மலையங்குளம் மற்றும் 8 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஒன்றியத்தில் அத்திப்பட்டு மற்றும் கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் நைனிகுப்பம் மற்றும் 37 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஊத்துக்கோட்டை பேரூராட்சி குடிநீர்த் திட்டம், விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் ஒன்றியத்தில் முடியனூர் மற்றும் 8 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், திருக்கோவிலூர் ஒன்றியத்தில் தகடி மற்றும் 16 வழியோர குடியிருப்புக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், முகையூர் ஒன்றியத்தில் ஒத்தம்பட்டு மற்றும் 6 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கடலூர் மாவட்டத்தில் கங்கைகொண்டான் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், த. பழூர் ஒன்றியங்களிலுள்ள 262 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கரூர் மாவட்டத்தில் உப்பிடமங்கலம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியத்திலுள்ள ஆமூர் மற்றும் 31 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், மணச்சநல்லூர் ஒன்றியம் திருப்பஞ்சலி, திருவல்லிரை மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய 40 குடிநீர்த் திட்டங்கள் சுமார் 12½ இலட்சம் மக்கள் பயன்பெறும் வண்ணம் நடப்பு ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விரைவாக ஆய்வுகள் முடிவடைகிற திட்டங்களை இந்த ஆண்டே பணிக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற செய்தியையும் நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதர அறிவிப்புகள் சிலவற்றைச் சொல்கிறேன். குடிநீர்த் திட்ட நீராதாரம் பொய்த்துபோனால் புனரமைப்புப்பணி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-97-ல் என்னிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தபோது இதுபற்றி கேட்டேன். அப்போது 50 கோடி ரூபாய் இந்தப் புனரமைப்புத் திட்டத்திற்காக கொடுத்தார்கள். அந்தத் தொகையை இரண்டாண்டுகளில் மற்றவற்றையும் சேர்த்து செலவழித்தோம். குடிநீர்த் திட்ட நீராதாரம் பொய்த்துவிட்டாலும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதடைந்தாலும், குடிநீர் விநியோகக் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டாலும், மோட்டார்கள் பழுதடைந்தாலும் இப்படிப்பட்ட காரியங்களுக்கெல்லாம் உடனடியாகச் செலவழிப்பதற்கு தனியாக ஒரு நிதி வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க முதலமைச்சர் அவர்கள் நிதி அளித்திருக்கிறார்கள். குடிநீர்த் திட்டங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடப்பாண்டில் சுமார் 20 கோடி ரூபாய் செலவில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நிறைவு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குமுன் நீராதாரத்திலிருந்து கிடைக்கப்பெறும் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததா, நச்சுத்தன்மை கொண்டதா என்றெல்லாம் மறுஆய்வு செய்கிற நிலையைப் பொறுத்தவரையில் ஒரு பேரூராட்சியிலே நேற்றைக்கு முந்தையதினம் ஏற்பட்ட விபத்தைப் பற்றி உறுப்பினர்கள் பேசும்போது, இதுகுறித்து ஆய்வு செய்யாமல் இருப்பது தவறு என்று குறிப்பிட்டார்கள். அது உண்மை என்று கலைஞர் அவர்களின் அரசு உணர்ந்து ஏற்கெனவே ஒரு முடிவெடுத்து, அவர்கள் ஓர் ஆலோசனை வழங்கினார்கள். இந்தத் திட்டங்கள் உருவான காலத்திலிருந்து, திட்டத்தினைப் போட்டு முடித்துவிட்டு, ஒப்படைத்துவிட்டுப் போகிற நிலைமைதான் இருந்ததே தவிர, அவைகுறித்து மறுபரிசீலனை செய்கிற நிலை இல்லாமல் இருந்தது. சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய் செலவில் அதை மறுபரிசீலனை செய்திருக்கிறோம். அந்த மறுபரிசீலனை சாதாரணமானதல்ல. இவை எந்த நிலைமையில், எவ்வளவு நாட்கள் இருக்கும் என்பதையும், என்ன பழுது என்பதையும், எப்படி கெடும் என்பதையும், வருகிற தண்ணீர் எத்தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்பதையும் சேர்த்து ஓர் ஆய்வை செய்ய அதிகாரிகளுக்கு கூடுதலாக நிதி உதவி அளித்து, அந்தப் பணியை செய்து முடித்தோம்.

பிற்பகல் 5-20

இந்த ஆண்டு அதற்காக குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்துவதற்குமுன் நீராதாரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நீர் குடிப்பதற்கு உகந்ததா, நச்சுத் தன்மை கொண்டதா என்று பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்டு, குடிப்பதற்கு ஏற்ற நீர் என்று தெரிந்தவுடன்தான் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு மக்களுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆனால் மேற்கண்ட நீராதாரங்களிலிருந்து எடுக்கப்பட்டுவரும் குடிநீர் முன்பெல்லாம்

முறையாக அடிக்கடி பரிசோதனை செய்யப்படுவதில்லை. இதனைக் கருத்தில்கொண்டு, குடிப்பதற்கு உகந்த குடிநீர் மட்டும் மக்களுக்கு வழங்குவதை உறுதிசெய்ய தமிழகத்தில் நடப்பு ஆண்டில் சுமார் 43,000 விசை பம்புகளுடன்கூடிய மேல்நிலை தொட்டிகளிலுள்ள குடிநீர் ஆதாரப் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இவ்வளவுதான் எங்களால் இந்த ஆண்டு எடுத்து பரிசீலிக்க முடியும். 43,000 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்; அதற்குட்பட்ட குழாய்கள், மோட்டார்கள் இவைகளைப்பற்றி இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும். இதற்காக நடப்பாண்டில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவிடப்படும். படிப்படியாக, வருங்காலங்களில் இந்த சோதனை கைப்பம்பு குடிநீர்த் திட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்குவதுபற்றி சிலபேர் பேசும்போது, இவ்வளவு ஊர்களில் கட்டுகிறீர்கள், சில ஊர்களில் 4, 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுகிறீர்கள். ஆனால் ஒருசில ஊர்களிலே ஒரு தொட்டிகூட இல்லையே என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணம், குறைபாடு, ரொம்ப பேருக்கு இருப்பது எனக்கும் தெரியும். அதற்குக் காரணம், சின்ன ஊர்களிலே அடிப்பம்பை நம்பி, நாங்களும் அவர்களும் இருந்து ஆகிவிட்டநிலையில் ஓரளவுக்கு இப்போது ஒரு survey பண்ணியிருக்கிறோம். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டி, குடிநீர் வழங்க இந்த ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். கலைஞர் அவர்களுடைய இந்த ஆட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி இல்லாத குக்கிராமங்களே இல்லை என்கிற நிலைமையை இந்த ஆண்டு நிறைவுசெய்து முடிப்போம் என்பதை உறுதியாக நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் அதற்கான ஆய்வையும் இப்போது எடுத்து, அதையும் நாம் செய்ய இருக்கின்ற பணியில் சேர்ப்பதாக இருக்கிறோம். அதிலே விடுபட்டு போகிற நிலைமைகூட வரலாம். நான் உறுப்பினர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, நான் கேட்கிற நேரத்திலே அதுபற்றிய பட்டியலைத் தரமாட்டேன் என்கிறீர்கள். அதிகாரிகளிடத்திலே நான் பேசுகிறபோது எனக்கு சங்கடமாக இருக்கிறது. இவற்றை எல்லாம் நீங்கள் கொடுத்துவிட்டால் எது முடியும், எது முடியாது என்பதை நான் ஆய்ந்து அறிந்து உங்களுக்குத் திரும்ப அதுபற்றி சொல்லிவிடுவேன். எல்லா முடிவும் எடுத்து முடிந்த பிறகு, நேற்று இரவு வரையில் என்னிடத்தில் பட்டியல் வருகிறது. நான் என்ன செய்ய முடியும்? ஆகையினால்



நீங்கள் வருங்காலத்தில் அதைக் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் அரசு உத்தரவின் அடிப்படையில் அமைச்சுப் பணியில் 20 வருடம் பணிக்காலம் முடித்த 85 இளநிலை உதவியாளர்களுக்கு உதவியாளர்களாகவும், 138 உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு இந்த ஆண்டு அளிக்கப்படும். இங்கே பேசியவர்கள் எல்லாம் ரொம்ப பேர், ரொம்ப பேர் என்று கேட்டீர்கள். யார், யார் உங்களிடம் வந்து சொல்கிறார்களோ அவர்கள் ரொம்ப பேர், ரொம்ப பேர் என்று சொல்வதை நீங்களும் அதை நம்பி ரொம்ப பேர், ரொம்ப பேர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். போன ஆண்டும் இதுபோல செய்தோம். அதற்குப் பிறகு இந்த ஆண்டு பாக்கி இருந்தவர்கள் மொத்தம் 138 உதவியாளர்கள்தான். அவர்களை கண்காணிப்பாளர்களாகவும், இளநிலை உதவியாளர்களை உதவியாளர்களாகவும், பதவி நிலை உயர்த்தி தற்போது அளிக்கப்பட இருக்கிறது. அதற்கான உத்தரவு விரைவில் வெளியிடப்படும்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த பஞ்சாயத்துகளில் வழங்குகிற மதிப்பூதியம் குறித்த நிலைமையை நான் சொன்னேன். நீங்கள் கேட்கிறபோது நிலைமை சரியில்லையே, நான் என்ன செய்வது என்று சொன்னேன். இது ஒரு வாரியம். பலதரப்பட்ட பணிகளை ஏற்று செயல்படுத்த வாரியத்திற்கு ஓரளவுக்கு நிதி திரட்டித் தருகிறார்கள். வேலையும் கொஞ்சம் அதிகம். கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பணியாற்றுகிறவர்கள் எப்போதும் வேலையைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும். விட்டுவிட முடியாது. அந்த ஊரிலும் பார்க்க வேண்டும், இந்த ஊரிலும் பார்க்க வேண்டும். அதற்காக கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பணியாற்றுகிறர்கள் மதிப்பூதியமாக ரூ.85 முதல் ரூ.314 வரை பெறுகிறார்கள். 85 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய், 300 ரூபாய் என்று பலதரப்பட்ட விகிதங்களில் இடங்களுக்குத் தக்கவாறு பெறுகிறார்கள். இப்படி பணிபுரியும் 368 பகுதி நேரப் பணியாளர்களை எல்லாம் ஒருமுகப்படுத்தி தொகுப்பூதியம் பெறும் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களில், பராமரிப்பு உதவியாளர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வீதமும், பொருத்துநர்களுக்கு மாதம் 1500 ரூபாய் வீதமாகவும் தொகுப்பூதியம் வழங்கப்படும். ரூ.85-லிருந்து வாங்கியவர்களும் இனிமேல் 1000 ரூபாய் வாங்கப்போகிறார்கள். ஆமாம், 85 ரூபாய் வாங்கியவர்களும் இனி 1000 ரூபாய் வாங்கப்போகிறார்கள்.

*314* ரூபாய் வாங்கியவர்களும் இனி *1000* ரூபாய் வாங்கப் போகிறார்கள். இருநூற்றுக்கு சற்று அதிகம் என்று இடையிலே வாங்கியவர்கள் உட்பட அனைவரையும் ஒருமுகப்படுத்தி, ஒன்றாக சேர்த்து அவர்களுக்கும் *1000* ரூபாய் வழங்குவது என முடிவெடுத்து, அறிவிக்கிறேன். விரைவில் அதுபற்றிய உத்தரவை வெளியிட இருக்கிறோம். பராமரிப்புப் பணிகள் செய்கிறவர்களுக்கு ரூ.*1000*, ரூ.*1,500* கூட கொடுத்து விடலாம். அதிலே அதிகமான பேர் இல்லை. இது *1-6-2000* முதல் அமலுக்கு வரும். உத்தரவு விரைவில் போடப்பட்டு அடுத்த மாதம் *1* ஆம் தேதியிலிருந்து இது அமலுக்கு வரும்.

நடப்பு ஆண்டில் நகரமைப்பு குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை எப்போதும் இல்லாத அளவுக்கு, அதிகப்படியான நகரமைப்பு குடிநீர் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளதால், *3* புதிய நகரக் கோட்டங்கள் அமைக்கப்படும். தயவுசெய்து இந்த மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், திட்டச் செலவை அதிகரிக்கிற யோசனைகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள். திட்டம் போடுகிறவர்கள் அந்தத் திட்டத்தில் பணியாற்றுகிறவர்கள் எங்கெங்கே கோட்டங்கள் அமைப்பது என்று தெரியாமல் போடமாட்டார்கள். சிலபேர் promotion கருதியும், சிலபேர் அவர்களுடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்க விரும்பியும், சிலபேர் இருந்த ஊரிலேயே தொடர்ந்து இருப்பதற்காகவும், இத்துறையில் பணியாற்றும் எங்கள் அதிகாரிகள் சில பேர் உங்களிடத்திலே கோரிக்கை வைப்பார்கள். மக்களுக்குக் குடிக்க தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள், விரைவாக வேலையை நிறைவேற்றித் தாருங்கள் என்கிற அளவோடு இருக்க வேண்டுமே தவிர, அந்தக் கோட்டத்தை இங்கே வையுங்கள், இந்தக் கோட்டத்தை அங்கே வையுங்கள், அந்தக் கோட்டத்தை என்னுடைய ஊரிலே வையுங்கள் என்று தயவுசெய்து சொல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக்குறிப்பிடுகிறேன்.

*பிற்பகல் 5-25*

அதிகப்படியாக, நகரக் குடிநீர்த் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளதால் *3* புதிய நகர கோட்டங்கள் அமைக்கப்படும். இப்புதிய நகர கோட்டங்கள் அமைக்கப்படுவதால், *3* நிர்வாகப் பொறியாளர்கள், *9* நிர்வாக உதவிப் பொறியாளர்கள் மற்றும் *27* உதவிப் பொறியாளர்கள் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும். இதற்காகத்தான் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது முடிந்தவுடன், அவரை அங்கே போகச் சொல்லிவிட்டு, நாம் இங்கே



இருந்துவிடலாம் என்று சொல்லி உங்களிடம் சிபாரிசுக்கு வருவார்கள். அதையெல்லாம் நீங்கள் செய்ய முடிந்தால் செய்யுங்கள், அதற்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. செய்யக் கூடாத, செய்ய முடியாததாக அது இருந்தால், தயவுசெய்து நீங்கள் அதிலே கவனம் செலுத்தவேண்டாம் என்று உங்களிடத்திலே வேண்டி நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு செய்தியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குஜராத் மாநிலத்தில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசு பொறுப்பேற்று, திரிபாதி என்ற செயலாளர் அதற்காகப் பொறுப்பெடுத்து, மத்திய சர்க்காரில் குடிநீர்த் திட்டத்தில் பணியாற்றுகிற அவர், உப்புநீரை நன்னீராக்குகிற திட்டம் தமிழ்நாட்டில்தான் சிறப்பாக நடைபெறுகிறது என்பதை கூடி பேசி முடிவெடுத்ததன் அடிப்படையில் குஜராத் மாநில அரசினுடைய பொறியாளர்களும், மத்திய அரசாங்கத்திலே இருக்கிற சில பொறியாளர்களும் சேர்ந்து தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே குடிநீர்த் திட்டத்தில் சிறப்புபெற்று (மேசையைத் தட்டும் ஒலி) விளங்குகிறது, அதைப் போய் நீங்கள் பார்த்து, அதன்படி செய்வதற்கு திட்டம் தயாரியுங்கள் என்று திரிபாதி அவர்கள் இட்ட உத்தரவின்பேரில் இன்று இரவு அவர்கள் இங்கே வர இருக்கிறார்கள். அவர்கள் நரிப்பையூர் மற்றும் *10* இடங்களுக்குச் செல்ல இருக்கிறார்கள். இதைப் பார்த்து, இந்தத் திட்டத்தைப்போல் குஜராத்தில் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு விரும்பி இவர்களை அனுப்பியிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உப்புநீரை நன்னீராக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், இடையிலே அந்த நீர்கூட மஞ்சள் நீரான ஒரு சங்கடம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒருதடவை என்னிடத்தில், அந்தத் திட்டத்தை அவரது தொகுதிக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டார்கள். தண்ணீரே இப்படி இருக்கிறதே என்று அவரிடம் நான் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் முகத்திலே நான் எப்போது போய் விழித்தாலும், நரிப்பையூர் என்னாச்சு? ஒரு ஒரு மாதமும் கெடு சொல்கிறீர்களே, என்ன என்று கேட்டுக்கொண்டே இருந்தார்கள். மஞ்சள்நீர் பிரச்சினைக் குறித்து காரைக்குடியிலே நிபுணர்கள் பரிசீலித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிரச்சினை இரும்புப் பைப்பிலே

ஏற்பட்டிருக்கிறது. அதை P.V.C. பைப் ஆக மாற்றலாம் என்று யோசனை செய்தோம். அதற்கு 6 கோடி ரூபாய் செலவாகும் என்று சொன்னார்கள். அதைப்பற்றிக்கூட கவலையில்லை. காலதாமதம் ஆகாமல் எப்படியாவது செய்து முடிக்க வேண்டுமென்று காரைக்குடியிலே இருந்த நிபுணர்கள் இடத்தில் நாங்கள் அடிக்கடி பேசினோம். அவர்கள் ஒரு நல்ல முடிவை எங்களுக்குத் தந்தார்கள். ஓரளவுக்கு Chemical-ஐ அதிலே கலந்து ஓராண்டுக் காலத்திற்கு விட்டால், நிச்சயமாக அந்தத் தண்ணீர் சரியாகும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்கள். அது ரொம்ப விரைவாக வேலைசெய்து, இன்றைக்குக் கிடைத்தத் தகவல்படி கடைசி வரையில் அந்த நீர் வழக்கம்போல் நன்னீராக மாறிவிட்டது. மக்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் அதைக் குடிக்கிறார்கள் என்ற செய்தி இன்று காலையில் கிடைத்தது.

அதேபோல, இராமநாதபுரம் மாவட்டத்திலே வெவ்வேறு இடங்களில் 11 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இராமேஸ்வரத்தில் ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இராமநாதபுரத்திலே ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவிதமான குறைபாடும் இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மணிக்கூண்டுக்குப் பக்கத்திலே மிகக் குறைந்த செலவில் 22 இலட்சம் ரூபாய் செலவழித்து 3 வருடங்கள் ஆகின்றன. அதுவும் சிறப்பாக நடைபெறுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆக, இந்தத் திட்டத்தை நேரில் சென்று பார்த்து, தமிழ்நாட்டிலே உள்ளதைப்போல குஜராத்திலும் செய்யவேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உயர் அலுவலர்கள் இருவரும், குஜராத் மாநில அரசின் அலுவலர்களும் வந்திருக்கிறார்கள். உப்புநீரை நன்னீராக்கும் திட்டம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*பிற்பகல் 5-30*

தெற்காசிய நாடுகள் உலக வங்கியிலிருந்து கடன் பெற்று . . . (குறுக்கீடு) ஏதோ, கிடைத்ததைச் சொல்லக் கூடாதா? நீங்கள் பாராட்டாவிட்டாலும், பாராட்டியவர்கள் சொன்னதைப் பாராட்டினார்கள் என்று சொல்லக் கூடாதா? தெற்காசிய நாடுகள் உலக வங்கியிலிருந்து கடன் பெற்று குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அப்படி உலக வங்கியிலிருந்து கடன் பெற்று குடிநீர்த் திட்டங்களைச் சிறப்பாகவும், தரக்கட்டுப்பாட்டுடனும் செயல்படுத்துவதில் தெற்காசியாவிலேயே சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்தான் சிறந்த வாரியம் என்று உலக வங்கி தரஉறுதி அளித்து அறிவித்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



நல்லாட்சி நடத்திவரும் எங்கள் தலைவர், கலைஞர் அவர்களுடைய தலைமையில், அவர் வழி நின்றுதான், அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, நடைமுறைப் பழக்க வழக்கங்களைக் கொண்டு எங்களால் முடிந்த பணிகளை ஆற்றியிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன ஆலோசனைகளை வழங்கியிருந்தாலும், அவற்றில் தேவையானவற்றை ஒருபோதும் இந்த அரசு விடாது. விட்டாலும் முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அந்த நம்பிக்கையோடு, இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சில உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் குழாய் போடுகிறபோது தகராறு வருகிறது. அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள். அதிகாரிகள் Petition கொடுத்தால்கூட காவல் துறையினர் சரியாக மதிக்கவில்லை என்ற தகவல் எனக்கு வந்துகொண்டிருக்கிறது. திட்டத்தை எவ்வளவு வலியுறுத்தி இங்கே கேட்கின்றீர்களோ, அதைப்போல நிறைவேற்றுவதற்கும் உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை என்பதை நான் பணிவன்போடு இங்கே வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

எது எப்படி இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று திட்டங்களைச் செயல்படுத்துகிற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், உறுப்பினர்களாகிய நீங்களும் இங்கே ஆரம்பத்திலே என்னை வாழ்த்தினீர்கள். இந்த வாழ்த்துக்கள் அவ்வளவும், முதல்வருடைய அறிவுரையை ஏற்று நான் செய்ததற்குக் கிடைத்த வாழ்த்துக்களாகவும், இன்னும் தொடர்ந்து இத்தகைய பணிகளை உங்கள் ஒத்துழைப்போடு நிறைவேற்றுவேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன். அத்துடன் நான் மட்டும் இந்தப் பணிகளைச் செய்து முடித்திருக்கவில்லை என்பது உங்களுக்கும் தெரியும். நானும் அதை மறைக்கத் தயாராக இல்லை. நான் பொறுப்பேற்றுள்ள

துறைகளில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடு எனது தலைமையில் ஊரக வளர்ச்சித் துறை செயலாளராகப் பணியாற்றுகின்ற திரு. பாண்டா அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திருமதி மாலதி அவர்களுக்கும், நகராட்சி ஆணையர் திரு. கணேசன், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. சண்முகம், பேரூராட்சிகள் இயக்குநர் திரு. சந்திரசேகரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சிங், தமிழ்நாடு குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. காசி விஸ்வநாதன் ஆகியோர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், இப்போது பணிக்கு வராமல் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அடிமட்டத்து அனைத்துப் பணியாளர்களுக்கு சேர்த்து குறிப்பிடுகிறேன், அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*3 மானியக் கோரிக்கைகளின் மீதும் 31 மாண்புமிகு உறுப்பினர்கள் 269 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளீர்கள். (குறுக்கீடுகள்) முடித்து விடுகிறேன். ஏனென்றால் விளக்கம் கேட்க உறுப்பினர்கள் எழுந்திருக்க தயாராக இருக்கிறார்கள். என்னுடைய பதில் உரையை ஏற்று, தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அத்தனையையும் திரும்பப்பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு, வேண்டி கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).*

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தொலைக்காட்சியில் பேசிய கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அமராவதி ஆற்று நீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அது மாசுபடிந்த நீர் என்று அறிவித்திருக்கிறார்கள்; அது உண்ணீராகப் பயன்படுத்தத் தகுதியற்றது என்றும் கூறியிருக்கிறார். இந்த மாசுபடிந்த நீரை யாரும் உண்ணீராகப் பயன்படுத்தக் கூடாது என்று அரசு அறிவிக்க முன்வருமா? அதுமட்டுமல்லாமல் இப்படி மாசுபடிவதற்குக் காரணமாக இருக்கின்ற அந்த அமராவதி ஆற்றங்கரையில் இருக்கிற தொழிற்சாலைகள் எவை என்பதைக் கண்டறிந்து அவற்றின்மீது உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்



***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு) இரண்டுக்கும் சேர்த்து சொல்லிவிடுகிறேன். திருப்பூர் நகரத்தைப் பொறுத்தவரையில், அவர் சொல்லவில்லை. திருப்பூரில் முதலாவது, இரண்டாவது திட்டங்களின் அடிப்படையில் 32 T.M.C. தண்ணீர் வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அவ்வளவு தண்ணீர் வருவது இல்லை. திருப்பூர் நகரம் வளர்ந்து விரிவடைந்துவிட்ட ஒரு நகரம் என்கிற காரணத்தினால், அதனுடைய தேவைக்குத் தக்கபடி தண்ணீர் வரவில்லை. எனவே, மேட்டுப்பாளையம் பவானி ஆற்றிலேயிருந்து திருப்பூருக்குக் கொண்டுவருகிற இரண்டு திட்டங்களிலேயும் இருந்து வழியோர கிராமங்களுக்கு எடுக்கிற தண்ணீரை, அந்தந்த கிராமங்களுக்குத் தனி திட்டம் தீட்டி அதன்மூலம் வழங்கிவிட்டு, திருப்பூருக்காக வருகிற தண்ணீர் முழுவதையும் திருப்பூருக்கு divert செய்தால்தான், திருப்பூரில் தண்ணீர் பற்றாக்குறை குறையும் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. இப்போது 8 நாட்களுக்கு, 10 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வருகிறது. எனவே, இதில் விசேஷக் கவனம் செலுத்தி, வழியோரக் கிராமங்களுக்குத் தனித் திட்டம் தீட்டுவதுடன், திருப்பூருக்கான தண்ணீர் முழுவதையும் திருப்பூருக்கே வழங்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 5-35*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலில் கேட்டது பற்றி காலையிலே நானும் பேசினேன். அவர் ஆற்றிலே மாசு படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார். அதுபற்றி முழுப் பரிசோதனையும் இன்னும் முடிந்ததாகச் சொல்லவில்லை. அதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதையொட்டி எங்கள் துறையைச் சார்ந்த நிபுணர்கள் அங்கே சென்று பார்வையிட்ட பிறகு, என்ன மேல் நடவடிக்கை எடுப்பது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு முடிவு எடுப்போம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் பலமுறை என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார். நான் அதிகாரிகளைக் கேட்டபோது, என்ன கொள்ளளவு உள்ளதோ அந்த

அளவு திருப்பூர் நகரத்திற்கு வருகிறது என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். கூடுமானவரை, இன்னொருமுறை அவரும், நானும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்துக்கொண்டு, அதைப்பார்த்து, கணக்கெடுத்து அதிக நிதி தேவையில்லாத அளவுக்கு அதற்கு ஏற்பாடு செய்யலாம். ஏனென்றால், இன்னொரு திட்டமும் அங்கே தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு இடையிலே இந்தத் திட்டத்தை நாம் . . . (குறுக்கீடு) வராது என்று சொல்ல முடியாது; எவ்வளவோ வந்திருக்கிறது. அது; வருவதாகத்தான் நாம் கருத வேண்டும். அந்தத் திட்டத்திற்கு இடையூறு இல்லாமலும், அதிக நிதி செலவழிக்கப்படாமலும், ஒரு temporary arrangement ஆக ஏதாவது செய்ய வேண்டுமென்றால், நிச்சயமாக செய்வோம் என்று தெரிவித்து அமைகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களிடம் நான் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடும் வறட்சி காரணமாக, தண்ணீர் இல்லாத சூழ்நிலை இருக்கிறபோது, லாரிகள் மூலம் தண்ணீர் கொடுப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டேன். அப்போது அவர்கள் எனக்கு அந்த அதிகாரம் கிடையாது; Water Board-க்கு அந்த அதிகாரம் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்ற வாரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருக்கிற நிதியை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். இன்னும் அந்தப் பணம் போய் சேரவில்லை என்று கருதுகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில், நாள்தோறும் பல பிரச்சினைகள் உருவாகிக்கொண்டு இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்ட தொகையை அனுப்பிவிட்டார்களா? அங்கே லாரிகள் மூலமாவது தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில் வறட்சிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் முதலமைச்சருக்கு எழுதியிருக்கிறார்கள். லாரி மூலம் தண்ணீர் கொடுக்கிற பிரச்சினையில், எனக்கு அந்த அதிகாரம் இல்லை என்று சொன்னது உண்மை. அதிகாரம் என்பதைவிட,



அந்த முயற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு, சாத்தியக்கூறுகள் என்னிடத்தில் இல்லை. ஆனால், வறட்சி என்று மாவட்ட ஆட்சித் தலைவர்தான் எழுதியிருக்கிறார். பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே, புதிய நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொண்டிருக்கிறோம். அப்படிக் கொடுப்பது நிறைவாக அமையாது. ஒரு நகரமாக இருந்தால் லாரி மூலமாகத் தண்ணீர் கொடுத்துவிடலாம். கிராமப்புறங்களில் கொடுப்பது சரியாக வராது. கூடுமானவரையில், ஒரு வார காலத்திலே, சட்டமன்றம் முடிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவரும், நானும் மற்ற அதிகாரிகளும் சென்றுபார்த்து, உண்மை என்றால், அதை முதலமைச்சருக்குத் தெரிவித்து, ஒரு பரிகாரம் தேடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. *(குறுக்கீடுகள்).*

### (அ) கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**•திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"ஊரக வளர்ச்சி பற்றிய 27ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1319,54,04,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



*பிற்பகல் 5-40*

### (ஆ) கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை என் 48—குடிநீர் வழங்கல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை. திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

''குடிநீர் வழங்கல் பற்றிய 48ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.126,79,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 49—நகராட்சி நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.



திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை. திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.554,47,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-5-2000) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

160. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

161. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் குறித்த விவர அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

217. தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் அமைக்கப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 212-ன்கீழ் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை.

218. மானியக் கோரிக்கை எண் 27—ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

219. ஊரக வளர்ச்சி பற்றி செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

220. தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறையின் 'மக்களின் உரிமையும் அரசின் கடமையும்' என்ற சிறு வெளியீடு. (தமிழ்)

221. மானியக் கோரிக்கை எண் 48—குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

[2000 மே 10

222. மானியக் கோரிக்கை எண் 49—நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

223. நகராட்சி நிர்வாகம், மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் செயல்திறன் பற்றிய குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

224. சென்னை குடிநீர் வாரியத்தின் 'மக்கள் சாசனம்' என்ற சிறு வெளியீடு (தமிழ்).

225. 'மலரும் மக்களாட்சி தமிழ்நாட்டில் ஊராட்சி அமைப்புகள்' என்னும் நூல். (தமிழ்)

226. 'மலரும் மக்களாட்சி' ஊராட்சி அமைப்புகளின் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்' என்னும் நூல். (தமிழ்)

227. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை. (1999-2000)

228. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை. (1999-2000)

229. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை. (1999-2000)

230. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை. (1999-2000)

231. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. (1999-2000)

232. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கை. (1999-2000)

233. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை. (1999-2000)

234. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை. (1999-2000)



2000 மே 10]

235. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (1999-2000)

236. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (1999-2000)

237. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (1999-2000)

53-135—18

## இணைப்பு I

[37 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## மானியக் கோரிக்கை எண் 27
## ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு
## 2000-2001

### அ. முன்னுரை

*"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது"*

**அய்யன் திருவள்ளுவர்-திருக்குறள் 1041**

வறுமையைவிடக் கொடியது எதுவும் இல்லை. எனவே, சுயவேலைவாய்ப்புத் திட்டம், கூலி வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக உள் கட்டமைப்புத் திட்டங்கள்மூலம் கிராம மக்களின் வறுமையைப் போக்குவதையே முதன்மையான பணியாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் அரசு, அரசின் முகமைகள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது தமிழகத்தில் 77,962 குடியிருப்புகள் அடங்கிய 12,619 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. முழுமையான கிராம வளர்ச்சி என்ற குறிக்கோளை அடைவதற்கு குறிப்பாக, திட்டப் பணிகளுக்கு ஆண்டுதோறும் வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்படும் ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 203.24 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 789.70 கோடியாகவும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 1185.63 கோடியாகவும், 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 1225.73 கோடியாகவும் உயர்த்திய இந்த அரசு, நடப்பு நிதியாண்டான 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 1319.5404 கோடியாக நிதி ஒதுக்கீட்டை

உயர்த்தியுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையின் குறிக்கோளை அடைவதற்கு இந்த அரசு எடுத்துள்ள முன்முயற்சிகள் மற்றும் திட்டங்களைப்பற்றி கீழ்க்காணும் பத்திகளில் எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### 1. உள்ளாட்சி அமைப்பு முறைகள்

1992 ஆம் ஆண்டு 73-வது மற்றும் 74-வது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்திற்கேற்ப 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இதன்மூலம் 12,584 கிராம ஊராட்சிகள் 384 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்ட ஊராட்சிகள் கொண்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அக்டோபர் 1996-ல் தேர்தல் நடத்தப்பட்டது. மொத்த உறுப்பினர்கள் மற்றும் தலைவர் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு, அவர்களின் மக்கள் தொகை அடிப்படையிலும் இடஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டது. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அக்டோபர் 1996-ல் ஒரே நேரத்தில் சிறப்பான முறையில் தேர்தலை நடத்தி முடித்து, சுமார் 1,16,747 தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் நோக்கங்களைப் பூர்த்தி செய்கின்ற வகையில் உரிய பொறுப்புகளில் அமர்த்தப்பட்டனர். இந்த உள்ளாட்சி அமைப்புகள் யாவும் சுய ஆட்சி அமைப்புகளாகச் செயல்பட மாநில அரசு நிதி மற்றும் உரிய பிற அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளித்து, ஒவ்வொரு நிலையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெளிவாக பொறுப்புகளை வரையறை செய்ததோடு, ஜனநாயக அமைப்பில் மக்களின் பங்கினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் கிராம சபையையும் வலுப்படுத்தி வருகிறது. சேலம் மாவட்டத்தில் 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் 1-2-1999 முதல் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் 23 பேரூராட்சிகள் 1-4-1999-லிருந்து கிராம ஊராட்சிகளாக மாற்றம் செய்து செயல்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பெருமாத்தூர் என்ற புதிய கிராம ஊராட்சி, கடலூர் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு 22-1-1999-லிருந்து செயல்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 2 பேரூராட்சிகள் (ஆனைக்காரன்சத்திரம் மற்றும் சிறுவலூர்) 15-12-1999-லிருந்து கிராம





ஊராட்சிகளாக மாற்றம் செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே, மாநிலத்தில் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை 12,619 ஆகவும், ஊராட்சி ஒன்றியங்கள் 385 ஆகவும் உயர்ந்துள்ளது. டிசம்பர் 1999-லிருந்து தோற்றுவிக்கப்பட்ட புதிய மாவட்டமான அரியலூர் மாவட்டத்தைச் சேர்த்து 29 மாவட்ட ஊராட்சிகளாக உயரும்.

### 2. ஊரக வளர்ச்சி

கிராமப்புற உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி பராமரித்தல், சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கூலி வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்கள்மூலம் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல், இதன்மூலம் ஊரகப் பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் போன்றவையே ஊரக வளர்ச்சியில் மாநில அரசின் முதன்மையான வினைமுறைத் திறனாக உள்ளது. இந்நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வகையில், மாநில மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. 1973-74 ஆம் ஆண்டு 171 இலட்சம் மக்கள் (57.4 சதவிகிதம்) வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சிப் பணிகளைத் தொய்வின்றியும், சிறப்பாகவும் நடைமுறைப்படுத்தியதன் பயனாக, 1993-94 ஆம் ஆண்டில் இது 121 இலட்சமாக (32.48 சதவிகிதம்) குறைந்துள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் சிறப்பாகவும், தீவிரமாகவும் மாநில அரசு செயல்படுத்தியதன் பயனாக, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கையும், சதவிகிதமும் கணிசமாகக் குறைந்துள்ளது.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் தொகை ஒவ்வோர் ஆண்டும் குறைந்து வருவதன் விளைவாக, மத்திய அரசின் ஒதுக்கீடும் குறைந்து வருகிறது. 1998-99 வரை, 1987-88 ஆம் ஆண்டின் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்கள் தொகையின் அடிப்படையில் மத்திய அரசின் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு 7.062 என்ற சதவிகிதத்தில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டின் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டு முதல்

வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான மத்திய நிதி தமிழ்நாட்டிற்கு 4.987 சதவிகிதமே ஒதுக்கீடு கிடைக்கும் என்று மத்திய அரசு தெரிவித்தது. மேலும், மத்திய அரசு, சீராக்கப்பட்ட வல்லுநர் குழுவின் முறைப்படி ஒதுக்கீடு செய்யும் முறையைப் பின்பற்றியதால், 1998-99 முதல் 4.987 சதவிகித ஒதுக்கீடே தமிழ்நாட்டுக்கு வழங்க முடிவு செய்தது. இதன் விளைவாக மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு மிக அதிக அளவில் குறைக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டிற்கான இந்த மாற்றப்பட்ட வழிமுறை குறித்து, மத்திய அரசிடம் ஏற்கெனவே தமிழக அரசு ஆட்சேபம் தெரிவித்து, மறுபரிசீலனை செய்யவும் மத்திய அரசின் மாற்றியமைக்கப்பட்ட ஒதுக்கீடு முறையை தேசிய வளர்ச்சிக் குழுமத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்து, சிறப்பாக திட்டங்களைச் செயல்படுத்தும் மாநில அரசினை தண்டிக்கும் வகையில் நிதி ஒதுக்கீட்டினைக் குறைக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். மாநில அரசின் இந்தக் கோரிக்கையை, தேசிய வளர்ச்சிக் குழுமத்தில் உள்ள குழு பரிசீலித்து மாற்றியமைக்கப்பட்ட வழிமுறை மூலம் குறைக்கப்பட்ட நிதி ஈடுசெய்யப்படும் என்று தெரிவித்துள்ளது.

மாநில அரசின் திட்டங்களான அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும், மக்களின் பங்கேற்பு மற்றும் தேவைகளின் அடிப்படையில் செயல்படுத்தும் புதுமையான 'நமக்கு நாமே' திட்டமும் மேலும் சிறப்பான முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் திட்டத்தில், தற்போது அமைக்கப்பட்டுள்ளது போக மீதமுள்ள சமத்துவபுரங்கள் நடப்பாண்டில் நிறைவேற்றப்படும். வளர்ச்சி நிருவாகத்தின் வெளிப்படையான நிருவாகத்தை நடைமுறைப்படுத்த, கிராம சபையை வலுப்படுத்தவும், அதன்மூலம் சமூக தணிக்கைக்கு வழிவகுக்கவும் மாநில அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டமானது வறுமை ஒழிப்பு மற்றும் சுயவேலைவாய்ப்புத் திட்டங்களைத் தொழில் அடிப்படையிலான கிராம தொகுப்புகள் மற்றும் குழுக்கள் மூலமாக, செயல்படுத்துதல், தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் திறமை மேம்பாடு, கட்டமைப்பு வசதிகள், விற்பனை ஒருங்கிணைப்பு போன்றவற்றை வலுப்படுத்துவதன் மூலமாக புதிய அணுகுமுறையில் மாநில அரசு செயல்படுத்த உள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் பிற திட்டங்களும்





2000-2001 ஆம் ஆண்டில் தொடர்ந்து தீவிரமாக செயல்படுத்தப்படவுள்ளன.

அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், பராமரித்தல், வறுமையை ஒழித்தல், கிராம அளவில் உள்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவையே உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பொறுப்புகளாக உள்ளன. பின்வரும் குறிக்கோள்களை அடைவதையே, ஊரக வளர்ச்சித் துறை, தன் முக்கிய கடமையாகக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ) எல்லா கிராமங்களுக்கும் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், (ஆ) எல்லா கிராமங்களிலும் தெரு விளக்குகள் பொருத்துதல், (இ) அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போடுதல். 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களை இணைக்கும் சாலைகளையும், பேருந்து ஓடக்கூடிய சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்றுதல், (ஈ) வீடில்லாத அனைத்து ஏழை மக்களுக்கும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்துதல், (உ) தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அரசால் நடத்தப்படும் பள்ளிகளையும் சேர்த்து, எல்லா ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதிகளுடன் உரிய கட்டட வசதிகள் செய்தல், (ஊ) உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், சத்துணவு மையங்கள் போன்றவற்றிற்கு கட்டட வசதிகள் ஏற்படுத்தித் தருதல், (எ) கிராம தெருக்கள் மற்றும் சந்துகளை செங்கல், உடை கருங்கல், சிமெண்ட் கான்கிரீட் தளமாக மாற்றி மேம்பாடு செய்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல், (ஏ) கிராம சுகாதாரத் திட்டத்தைத் தீவிரமாக விளம்பரப்படுத்தி, கிராமங்களில் எல்லா வீடுகளிலும், சுகாதாரத் தேவையை 100 சதவிகிதம் பூர்த்தி செய்யும் வகையில், வீட்டுக் கழிவறைகள் கட்டுவதற்கும் மற்றும் சமுதாயக் கழிவறைகள் கட்டுவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல், (ஐ) சுகாதார துணை மையங்கள், ஆரம்ப சுகாதார மையங்கள், கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்கள் போன்ற பிற கிராமப்புற கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

[2000 மே 10

## II. தன்முயற்சிகளும் சாதனைகளும்

### 1. உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மக்களாட்சியை வலுப்படுத்துதல்:

- அடிமட்ட அளவிலான ஜனநாயக அமைப்பினை வலுப்படுத்தும் வகையில், அனைத்து மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கும் அக்டோபர் 1996-ல் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டது. பொறுப்பேற்றுக்கொண்ட 1,16,747 பிரதிநிதிகளில் 38,391 பெண்களும், 24,148 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைசாதி வகுப்பைச் சார்ந்தவர்களுமாவர். இடைக்காலத்தில் ஏற்பட்ட காலியிடங்களை நிரப்ப ஆறுமுறை இடைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.
- 9 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய ஏற்காடு ஊராட்சி ஒன்றியம் புதியதாக அமைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சிகளைப் பிரிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் எல்லைகளை மாற்றுவதற்கும் மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.
- ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் மாவட்ட அளவிலான ஆண்டுத் திட்டம் மற்றும் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்கு அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்போது தெரிவித்தவாறு மாவட்டத் திட்டக் குழு அமைக்கப்பட்டு அது மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பதிலாக மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் செயல்படவுள்ளது.

### 2. அதிகார பரவலாக்கல்

- ஊரக உள்ளாட்சி நிருவாக அமைப்புகள் உண்மையான தன்னாட்சி நிருவாக அமைப்புகளாகச் செயல்படவும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதியை கிராமங்களில் நிலைநாட்டவும், உரிய பொறுப்புகளையும், நிருவாக அதிகாரம் மற்றும் அதற்கேற்ப நிதி ஆதாரங்களையும் ஒருங்கே மாநில அரசு பகிர்ந்தளித்துள்ளது.



2000 மே 10]

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் ஒவ்வோர் ஊராட்சி அமைப்புகளும் செயல்படுத்த வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புகளைத் தெளிவாக வரையறுத்து வழங்கப்பட்டுள்ளது. மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகள் ஆற்ற வேண்டிய கட்டாயக் கடமைகள், விருப்பக் கடமைகள், ஆய்வுப் பணிகள், முகமைப் பணிகள் மற்றும் அரசு சார்பில் நிறைவேற்ற ஒப்படைக்கப்பட்ட கடமைகள் ஆகியவற்றின் அடிப்படையில், தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 243-ல் கூறப்பட்டுள்ள 29 பொருள்களிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. இரண்டாவது கட்டமாக மேலும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, இக்குழு 11-1-1999-ல் அறிக்கையை சமர்ப்பித்தது. உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை சட்டமன்றப் பேரவையில் 1999-2000 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 27 விவாதத்தின்போது வைக்கப்பட்டது. உயர்மட்டக் குழு பரிந்துரைக்கப்பட்ட அனைத்து இனங்களுக்கும் சில இனங்கள் தவிர அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.
- திட்டம், நிதி, குடிநீர் மற்றும் உள்ளாட்சித் துறை மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர்களிலிருந்து தலா 6 உறுப்பினர்கள் அடங்கிய மாநில ஊரகக் குழுமம் ஒன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், ஊரக வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை தெரிவிக்க அமைக்கப்பட்டுள்ளது.

### 3. நிருவாக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்

கிராம ஊராட்சிகள் சுயசார்புடனும் சிறப்பாகவும் செயல்பட, பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- கிராம ஊராட்சித் தலைவர் கிராம ஊராட்சியின் நிருவாக அலுவலராவார். ரூ. 2,000/- வரை மதிப்பீடு இல்லாமல்

பணிகளுக்குச் செலவிடவும், ரூ. 2000-க்கு மேற்பட்ட பணிகளுக்கான செலவினங்கள் உரிய மதிப்பீடுகளுடனும், ஊராட்சி மன்ற ஒப்புதலுடனும் மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அவசரப் பணிகளை மேற்கொள்ள ரூ. 500 வரை முன்பணமாக ஊராட்சி நிதியில் இருந்து, ஊராட்சித் தலைவர் பெற்று பயன்படுத்திக்கொள்ளலாம்.

- கிராம ஊராட்சிகள் கிராம குடிநீர் ஆதாரங்கள் சம்பந்தமான பழுது மற்றும் பராமரிப்புப் பணிகளைச் செய்ய உள்ளூரிலேயே உரிய வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளலாம். பழுது நீக்கச் செலவு, ஒரு வருடத்திற்கு ஒரு விசைப்பம்புக்கு அதிகபட்சமாக ரூ. 7,000 வரை மேலாய்வு இன்றி ஊராட்சியே செலவிடலாம். தெரு விளக்குகளுக்குத் தேவையான அரசு நிர்ணயித்துள்ள தரமுடைய மின்சார உபகரணங்களை கிராம ஊராட்சிகள் உள்ளூரிலேயே வாங்கிப் பராமரித்துக் கொள்ளலாம்.

- கிராம ஊராட்சிகள், ஊராட்சி உபரிநிதியிலிருந்து செயல்படுத்தப்படும் வேலைகளுக்கு உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிர்ணயிக்கப்பட்ட தரமுடைய சிமெண்ட், இரும்பு ஆகியவற்றை உள்ளூரிலேயே வாங்கிப் பயன்படுத்தலாம்.

- கிராம ஊராட்சிகள், ஊராட்சி உபரி நிதியிலிருந்து ரூ. 1.00 லட்சம் வரை மதிப்பீடு உள்ள பணிகளை அனுமதித்து செயல்படுத்துவதற்கு தனியார் பட்டயப் பொறியாளர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

- கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள மனைப் பிரிவு மற்றும் கட்டட வரைபடங்களுக்குக் கிராம ஊராட்சிகளே அனுமதியளிக்கலாம்.

- அனைத்து தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கும் பயனாளிகள் கிராமசபை முன்னிலையில் தேர்வு செய்ய, கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- வெளி நிருவாக அனுமதியின்றி, குறிப்பிட்ட நிதியளவில் பணிகள் அனுமதித்து செயல்படுத்துவதற்கு மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.





- கிராமசபை, நேரடி ஜனநாயகம் மற்றும் சமூகத் தணிக்கை மூலம் வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை ஏற்படுத்த வழி வகுக்கிறது.

### 4. நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்தல்

- மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது. மாநில நிதிக் குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கையைப் பரிந்துரையுடன் 1996 ஆம் வருடம் நவம்பர் 21 ஆம் தேதி அரசுக்குச் சமர்ப்பித்தது. அதன் பரிந்துரையின் அடிப்படையில், நிதி ஆதாரங்கள் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இப்பரிந்துரைகள் 1-4-1997 முதல் ஐந்து ஆண்டுகளுக்குப் பொருந்தும்.

- சேர்மம் 'அ'-விலிருந்து ஒதுக்கப்பட்ட வருவாயாக உள்ளூர் வரி, முத்திரைக் கட்டண மேல்வரி, சிறு கனிமங்களின் மீதான உரிமைக் கட்டணம் முதலியன முழுமையாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன. உள்ளூர் தலமேல்வரி முழுமையாக ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படுகிறது. கேளிக்கை வரி 70:30 என்ற விகிதத்தில், கிராம ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் பிரித்து வழங்கப்படுகின்றன.

- சேர்மம் 'ஆ'-ன்கீழ், ஒவ்வொரு வரியினையும் தனித் தனியாகப் பிரித்து வழங்குவதற்குப் பதிலாக ஒட்டுமொத்த அரசு வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்கு குறிப்பிட்ட சதவிகிதம் பிரித்து வழங்க வேண்டும் என்றும், இதனால் நிதி ஆதாரங்களில் பொதுவாக ஏற்படும் மாற்றங்களில் வருவாய் அதிகரிக்கும்போது அதற்கேற்ப உள்ளாட்சிகளும் பயன்பெறும் என்ற மாநில நிதிக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, அரசு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கிறது. இதனால் ஊராட்சிகள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வரி வருவாயின் பங்கினை ஓரளவு முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியும். 1997-98-லிருந்து அரசின் மொத்த வரி வருவாயில் 8 சதவிகிதம் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது. இதன் காரணமாக, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 1997-98 ஆம் ஆண்டு ரூ. 662.00 கோடி வழங்கப்பட்டு அதில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ. 369.28 கோடி வழங்கப்பட்டது.

[2000 மே 10

1998-99ஆம் ஆண்டு பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ. 839.00 கோடியில், ரூ. 467.94 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால், 1998-99 ஆம் ஆண்டு வரி வசூல் குறைவினால் இந்த ஒதுக்கீடு ரூ. 453.73 கோடியாக திருத்திய மதிப்பீட்டில் குறைக்கப்பட்டு வழங்கப்பட்டது. 1999-2000 ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட ரூ. 816.25 கோடியில், ரூ. 455.06 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ. 1,036 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ. 577.80 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கும். 1997-98 ஆம் ஆண்டு முதல் இந்த ஒதுக்கீடு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கிடையே முறையே கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கு 45:45:10 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு இந்த விகிதாச்சாரம் 47:45:8 என்று மாற்றப்பட்டது.

மாநில நிதிக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, மாநில அரசின் நிதி பகிர்ந்தளிப்பில் 15 சதவிகிதம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இவை, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடையே 60:40 என்ற விகிதத்தில் பிரித்து வழங்கப்படுகிறது. 1997-98-ல் ஊரக உள்ளாட்சிகளுக்கு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ரூ. 59:45 கோடியும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 73.24 கோடியும் வழங்கப்பட்டது. 1999-2000 ஆண்டில் ரூ. 73.46 கோடியாக அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ. 93.27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இந்த நிதியினைக்கொண்டு ஊராட்சிகள் தங்கள் சுயநிதி ஆதாரங்களைத் திரட்டி வருவாயினைப் பெருக்குவதற்கு ஊக்கத் தொகையாகவும், உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி ஆதாரத்தில் ஊராட்சிகளிடையே உள்ள இடைவெளியை சமன் செய்ய மானியமாகவும் வழங்கப்படுகிறது. 1997-98 முதல் ஊராட்சிகள் வீட்டு வரியாக வசூலிக்கும் ஒவ்வொரு ரூ. 1-க்கு ஊக்க நிதியாக ரூ. 2 வழங்கப்படுகிறது. இதன் காரணமாக 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 10.00 கோடியாக இருந்த வீட்டுவரி வசூல் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 14 கோடியாகவும், 1998-99 ஆம் ஆண்டு ரூ. 20.07 கோடியாகவும் உயர்ந்துள்ளது. 1999-2000-ல் வீட்டு



2000 மே 10]

வரி வசூல் ரூ. 26.80 கோடியாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, இந்த நிதியினைக்கொண்டு நலிவடைந்த ஊராட்சிகள் செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணங்கள், மின்சாரக் கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்த, ஊராட்சிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. மலைப்பகுதி, கடற்கரைப் பகுதி, அடிக்கடி இயற்கைச் சீற்றங்களால் பாதிப்புக்கு உள்ளாகும் கிராமங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும், நகர்ப்புறப் பகுதியை ஒட்டியுள்ள கிராமங்கள் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களில் சாலைகள், விளக்குகள், தெருக்கள், குடிநீர் வசதி ஆகியவற்றை அபிவிருத்தி செய்யவும் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

கிராம ஊராட்சிகளில், தொழில்வரி மற்றும் அதன் வசூல் முறைகளை நெறிமுறைப்படுத்த தொழில்வரி விதிப்பு மற்றும் வசூல் முறையை 1-10-1998 முதல் அரசு எளிதாக்கியுள்ளது. இதன் அடிப்படையில், கிராம ஊராட்சிகள் தொழில்வரியினை ஒரு குறிப்பிட்ட காலமுறையில் அதிகரிக்கவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய நிதிக் குழு மானியமாக 1996-97 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ரூ. 71.83 கோடி மூன்று ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மூலதனப் பணிகளை எடுத்துச் செய்வதற்காக வழங்கப்படுகிறது. 1999-2000 ஆண்டில் ரூ. 71.85 கோடியை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு முறையே ரூ. 33.78 கோடி, ரூ. 32.32 கோடி ரூ. 5.75 கோடி என 1999-2000 ஆண்டில் பிரித்து வழங்கப்பட்டது. 1996-97, 1997-98, 1998-99, 1999-2000 ஆண்டுகளில் முறையே மொத்தமாக 14,331, 20,753, 22,064 மற்றும் 19,680 பணிகள் இந்த நிதியில் எடுக்கப்பட்டுள்ளன. பதினொன்றாவது நிதிக் குழு 2000-2001 ஆம் ஆண்டிற்கான தனது இடைக்கால அறிக்கையில் 10-வது நிதிக் குழுவில் பரிந்துரைக்கப்பட்ட நிதியைவிட 50 விழுக்காடு அதிகரித்து பரிந்துரைத்துள்ளது.

கிராம ஊராட்சியின் நிதி ஆதாரத்தைப் பெருக்கும் பொருட்டு, விளம்பரப் பலகைக்கான உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பர வரி வசூலிக்க கிராம ஊராட்சிக்கு அதிகாரம்

வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இத்தகைய அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பிற்கேற்ப, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டு வரப்படும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு, தங்களது அலுவலகக் கடமையைச் செய்வதற்கு அவர்களது உள்ளாட்சிமன்றப் பகுதி மற்றும் வெளியிடங்களில் பயணம் மேற்கொண்டால் நிரந்தர பயணப் படி, தினப் படி, மற்றும் கூட்டங்களில் கலந்துகொள்ள அமர்வுப் படி போன்றவை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

- மாநில அரசு டிசம்பர் 1999-ல் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமையினை ஆராய இரண்டாவது மாநில நிதிக் குழுவினை அமைத்துள்ளது. குழு தனது அறிக்கையை அக்டோபர் 2001-க்குள் பரிந்துரைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5. குடிநீர் வழங்கல்

- கிராமப்புற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்று அரசு கொள்கை முடிவெடுத்து, ஆரம்ப காலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அவற்றில் கைப்பம்புகள் பொருத்தப்பட்டன. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர, அரசும் அதற்கேற்ப குடிநீர்த் திட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி, விசைப்பம்புகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு குழாய்கள் மூலம் வழங்கும் முறையைத் தீவிரமாக அமல்படுத்தி வருகிறது. இதனால், கிராமப்புற பெண்களின் சிரமங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. அரசாணை எண் 260, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 9-12-1998-ன்படி, ரூ. 1,000 காப்புத் தொகையாகவும், மாதாந்தர குடிநீர் கட்டணமாக ரூ. 30-ம் ஊராட்சிக்குச் செலுத்த முன்வருவோரின் வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு தரும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கு தற்போது அரசு வழங்கியுள்ளது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகையை, தனிக் கணக்கில் வைத்து குடிநீர் ஆதாரங்களைப் பராமரிப்பதற்கென்று பயன்படுத்தப்படும். மேலும், கிராம ஊராட்சியில் வசூலிக்கப்படும் வீட்டுவரி வசூலில் 20 விழுக்காடு தொகை குடிநீர் ஆதாரங்களைப் பராமரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். தற்போதைய நிலையில் 6.29 இலட்சம் வீடுகளுக்கான புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க வாய்ப்புள்ளது. மேலும் 2.20 இலட்சம் இணைப்புகளை முறைப்படுத்த வாய்ப்புள்ளது. இதன்மூலம் கிராம ஊராட்சிகளுக்கு ரூ. 84.90 கோடி திரும்பச் செலுத்தப்படாத வைப்புத் தொகையாகவும், ரூ. 2.55 கோடி மாதாந்தர குடிநீர் கட்டணமாக வருமானம் கிடைக்க வழிவகை ஏற்படுத்தியுள்ளது. தற்போது தமிழகத்தில் மொத்தம் 1,75,965 கைப்பம்புகள் மற்றும் 37,956 விசைப்பம்புகள் கிராம ஊராட்சிகள்மூலம் இயக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.





- மேலும், ஜனவரி 2000 முதல் காலாண்டின் முதல் வாரத்தில், கிராம புறங்களில் உள்ள அனைத்து குடிநீர் ஆதாரங்கள் 100 விழுக்காடு முழுமையாக செயல்படுவதை உறுதிப்படுத்த, தீவிர சிறப்பு ஆய்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6. சாலைகள் மற்றும் தெருக்கள்

#### (அ) சாலைகள்

கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊரகச் சாலைகள் முக்கியமானதாக கருதப்படுகிறது. தென் மாநிலங்களுக்கிடையே கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக சாலை அடர்த்தி கொண்ட பெருமை தமிழ்நாட்டுக்கு உள்ளது. ஊரகப் பகுதிகளில் அனைத்துக் காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய சாலை வசதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதலாவதாக உள்ளது. 1-4-1999 தேதிய நிலையில் உள்ளாட்சி அமைப்புகளின் பராமரிப்பின்கீழ் உள்ள சாலைகளின் விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1

ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள் தளம் வாரியாக விவரம் (கி.மீட்டரில்)

| | தளம் | ஊராட்சி ஒன்றிய சாலை (கி.மீ.) | ஊராட்சி சாலை (கி.மீ.) | மொத்தம் (கி.மீ.) |
|---|---|---|---|---|
| 1. | தார்ச் சாலை | 13264.65 | 9309.54 | 22574.19 |
| 2. | கான்கிரீட் சாலை | 16.80 | 19.78 | 36.58 |
| 3. | இரண்டு அடுக்கு மெட்டல் சாலை | 1396.90 | 1548.67 | 2945.57 |
| 4. | ஓரடுக்கு மெட்டல் சாலை | 7733.63 | 8100.28 | 15833.91 |
| 5. | மண்/சரளை சாலை | 7155.77 | 23801.07 | 30956.84 |
| | மொத்தம் | 29567.75 | 42779.34 | 72347.09 |
| | சிறுபாலங்கள் (எண்ணிக்கை) | 26438 | 23801 | 55364 |

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள ஊரகச் சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, மேற்படி சாலைகளைப் படிப்படியாக தார் சாலைகளாக மாற்றுவதென, தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதன் தொடர்பான நடவடிக்கை 1989-90 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருப்பினும் 1991 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டு, 1996-97 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அரசின் சீரிய முயற்சியால், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள ஊரகச் சாலைகளை, தார்ச் சாலைகளாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அட்டவணை 2

ஊரகச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் விவரம்

| வருடம் | கி.மீ. |
|---|---|
| 1996-97 | 5713.80 |
| 1997-98 | 4888.48 |
| 1998-99 | 6314.69 |
| 1999-2000 | 3982.97 |
| மொத்தம் | 20899.94 |

1999-2000 ஆண்டிலிருந்து ஊரகச் சாலைகளை, நெடுஞ்சாலைத் துறையின் தரத்தில் சாதாரண இளகிய கனத்திற்குப் பதிலாக இறுகிய கனத்துடன் கூடிய சாலைகளாகவே அமைப்பதென்று முடிவெடுக்கப்பட்டு, அதன்படி ஊரகச் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கையால் ஊரகச் சாலைகளின் தளம் நல்ல தரமுள்ளதாக அமைவதுடன், நீடித்து உழைக்கக்கூடியதாகவும் மற்றும் ஊரகப் பகுதிகளில், வசதியான போக்குவரத்திற்கு உகந்ததாகவும் உள்ளன. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மற்றும் நபார்டு (கிராம உள்கட்டமைப்பு வசதி நிதி) திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறையின் ஊரகச் சாலைகள் பிரிவின் மூலமும் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்றும் பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

[2000 மே 10

## அட்டவணை-3

### தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நபார்டு திட்டத்தின்கீழ், ஊரகச் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற மேற்கொள்ளப்பட்ட பணிகள் *(31-3-2000 முடிய)*

| திட்டம் | எடுத்துக் கொள்ளப் பட்டவை (கி.மீ.) | தார்ச் சாலையாக மாற்றப் பட்டவை (கி.மீ.) |
|---|---|---|
| 1. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் | 892.07 | 862.27 |
| 2. கிராம உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-1 | -- | -- |
| 3. கிராம உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-2<br>4. கிராம உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-3<br>5. கிராம உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-4<br>6. கிராம உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி-5 | 5209.81 | 2660.71 |
| மொத்தம் | 6101.88 | 3522.98 |

1989-90 ஆம் ஆண்டில் 4418 கி.மீட்டராக இருந்த ஊரகப் பகுதி தார்ச் சாலைகளின் நீளம், மேற்கூறப்பட்ட முயற்சி மற்றும் நடவடிக்கைகளின் காரணமாக 1999-2000 ஆண்டில், 22,866 கி.மீட்டராக உயர்ந்துள்ளது. மேலும், தற்சமயம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சாலைப் பணிகள் முடிவுற்றவுடன் மொத்த ஊரக தார்ச் சாலைகள் நீளம் 26,848 கி.மீட்டராக அதிகரிக்கும். 1999-2000 மற்றும் 2000-2001 ஆகிய இரண்டாண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பில் உள்ள சாலைகளில் 11,651 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலைகளாக மாற்றுவதென தமிழக அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் சுமார் 3,982 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 7,669 கி.மீ. 2000-2001 ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும். நடைமுறையில் உள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதுடன், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ. 120.00 கோடியும் மற்றும் அரசுக் கட்டமைப்பு வளர்ச்சிக் கடன் பத்திர வெளியீட்டின் மூலம் ரூ. 100.00 கோடியும், தார்ச் சாலை பணிக்கென நிதி திரட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கென மத்திய அரசு, டீசல் மேல்வரி வசூலிலிருந்து பிரதம மந்திரி கிராமோதய திட்டம் மூலம் ரூ. 100.00 கோடி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்முயற்சிகளின் காரணமாக ஊரகச் சாலைகள் மேம்பாட்டிற்கென கணிசமான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும்.



2000 மே 10]

### (ஆ) தெருக்களும், சந்துகளும்

கிராமத் தெருக்களையும், சந்துகளையும், கான்கிரீட் தளமுடன் கூடியதாக மேம்படுத்த 1999-2000 ஆண்டில் தமிழக அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. 1999--2000 மற்றும் 2000-2001 ஆகிய இரண்டு ஆண்டுகளில், 5,000 கி.மீ. கிராமத் தெருக்கள், சந்துகளை கான்கிரீட் தளமுடையதாக மேம்பாடு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் மட்டும் 2,905 கி.மீ. நீளத்திற்கான தெருக்கள் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது. பொதுமக்களிடையே இப்பணிக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே, மேலும் கூடுதலாக 3,000 கி.மீ. நீளமுள்ள தெருக்களை 2000-2001 ஆம் ஆண்டில் மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை-4

### கிராமத் தெருக்கள் மற்றும் சந்துகளின் விவரம் *(31-3-1999 வரை)*

| தளம் | கிராமத் தெருக்கள் (கி.மீ.) | கிராம சந்துகள் (கி.மீ.) | மொத்தம் (கி.மீ.) |
|---|---|---|---|
| 1. மண்/சரளை | 26731.470 | 9537.175 | 36268.645 |
| 2. மெட்டல் | 1113.046 | 250.484 | 1363.530 |
| 3. தார் | 1479.594 | 149.557 | 1629.151 |
| 4. கான்கிரீட் | 177.487 | 94.930 | 272.417 |
| 5. இதர இனங்கள் | 5.021 | 6.800 | 11.821 |
| மொத்தம் | 29506.618 | 10038.946 | 39545.564 |

## 7. தெரு விளக்குகள்

[2000 மே 10

தற்பொழுது 9,68,247 தெரு விளக்குகள் கிராமங்களில் உள்ளன. அவற்றில் 2,23,539 தெரு விளக்குகள் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் உள்ளன. 1995-96 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, தெரு விளக்குகள் இல்லாத குடியிருப்புகளில் விளக்குகள் அமைப்பதற்கும் மற்றும் மின் கம்பங்களுக்கிடையிலான தூரத்தை சீரமைத்து தெரு விளக்குகள் வசதி செய்து தருவதற்கும், 50,000 தெரு விளக்குகள் தேவையென கண்டறியப்பட்டது. ஊரகப் பகுதிகளில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 90,097 தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 1997-98 ஆம் ஆண்டு 27,907 தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ. 7.28 கோடி நிதியும், 1998-99 ஆம் ஆண்டு 35,284 தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ. 12.60 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது தவிர, 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் நிதியை ஒருமுகப்படுத்தி, 34,583 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. மேலும் 1998-99 ஆம் ஆண்டு நகரப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள ஊரகப் பகுதிகளில் 10,000 குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக உயர்த்துவதற்கு சுமார் ரூ. 2.65 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் 2,000 சோடியம் ஆவி விளக்கு அமைப்பதற்கு ரூ. 1.00 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதிகரித்துவரும் குடியிருப்புகளை கருத்தில்கொண்டு, மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க வேண்டியுள்ளது. இதனால் எல்லாக் குடியிருப்புகளுக்கும் தெரு விளக்குகள் அமைத்துக்கொடுக்கும் நமது பணி இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 8. இதர வளர்ச்சித் திட்டத் தன்முயற்சிகள்

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 13-5-1996 நாளில் முடிக்கப்பெறாமல் நிலுவையில் இருந்த 1,14,141 பணிகளை முடிக்கும் கூடுதல் சுமை இந்த அரசுக்கு ஏற்பட்டது. நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்ட 171 பணிகளைத் தவிர, இதர பணிகள் அனைத்தும் தற்போது முடிக்கப்பெற்றுள்ளன.

வளர்ச்சிப் பணிகளில் புதிய தன்முயற்சியாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், பெரியார்



2000 மே 10]

நினைவு சமத்துவபுரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற வளர்ச்சித் திட்டங்களை இந்த அரசு 1997-98 முதல் அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது.

மாநில திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 50 கோடியாக இருந்தது. பல்வேறு மடங்காக அதிகரிக்கப்பட்டு 1999-2000 ஆண்டு ரூ. 475.60 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக ஒதுக்கீடு மற்றும் அதிக எண்ணிக்கையிலான நிலுவைப் பணிகள் இருந்தபொழுதிலும் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டு வரை 13-5-1996-ல் அதற்கு முந்தைய ஆண்டு பணிகளில் நிலுவையாக இருந்த 1,14,141 பணிகளையும் சேர்த்து எடுக்கப்பட்ட 9,86,601 பணிகளில் 50,394 தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

முழுமையான கிராம வளர்ச்சிக்கு வழிகோலும் புதுமையான திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 1999-2000 ஆண்டுவரை 634 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு ரூ. 519.00 கோடி செலவில், 74,810 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

1997-98 ஆம் ஆண்டு புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டமானது, தேவைகளின் அடிப்படையில் மக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 107.96 கோடி மதிப்பீட்டில் ரூ. 40.96 கோடி மக்கள் பங்களிப்புடன் பல்வேறு சமுதாயப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமக்கு நாமே திட்டத்திற்காக தமிழ்நாடு தகவல் பக்கத்தில் தனியாக கணினி இணையத்தில் ஒரு பகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை 06-02-2000 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.

1997-98 ஆம் ஆண்டு புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ. 25 இலட்சம்

[2000 மே 10

ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீடானது 1998-99 ஆம் ஆண்டில் 35 இலட்சமாகவும் 1999-2000 ஆண்டு ரூ. 50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ், ரூ. 257.97 கோடி மதிப்பீட்டில் 18,656 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ. 60 இலட்சமாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்கு, தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தருவது என்பது மாநில அரசின் லட்சிய கொள்கையாகும். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் அதாவது 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டு வரை சுமார் 2,13,092 தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளுக்காக கட்டித்தரப்பட்டுள்ளன.
- இவ்வீடுகளுக்கு கான்கிரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றிற்கு மாநில அரசால் வழங்கப்பட்ட ரூ. 7,000 1998-99 முதல் ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டது.
- தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டித்தருவது தொடர்ந்து மாநில அரசின் முதன்மைப் பணியாக உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 5,326 பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் மட்டும் 937 தொடக்க/நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 737 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி மையத்திற்கு உள்கட்டமைப்புக்கு வசதியாக 552 கட்டடங்கள் ரூ. 22.08 கோடியில் கட்டித் தரப்பட்டுள்ளன.
- கடந்த நான்காண்டுகளில் 701 கிராம ஊராட்சிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.
- கடந்த நான்கு ஆண்டுகளில் 6,652 நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் மட்டும் 1,707 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.



2000 மே 10]

- கடந்த நான்கு ஆண்டுகளில் அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு 1,409 மையங்களுக்கு கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டில் மட்டும் 250 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு வீட்டுவசதி திட்டத்தின்கீழ் தஞ்சாவூர், கடலூர், திண்டுக்கல், மதுரை, ஈரோடு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தலா ஒரு கிராமத்தில் புதுமையான தொழில்நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி, மொத்தம் 556 வீடுகள் கட்டித் தரப்படவுள்ளன.

ஊரக சுகாதாரம் என்பது மக்களுடைய வாழ்க்கைத் தரத்தின் முக்கிய அளவுகோலாகும். எனவே, இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தகவல், கல்வி மற்றும் தொடர்பு குறித்த முனைப்பு இயக்கங்கள், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருத்தியமைக்கப்பட்ட மத்திய ஊரக சுகாதார திட்டம் 1999-2000 ஆண்டில், குறைக்கப்பட்ட மானியத்துடன் கடலூர், வேலூர், கோவை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ. 51.02 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய ஊரக சுகாதார திட்டத்தின்கீழ் ஆரம்பத்திலிருந்து 3,49,593 தனி நபர் கழிப்பிடங்களும், 404 சமுதாய கழிப்பிடங்களும், 3,209 நிறுவன கழிப்பிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் "டேனிடா" (DANIDA) திட்ட நிதியுதவியுடன் சிறப்பு ஊரக சுகாதாரத் திட்டம், தேவை மற்றும் பங்கேற்பு அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 4,749 தனி நபர் கழிவறை வசதிகளும், குடிநீர் மற்றும் பொது கழிவறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரப்பாளையம் கிராமம் 100 விழுக்காடு, மாதிரி சுகாதார கிராமமாகத் திகழ்கிறது.

[2000 மே 10

- கிராம அடிப்படை வசதிகளை முறையாக பராமரிப்பதிலும், அடிப்படை விவரங்களைப் பயன்படுத்தி பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தவும், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் கண்காணிக்கவும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கணிப்பொறிமயமாக்கும் பணி ரூ.19.50 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கடந்த நான்காண்டுகளில் 35,596 நீர் ஆதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின்படி, 16-1-2000 அன்று மாநிலத்தில் உள்ள 12,619 கிராமங்களில் ரூ.631 கோடி செலவில் (கிராமத்திற்கு ரூ.5,000 வீதம்) அய்யன் திருவள்ளுவர் நூலகம் மற்றும் படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தின்கீழ் 66 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதுபோக, மீதமுள்ள 84 சமத்துவபுரங்கள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படவுள்ளன.

**9. நிருவாகத் தன்முயற்சிகள்:**

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் செயல்பாட்டிற்கு வந்தவுடன், முன்பிருந்த 58 கோட்ட வளர்ச்சி அலுவலர் பணியிடங்களும் கலைக்கப்பட்டு, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை), மாவட்ட அளவிலான பணியிடங்களாக மாற்றியமைக்கப்பட்டன.

- வட்டார அளவில் பணிபுரிந்த துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிராம ஊராட்சிகளின் தணிக்கையாளர்களாக அமர்த்தப்பட்டனர்.

- வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பதவிகள் முறையாக வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) எனவும், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) எனவும் திருத்தி அமைக்கப்பட்டு அவர்களின் பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.



2000 மே 10]

- வேலை உறுதியளிப்புத் திட்ட செயல்பாட்டினை செம்மைப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலும் ஒரு கூடுதல் உதவித் திட்ட அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது.

- ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட ஊர்நல அலுவலர் பணியிடங்கள், 24-11-1998 முதல் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டு, களப்பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர். ஒவ்வோர் ஊர்நல அலுவலரும் 6 கிராம ஊராட்சிகளின் பணிகளை கண்காணிக்கும்பொருட்டு, 1,048 முதல் நிலை ஊர்நல அலுவலர்களும், 1,020 இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்களும் மீண்டும் களப்பணியில் அமர்த்தப்பட்டனர்.

- அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்த செய்திகள் மக்களை சென்றடைய ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் மக்கள் நலப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவர்களுக்கு மாத மதிப்பூதியமாக ரூ.500 வழங்கப்பட்டது. 1999-2000 நிதியாண்டிலிருந்து இம்மதிப்பூதியம் ரூ.750 ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. 8,008 ஆண் மக்கள் நலப் பணியாளர்களும் 5,483 பெண் மக்கள் நலப் பணியாளர்களும் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

- தொழில்நுட்பப் பிரிவை வலுப்படுத்தவும், வளர்ச்சிப் பணிகள் மீதான மேற்பார்வையை தீவிரப்படுத்தும் பொருட்டும், 15 கூடுதல் உதவி செயற்பொறியாளர் பணியிடங்கள் 1997-98 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. இதில், மாநில அளவில், ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பணியிடமும், ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலும் ஒரு செயற்பொறியாளர் பணியிடமும், கோட்ட அளவில், உதவி செயற்பொறியாளர் பணியிடமும், வட்டார அளவில், உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி) மற்றும் ஒன்றியப் பொறியாளர் பணியிடங்களும், அதற்குக் கீழ்நிலையில், ஒன்றியப் பணி மேற்பார்வையாளர் மற்றும் இதர களப்பணியிடங்களும் அடங்கும் 15 புதிய துணைக் கோட்டங்கள் உருவாக்கப்பட்டன.

- ஊராட்சி ஒன்றியங்களில் அதிகரித்துவரும் வேலைப்பளுவிற்கு ஈடு கொடுக்கும் வகையில் ஒன்றியங்களில் ஏற்கனவே இருந்த ஒன்றியப் பொறியாளர்களுடன், கூடுதலாக ஓர் உதவிப்

பொறியாளர் நிலையில் ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்பட்டது. இதனால், மொத்தமுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும், கோட்ட அலுவலகங்களிலும் கூடுதலாக 400 உதவிப் பொறியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு, 168 உதவிப் பொறியாளர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

- மேலும், ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்த 547 சாலை ஆய்வாளர்கள், 672 பணிமேற்பார்வையாளர்கள், அவர்களின் விருப்பத்தின் பேரில் ஊரக வளர்ச்சித் துறையில் ஈர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் 204 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 28 உதவி செயற்பொறியாளர்களின் விருப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவது பரிசீலனையில் உள்ளது.

- ஊராட்சி ஒன்றியங்களில், அலுவலர் மற்றும் களப்பணியாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளின் எண்ணிக்கையையும், தரத்தையும் மேம்படுத்த, கூடுதலாக ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு புதிய கூடுதல் ஈப்பு வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுககு இரண்டாவது ஈப்பாக, 182 புதிய ஈப்புகளும் 1998-99 ஆம் ஆண்டு 173 புதிய ஈப்புகளும் வழங்கப்பட்டன. இது தவிர, 1997-98 ஆம் ஆண்டு 181 கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஈப்புகள் வழங்கப்பட்டன. மேலும் 68 உதவி செயற் பொறியாளர்களுக்கு 68 ஈப்புகளும், 17 செயற் பொறியாளர்களுக்கு 17 புதிய ஈப்புகளும் வழங்கப்பட்டன.

- நிருவாக மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளின், நிருவாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, ஒப்பந்தப்புள்ளி ஏற்பு ஆகியவற்றுக்கான நிதி ஒப்பளிப்பு அதிகார வரம்பு 31-12-1998 ஆம் நாளிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரம் ஒன்றியப் பொறியாளர்களுக்கு ரூ. 30,000-லிருந்து ரூ. 50,000 ஆகவும், உதவி செயற் பொறியாளர்களுக்கு ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 3.00 இலட்சமாகவும், செயற்பொறியாளருக்கு ரூ. 3.00





இலட்சத்திலிருந்து ரூ. 5.00 இலட்சமாகவும் கண்காணிப்புப் பொறியாளருக்கு ரூ.5.00 லட்சத்துக்கு அதிகமாகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டது.

## 10. சட்டம் சம்பந்தமான தன் முயற்சிகள்

- குடிநீர் வழங்கும் பணியை கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாக சேர்க்கும் வகையில், 1994 தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. மேலும், திருத்தியமைக்கப்பட்ட ஊராட்சிகள் சட்டத்தில் கிராம சபையை செயல்முறைக்கு கொண்டு வர, கிராம சபையின் குறைந்தபட்ச உறுப்பினர்கள் வருகை எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காக இருந்ததை பத்தில் ஒரு பங்காக குறைத்தல், திருத்தப்பட்ட தொழில் வரி மற்றும் விளம்பரவரி விதித்தல் போன்றவை முக்கியமானவையாகும்.

- கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பல பிரிவுகளுக்கு திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போதைய சட்டமன்றப் பேரவைத் தொடரில் மேலும் சில திருத்தங்கள் வரவிருக்கின்றன. இந்த அனைத்து திருத்தங்களும் அனுமதித்துச் செயல்முறைபடுத்தப்பட்டால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் முழுமை பெற்று கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டுக்கு வழிவகுக்கும்.

இதுவரை சட்ட அங்கீகாரத்தின்கீழ், 83 விதிகளுக்கு அரசு ஒப்பளித்துள்ளது. இது தவிர, சில விதிகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. இவை வெளியிடப்பட்ட பின், பஞ்சாயத்துராஜ் நிருவாகம் குறித்து விரிவான நடைமுறை நூல் விரைவில் வெளியிடப்படும்.

கிராம ஊராட்சிக் கணக்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன. சுமார் 61-க்கும் மேலான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் தீவிரமாக மறுபரிசீலனை செய்யப்பட்டு 31 படிவங்களாகவும் பதிவேடுகளாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

[2000 மே 10

## III. திட்டப் பணிகள்

மத்திய அரசு மற்றும் மாநில அரசின் திட்டங்களை ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்தி வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு, கீழ்க்கண்ட பகுதி-2 திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**1. புதிய திட்டங்கள்**

**(அ) சேலம், திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்களை கணினிமயமாக்குதல்.**

1999-2000 நிதி ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களையும் கணினி மயமாக்கும் பணி முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டது. வட்டார அளவில் அனைத்து வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதில் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மையமாக இருந்து வருகின்றன. ஆகையால், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியல், கிராமத்தின் அடிப்படை உள்கட்டமைப்பு விவரங்கள், செயலாக்கத்தில் உள்ள திட்ட விவரங்கள், அரசின் தற்போதைய உத்தரவுகள் மற்றும் சுற்றறிக்கைகள், கிராம வளங்களை தெரியப்படுத்தும் விவர வரைபடங்கள் போன்றவை வட்டார அளவிலேயே பொதுமக்கள் அறியும் வண்ணம் இருப்பது இதன் முக்கிய அம்சமாகும். விவரங்களை அனைவரும் அறியவும், நிருவாகம் வெளிப்படையாக இருக்கவும் இது உதவும். மேலும், திட்டங்களை கண்காணித்தல், உள்ளமைப்பு நிருவாகம், மதிப்பீடுகள் தயாரித்தல், பட்டியல்கள் மற்றும் குறிப்பிட்ட கணக்குகளை கணினிமயமாக்குதல் சிறந்த முறையில் கணிப்பாய்வு செய்யவும் மற்றும் அலுவலர்களின் திறமையை மேம்படுத்தவும் உதவுகிறது. உள்ளாட்சி அமைப்பு பிரிவு நிறுவனங்களை கணிப்பாய்வு செய்வதற்கும் இத்திட்டம் நன்மை பயக்கக்கூடியதாகிறது. இதன் அடிப்படையில், 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், சேலம், திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள 52 வட்டாரங்களை கணினிமயமாக்க ரூ.36.40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) கணினிமயமாக்கும் பணிக்கு வட்டாரங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நேரடி பயிற்சி**

கணினி தகவல் மையங்களை இயக்கும் பொருட்டு வட்டாரங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்குப் பயிற்சி கொடுப்பது



2000 மே 10]

அவசியமாகிறது. வட்டார வாரியாக ஒரு வட்டாரத்தில் இரு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3.60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) திறமைகளை வளர்த்தல்—பயிற்சிக்கான கையேடுகளை தயாரித்தல்**

73 ஆவது சட்ட மற்றும் 74 ஆவது இந்திய அரசியல் அமைப்பு சட்டத் திருத்தத்திற்குப் பின்னர், மூன்று அடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு 1,16,747 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 1/3 பங்கு பெண்களும், 35,144 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரும் ஆவார். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலான பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு தீவிரமான பயிற்சி தேவைப்படுகிறது. பெரும்பாலானவர்கள் முறையான கல்வி பெறாததால் பயிற்சி நடவடிக்கைகளை அவர்களுக்கு ஏற்றார்போல் வடிவமைக்க வேண்டியுள்ளது. 1999-2000 ஆண்டில் யுனிசெஃப் மற்றும் மாநில அரசின் உதவியுடன் பயிற்சிக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் ஒருமித்த முயற்சியினைத் தொடர்ந்து பயிற்சிகளுக்கான கையேடுகள் தயாரிக்க 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈ. ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் வடிகால் வசதியுடன் கூடிய கழிப்பறை கட்டுவது.**

ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சி அலுவலர்கள் மற்றும் பயிற்சி பெறுபவர்கள் சிறப்பான முறையில், பயனுள்ள பயிற்சி பெற, பயிற்சி மையங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் வடிகால் வசதியுடன் கூடிய கழிவறை கட்டுவது அவசியமாகிறது. எஸ்.வி. நகரம், பவானிசாகர், தி. கல்லுப்பட்டி, பட்டுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலை வரை உள்ள துறை அலுவலர்கள் தங்கி பயிற்சி பெற வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஊரக உள்ளாட்சி

[2000 மே 10

அமைப்புகளின் மக்கள் பிரதி நிதிகளுக்கும் இவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது பயிற்சி நிலையங்களில் உள்ள கழிவறை வசதிகள் அவர்களுக்குப் போதுமானதாக இல்லாததால் அனைத்து 5 ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களிலும் வடிகால் வசதியுடன் கூடிய கழிவறைகள் கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதற்கென 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ஒரு பயிற்சி மையத்திற்கு ரூ. 1.50 இலட்சம் வீதம் ரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உ. ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களுக்கு பலநோக்கு தகவல் கருவி வாங்குதல்.

பட்டுக்கோட்டை, பவானிசாகர், கிருஷ்ணகிரி, எஸ்.வி. நகரம் மற்றும் தி.கல்லுப்பட்டி ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் கணினி வசதிகள் உள்ளன. ஊரக வளர்ச்சி அலுவலர்களுக்கு, கணினி பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. கற்பிக்கும் முறை மற்றும் எடுத்துரைக்கும் விதத்தினை மேம்படுத்தும் பொருட்டு பலநோக்கு தகவல் கருவி (multimedia projector) அவசியமாகிறது. முதல் கட்டமாக பட்டுக்கோட்டை, பவானிசாகர் மற்றும் தி. கல்லுப்பட்டி பயிற்சி மையங்களுக்கு தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் பல நோக்கு தகவல் கருவி வாங்கும் பொருட்டு 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊ. தி. கல்லுப்பட்டி ஊரக விரிவாக்க பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்கள் தங்க, விடுதிக் கட்டடம் கட்டுதல்.

தற்போது தி. கல்லுப்பட்டி ஊரக விரிவாக்க பயிற்சி நிலையத்தில் இருக்கும் விடுதி வசதி போதுமானதாக இல்லை. எனவே, தி. கல்லுப்பட்டி ஊரக விரிவாக்க பயிற்சி நிலையத்தில் தங்கும் விடுதிக் கட்டடம் கட்ட வேண்டி, 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 9.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. திட்டவாரியான ஒதுக்கீடு

1998-99 முதல் 2000-2001 வரை திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிவிவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளது:



2000 மே 10]

### அட்டவணை 5

*பிற திட்டப்பணிகள் நிதி ஒதுக்கீடு விவரம்.*

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | (ரூபாய் | இலட்சத்தில்) | |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 7074.88 | 8225.00 | 11750.00 | 11750.00 |
| நமக்கு நாமே திட்டம் | 1400.00 | 1000.00 | 3711.42 | 3000.00 |
| அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் | 5353.33 | 7500.00 | 7500.00 | 7500.00 |
| பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் | 5776.92 | 2739.56 | 2397.92 | 2529.38 |
| சுயவேலை வாய்ப்பில் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி * | 177.44 | 248.62 | 0.00 | 0.00 |
| சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ், சுயவேலை வாய்ப்பிற்காக கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல் * | 32.53 | 61.00 | 0.00 | 0.00 |

[2000 மே 10

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் மகளிர் சிறார் மேம்பாடு • | 626.34 | 384.67 | 0.00 | 0.00 |
| ஊரகப் பகுதிகளில் மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தகவல் கல்வி தகவல் தொடர்பு பணிகள் • | 0.00 | 11.00 | 0.00 | 0.00 |
| கங்கா கல்யாண் திட்டம் • | 0.00 | 64.49 | 0.00 | 0.00 |
| மாவட்டங்களில் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிக்க உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி உதவி | 3352.49 | 3500.00 | 300.00 | 300.00 |
| ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை | 6563.45 | 7183.00 | 7185.00 | 0.01 |



2000 மே 10]

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் | 1750.00 | 284.12 | 221.80 | 288.80 |
| பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் • | 186.60 | 186.36 | 0.00 | 0.00 |
| ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு அடிப்படை வசதிகளுக்கான மூலதனத் திட்டங்கள் | 5535.00 | 500.00 | 3200.00 | 1000.00 |
| ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம் | 4525.46 | 4889.98 | 4741.37 | 5010.39 |
| சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வேலை உறுதியளிப்பு திட்டம் | 4680.39 | 4760.00 | 3032.50 | 3032.50 |
| சிறப்புக் கூறுகள் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் • | 597.05 | 1801.14 | 0.00 | 0.00 |

[2000 மே 10

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| சிறப்புக் கூறுகள் திட்டம்-பத்து இலட்சம் கிணறுகள் திட்டம் • | 373.20 | 373.44 | 0.00 | 0.00 |
| சிறப்புக் கூறுகள் திட்டம் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் | 1434.00 | 1635.59 | 1274.83 | 1659.88 |
| ஊரக வளர்ச்சித் திட்ட கண்காணிப்புப் பிரிவு | 3.10 | 5.23 | 4.52 | 5.26 |
| மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் | 40.55 | 38.98 | 51.11 | 58.36 |
| வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக வட்டார நிருவாகத்தை வலுப்படுத்துதல் | 533.88 | 476.62 | 554.97 | 624.29 |
| தகவல், கல்வி, தகவல் தொடர்பு, வினைமுறைத் திறன் திட்டம் | 0.00 | 0.01 | 0.01 | 0.01 |



2000 மே 10]

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஊரக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக புதியதாக வீடுகள் கட்டுதல் | 0.00 | 0.01 | 0.01 | 0.01 |
| உள்ளாட்சி மன்றங்களுக்கு, சமூகக் கல்வி மானியம் | 29.27 | 34.00 | 27.84 | 27.84 |
| ஊரகக்குழு ஆயுள் காப்புறுதி திட்டங்கள் | 0.00 | 0.00 | 8.21 | 0.01 |
| ஊராட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கான பயிற்சித் திட்டம் | 0.00 | 10.00 | 17.00 | 15.00 |
| டேனிடா நிதி உதவியுடன் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த கிராமப்பகுதி துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம் | 399.70 | 1177.38 | 806.28 | 1055.63 |

[2000 மே 10

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டம் | 72.14 | 100.00 | 100.00 | 100.00 |
| மக்கள் நலப் பணியாளர்கள் | 788.72 | 809.46 | 1295.14 | 1295.14 |
| மத்திய ஊரக துப்புரவுத் திட்டம் | 1315.03 | 1451.12 | 932.96 | 935.09 |
| ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வானொலிப் பெட்டிகள் வழங்குதல் | 0.00 | 5.23 | 0.00 | 0.00 |
| கல்வராயன் மலைகளில் பழங்குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல் | 20.31 | 22.68 | 17.58 | 22.57 |
| ஜவ்வாது, ஏலகிரி மலைகளில் பழங் குடியினர் வளர்ச்சி வட்டாரத்தை ஏற்படுத்துதல் | 18.13 | 20.80 | 22.11 | 24.29 |



2000 மே 10]

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஊரகப் பகுதிகளில் சிறுபாசன ஏரிகளை மேம்படுத்து வதற்கான சிறப்புத் திட்டம் | 234.68 | 0.01 | 0.01 | 0.01 |
| விரிவாக்க அதிகாரிகள் (ஆதி திராவிடர் நலம்) ஊரக வளர்ச்சித் திட்டத்தை செயல் படுத்துதல் | 439.92 | 469.79 | 431.03 | 512.11 |
| ஆதிதிராவிடர் களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கான திட்டம் | 3359.61 | 4729.42 | 3856.30 | 3187.00 |
| இதர பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் | 583.14 | 821.54 | 670.94 | 554.48 |

[2000 மே 10

| திட்டத்தின் பெயர். | கணக்குகள் 1998-99. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000. | திருத்த மதிப்பீடு 1999-2000. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| ஊரகப் பகுதிகளில் கடன் உதவியுடன் வீடுகள் கட்ட மானியம் வழங்கும் திட்டம் | 0.00 | 0.00 | 500.25 | 500.25 |
| பெரியார் நினைவு சமத்துவபுரம் ஏற்படுத்துதல் | 1767.73 | 1750.00 | 1930.50 | 1850.00 |
| மொத்தம் | 59044.99 | 57270.26 | 56541.62 | 46838.32 |

*இந்தத் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, 1999-2000 முதல் சுவர்ண ஜெயந்தி சுயவேலைவாய்ப்புத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.



2000 மே 10]

## V. மாநில அரசு திட்டங்கள்

### 1. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், திட்டங்களை ஒருமுகப்படுத்தி ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமாக 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஒரு கிராம ஊராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, சாலைகள், கல்வி, உள்கட்டமைப்பு வசதி, சுகாதாரம், வடிகால் வசதிகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, வீட்டு வசதிகள் போன்றவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும் மற்றும் மனிதவள மேம்பாட்டிற்கும் பல்வேறு முகாம்கள் மற்றும் தீவிரப் பிரச்சாரங்கள் மாவட்ட நிருவாகம் மூலம் நடத்தப்படுகின்றன. சுகாதார முகாம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், மகளிர் மன்றங்கள் அமைத்தல், விவசாயிகள் அமைப்பை ஏற்படுத்துதல், அறிவொளி பிரச்சாரம், கண்புரை நீக்கும் முகாம், மதுவிலக்குப் பிரச்சாரம், சிறுசேமிப்புப் பிரச்சாரம், பல் பாதுகாப்பு முகாம், கால்நடை முகாம் போன்றவைகளுக்கு கிராமங்களில் காலமுறை வகுக்கப்பட்டு முறையான தீவிர இயக்கமாக நடத்தப்படுகின்றன.

1997-98 ஆம் ஆண்டு 212 கிராமங்களில் ரூ.172.26 கோடி மதிப்பீட்டில் 29,672 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.75.00 கோடி சிறப்பு நிதியாக வழங்கப்பட்டு, இதர திட்ட நிதியினை ஒருங்கிணைத்தும், மொத்தம் ரூ.180.25 கோடி மதிப்பீட்டில் 23,897 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 1999-2000 ஆண்டில் இத்திட்டம் 210 சட்டமன்றத் தொகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. ரூ.75.00 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீட்டினையும் சேர்த்து மொத்தம் ரூ.166.50 கோடி மதிப்பீட்டில் 21,241 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 2000-2001 ஆம் ஆண்டில் 210 ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்துவதற்கு ரூ.75.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. நமக்கு நாமே திட்டம்

நமக்கு நாமே திட்டம், தேவையின் அடிப்படையில் மக்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் ஒரு புதுமையான வளர்ச்சித்

[2000 மே 10

திட்டமாகும். சமுதாயத்தின் தேவையை மக்களே திட்டமிடுதல் முதல், செயல்படுத்துதல் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பராமரித்தல் வரை தங்களை ஈடுபடுத்தி, சமூக தேவைகளைப் பூர்த்தி செய்து, வளர்ச்சிப் பணிகளில் மக்களின் பங்கேற்பை மீண்டும் உயிர்ப்பிப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம். சமுதாயத்தின் தேவையை விவாதித்து கிராமப் பொதுமக்களே முன்னுரிமைப்படுத்தி, திட்டம் தயாரிக்கவும், மக்களே திட்டங்களை செயலாக்கம் செய்யவும் அவர்கள் நிதியாகவோ, பொருளாகவோ, உடல் உழைப்பாகவோ தம் பங்காக அளித்து அரசு நிதியுதவியுடன் பணிகளை செயல்படுத்துகின்றனர். அரசு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது. இத்திட்டத்தின் மூலம் பழமையான குடிமராமத்து முறைக்கு புத்துயிர் அளித்து, எல்லாப் பணிகளுக்கும் இதுபோன்று மக்களை ஈடுபடுத்தி செயல்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு, அந்த ஆண்டு 4,932 பணிகள் ரூ.17.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டன. 2,445 பணிகள் 100 விழுக்காடு பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டன. பொதுமக்களிடம் இருந்து பங்களிப்பாக பெறப்பட்ட ரூ.6.90 கோடியில் பணமாக ரூ.3.07 கோடியும், பொருளாக ரூ.1.20 கோடியும், உழைப்பாக ரூ.2.63 கோடியும் பெறப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒதுக்கப்பட்ட ரூ.10.00 கோடியுடன் கூடுதலாக ரூ.4.00 கோடி சிறப்பு நிதியாக விடுவிக்கப்பட்டு 4,801 பணிகள் ரூ.30.03 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. பொதுமக்களிடமிருந்து பங்களிப்பாக ரூ.12.48 கோடி பெறப்பட்டது. இதில் ரூ.5.92 கோடி பணமாகவும், ரூ.4.79 கோடி பொருளாகவும், ரூ.1.77 கோடி உழைப்பாகவும் பெறப்பட்டது. 1999-2000 ஆண்டில் முதலில் ரூ.10.00 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர், கூடுதலான கோரிக்கை பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்றமையால் ஒதுக்கீட்டை ரூ.37.11 கோடியாக உயர்த்தி நிதி விடுவிக்கப்பட்டது. ரூ.60.18 கோடி மதிப்பீட்டில் 5,259 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அதில் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் 1,623 பணிகள் 100% பங்குத்தொகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவையாகும். 1999-2000 ஆண்டில் ரூ.13.69 கோடி பணமாகவும், ரூ.6.96 கோடி பொருளாகவும், ரூ.0.93 கோடி உழைப்பாகவும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.42.53 கோடி மதிப்பீட்டில் 4,255 பணிகள் மற்றும் ரூ.17.65 கோடி மதிப்பீட்டில் 1,004 பணிகள் ஊரக மற்றும்



2000 மே 10]

நகரப் பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மக்களின் நீண்ட காலத் தேவைகளான இணைப்புச் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், சிறுபாலங்கள், சுற்றுச்சுவர்கள், பள்ளிக் கூடங்களுக்கான தளவாடங்கள், கணினி அறைகள், கதிரடிக்கும் தளங்கள், இத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டன.

இத்திட்டம், கிராம மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று, கிராம மற்றும் நகர மக்களிடையே பிரபலமாக உள்ளது. எனவே 2000-2001 ஆம் ஆண்டில் ஊரக மற்றும் நகரப் பகுதிகளுக்காக இத்திட்டத்திற்கு ரூ.30.00 கோடி முதல்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களின் ஈடுபாட்டிற்கு ஏற்ப அரசு கூடுதல் நிதியை அனுமதிக்கும்.

### 3. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

1997-1998 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. அவசியமான உள்கட்டமைப்பு வசதிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஏதுவாக, பணிகள் எடுத்துக்கொள்ள ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் இத்திட்டத்தின்கீழ், 1997-98 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இது 1998-99 ஆம் ஆண்டில் ரூ.35.00 இலட்சமாகவும், 1999-2000 ஆண்டில் ரூ.50.00 இலட்சமாகவும் மேலும் உயர்த்தப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் ரூ.258.50 கோடி ஒதுக்கப்பட்டு 18,656 பணிகள் அட்டவணை 6-ல் தெரிவித்தவாறு எடுத்துக்கொள்ளப்பட்டன.

### அட்டவணை 6

**சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி மற்றும் செயல்திறன்**

| ஆண்டு | எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் | ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1997-1998 | 5379 | ரூ. 58.75 கோடி |
| 1998-1999 | 6728 | ரூ. 82.25 கோடி |
| 1999-2000 | 6549 | ரூ. 117.50 கோடி |

[2000 மே 10

04-04-2000 தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தபோது நடைபெற்ற பொது விவாதத்தின்போது 2000-2001 ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.60.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது. இதற்கென திட்ட மதிப்பீட்டில் ரூ.117.50 கோடி ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூடுதலாக ரூ.23.50 கோடி பின்னர் ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ், மொத்த ஒதுக்கீடு ரூ.141.00 கோடியாகும்.

*4. பெரியார் நினைவு சமத்துவபுரம்*

சகோதரத்துவம் மற்றும் சாதி, மத பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன், அனைத்து சமூகத்தினரும் ஒன்றுசேர்ந்து குடியிருக்கக்கூடிய அளவில், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் 1997-98 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசாணை எண் 171 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 22-10-1997-ன்படி 1997-98 ஆம் ஆண்டில் ரூ.17.50 கோடி செலவில் 50 சமத்துவபுரங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் ரூ.17.50 கோடி செலவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தலா 50 சமத்துவபுரங்கள் அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சமத்துவபுரம் ஒவ்வொன்றும் 100 குடியிருப்புகள் கொண்டதாகவும் மற்றும் ஒவ்வொரு வீடும் 5 சென்ட் நிலப்பரப்பிலும் கட்டித்தரப்படும்.

ஒவ்வொரு வீட்டின், கட்டுமானப் பரப்பு 264.64 சதுர அடி கொண்டதாக இருக்கும்.

வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கிட வைப்புத் தொகை அரசால் வழங்கப்படும்.

10 கி.மீ. சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமப்புறங்களிலிருந்து மாவட்ட வருவாய் அலுவலரை தலைவராகக் கொண்ட குழுவின் மூலமாக பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த குடும்பங்களுக்கு 40 வீடுகளும், மிகவும்



2000 மே 10]

பிற்படுத்தப்பட்டோருக்காக 25-ம் பிற்படுத்தப்பட்டோருக்காக 25-ம் இதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்காக 10-ம் ஒதுக்கப்படும்.

சமத்துவபுரம் அமைவதற்கான இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்ந்தெடுப்பார். அது அரசு நிலமாகவோ அல்லது தனியார் நிலமாகவோ இருக்கலாம். தனியார் நிலமானால் அதற்கான கிரயத் தொகை, ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

நிலத்திற்கான மனைப்பிரிவு செய்யப்பட்டவுடன் வழக்கமான விதிமுறைகளைப் பின்பற்றி பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும். மனை/வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது, பல்வேறு சமூகத்தைச் சார்ந்த பலதரப்பட்ட மக்கள் ஒன்றாக அடுத்தடுத்து வாழும் அளவில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

சமத்துவபுரங்களில் அமைக்கப்படும் வீடுகளுக்கான செலவினத்திற்கு, அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு வீட்டிற்கு ரூ.35,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமத்துவபுரங்களில் அமைக்கப்படும் அடிப்படைத் தேவைகளான சாலைகள், தெரு விளக்குகள் வடிகால்கள் குடிநீர் வசதி போன்றவை சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் உள்ளாட்சிகள் மூலம் நிதியினை ஒருமுகப்படுத்தி செயல்படுத்தப்படும். வீடுகளைப் பொறுத்தமட்டில், பயனாளிகளுக்கு ரூ.10,000/- வரை வீடுகட்ட கடன் வசதி செய்து தரப்படுகிறது. இது பயனாளிகளின் சுயபங்களிப்பாகவும் இருக்கலாம். மாவட்ட நிருவாகத்தினால் கட்டடங்களின் வடிவமைப்பில் புதிய கண்டுபிடிப்புகள், தேவையான வசதிகளை ஒருங்கிணைத்தல், சமுதாய சொத்துகளைப் பராமரிக்க நிறுவன அமைப்புகளை ஏற்படுத்துதல், சமத்துவபுரங்களில் உள்ள குடும்பங்களுக்குப் பொருளாதார உதவிகளை ஏற்படுத்துதல், இதன் மூலம் சமத்துவபுரங்களில் வாழும் அனைவரும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வழிவகை ஏற்படுத்துதல், மேற்சொன்ன கருத்துகளை, அருகில் உள்ள பகுதிகளுக்குப் பரப்புதல் போன்ற யுக்திகளுடன் தீவிரமாக செயல்முறைப்படுத்தப்படுகிறது. இதுவரை எடுக்கப்பட்ட 150 பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் 64 சமத்துவபுரங்கள் முடிக்கப்பட்டு, தொடங்கப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள 86 சமத்துவபுரங்களும் 2000-2001-க்குள் கட்டி முடிக்கப்படும்.

[2000 மே 10

### 5. அய்யன் திருவள்ளுவர் நூலகம் மற்றும் படிப்பகம்

ஊரக சமூகத்தில் செய்திகளை பரப்புவதிலும் மற்றும் அறிவை வளர்ப்பதிலும் கிராம நூலகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்நூலகங்கள் மக்களிடம் படிக்கும் பழக்கத்தை, குறிப்பாக இளைஞர்களிடம் ஏற்படுத்தியுள்ளதால் அவர்களின் திறனை நல்வழிக்குப் பயன்படுத்துவதுடன், அவர்களிடமிருந்து உருவாகும் புதுமையான எண்ணங்களும், நன்மைபயக்கும் யோசனைகளும் சமுதாயத்தின் நலத்தை மேம்படுத்த ஏதுவாக இருக்கும். எனவே, ஒவ்வொரு கிராம ஊராட்சியும் இத்தகைய வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பமாகும். இவ்விருப்பத்திற்கு ஏற்ப 16-01-2000 அன்று 12619 கிராம ஊராட்சிகளிலும் "அய்யன் திருவள்ளுவர் நூலகம் மற்றும் படிப்பகம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள நூலகக் கட்டடங்கள், வானொலி அறைகள், சமுதாயக் கூடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் இதர கட்டடங்கள் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய கட்டடங்கள் இல்லாத கிராமங்களில், 300 சதுர அடி பரப்பளவில் தற்காலிகமாக கட்டடங்களிலோ அல்லது பொதுமக்களால் இலவசமாக வழங்கப்படும் கட்டடங்களிலோ இந்நூலகம் இயங்கும். அரசு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு பொது நிதியிலிருந்தோ அல்லது ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் நிதியிலிருந்தோ நிரந்தர கட்டடங்கள் கட்டிக்கொள்ள கிராம ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் புத்தகங்கள, நாற்காலிகள், மேசைகள் மற்றும் அலமாரிகள் வாங்க ரூ.5,000 வீதம் ரூ.6.31 கோடி மொத்தமாக மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது. பொது நூலக இயக்குநரின் தலைமையிலான குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பதிப்பகங்களின் புத்தகங்களை தாங்களே தேர்வு செய்து வாங்க கிராம ஊராட்சிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

### 6. மாவட்ட திட்டமிடல்

மாவட்டங்களில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மூலம் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம். இருப்பினும் அடிப்படை அமைப்பான கிராம அளவிலிருந்து



2000 மே 10]

மாவட்ட அளவில் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்கு உதவும் வகையில் இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில், 28 மாவட்டங்களில் மாவட்ட திட்டப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு மற்றும் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதில் மாவட்ட திட்ட குழுவிற்கு உதவுவதே மாவட்ட திட்டப் பிரிவின் முக்கிய பணியாகும். 1999-2000 ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் மாவட்ட திட்டப் பிரிவுகளுக்கு பயிற்சி மற்றும் திட்டம் தயாரிக்கும் வகையில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டிலும் ரூ.3 கோடி ஆண்டு திட்டம் தயாரிப்பதற்கும் மற்றும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## V. மத்திய அரசு உதவியுடன் கூடிய திட்டங்கள்

### 1. ஊரக வீட்டு வசதி திட்டங்கள்:

#### (அ) இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை இந்த அரசு ஒரு முதன்மையான திட்டமாகக் கருதுகிறது. மாநில அரசு, தனது பங்குத் தொகையுடன் தீப்பிடிக்காத சிமெண்ட் கான்கிரீட் கூரையுடன் வீடுகளைக் கட்டுவதற்கு ஒவ்வொரு வீட்டிற்கும், கான்கிரீட் கூரைக்காக ரூ.12,000/-ஐ கூடுதலாக அளிக்கிறது. எனவே, சுகாதார கழிவறை உட்பட வீட்டின் மதிப்பீட்டுத் தொகை சாதாரண பகுதியில் ரூ.32,000/- எனவும், கடினமான மற்றும் மலைப்பாங்கான பகுதியில் ரூ.34,000/- எனவும் உள்ளது. மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் (அ) புதிய வீடுகள் கட்டுதல் (ஆ) குடியிருக்க இயலாத கச்சா குடிசை வீடுகளை குடியிருக்க ஏற்ற வகையில் மேம்படுத்துதல் என இரு பிரிவுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. குடியிருக்க இயலாத வீடுகளை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.10,000/ எனவும், அதில் மத்திய அரசின் பங்கு ரூ.7,500/- எனவும் நிர்ணயித்திருந்தும், மாநில அரசு 1999-2000 ஆண்டில் தனது பங்கான ரூ.2,500/- உடன் கூடுதலாக ஒரு வீட்டிற்கு ரூ.22,000/- வீதம் நிதி அளித்து இலக்கீட்டின்படி அனைத்து வீடுகளையும் புதிய வீடுகளாகவே கட்டித் தந்துள்ளது. 1999-2000 ஆண்டில் 23,252 புதிய வீடுகளும், 15,589 குடியிருக்க இயலாத குடிசை வீடுகளை மேம்படுத்தி புதிய வீடுகளாகக் கட்டிக்

[2000 மே 10

கொடுக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் 31,179 புதிய வீடுகளை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருந்தாலும் முந்தைய ஆண்டுகளில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டினை எதிர்பார்த்து எடுத்துக்கொள்ளப்பட்ட 9,041 வீடுகளுக்காக, மாநில அரசால் வழங்கப்பட்ட முன்பணத்தை ஈடுசெய்ததுபோக, மாநில அரசால், சேமிப்பு நிதியிலிருந்து எடுக்கப்பட்ட 1,347 கூடுதல் வீடுகளையும் உள்ளடக்கிய நிலையில் 23,252 புதிய வீடுகளை மட்டுமே எடுத்துக்கொள்ள முடிந்தது. 2000-2001 ஆம் ஆண்டில் 31,000 புதிய வீடுகளும், குடியிருக்க இயலாத 15,589 குடிசை வீடுகளை மேம்படுத்தும் பணிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

### (ஆ) நூதனமான குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்.

உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய கட்டுமான பொருட்களும் மற்றும் செலவினத்தைக் குறைக்கக்கூடிய தொழில்நுட்பத்துடன் கூடிய சுடப்படாத செங்கல். எலிவலை முறை, ஓட்டின் மீது கம்பிவலை அமைத்து கான்கிரீட் போடுதல், பெர்ரோ சிமென்டினால் வேயப்பட்ட கூரை/கதவு, உட்புறம் காலியாக உள்ள சிமென்ட், செங்கல், எரி சாம்பலில் இருந்து தயாரிக்கப்படும் செங்கல், கான்கிரீட் நிலை போன்றவைகளும், குறைந்த செலவில், நிலைத்து நிற்கக்கூடிய வீடுகளை கட்டுதல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், மேற்கூறியவை இயற்கையான கிராம குடியிருப்பு சூழ்நிலையுடன் ஏற்புடையதாக இருக்கும். எனவே, இதுபோன்ற முயற்சிகளை ஊக்குவித்து மேம்படுத்த 1999-2000 ஆண்டில் மத்திய அரசு 6 மாவட்டங்களில், குடியிருப்பு மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. அவை, ஈரோடு (56), மதுரை (100), தஞ்சாவூர் (100), திண்டுக்கல் (100), காஞ்சிபுரம் (100) மற்றும் கடலூர் (100). இந்த ஆறு மாவட்டங்களின் சிறப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசின் மொத்த ஒதுக்கீடு ரூ. 281.45 இலட்சமாகும். 2000-2001 ஆம் ஆண்டில், மேலும் 6 மாவட்டங்களில் சிறப்புக் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### (இ) ஒருங்கிணைந்த குடியிருப்புத் திட்டம்

இத்திட்டம், மத்திய அரசால் 1999-2000 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஊரகப் பகுதிகளில் வசிக்கும்,



2000 மே 10]

ஆதிதிராவிடர், மலை ஜாதியினர், கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டோர் மற்றும் மிகவும் பின்தங்கிய வகுப்பினைச் சார்ந்த ஏழை மக்களுக்கு குடியிருப்பு வசதி அமைத்துத் தருவதோடு மட்டுமின்றி, குறிப்பிட்ட மாவட்டங்களில், குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில், குடியிருப்புப் பகுதியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். 1999-2000 ஆண்டில், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டாரத்திலும், பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் வட்டாரத்திலும், இத்திட்டம் செயல்படுத்தப்பட அனுமதிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ரூ.25.00 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில், திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி வட்டாரத்திலும் மற்றும் சில மாவட்டங்களில் ஒருசில வட்டாரங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### (ஈ) மானியத்துடன் கூடிய கடனுதவித் திட்டம்

வறுமைக் கோட்டிற்குச் சற்று அதிகமாக வருமானம் உள்ள குடும்பங்கள் பயன்பெற ஏதுவாக, இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், மானியம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்மூலம் வழங்கப்பட்டு செயல்படுத்தப்படும். ஒரு வீட்டிற்கான மானியத் தொகையான ரூ.10,000-ல் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படும். ரூ.32,000 வரையில் ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியான குடும்பங்களாகும். மானியத்தைத் தவிர, கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகள் மூலமாக, ரூ.40,000 வரை தகுதியுள்ள குடும்பங்கள் கடன் பெற்றுக்கொள்ளலாம். 1999-2000 ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 4,965 வீடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் 2000-2001 ஆம் ஆண்டு சற்று கூடுதலாக வீடுகளை எடுத்துக்கொள்ளும் அளவில் தொடரப்படும்.

### 2. ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டு கிராம அளவில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் என்று 1-4-1999 முதல் நடைமுறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், தேவையின் அடிப்படையில்

மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

(i) இத்திட்டம், கிராம ஊராட்சி அளவிலேயே முழுவதுமாக செயல்படுத்தப்படும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இத்திட்டத்திற்கான நிதியை மாநிலத்தின் பங்கையும் சேர்த்து, நேரடியாக கிராம ஊராட்சிகளுக்கு வழங்கும். இத்திட்டத்திற்கான ஆண்டு செயல் திட்டம் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை கிராம ஊராட்சி செய்யும். 22.5 விழுக்காடு நிதியை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் தனிநபர் பயன்பாட்டுத் திட்டத்திற்கு கிராம ஊராட்சிகள் செலவு செய்யலாம்.

(ii) இத்திட்டத்தின்கீழ், கூலியானது மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி அல்லது மாநில அரசால் நிர்ணயிக்கப்படும் கூலி அடிப்படையில் இருக்கும்.

(iii) தொழிலாளர் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் பணிகளுக்கு தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கப்படும். இருப்பினும், 60:40 என்ற கூலி மற்றும் பொருள்களுக்கான விகிதாச்சாரம் இத்திட்டத்தின்கீழ் தளர்த்தப்பட்டுள்ளது.

(iv) கிராம சபையின் ஒப்புதலுடன் ரூ.50,000 வரையிலான பணிகளை கிராம ஊராட்சிகளே அனுமதித்து நிறைவேற்றலாம். இதற்கு வெளி நிருவாக அனுமதி பெறத் தேவையில்லை.

(v) நிருவாக மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்காக ஆண்டுக்கு ரூ.7,500 அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 7.5 விழுக்காடு இதில் எது குறைவோ அதனை கிராம ஊராட்சிகள் செலவு செய்யலாம்.

(vi) இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட சொத்துகளைப் பராமரிக்க, ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 15 விழுக்காடு வரை கிராம ஊராட்சிகள் பயன்படுத்தலாம்.

(vii) கிராம ஊராட்சிகளுக்கு உச்சவரம்பு ஏதுமின்றி மக்கள் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைப்படி, மாநில அரசு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசால் ரூ.82.40 கோடியும், மாநில அரசு தனது பங்காக ரூ.27.47 கோடியையும் வழங்கியுள்ளது.



கழிவறை வசதியோடு கூடிய 960 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட மத்திய அரசு ரூ.30.30 கோடி அனுமதித்துள்ளது. அதில் மத்திய அரசின் பங்கு ரூ.9.23 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.21.07 கோடி. மாநில அரசு 2000-2001 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.27.47 கோடியை இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3. வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்:

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப்புற பகுதிகளில் வேலைவாய்ப்பு மிகவும் குறைவாக உள்ள காலங்களில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு கூலி தரக்கூடிய அளவில், கூடுதலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதாகும். இரண்டாவதாக, நிலையான சமூக மற்றும் பொருளாதார சொத்துகளை ஏற்படுத்தி அதன் வாயிலாக நீடித்த வேலைவாய்ப்பிற்கும் மற்றும் வளர்ச்சிக்கும் வழிவகை செய்வதாகும். இத்திட்டத்தின்கீழ், நிதியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் வழங்கும். இத்திட்டத்தின் 70 சதவிகித நிதி ஊராட்சி ஒன்றியங்களுக்கும், எஞ்சிய 30 சதவிகிதம் நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கும் அளிக்கப்படும். 1999-2000 ஆண்டில் 3,846 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 778 கி.மீ. தார்ச்சாலை பணிகள், 295 பள்ளிக் கட்டடங்கள், 752 பொது விநியோக மையக் கட்டடங்கள், 71 மதிய உணவு மையக் கட்டடங்கள் மற்றும் 86 சிறுபாசன மற்றும் நீர்வள ஆதாரப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 31-03-1998 முடிய தமிழ்நாடு மத்திய அரசிடமிருந்து கணிசமான நிதியினைப் பெற்று வந்துள்ளது. 1999-2000 ஆண்டில், மத்திய அரசு ரூ.90.97 கோடி வழங்கியுள்ளது. அத்துடன் மாநில அரசின் பங்கான ரூ.30.32 கோடி நிதியையும் சேர்த்து வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மார்ச் 2000-ல் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.15.00 கோடி கூடுதல் நிதியாக மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.30.32 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. ஊராட்சி அமைப்பு நடைமுறையை சிறப்பாகச் செயல்படுத்திய சில மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தெரிவு செய்யப்பட்டு, வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 20 சதவிகித நிதி பகிர்வில் இருந்து ஊக்க நிதியாக கூடுதல் நிதி ஒதுக்கீடுபெறத் தகுதியடைந்துள்ளது.

### 4. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்

ஆரம்ப காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் சுயவேலைவாய்ப்புத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் காலப்போக்கில், சுயவேலைவாய்ப்பு தொடர்புடைய கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம், மேம்படுத்தப்பட்ட இலவச தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம் போன்ற ஏனைய திட்டங்கள் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டன. ஊரகப் பகுதி ஏழை மக்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளிக்க, மேற்படி எல்லா திட்டங்களுமே, தனித்தனியாக ஒரு குறிப்பிட்ட நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், ஒட்டுமொத்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, மேற்கூறப்பட்ட பல திட்டங்கள் யாவும் தனித்தனி திட்டங்களாகக் கருதப்பட்டு செயல்படுத்தப்பட்டமையாலும், ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளாத நிலையில் ஒட்டுமொத்த நோக்கமான நீடித்த மற்றும் நிலைத்த வருவாயைப் பெருக்கும் நோக்கத்தின்பால் கவனம் செலுத்தாமலும், திட்டவாரியாக தனித்தனியாக இலக்கினை எய்தும் அளவிலேயே முக்கியத்துவம் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. இதனைத் தவிர்க்க, மத்திய அரசு அனைத்து சுயவேலைவாய்ப்புத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து திருத்தியமைக்க முடிவு செய்தது. இத்திட்டங்களுடன், மில்லியன் கிணறு திட்டமும் இணைக்கப்பட்டு, பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் ஒருமுகப்படுத்தப்பட்டு புதிய சுயவேலைவாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் ஏழை மக்களை சுயஉதவி குழுக்களாக அமைத்தல், பயிற்சி, கடன் உதவி, தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு மற்றும் விற்பனை வசதிகளை அமைத்துக்கொடுத்தல் போன்ற அனைத்து நோக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு திட்டமாகும். பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கீட்டினை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் அளிக்கின்றன. 1999-2000 ஆண்டில் மத்திய அரசு தனது பங்காக ரூ.54.11 கோடியும், மாநில அரசு தனது பங்காக ரூ.17.23 கோடியும் விடுவித்தது. மேலும், இணைக்கப்பட்ட முந்தைய பல்வேறு சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் பயன்படுத்தாது எஞ்சியிருந்த ரூ.31.28 கோடியில், சம்பந்தப்பட்ட முந்தைய திட்டங்களின்கீழ் உள்ள நிலுவை





இனங்களுக்காக தேவைப்பட்ட தொகையை பகிர்வு செய்த பின்னர், எஞ்சிய தொகையான ரூ.26.89 கோடியும் மேற்படி திட்ட நிதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. எனவே, மொத்தமாக ரூ.99.34 கோடி பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டது. இதில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிருவாகம் என்ற திட்டத்தின்கீழ், மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்கு உட்பட்ட அளவில் தேவைப்படும் பகுதி செலவினமும் அடங்கும். 1999-2000 ஆண்டில் 11,075 குழுக்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் இணைக்கப்பட்டன. அதில் முந்தைய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 3,851 குழுக்களும் அடங்கும். 91,472 குடும்பங்கள் பயன்பெறத்தக்க அளவில் 6,722 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6.50 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டது. 45,184 குடும்பங்கள் பயன்பெறத்தக்க அளவில் 3,043 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.31.61 கோடி சுயதொழிலில் ஈடுபட மானிய உதவியாக வழங்கப்பட்டது. மேலும் 18,163 தனி நபர்களுக்கு ரூ.12.43 கோடி மானிய உதவியாக வழங்கப்பட்டது. கிராமப்புற சமூக மேம்பாட்டின் பொருட்டும், சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் பொருட்டும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மகளிர் திட்டமும் மற்றும் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டமும் இணைந்து செயல்படுத்தப்படுகின்றது. உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், இத்திட்டத்தின்கீழ் விற்பனை வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. கிராமப்புற ஏழை மக்களால், உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு, 9-4-2000 தேதியன்று அம்பத்தூரில், மாண்புமிகு முதல்வர் அவர்களால் 'பூமாலை' எனும் வணிகப் பெயர் அறிவிக்கப்பட்டு, முதலாவது 'பூமாலை' வணிக வளாகமும், 'பூமாலை' வணிகச் சின்னமும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.14.64 கோடி இத்திட்டத்தின் விற்பனை வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

திறன் மற்றும் திறமையை வளர்த்தல் தொடர்பான பயிற்சி அளித்தல், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உள்ள மற்றொரு அம்சமாகும். மத்திய அரசால் அளிக்கப்படும் வழக்கமான ஒதுக்கீடான ரூ.54.99 கோடியைவிட அதிகமான நிதி ஒதுக்கீட்டினை 2000-2001 ஆம் ஆண்டில் பயன்படுத்த இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*5. பிரதமரின் ஊரக வளர்ச்சித் திட்டம்*

இத்திட்டம் மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களால் மாநிலங்களுக்கு மத்திய அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு அளிப்பதன்மூலம் கிராமங்களில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்வதற்காக, 2000-2001 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. (1) கிராமச் சாலைகள் (2) ஆரம்ப சுகாதாரம், ஆரம்பக் கல்வி, ஊரக வீட்டு வசதி, ஊரகக் குடிநீர் விநியோகம், ஊட்டச்சத்து முதலிய உட்பிரிவுகளைக் கொண்ட இதர திட்டப்பணிகள். மேற்காணும் பணிகள் ஊராட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. ஆரம்ப சுகாதாரம், ஆரம்பக் கல்வி, ஊரக வீட்டு வசதி, ஊரகக் குடிநீர் விநியோகம், ஊட்டச்சத்து முதலான திட்டப்பணிகள் குறித்து 2000-2001 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டிலுள்ள நிதி ஒதுக்கீடு ரூ.104.79 கோடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், மேற்கூறிய திட்டப்பணிகளின் பொருட்டு குறைந்தபட்சம், 5 திட்டங்களுக்கும் 15 சதவீதப்படி மொத்தம் 75 சதவீதம் மத்திய அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்திக்கொள்ள மாநில அரசு குறித்த வகையிலான முன்மொழிவுகளை அனுப்பி மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். எஞ்சியுள்ள 25 சதவிகித ஒதுக்கீட்டை மாநில அரசால் தீர்மானிக்கப்படும் பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

*6. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளை சீர்படுத்துதல்*

பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களை கிராமங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு, திட்டங்களை செயல்படுத்தும் அமைப்பு சிறப்பாக இருக்க வேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதை மேற்பார்வையிடுவதில், பல ஆண்டுகளாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் முதன்மை நிருவாகமாக முக்கியப் பங்காற்றி வருகின்றன. எனவே, மைய அரசு 1999-2000 ஆண்டு இந்த முகமைகளை வலுப்படுத்த முடிவு செய்துள்ளது. இந்த முகமைகளின் நிருவாகச் செலவினை, பல்வேறு திட்டங்களுக்கான நிதியில் பயன்படுத்தாமல் தனித் திட்டமாக செயல்படுவதற்கு வழங்கப்பட்டுள்ளது. தகுந்த பணியாளர் கொள்கை மூலம், இந்த முகமையின் செயல்பாடு தொழில்நுட்ப ரீதியாக



செயல்படத்தக்க வகையில் மாற்றி அமைக்கப்படும். தமிழக அரசு மைய அரசுக்கு, நிருவாக அமைப்பு குறித்து கருத்துரு அனுப்பியுள்ளது. இதன் அடிப்படையில், அதன் நடவடிக்கைகளைப் பொறுத்து, பெண்களுக்கான சுயவேலைவாய்ப்பு, கூலி வேலைவாய்ப்பு, பொறியியல், பகுதிமேம்பாடு, கண்காணித்தல், பகுப்பாய்வு, நிருவாகம் மற்றும் கணக்கு என்ற பிரிவுகளாக இருக்கும். இதுபோல், பணியாளர் மற்றும் நிதியமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து மாவட்டங்களும் நான்கு தொகுப்புகளாகப் பிரிக்கப்படும். தொகுப்பு (அ): ஐந்திற்கும் குறைவான வட்டாரங்கள் (ஒரு மாவட்டம்); தொகுப்பு (ஆ): ஆறிலிருந்து பத்து வரையான வட்டாரங்கள் (5 மாவட்டங்கள்); தொகுப்பு (இ): 11-லிருந்து 15 வரையான வட்டாரங்கள் (14 மாவட்டங்கள்); மற்றும் தொகுப்பு (ஈ): 16-க்கும் மேற்பட்ட வட்டாரங்கள் (8 மாவட்டங்கள்). இந்தப் புதிய நிருவாக அமைப்பு 2000-2001 ஆம் ஆண்டில் வலுப்படுத்தப்படும். 1999-2000 ஆண்டிற்கு நிருவாகச் செலவினத்திற்காக ரூ.8.08 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. பணியாளர் கொள்கை பற்றி முடிவெடுக்க குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

*7. ஊரக சுகாதாரம்*

*(அ) சீரமைக்கப்பட்ட மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம்*

1999-2000-ல் மத்திய அரசு மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டத்தை சீரமைத்து இத்திட்டத்தை நிறைவேற்ற புதிய வழிகாட்டு நெறிமுறையை வெளியிட்டது.

மாற்றியமைக்கப்பட்ட கிராம துப்புரவுத் திட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு திட்டங்கள் முக்கிய அம்சங்களாகும்:—

(i) முழுமையான துப்புரவுத் திட்டம்

(ii) ஒதுக்கீடு அடிப்படையிலான திட்டம்

(i) முழுமையான துப்புரவுத் திட்டம் மக்களின் பங்கேற்போடு, தேவையின் அடிப்படையிலான அணுகுமுறையை வெளிப்படுத்துவதோடு, கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தகவல் தொடர்பு திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. கிராம மக்கள் தொகையில் (இத்துப்புரவுத் திட்டத்தின்கீழ்) குறைந்தபட்சம் 80 விழுக்காடு மக்கள் பயன்பெறும் வகையில், 3 ஆண்டுகளுக்குள்ளாக ஒவ்வொரு திட்டமும்

[2000 மே 10

*24 மாதங்களில் முடிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினங்களை மத்திய அரசும், மாநில அரசும் 80:20 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. ஆனால், பள்ளிக்கூட துப்புரவுத் திட்டத்ினை செயல்முறைப்படுத்துவதற்கான செலவினத் தொகையை 60:20:20 என்ற விகிதத்தில் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பயனாளிகள்/ஊராட்சிகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1999-2000 ஆண்டில் இத்திட்டம் கடலூர், வேலூர், பெரம்பலூர், கோவை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. ரூ.5.14 கோடி கீழ்க்கண்ட மாவட்டங்களுக்கு மத்திய அரசு முதல் கட்டமாக வழங்கியுள்ளது.*

**அட்டவணை 7**

***1999-2000** ஆண்டு ஒட்டுமொத்த சுகாதார இயக்கத்திற்காக உருவாக்கப்பட்ட நிதி*

| வரிசை எண் | மாவட்டத்தின் பெயர் | மத்திய அரசின் முதல் விடுவிப்பு | மாநில அரசின் முதல் விடுவிப்பு | மொத்த திட்ட நிதி |
|---|---|---|---|---|
| 1. | கடலூர் | 222.870 | 76.725 | 299.595 |
| 2. | கோயம்புத்தூர் | 154.100 | 53.190 | 207.290 |
| 3. | பெரம்பலூர் | 45.820 | 15.696 | 61.516 |
| 4. | வேலூர் | 90.880 | 34.866 | 125.746 |
| | மொத்தம் | 513.670 | 180.477 | 694.147 |

(ii) *ஒதுக்கீடு அடிப்படையிலான திட்டம், குறியீட்டு இலக்கை அடிப்படையாகக் கொண்டது. 1999-2000-ல் 136132 தனிநபர் கழிப்பறைகளும், மகளிர்க்கான 70 துப்புரவுக் கட்டடங்களும், பள்ளிகளுக்கான 242 துப்புரவுக் கழிப்பிடங்களும் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டன. இத்திட்டத்திற்காக மத்திய அரசு, மாநில அரசு பயனாளிகள்/ஊராட்சிகள் பங்களிப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது.*



2000 மே 10]

**அட்டவணை 8**

| வரிசை எண் | இனம் | பகுதித் தொகை | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | பயனாளிகள்/ ஊராட்சிகளின் பங்கு |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாயில்) | | |
| 1. | தனிநபர் சுகாதாரக் கழிப்பறை | (அ) 0625 | 375/- | 125/- | 125/- |
| | | (ஆ) 626-1000 | 250/- | 250/- | 500/- |
| | | (இ) 1000-க்கு மேல் | .. | .. | .. |
| 2. | பள்ளி சுகாதாரம் | 20,000/- | 12,000/- | 6,000/- | 2,000/- |
| 3. | மகளிர்க்கான சுகாதாரக் கட்டடம் | 1,00,000/- | 40,000/- | 40,000/- | 20,000/- |

*1999-2000 ஆண்டில் ஒதுக்கீடு அடிப்படையிலான திட்டத்தின்கீழ் ரூ. 9.39 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு மாநில அரசின் ரூ.9.35 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.*

*(ஆ) "டேனிடா" உதவிபெறும் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்* **(WASDEP)**

*டேனிடா திட்டம் கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களில் உடல்நலம் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் அக்டோபர் 1996-ல் தொடங்கியது. இத்திட்டத்திற்கான பங்கேற்பு பின்வருமாறு உள்ளது.*

[2000 மே 10

(அ) "டேனிடா" ரூ.33.60 கோடி
(ஆ) தமிழக அரசு ரூ.5.46 கோடி
(இ) ஊராட்சிகள் ரூ.3.91 கோடி

1999-2000 ஆண்டில், திருத்தப்பட்ட மதிப்பீடாக ரூ.8.06 கோடி முன்மொழியப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 8,358 வீட்டு கழிப்பறை பணிகளும், 241 நிறுவனக் கழிப்பறை பணிகளும், 119 குடிநீர் திட்டப் பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு 4749 வீட்டுக் கழிப்பறைகளும், 84 நிறுவன கழிப்பறைகளும், 73 குடிநீர் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடாக ரூ.10.56 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 9

"டேனிடா" உதவிபெறும் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்ட முன்னேற்றம் (பணி/நிதி)

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டம் | குடிநீர் | | தனிநபர் வீட்டுக் கழிப்பறை | | நிறுவனக் கழிப்பறை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1. | கடலூர் | 24 | 77.39 | 2054 | 63.46 | 26 | 29.78 |
| 2. | விழுப்புரம் | 49 | 154.23 | 2695 | 101.03 | 58 | 63.14 |
| | மொத்தம் | 73 | 231.62 | 4749 | 164.49 | 84 | 92.92 |

**8. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம், மத்திய அரசால் 1993 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை மற்றும் மாநிலங்களவை) தங்களுடைய தொகுதியில் வளர்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காக, ஒவ்வோர் ஆண்டும் தற்போது இரண்டு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக



2000 மே 10]

செயல்படுத்தப்படுகிறது. சென்னையைப் பொறுத்தவரையில், இத்திட்டம், மாநகர ஆணையர்மூலம் செயல்படுத்தப்படுகிறது. 1996-97, 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் பின்வரும் எண்ணிக்கையிலான பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அட்டவணை-10

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் முன்னேற்றம் (1996-97 முதல் 1999-2000 ஆண்டு வரை)

| ஆண்டு | விடுவிக்கப்பட்ட தொகை ரூ. கோடியில் | எடுக்கப் பட்ட பணிகள் | முடிக்கப் பட்ட பணிகள் | நிலுவையில் உள்ள பணிகள் |
|---|---|---|---|---|
| 1996-1997 | 57.00 | 4171 | 4170 | 1 |
| 1997-1998 | 57.00 | 3227 | 3182 | 45 |
| 1998-1999 | 111.00 | 4710 | 4275 | 435 |
| 1999-2000 | 82.50 | 5040 | 1670 | 3370 |

தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்களும், 18 மாநிலங்களவை உறுப்பினர்களும் உள்ளனர். இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.57 கோடி வழங்குகிறது. 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், மத்திய அரசு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இத்திட்டத்திற்கான நிதியினை ரூ. 1.00 கோடியில் இருந்து ரூ.2.00 கோடியாக உயர்த்தியது. இதன்மூலம் 2000-2001 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசிடமிருந்து ரூ.114 கோடி கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், ஒரு தொடர் திட்டமாதலால் இருப்பில் உள்ள தொகையில் 50 விழுக்காட்டிற்கு மேலாக நிதி செலவழிக்கப்பட்டிருந்தால் அடுத்த தவணைத் தொகையை விடுவிக்க, மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும். மாநில அளவில் எடுக்கப்பட்ட தீவிர ஒருங்கிணைப்பால் கடந்த 1999-2000 ஆண்டில் மட்டும் 1998-1999 ஆம் ஆண்டிற்கு ரூ.55.00 கோடியும், 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.82.50 கோடியும் ஆக மொத்தம் ரூ. 137.50 கோடி பெறப்பட்டுள்ளது. தேசிய அளவில் பிற மாநிலங்கள் பெற்ற

தொகையைவிட, தமிழ்நாடு அரசு அதிகமாக நிதியைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2000-2001 ஆம் ஆண்டிலும் இததிட்டம் தீவிரமாகக் கண்காணிக்கப்படும்.

**9. தேசிய கரிம வாயுத் திட்டம்**

இத்திட்டம், முற்றிலும் மத்திய அரசால் நிதி உதவி வழங்கப்படும் திட்டமாகும். காடுகள் அழிவிலிருந்து தடுப்பதும், மக்கள் எளிதில் பயன்படுத்தக்கூடிய மரபுசாரா எரிசக்தி வளங்கள் உபயோகப்படுத்துவதை ஊக்கப்படுத்துவது போன்ற நோக்கத்தைக் கொண்ட இத்திட்டம் மரபுசாரா எரிசக்தியை வழங்குவதோடு, சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் இயற்கை வளமுள்ள உரங்கள் உற்பத்தியையும் ஊக்குவிக்கும். தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் 1,764 கலன்களும், 1998-99 ஆம் ஆண்டில் 1,495 கலன்களும் அமைக்கப்பட்டன. மத்திய அரசு 1500 கலன்கள் அமைக்க வேண்டுமென இலக்கு நிர்ணயித்திருந்தது. மார்ச் மாதம் 2000 வரை 1,453 கலன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. 1999-2000 ஆண்டிற்கு ஒரு கலன் அமைப்பதற்கு ரூ. 2,000 வீதம் ரூ. 36 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**10. தேசிய மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்பு**

இத்திட்டம், மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். கிராமப்புறப் பெண்களின் சிரமங்களை குறைக்கவும், காடுகளின் அழிவைத் தடுக்கவும், அடுப்பறைகளில் இருந்து புகை வருவதைத் தடுப்பதற்கும் மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்பை நல்லமுறையில் பயன்படுத்தவும், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டுவரை 20 இலட்சம் அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டிற்கு, மத்திய அரசு 60,000 புகையில்லா அடுப்புகளை அமைப்பதற்கு ரூ. 36.00 இலட்சம் வழங்கியதில், 86,553 புகையில்லா அடுப்புகள் கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆண்டிலும் மத்திய அரசின் நிதி உதவியுடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வழங்கிய ரூ. 36.00 இலட்சத்தில், இதுவரை 61,291 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



## VI. பத்தாவது மற்றும் பதினொன்றாவது நிதிக் குழு மானியம்

பத்தாவது நிதிக்குழு மானியமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1996-97 ஆம் ஆண்டு முதல், 1999-2000 ஆண்டு வரை, ஒவ்வோர் ஆண்டும் ரூ. 71.83 கோடி வழங்கப்பட்டுள்ளது. இம்மானியம் மூலதனப் பணிகளை மட்டும் மேற்கொள்ள வழங்கப்படுகிறது. பதினொன்றாவது நிதிக் குழு தனது இடைக்கால அறிக்கையில் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியத்தை 50 விழுக்காடு அதிகரித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இது ஏற்கப்படும் பட்சத்தில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ. 107.74 கோடி கிடைக்கும்.

## VII. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசின் மானியம்

கடந்த 3 ஆண்டுகளில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (1997-98 முதல் 1999-2000 வரை) ஆண்டிற்கு மாநில அரசு, சேர்மம் "ஆ" வருவாயில் 8 விழுக்காடு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 369.28 கோடியும், 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.453.73 கோடியும், 1999-2000 ஆண்டிற்கு ரூ. 455.06 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ. 59.45 கோடியும், 1998-99 ஆம் ஆண்டுக்கு ரூ. 73.24 கோடியும், 1999-2000 ஆண்டுக்கு ரூ. 73.46 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு, மூன்றடுக்கு ஊராட்சிகளான கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு, முறையே, 45:45:10 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் இவ்விகிதாச்சாரம் முறையே 47:45:8 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய 8 விழுக்காடு பங்காக ரூ.1,036 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக வழங்கப்பட்ட ரூ. 93.27 கோடியையும் சேர்த்து மொத்தம் ரூ.577.80 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளான 12,619 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்ட ஊராட்சிகளுக்கு நிபந்தனையற்ற நிதி 47:45:8 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

[2000 மே 10

அட்டவணை 11

தமிழ்நாடு அரசு மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரித்து வழங்கப்பட்ட நிதி விவரம்

(ரூபாய் கோடியில்)

| தலைப்பு | 1997-98 கணக்குகள் | 1998-99 கணக்குகள் | 1999-2000 திருத்திய மதிப்பீடுகள் | 2000-2001 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| ஈடுசெய் மற்றும் ஊக்க நிதி | 59.4537 | 73.2469 | 73.4633 | 93.2777 |
| நிபந்தனையற்ற நிதி | 309.8305 | 380.4769 | 381.6011 | 484.5260 |
| மொத்த நிதி உதவி | 369.2842 | 453.7238 | 455.0644 | 577.8037 |

அ. சமூகக் கல்வி மானியம்

தகவல் தொடர்பை மேம்படுத்தும் பொருட்டு, "தமிழரசு", "திட்டம்", "பஞ்சாயத்துச் செய்தி" மற்றும் "பஞ்சாயத்து ராஜ்யம்" போன்ற பத்திரிகைகளை அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளிலும் வாங்குவதற்கு ஏதுவாக, அரசு மானியமாக நிதியுதவி அளிக்கிறது. இந்த மானியம் அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சி மற்றும் குடியரசு தின அலங்கார ஊர்திகள் அணி வகுப்புக்கும் பயன்படுத்தப்படுகிறது. 1995-96 ஆம் ஆண்டு இத்தலைப்பின்கீழ், வழங்கப்பட்ட ரூ. 32.90 இலட்சம் 1996-97 ஆம் ஆண்டு ரூ. 34.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு ரூ. 31.22 இலட்சமும், 1999-2000 ஆண்டில் ரூ. 34.00 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 27.84 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2000 மே 10]

ஆ. ஊரக மருந்தக மானியம்

ஊரக மருந்தகங்களை நிறுவி, பராமரிப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும், மேற்படி ஊரக மருந்தகங்களுக்காக மேற்கொள்ளும் ஆண்டு செலவினத்தில் ரூ. 5,400/- உச்சவரம்புக்கு உட்பட்டு, 50 சதவிகித செலவினத்தை அரசு மானியமாகப் பெறுகிறது. இந்த மானியம், ஏற்கெனவே ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் முழுநேர மருந்தகங்களுக்கு ரூ. 2,040/- ஆக உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தொடங்கப்படவுள்ள மருந்தகங்களைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமைக்கேற்ப, 100 சதவிகித மானியம் அரசால் வழங்கப்படுகிறது. இதுகுறித்து, அரசாணை பல்வகை எண் 1168, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 18-7-1983-ல் உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் ரூ. 8.14 இலட்சம் இத்தலைப்பின்கீழ் வழங்கப்பட்டது. 2000-2001 ஆம் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 8.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இ. ஊரகக் குடிநீர் வழங்கல்

1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டுக்கும் தேவைப்படும் குடிநீர் விநியோகக் குழாய்களை விரிவுபடுத்த ரூ. 100 இலட்சம் விடுவிக்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈ. மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம்

1996-97 ஆம் ஆண்டில் மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டு, இதனால், ஏற்கெனவே பணியிழந்த கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களது சேவையை, முதியோர் கல்வியைப் பரப்புவதிலும், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்கு உணர்த்தி விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், தமிழ்நாடு மின்வாரியத்துடன் தொடர்புகொண்டு தெருவிளக்குகளைப் பராமரிப்பதிலும், சத்துணவு மையங்களைப் பராமரிப்பதிலும் மற்றும் பல்வேறு பிற பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளும்பொருட்டு மீண்டும் இப்பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தற்போது, 8,008

ஆண்களும், 5,483 பெண்களும் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், கிராம ஊராட்சிகள், தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி புரிகின்றனர். இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்தர மதிப்பூதியம் ரூ. 500-லிருந்து ரூ. 750ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 12.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## VIII. பயிற்சித் திட்டங்கள்

ஊரக வளர்ச்சி செயல்திறனை மேம்படுத்தும்பொருட்டு, உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் திறமையை மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நிலைக்கு மேலாக உள்ள அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி மற்றும் ஒன்றிய பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி, பட்டுக்கோட்டை, தி.கல்லுப்பட்டி மற்றும் சத்திய விசயநகரம் ஆகிய இடங்களில் மொத்தம் 5 ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. "யூனிசெஃப்" நிதி உதவியுடன் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் பிற துறை அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு, திறமையை மேம்படுத்தும் பொருட்டு தீவிர பயிற்சி அளிக்க, பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டமானது, பயிற்சியாளர்கள் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டும், கலந்துரையாடல் மூலமாகவும், பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களை ஒருங்கிணைக்கும் பயிற்சி முறையைப் பின்பற்றியும் நடத்தப்பட உள்ளது. தீவிர பயிற்சி முகாம்கள் 2000-2001 ஆம் ஆண்டும் தொடரும்.



### அட்டவணை 12

***1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டுவரை மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம் மற்றும் ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள் மூலம் அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட விவரங்கள்***

| வருடம் | நிறுவனம் | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் | | ஊரக விரிவாக்க பயிற்சி நிலையம் | | | |
| | அலுவலர் | மக்கள் பிரிதி நிதிகள் | அலுவலர் | மக்கள் பிரிதி நிதிகள் | அலுவலர் | மக்கள் பிரதி நிதிகள் |
| 1996-1997 | 316 | - | 1391 | 238 | 1707 | 238 |
| 1997-1998 | 694 | 90 | 2131 | 73 | 2825 | 163 |
| 1998-1999 | 675 | 574 | 2364 | 150 | 3039 | 724 |
| 1999-2000 | 1573 | 294 | 4171 | 604 | 5744 | 898 |
| | 3258 | 958 | 10057 | 1065 | 13315 | 2023 |

## IX. 21 ஆம் நூற்றாண்டில் ஊரக வளர்ச்சி

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலமாகவும், கூலி வேலைவாய்ப்பளிக்கும் திட்டங்கள் மூலமாகவும் மற்றும் கிராமப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாகவும் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதையே முக்கிய குறிக்கோளாகக் கருதி இந்த அரசு பணியாற்றி வருகிறது. அவற்றின் மூலமாக, கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தில் விரைவான மறுமலர்ச்சியைக் கொண்டுவர முடியும் என நான் நம்புகிறேன். ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் செயலாக்கத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, அவற்றுக்குத் தேவையான அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் பகிர்ந்தளிப்பதில், நடைமுறைக்கு சாத்தியமான அணுகுமுறையை நாம்

[2000 மே 10

மேற்கொண்டுள்ளோம். கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு, நிலையான வருமானம் அளிக்கத் தக்க சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம், அக்குடும்பங்கள், வறுமைக் கோட்டைத் தாண்டிடவும், மற்றும் ஊரகப் பகுதிகளில் குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் பொது நலம், வீட்டு வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை, ஏற்படுத்தித் தருவதுமே நாம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளின் நோக்கமாகும். நாம் முழு அர்ப்பணிப்புடன் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் திட்டப் பணிகளின் செயலாக்க வேகத்திலும், தரத்திலும் குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 21 ஆம் நூற்றாண்டில், எதிர்காலத்தில் அடைய வேண்டிய நமது இலக்கினை அடையும் முயற்சியில், இந்த அனுபவங்கள் உரிய பாதையை வகுத்துக்கொள்ள உதவும்.

வறுமை ஒழிப்பு, உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவையே நம்முடைய முக்கிய குறிக்கோளாகும். வரும் ஆண்டுகளில், ஊரக உள்கட்டமைப்பு வசதிகளை, பல்வேறு மடங்காக அதிகரிக்கவும், கிராம வளர்ச்சியை ஒருங்கிணைக்கவும் மற்றும் கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை ஒருமுகப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கிராமப்புறங்களில் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்த நாம் எடுக்கும் இம்முயற்சிக்கு, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளையும் இந்த அரசு முழுமையாக ஈடுபடுத்தவுள்ளது. குடிக்க தண்ணீர், படிக்க பள்ளி, நடக்க பாதை, வசிக்க வீடு, பார்க்க வெளிச்சம், உயிர்காக்க சுகாதாரம் கிராமப் பகுதியில் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் இலட்சிய கொள்கையை நிறைவேற்றும் வரை நாங்கள் ஓயமாட்டோம்.



2000 மே 10]

## இணைப்பு II

[37-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**மானியக் கோரிக்கை எண் 48**

**குடிநீர் வழங்கல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு**

**2000-2001**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் போதுமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு தமிழக அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகின்றது. இந்தவகையில், குடிநீர் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி பெருமளவில் உயர்த்தப்பட்டதோடு, குடிநீர் திட்டங்களை செயலாக்குவதிலும், குடிநீர் வசதி முழுமையாக பெறாத குடியிருப்புகளில் திட்டங்களை நிறைவேற்றுவதிலும், செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளில் மொத்த மதிப்பீட்டிலும், கடந்த நான்கு ஆண்டுகளில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.842 கோடியாக உயர்ந்துள்ளது. இது 1995-96 ஆம் ஆண்டு, இத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகையான ரூ.213.82 கோடியைவிட பல மடங்கு அதிகமாக உள்ளது.

2. குடிநீர் திட்டங்களை செயலாற்றுவதின் பொறுப்பு, சென்னை மாநகரம் நீங்கலாக மாநிலத்தில் உள்ள மற்ற அனைத்துப் பகுதிகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் அதன் பிற நகரப் பகுதிகளுக்கு, குடிநீர் வழங்கும் பொறுப்பு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்விரு வாரியங்களும் 2000-2001-ல் நிறைவேற்ற உள்ள திட்டங்கள் பற்றிய குறிப்பு பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1971 ஆம் ஆண்டு சட்டப்பூர்வமாக உருவாக்கப்பட்ட அமைப்பு ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளல், திட்டம் வடிவமைத்தல், திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை

[2000 மே 10

சென்னை மாநகரம் நீங்கலாக, தமிழ்நாட்டிலுள்ள ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் செய்து வருகிறது. மேலும், கூட்டுக் குடிநீர் திட்டங்களை பராமரிக்கும் பொறுப்பினையும், அரசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது.

4. கடந்த பல ஆண்டுகளாக குடிநீர்த் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தியதின்மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைந்த அனுபவத்தைப் பெற்றுள்ளது. 2000 பொறியாளர்களும், அவர்களுக்கு உதவ 100 நில நீர் ஆய்வாளர்களும், 10000-க்கும் மேற்பட்ட தொழில் நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களும் தற்போது வாரியத்தில் உள்ளனர். இது தவிர, கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பினை செவ்வனே நிறைவேற்ற ஏதுவாக 40 ஆழ்துளையிடும் இயந்திரங்கள், குடிநீர் தரத்தினை சோதிக்கும் 30 குடிநீர் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் நன்முறையில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சிக் கூடங்கள் ஆகியவைகளும் வாரியத்தில் உள்ளன.

**ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்**

5. ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் மாநில அரசின் குறைந்த அளவு தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்றும் மற்றும் மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் மானியம் பெற்றும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிக் கழகம் (ஹட்கோ) மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கடனுதவி ஊரகப் பகுதிகளில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முக்கிய ஆதாரமாக உள்ளது.

6. தமிழ்நாட்டில் 1-4-1992 நிலவரப்படி, 66,631 ஊரகக் குடியிருப்புகள் இருந்தன. தேசிய அளவு கொள்கையான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் என்ற அடிப்படையில் மாநிலத்தில் ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வழங்கும் நிலையின் ஆண்டுவாரி விவரங்கள் பின்வருமாறு:



2000 மே 10]

| ஆண்டு | குடியிருப்புகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் மற்றும் அதற்கு மேலும் பெறுபவை) | பகுதியாக குடிநீர் வசதி பெற்றவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 1 லிட்டர் முதல் 40 லிட்டர் வரை பெறுபவை) | குடிநீர் வசதி பெறாதவை (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 0 லிட்டர்) | மொத்தம் |
| 1-4-1992 | 20375 | 44829 | 1427 | 66631 |
| 1-4-1993 | 23234 | 41970 | 1427 | 66631 |
| 1-4-1994 | 27002 | 38420 | 1209 | 66631 |
| 1-4-1995 | 30810 | 34790 | 1031 | 66631 |
| 1-4-1996 | 34459 | 32018 | 154 | 66631 |
| 1-4-1997 | 37155 | 29476 | — | 66631 |
| 1-4-1998 | 41655 | 24976 | — | 66631 |
| 1-4-1999 | 49629 | 17002 | — | 66631 |
| 1-4-2000 | 55929 | 10702 | — | 66631 |

மேலே உள்ள அட்டவணையை பார்க்கும்போது, தமிழகத்தில் குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகளே தற்போது இல்லை என்பது தெரிகிறது. 01-04-1992 முதல் 01-04-1996 வரையிலான நான்கு ஆண்டுகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 14,000 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில், 01-04-1996 முதல் 01-04-2000 வரையிலான நான்கு ஆண்டுகளில் 21,000 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த அட்டவணையின் மூலம் தெரிய வருகிறது.

2002 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள், பகுதியாக குடிநீர் வசதி பெறும் அனைத்து குடியிருப்புகளையும் முழுமையாகக் குடிநீர் வசதி பெறும் நிலைக்கு உயர்த்துவதே இந்த அரசின் இலட்சியமாகும்.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

7. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 1997-98 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த கிராமப்புற திட்டமாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ஒரு கிராம ஊராட்சியைத் தேர்வு செய்து அவ்வூராட்சியில் அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் வசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும் அமைத்துத்தர முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆகிய மூன்று ஆண்டுகளில் 636 கிராம ஊராட்சிகளில் 4,869 குடிநீர் வழங்கு திட்டங்கள் ரூ.179.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டு, 31-03-2000 வரை 3,320 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

## பெரியார் நினைவு சமத்துவபுரம்

8. தமிழ்நாடு அரசு, 1997-98 ஆம் நிதியாண்டு முதல் சாதி, மத பேதமின்றி சமத்துவ சமுதாயத்தை உருவாக்கி, மத நல்லிணக்கம், மனித நேயத்தை வளர்க்கும் நோககத்துடன் அனைத்துத் தரப்பினரும் சாதி, மத, இன வேறுபாடின்றி ஒற்றுமையுடன் சேர்ந்து வாழும் வகையில் பெரியார் நினைவு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆகிய மூன்று ஆண்டுகளில் மொத்தம் 90 பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 6.85 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 31-03-2000 வரை 70 பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

## புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம்

9. அதிக அளவு புளோரைடு கலந்த குடிநீரைப் பருகுவதால் மனிதனின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. புளோரைடு கலந்த நிலத்தடி நீர், தமிழகத்தில் சேலம், தருமபுரி, வேலூர், நாமக்கல், ஈரோடு, கரூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 1,288 ஊராட்சிகளில் அடங்கிய 3,555 குடியிருப்புகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த



குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர்த் திட்டங்கள் ரூ.132.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில், மொத்தம் 2,210 புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகள் 1,345 ஆகும்.

## பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்

10. அரசு துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆகியவைகள் அடங்கிய 18,511 அரசு பள்ளிகளுக்கு நாள் ஒன்றுக்கு, பள்ளி ஒன்றுக்கு 1,000 லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டு இதுவரையில் 2,536 பள்ளிகளுக்கு குடிநீர்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த ஆகும் மொத்த செலவு ரூ.18.51 கோடி ஆகும்.

## பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்தவுள்ள ஊரகக் குடிநீர்த் திட்டம்

11. ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியினால் முழு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள 'இலவசமாகக் குடிநீர் வழங்கும்' அணுகுமுறை கொள்கையை, பொதுமக்களை ஊரகக் குடிநீர்த்திட்டங்களில் ஒவ்வொரு நிலையிலும் பங்கேற்க வைக்கும் "தேவை அணுகு முறை" கொள்கையாக மாற்றுவது அவசியம் என மைய அரசு கருதுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு குடிநீர்த் திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவில் 10 விழுக்காடு பொதுமக்கள் தமது பங்காக செலுத்தவேண்டும். மீதமுள்ள 90 விழுக்காட்டினை மத்திய அரசு மானியமாக வழங்கும். இந்தத் திட்டம் தமிழகத்தில் மாதிரி மாவட்டங்களாகத் தெரிவு செய்யப்பட்ட கோயம்புத்தூர், வேலூர், பெரம்பலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் முதல் கட்டமாக 1999-2000 ஆண்டு முதல் செயல்படுத்த பூர்வாங்கப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினை செயல்படுத்த மேற்கண்ட நான்கு மாவட்டங்களுக்கும் தலா ரூ.40.00 கோடி மைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2000 மே 10

மேலே குறிப்பிட்ட நான்கு மாதிரி மாவட்டங்களிலும் மாவட்ட, கிராம அளவிலான குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் குடிநீர்/சுகாதாரப் பணிகளைச் செயல்படுத்தலாம்.

* அடிகுழாய் அமைத்தல்.
* புதிய குடிநீர் ஊரணி அமைத்தல்.
* ஆழ்துளைக் கிணறு அமைத்தல் மற்றும் மின்மோட்டார் அறை கட்டுதல்
* புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் புதிய தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து புதிய குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
* உபயோகத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து புதிய குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
* உபயோகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் பழுது இருந்தால் அதனை சரி செய்தல்.
* கூடுதல் குடிநீர்க் குழாய்கள் பதித்தல்.
* பள்ளிகள் சத்துணவுக் கூடங்கள்/சமுதாயக் கூடங்கள் போன்ற பொது இடங்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.
* பள்ளிகளில் கழிவறை கட்டுதல்.
* பொதுக் கழிவறை கட்டுதல்.
* கழிவறைகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுத்தல்.

திட்டங்கள் குறித்த ஆய்வு அறிக்கை மற்றும் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரித்தல் போன்ற பூர்வாங்கப் பணிகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன. 2000-2001 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2000 மே 10]

**நகரகக் குடிநீர்த் திட்டம்**

12. அதிக அளவில் நகர்ப்புற வளர்ச்சியடைந்த மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மொத்தமுள்ள 718 நகரங்களில் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) 5 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகளும்) அடங்கும்.

13. நகரக குடிநீர்த் திட்டங்களை பொறுத்தவரையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய குடிநீர் அளவு கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| மாநகராட்சிகள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் |
| நகராட்சிகள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் |
| பேரூராட்சிகள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் |

நகரகப் பகுதிகளில் மேற்குறிப்பிட்ட வரையறைப்படி குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

14. 1999-2000 ஆண்டிலிருந்து நகரக குடிநீர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு முறையில் பெரிய அளவிலான மாற்றங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதுநாள் வரை மாநகராட்சி மற்றும் நகராட்சி குடிநீர் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு முழுவதும் கடனாகவும், பேரூராட்சி குடிநீர்த் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு, மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும், மீதமுள்ள இரண்டு பங்கு கடனாகவும் பெற்று குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. குடிநீர் திட்டங்களுக்கு செலவழிக்கப்படும் முதலீட்டுத் தொகை முழுவதும் கடன் உதவி பெற்று செயல்படுத்தப்படுவதால் கடனை திருப்பி செலுத்தும் வகையில் நிதி ஆதாரம் திரட்ட இயலாத நிலை நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படுகிறது. பெரும்பாலான நகர உள்ளாட்சி அமைப்புகளின் நிதியாதாரம் நலிவுற்ற நிலையில் இருப்பதால், நகரக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஆகும் செலவினை தானே செலுத்தும் நிலையில் இல்லை. இதனால், நகர உள்ளாட்சி அமைப்புகள் கடன் உதவி பெற்று குடிநீர் திட்டங்களை செயல்படுத்துகின்றன. அவ்வாறு கடன் உதவி பெற்று குடிநீர் திட்டங்கள் மேற்கொண்ட நகர உள்ளாட்சி அமைப்புகள் பல இன்று பெரும் கடன் சுமையால் பாதிக்கப்பட்டு. கடனை திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் உள்ளன. இத்தகைய நிலையில், 1999-2000-ம் ஆண்டில் அரசால்

அறிமுகப்படுத்தப்பட்ட 'பொன்விழா ஆண்டு குடிநீர்த் திட்டம்' தமிழகத்திலுள்ள நகர உள்ளாட்சிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

### பொன் விழா திட்டம்

15. நகரகக் குடிநீர்த் திட்டங்களுக்கு நிதி நிலை சாத்தியமாகும் வகையில் போதுமான அளவிற்கு மானியம் தர பொன் விழாத் திட்டத்தில் வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1999-2000 ஆண்டில் 12 நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.50.00 கோடி சிறப்பு உதவியாக (மானியம்) வழங்கியுள்ளது. 37 நகரங்களுக்கான குடிநீர் திட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.188.67 கோடியாகும். அனைத்துத் திட்டங்களிலும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து நகரகக் குடிநீர் திட்டங்களுக்கு பொன் விழாத் திட்ட நிதி உதவி அடிப்படையையே கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளது.

பொன் விழாத் திட்டத்தின்படி 2000-2001 ஆம் ஆண்டிற்கு நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு வழங்கும் மானியத்தை ரூ.80.00 கோடியாக உயர்த்தியுள்ளது. இந்த ஒதுக்கீட்டினைக் கொண்டு மொத்தம் ரூ.250.00 கோடி மதிப்பீட்டிற்கும் மேலாக நகரகக் குடிநீர்த் திட்டப் பணிகளை 2000-2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### விரைவுபடுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டம்

16. மைய அரசு 20,000 மக்கட் தொகைக்கு உட்பட்ட நகரங்களில் குடிநீர் திட்டங்களை செயல்படுத்த 'விரைவுபடுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டம்' என்னும் பெயரில் ஒரு சிறப்புத் திட்டத்தினை அமல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் திட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடு மைய அரசும், 45 விழுக்காடு மாநில அரசும், எஞ்சிய 5 விழுக்காட்டினை பயன்பெறும் உள்ளாட்சி அமைப்பும் ஏற்கவேண்டும். தமிழகத்தில் 26 நகரங்களில் குடிநீர் திட்டப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



### தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டம்

17. மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் ரூ.30.28 கோடி மதிப்பீட்டில் காவிரி ஆற்றில் மாசினைத் தவிர்க்கும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. பள்ளிப்பாளையம், குமாரபாளையம், பவானி, ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய மாசுப்படும் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள இதர நதிகளில் ஏற்படும் மாசினைத் தவிர்க்கும் திட்டங்களுக்கும் மைய அரசின் ஒத்துழைப்பு கோரப்படும்.

### கடந்த நான்கு ஆண்டுகளில் மேற்கொண்ட கொள்கை முயற்சிகள் மற்றும் சாதனைகள்:—

18. கடந்த நான்கு ஆண்டுகளில் குடிநீர் வழங்கும் பணியின் செயல்திறனை மேம்படுத்த அரசு பல கொள்கை முயற்சிகளை மேற்கொண்டது.

* தமிழகத்தில், ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை 1996-97-லேயே, 'குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகளே இல்லை' என்ற நிலையை உருவாக்கியது.
* கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களில் ஊரகப் பகுதிகளை இணைக்க பிரதான குழாயிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்குள் ஊரகக் குடியிருப்பு இருக்க வேண்டும் என்கிற வரம்பு நீக்கப்பட்டு, தேவையை மட்டும் கருத்தில் கொண்டு கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் இணைக்க முடிவு செய்தது.
* ஊரகப் பகுதிகளுக்கு மின் மோட்டார் பொருத்தி குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஒரு குடியிருப்பில் மக்கள்தொகை 300க்கு மேல் இருக்கவேண்டும். என்கிற வரம்பை தளர்த்தி, ஒரு குடியிருப்பில் மக்கள்தொகை 150-க்கு மேல் இருந்தாலே போதும் என மாற்றியமைத்தது.
* இதுவரை நகரகப் பகுதிகளில் மட்டுமே இருந்துவந்த 'குடிநீர் வீட்டு இணைப்பு' வசதியினை ஊரகப் பகுதிகளிலும் விரிவுபடுத்தியது.

* உள்ளாட்சிகள் குடிநீர் கட்டணம் வசூலித்து, அதற்குத் தனி கணக்கு வைத்து, அவ்வாறு வசூலித்தத் தொகையை அவ்வுள்ளாட்சிகளில் இயங்கிவரும் குடிநீர் திட்ட பராமரிப்புக்கு மட்டுமே பயன்படுத்த வழிவகை செய்தது.
* இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் அளவினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக உயர்த்தியது. இவ்வாறிருக்கையிலும், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர்கள் குடிநீர் வழங்க நீராதாரம் இல்லாத பகுதிகளில் 40 லிட்டர்கள் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும்.
* குடிநீர் ஆதாரங்களிலிருந்து பெறும் குடிநீரை ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதனை செய்ய தற்போது உள்ள மாவட்ட அளவிலான குடிநீர் சோதனைக் கூடங்களை மேம்படுத்த ரூ.1 கோடி செலவிடுதல்.
* செயலாக்க அறிவு மற்றும் பணித்திறனை மேம்படுத்தும் வகையில் மனித வள மேம்பாட்டுப் பிரிவு அமைத்து, இதுவரை 5705 வாரிய அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தது.
* இதுவரை தோராய மதிப்பீட்டினை மையமாக வைத்து குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு வந்த முறையை மாற்றி, விரிவான மதிப்பீடு தயார் செய்த பின்பே நிர்வாக ஒப்புதல் வழங்கப்படும் என்கிற நிலைக்கு மாற்றியது. இதனால் நிர்வாக ஒப்புதல் வழங்கியபின் திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் தாமதத்தை குறைக்கிறது.
* குடிநீர்த் திட்டங்களில் செயலாக்கத்தின் வேகம் மற்றும் திறனை மேம்படுத்தும் நோக்கோடு 'ஒட்டுமொத்த ஒப்பந்தப்புள்ளி' (டர்ன் கீ) முறையை 1999-2000 ஆண்டு முதல் ஊரக மற்றும் நகரகக் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அமல்படுத்தியது.
* அதிக அளவில் திட்டங்களை உருவாக்கவும், திட்டத்தினை துரிதப்படுத்தும் நோக்கோடும், கள ஆய்வு, வடிவமைப்பு, விரிவான மதிப்பீடு தயாரிக்கும் பணிகளை ஏற்க, தேவைப்படும் நேர்வுகளில் தகுதிவாய்ந்த கலந்தறிதற்குரியவர்களை (கன்சல்டன்ட்) பணியில் அமர்த்துதல்.



**பணி முன்னேற்றம்:**

**ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்**

19. வாரியத்தின் செயலாக்கம் கடந்த நான்கு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. ஊரகக் குடிநீர்த் திட்டத்தினைப் பொருத்தவரையில் 1992-1993 முதல் 1999-2000 வரை ஆண்டுவாரியாக குடிநீர் வழங்கப்பட்ட குடியிருப்புகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | பயன்பெற்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1992-93 | 2559 |
| 1993-94 | 3751 |
| 1994-95 | 3808 |
| 1995-96 | 2954 |
| 1996-97 | 2696 |
| 1997-98 | 4531 |
| 1998-99 | 7974 |
| 1999-2000 | 6300 |
| 2000-2001 | 6500 (எடுத்துக் கொள்ளப்படவுள்ள குடியிருப்புகள்) |

**நகரகக் குடிநீர்த் திட்டங்கள்:**

20. நகரகக் குடிநீர்த் திட்டத்தினைப் பொறுத்தவரையில் 1992-93 முதல் 1999-2000 வரை குடிநீர் வழங்கப்பட்ட நகரங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

[2000 மே 10

| ஆண்டு | திட்டங்கள் முடிக்கப்பட்ட நகரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1992-93 | 26 |
| 1993-94 | 32 |
| 1994-95 | 28 |
| 1995-96 | 18 |
| 1996-97 | 26 |
| 1997-98 | 30 |
| 1998-99 | 42 |
| 1999-2000 | 42 |
| 2000-2001 | 48 (பயன்பெறவுள்ள நகரங்கள்) |

**நிதி ஒதுக்கீடு:**

*ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்*

21. ஊரகக் குடிநீர் வழங்கும் பணிக்கென 1992-93 முதல் 1999-2000 வரை ஆண்டுவாரியாக செலவிடப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1992-93 | 67.65 |
| 1993-94 | 70.36 |
| 1994-95 | 99.49 |
| 1995-96 | 69.93 |
| 1996-97 | 86.62 |
| 1997-98 | 220.55 |
| 1998-99 | 324.12 |
| 1999-2000 | 372.50 |
| 2000-2001 | 500.00 (நிதி ஒதுக்கீடு) |



2000 மே 10]

**நகரகக் குடிநீர்த் திட்டங்கள்**

22. நகரகக் குடிநீர் வழங்கும் பணிக்கென 1992-93 முதல் 1999-2000 வரை ஆண்டுவாரியாக செலவிடப்பட்ட தொகை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1992-93 | 20.41 |
| 1993-94 | 43.34 |
| 1994-95 | 29.12 |
| 1995-96 | 36.00 |
| 1996-97 | 40.65 |
| 1997-98 | 78.63 |
| 1998-99 | 83.72 |
| 1999-2000 | 102.01 |
| 2000-2001 | 150.00 (நிதி ஒதுக்கீடு) |

*செயற்கை முறையில் நீர் ஆதாரத்தைப் பெருக்கும் திட்டம்*

23. நமது மாநிலத்தில் பெருவாரியான ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் நிலத்தடி நீரை ஆதாரமாகக்கொண்டே உருவாக்கப்படுகின்றன. மழைவரத்து குறைவதாலும், பிற பல்வேறு காரணங்களாலும் நிலத்தடி நீர் குறைந்து கொண்டே வருகிறது. தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, நிலத்தடி நீரைப் பெருக்கும் முயற்சிகள் மூலம் குடிநீர் ஆதாரங்களின் கொடுதிறனை அதிகரிக்க கீழ்க்காணும் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், காரைப்பொட்டனார் பகுதி நிலத்தடி நீர் மிகக் குறைவாக உள்ள பகுதியாகும். எனவே, காரைப்பொட்டனார் பகுதியில் நிலத்தடிநீர் ஆதாரத்தினை அதிகரிக்க, நீர்வள மேலாண்மைத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, மூன்று தடுப்பணைகள் மற்றும் மூன்று கசிவு

[2000 மே 10

நீர்க்குட்டைகள் காரைப்பொட்டனார் பகுதியில் அமைக்கப்பட்டன. இதனால் காரைப்பொட்டனார் பகுதியில் நிலத்தடி நீராதாரம் ஓரளவு உயர்ந்துள்ளது கண்டறியப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூபாய் 20.49 இலட்சங்கள் ஆகும். இந்தச் செலவுத் தொகை முழுவதும், யுனிசெப் நிறுவனம் மூலம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, திண்டுக்கல் மாவட்டம் மல்லாபுரம் பகுதியில் நிலத்தடி நீராதாரத்தினை அதிகரிக்க தற்போது திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத் தவிர பாறை பிளவு ஆய்வு மற்றும் பாறை பிளவின் மூலம் நீர் செலுத்தி, நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்த ஒரு திட்டம் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பகுதியில் நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.7.5 இலட்சம் ஆகும். இத்திட்டம் மைய அரசின் குடிநீர் தொழில் நுட்ப குழுமத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கூட்டுக் குடிநீர்த் திட்ட பராமரிப்பு

24. ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை, குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு, அக்குடிநீர்த் திட்டம் ஓர் ஊராட்சிக்கு மட்டும் பயன்தருவதாக இருந்தால் அத்திட்டத்தின் பராமரிப்பு சம்பந்தப்பட்ட ஊராட்சியிடம் ஒப்படைக்கப்படுகிறது. இதைப்போன்றே நகரப் பகுதிகளை எடுத்துக்கொண்டால், நகரகக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு, முடிக்கப்பட்ட திட்டம் ஒரு நகரத்திற்கு மட்டும் பயன்பெறுவதாக இருந்தால், அத்திட்டம் சம்பந்தப்பட்ட நகர உள்ளாட்சி அமைப்பிடம் பராமரிப்பதற்காக ஒப்படைக்கப்படுகிறது. இரண்டிற்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தால், வாரியமே அந்தக் குடிநீர்த் திட்டத்தினை தனது பொறுப்பில் வைத்து பராமரித்து வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தற்போது 461 கூட்டுக் குடிநீர் திட்டங்களின் பராமரிப்பினை கவனித்து வருகிறது. இதன்மூலம், 5 மாநகராட்சிகளும், 20 நகராட்சிகளும், 63 நகரப் பேரூராட்சிகளும், 123 ஊரகப் பேரூராட்சிகளும் மற்றும் 1947 ஊராட்சிகளில் உள்ள 5642 ஊரகக் குடியிருப்புகளும் பயன்பெறுகின்றன. இக்கூட்டுக் குடிநீர் திட்டங்களின் மூலம் பயன்பெறும் மொத்த மக்கட்தொகை 1.35 கோடியாகும்.



2000 மே 10]

## சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

1-8-1978-ல் உருவாக்கப்பட்ட சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பெரும்பாலும் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் ஏறத்தாழ 60 இலட்சம் மக்களுக்குச் சேவை செய்து வருகிறது.

நிறுவன வளர்ச்சியும் பணிகளின் மேம்பாடும்:

2. குடிநீரின் அளவு மற்றும் தரத்தை உயர்த்துவது, பயன்பெறும் மக்கட்தொகையை அதிகரிப்பது, மக்களின் குறைகளை பெற்று அவற்றை நிவர்த்தி செய்யும் கால அளவை குறைப்பது மற்றும் மேம்பட்ட முறையினை பயன்படுத்தி கழிவு நீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்து அதை வெளியேற்றும் பணி ஆகியவைகள் தொடர்ந்து வாரியத்தின் நோக்கங்களாக இருந்து வருகின்றன. மேற்கண்ட இனங்களில் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின், கடந்த 22 ஆண்டுகால வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக இருந்து வருகிறது. இவற்றின் விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

3. குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்க இவ்வாண்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை:

3.1 சென்னை நகர மக்களின் குடிநீர் தேவைகளை பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஆகிய மூன்று நீர்த் தேக்கங்கள் பூர்த்தி செய்கின்றன. வடகிழக்கு பருவமழை பெருமளவு பொய்த்ததன் காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஆகிய மூன்று நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு கணிசமாக குறைந்து விட்டது. மேலும் சொல்லப்போனால் கடந்த 20 ஆண்டுகளில் 1999-2000 ஆண்டின் மழை அளவுதான் மிகக் குறைந்ததாகும். மூன்று நீர்த் தேக்கங்களின் நீர்ப்பிடிப்பு பரப்பில் சாதாரணமாக பெறப்படும் மழை அளவில் பாதிக்கும் குறைவாக கிடைக்கப்பெற்றது. பொதுவாக 1300 மி.மீ. மழை பெய்ய வேண்டிய இடத்தில் 608 மி.மீ. மழை மட்டுமே சென்னை நகரம் பெற்றது. இதன் விளைவாக, மூன்று நீர்த் தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 7412 மில்லியன் கன அடியில் இருக்க வேண்டியது, இந்த வருட ஜனவரி மாதத்தில் 1859 மில்லியன் கன அடி மட்டுமே இருப்பு இருந்தது. ஆனாலும் இந்த கொள்ளளவு, 1993

ஆம் ஆண்டு ஜனவரியில் சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு நிலவியபோது இருந்த நீர் கொள்ளளவான 1696 மில்லியன் கன அடியைவிட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

3.2 சென்னை நகரத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்த சில வருடங்களில் மழை அளவு கீழ்க்கண்டவாறு இருந்துள்ளது:

| | சாதாரணமாக ஆண்டில் பெய்யும் மழையின் அளவு | நீர்ப் பிடிப்பு பகுதியில் பெய்த மழை |
|---|---|---|
| | (மில்லி மீட்டரில்) | |
| 1982 | 1300 | 860 |
| 1987 | 1300 | 892 |
| 1992 | 1300 | 848 |
| (சென்னை நகரம் குடிநீர் தட்டுப்பாட்டில் அவதிப்பட்ட ஆண்டு) | | |
| 1999 | 1300 | 608 |

3.3 1996 ஆம் ஆண்டிலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்தில் கிருஷ்ணா கால்வாயில் இருந்து தண்ணீர் கிடைக்கப்பெற்றது. அதன் அளவு விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | காலம் | நீரின் அளவு (மில்லியன் கன அடியில்) |
|---|---|---|
| 1996 | 29-9-1996 - 16-10-1996 | 70 |
| 1997 | 4-7-1997 - 23-11-1997 | 2417 |
| 1998 | 25-7-1998 - 10-11-1998 | 2806 |
| 1999 | 18-7-1999 - 11-11-1999 | 1833 |

3.4 தினசரி விநியோகம்:

1996 ஆம் ஆண்டிற்கு முன்பு தினசரி குடிநீர் விநியோகம் 240 மில்லியன் லிட்டராக இருந்தது. 1996 ஆம் ஆண்டிலிருந்து



1999 ஆம் ஆண்டு வரை இது சுமார் 440 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது. இந்த வருடம் நீர்த் தேக்கங்களில் நீரின் கொள்ளளவு குறைந்ததால் 1999 டிசம்பரிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் 440 மில்லியன் லிட்டரிலிருந்து 250 மில்லியன் லிட்டருக்குக் குறைக்கப்பட்டு, இதே அளவிற்கு குடிநீர் விநியோகம் தொடர்ந்து பராமரிக்கப்படுகிறது. கடந்த வறட்சி காலங்களான 1983, 1987, 1993 வருடங்களில் தினசரி குடிநீர் விநியோக அளவு 200 மில்லியன் லிட்டருக்கும் குறைவாக இருந்தது. தற்பொழுது உள்ள தட்டுப்பாடு காலத்தில் தினசரி குடிநீர் விநியோகம் கடந்த தட்டுப்பாடு காலங்களைவிட மிக அதிகமாக உள்ளது. மேலும் தற்பொழுது வழங்கப்படும் குடிநீரின் அளவு செப்டம்பர் 1996-க்கு முன்பு வழங்கப்பட்ட அளவிற்கு சமமாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த 3 ஆண்டுகளில் கிருஷ்ணா கால்வாய் மூலமாக கிடைக்கப்பெற்ற தண்ணீரினால்தான் இது சாத்தியமாகியுள்ளது.

4. செயல் திட்டம்:

இந்த நிலைமையை சமாளிக்க, நிலத்தடியில் இருந்து கிடைக்கப்பெறும் நீர் மற்றும் பூமி மேற்பரப்பில் உள்ள நீரை அதிக அளவு இறைப்பதற்கும், அவ்வாறு கிடைக்கப்பெறும் நீரை சிறந்த முறையில் விநியோகிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்த வகையில் எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

4.1 கூடுதல் நீர் ஆதாரங்களை அபிவிருத்தி செய்தது:

(அ) செம்பரம்பாக்கம் ஏரி

செம்பரம்பாக்கம் ஏரி 3645 மி.க.அ. கொள்ளளவு கொண்டுள்ளது. 16-1-2000 அன்று 1102 மி.க.அ. நீர் இருப்பு இருந்தது. செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் போரூர் குளத்தை இணைக்கும் தந்தி கால்வாய் வழியாக தினசரி 100 மி.லி.அ. தண்ணீர் போரூர் குளத்திற்கு கொண்டுவரப்படுகிறது. போரூரிலிருந்து கீழ்ப்பாக்கம் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு, 1200 மி.மீ விட்ட பி.எஸ்.சி. பெருங்குழாய்கள் வாயிலாக 18 கி.மீ. நீளம் வரை பின்புறமாக, விசைக் குழாய்களின் மூலமாக, நீரை சுத்தப்படுத்துவதற்கு நீர் கொண்டு செல்லும் முதல் பிரதான பெருங்குழாய்க்கு திருப்பி விடப்படுகிறது. இவ்வளவு அதிகமான தண்ணீர் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திருப்பி விடப்பட்டு குடிநீருக்கு உபயோகப்படுத்துவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

*(ஆ) இரட்டை ஏரி:*

கொளத்தூர் அருகே உள்ள 40 மி.க.அ. தண்ணீர் கொள்ளளவு கொண்ட இரட்டை ஏரியிலிருந்து ஜனவரி 2000 முதல் தினமும் 18 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இந்த நீர் ஆதாரம் இவ்வாண்டு மே மாதம் ஆரம்பம் வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*(இ) போரூர் ஏரி:*

கே.கே. நகர் தலைமை பணி இடத்திற்கு தண்ணீர் சுத்திகரித்து விநியோகிக்க தினமும் 4 மில்லியன் லிட்டர் தண்ணீர் போரூர் ஏரியிலிருந்து எடுக்கப்படுகிறது.

*(ஈ) தெற்கு கடற்கரை நிலத்தடி நீர்:*

தெற்கு கடற்கரை நிலத்தடி நீர் ஆதாரம் மூலம் தினசரி 4 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டு, திருவான்மியூர், பெசன்ட் நகர், இந்திராநகர் மற்றும் வேளச்சேரி பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது.

*(உ) ஏற்கெனவே உள்ள கிணறுகளிலிருந்து கிடைக்கும் தண்ணீரின் அளவை அதிகப்படுத்துவது:*

13 கிணறுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன மற்றும் 17 புதிய கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய முயற்சிகளால், கிடைக்கும் நீரின் அளவு நாளொன்றுக்கு 40 மில்லியன் லிட்டரிலிருந்து 80 மில்லியன் லிட்டராக அதிகமாகியுள்ளது.

(ஊ) ஏப்ரல் 2000 வரை சென்னை நகரத்தில் பயன்பாட்டில் உள்ள இந்திய மார்க்-2 பம்புகளின் எண்ணிக்கை 4,416 ஆகும்.

(எ) தண்ணீர் கிடைக்காத பகுதிகளில் 3,925-க்கும் மேலாக தண்ணீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

(ஏ) லாரிகளின் நாளொன்றுக்கான நடை எண்ணிக்கை செப்டம்பர் 1999-ல் 1,261-லிருந்து ஏப்ரல் 2000-ல் 2,591 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட அனைத்து பணிகளுக்கும் ரூ.18.40 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வர இருக்கும் வடகிழக்கு பருவ மழை காலம் வரை



தலைமையை சமாளிக்க அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

5. மக்களின் வாழ்க்கைத்தரம் அவர்களுக்கு கொடுக்கப்படும் அடிப்படை சேவைகளை பொறுத்தே இருக்கிறது என வாரியம் நம்புகிறது. 1999-2000-ல் வாரியம் "பொது தொடர்புக் கொள்கை" ஆவணத்தை வெளியீடு செய்தது.

**இதன் முக்கிய அம்சம்:**

(அ) செயல் திட்டத்தை முடிவு செய்வதில் நுகர்வோரை ஈடுபடுத்துதல்; மற்றும்

(ஆ) வாரியத்தின் பணிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு மற்றும் இதர மக்கள் சங்கங்களுடன் இணைந்து செயல்படுவது.

இந்த வகைகளில் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*5.1 செயல்திட்ட முடிவு எடுப்பதில் நுகர்வோர்களை ஈடுபடுத்துதல்:*

அனைத்து சமூக அமைப்புகள், நுகர்வோர் செயல் திட்ட அமைப்புகள். குடியிருப்போர் அமைப்புகள் மற்றும் அந்தந்த பகுதிகளைச் சார்ந்த ஈடுபாடுடைய பிரதிநிதிகள் எல்லா பகுதி அலுவலகங்களில் இரண்டாவது சனிக்கிழமைகளில் காலை 9.00 மணியிலிருந்து பகல் 1.00 மணி வரை நடத்தப்படும் வெளிப்படையான கூட்டத்தில் கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையான கூட்டம் நுகர்வோர்களின் கருத்துகளையும், பிரச்சினைகளையும் தெரிந்து கொள்ளவும் அதற்காக எடுக்கப்படும் முடிவுகளில் அவர்களை பங்கு கொள்ளவும் செய்யமுடிகிறது.

*6. நுகர்வோர் கையேடு:*

சிரமம் ஏதும் இல்லாமல் வாரியத்தின் சேவைகளைப் பெற பொதுமக்களுக்கு உதவ 'நுகர்வோர் கையேடு' எல்லா நுகர்வோர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. நுகர்வோர்களின் பெரும்பாலான சந்தேகங்களுக்கு விடையளிக்கும் வகையில் இந்த கையேடு அமைந்துள்ளது.

*7. குறை தீர்க்கும் புகார் பிரிவு அமைப்பு:*

குறைகளை நிவர்த்தி செய்ய உள்ள தற்போதைய முறைகளை வாரியம் மேலும் வலுப்படுத்தியுள்ளது. இயக்கம் மற்றும் பராமரிப்புத் துறையைச் சார்ந்த முக்கிய அலுவலர்களுக்கு பேஜர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பேஜர்களுக்கான எண்கள் செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் நுகர்வோர் எல்லா நேரங்களிலும் தங்களது புகார்களை பதிவு செய்ய முடியும். மேலும் தலைமை அலுவலகத்தில் கணிப்பொறி கொண்ட புகார் பிரிவு 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. இதன்மூலம் பெறப்பட்ட புகார்கள் உடனடி நடவடிக்கைக்காக தொடர்புடைய பகுதி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படுவதுடன் புகார்கள்மீது நடவடிக்கை எடுத்து முடிக்கப்படும் வரை அவைகளை கண்காணிக்கச் செய்யவும் வகை செய்கிறது. மேலும் பொது மக்களிடமிருந்து வாரியத்தின் சேவையில் அவர்களது நிறைவு பற்றி தெரிந்து கொள்ள நுகர்வோரிடம் நேரடியாக அவர்களது கருத்துகளை பெறவும் அதன்மூலம் சேவை திறனை மேலும் மேம்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. பெறப்பட்ட புகார்களில் 98.5 விழுக்காடு புகார்கள்மீது மக்கள் சாசனத்தில் வரையறுக்கப்பட்ட கால வரம்பிற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*8. சென்னை மாநகராட்சியுடன் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு:*

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி உயர் அலுவலர்கள் ஆகியோருடன் நெருங்கி ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் பெறுவதற்கு உதவியாக, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள் தலைமையிலான ஒரு கூட்டுக் குழு, ஒரு துணைக் குழு மற்றும் மன்ற உறுப்பினர்கள் குழு ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுக் குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்பட்டு, அவ்வப்போது ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டு பிரச்சினை மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகள், மழைநீர் வடிவதற்கான வழிகள், சாலைகளை வெட்டுவது போன்ற பணிகளைப் பற்றி ஆய்வு செய்கிறது. கூட்டுக் குழுவின் துணைக் குழு மாதம் ஒருமுறை கூடுகிறது. இத்தகைய கூட்டங்களில் 10 வார்டு குழுத் தலைவர்கள் தத்தம் பகுதிகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அதன் தொடர்பாக மேற்கொள்ளப்பட இருக்கும்



மேல்நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்கின்றனர். வார்டு குழுவின் வார்டுத் தலைவர், மன்ற உறுப்பினர் மற்றும் வாரிய அதிகாரிகள் மாதத்திற்கு ஒரு முறை கூடி குடிநீர் மற்றும் கழிவுநீர் தொடர்பான பிரச்சினைகளையும் அவற்றினை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை குறித்தும் ஆய்வு செய்கின்றனர். இத்தகைய கூட்டுக் குழு கூட்டங்களின் மூலம் சென்னை குடிநீர் வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சியும் இணைந்து செயல்பட ஏதுவாகிறது. இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட சில முக்கியமான பிரச்சினைகள்:—

(அ) சென்னை நகரில் 10 சிறிய மேம்பாலங்கள், குறித்த காலத்தில் கட்டி முடிப்பதற்கு குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்ப் பாதைகளை மாற்றி அமைக்கும் பணியினை விரைந்து முடிப்பது.

(ஆ) சாலை வெட்டுவதற்கான தற்போது உள்ள நடைமுறைகளை மேலும் எளிதாக்குவது.

(இ) லாரிகளில் வழங்கப்படும் குடிநீருக்கான வழிவகைகளை மேலும் சீரமைப்பது.

(ஈ) தீயணைப்புப் பணிகளுக்காக நீர் வழங்குவது.

*9. சட்டமன்ற உறுப்பினர்களுடன் கூட்டம்:*

குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சென்னை பெருநகரத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் உறுப்பினர்களுடன் கூட்டம் கூட்டப்படுகிறது. கடந்த கூட்டத்தில் நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவை கருத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொண்டு போதிய அளவு தண்ணீர் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

10. வாரியத்தின் கொள்கைகளை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்காகவும், வாரியம் ஆற்றி வரும் பணிகள் யாவற்றையும் அனைவரும் முழுவதும் தெளிவுற அறிந்து கொள்ளும் வகையிலும் மேலும் நுகர்வோர்களுடன் நல்லுறவினை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் இவ்வாரியம் மக்கள் சாசனம் ஒன்றை ஏப்ரல் 1998-ல் வெளியிட்டது. இதன் மூலம் இந்நாட்டிலேயே இத்தகைய ஆவணத்தை வெளியிட்ட முதல் சேவை நிறுவனமாக இவ்வாரியம் திகழ்கிறது.

[2000 மே 10

இந்த மக்கள் சாசனத்தின் முக்கிய குறிக்கோள்:

- தரப்படும் சேவைகளின் தரத்தை விவரமாக தெரிவிப்பது.
- நுகர்வோரும் நம்பிக்கையைப்பெற்று வெளிப்படையான நிர்வாகத்தை உருவாக்குவது.

மக்கள் சாசனத்தில் அளித்துள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அதன் செயலாக்கத்தை மதிப்பீடு செய்ய நுகர்வோர்கள் மற்றும் நகரமக்களின் முக்கிய பிரதிநிதிகளைக்கொண்டு 'நுகர்வோர் நலப் பணிக் குழு' ஒன்றினை இவ்வாரியம் தொடங்கியுள்ளது. இந்தக் குழு வாரியத்தின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்து, சென்னை குடிநீர் வாரியத்தின் சேவைகள் சுமார் 98.5 விழுக்காடு மக்கள் சாசனத்தில் உள்ள காலகெடுவை ஒட்டி அமைந்துள்ளது என தெரிவித்துள்ளது. மேலும் வாரியத்தின் திறனைக் கருத்தில்கொண்டு ஒருசில பொறுப்புகளின் செயல்தரத்தை உயர்த்தவும் குழு பரிந்துரை செய்துள்ளது. இவ்வாரியம் 2000 ஜனவரியில் இரண்டாவது பதிப்பு மக்கள் சாசனத்தை வெளியிட்டபோது நுகர்வோர் புகார்களை நிவர்த்தி செய்வதற்கான கால அளவையை மாற்றி, குறைத்துள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் குறிப்பிற்காக "மக்கள் சாசனம்" புதிய பதிப்பின் நகல் சட்டமன்றத்தில் வைக்கப்படுகிறது.

**11. திறந்தவெளி தகவல் மையத் தொடக்கம் கணினியுடன் தொலைபேசி தகவல் அமைப்பு:**

மக்களுக்கு தகவல் அளிக்கும் முறைகளை விரிவுபடுத்தவும், மேம்படுத்தவும் வாரியம் கணினி திறந்தவெளி தகவல் தளம் ஒன்றை ``www. Chennai Metro Water.com" என்ற பெயரில் ஏற்படுத்தியுள்ளது. நுகர்வோர்கள் தாங்கள் வாரியத்திற்கு செலுத்தவேண்டிய குடிநீர் மற்றும் கட்டண நிலுவைத் தொகைகளைத் தொலைபேசி மூலம் அறிந்துகொள்ள கணினியுடன் இணைக்கப்பட்ட குரல் மூலம் பதில் அளிக்கும் வசதியும் நிறுவப்பட்டுள்ளன. இதற்கான தொலைபேசி எண்கள் 8525138 மற்றும் 8547891 ஆகும்.

**12. வாரியத் தொடர்புடையோரிடம் தகவல் பரிமாற்றம்:**

வாரிய ஊழியர்கள் மற்றும் வாரியத் தொடர்புடையோரிடம் நேரடி தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும் மற்றும் அவர்களிடம்



2000 மே 10]

தோழமை உணர்வினை வளர்த்திடும் நோக்கிலும் செய்திமடல் என்ற தமிழ் மாத வெளியீடு மே 1998-லிருந்து இவ்வாரியத்தால் வெளியிடப்படுகிறது. இது வாரிய ஊழியர்களின் எண்ணங்களை அவ்வப்போது பிரதிபலிக்கச் செய்வதுடன், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இவ்வாரியத் தொடர்புடையோருக்கு தேவையான தகவல்களை அளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப் பணி ஆணைகள், வாரியப் பணியாளர் பணிமாற்றம் குறித்த விவரங்கள், குடிநீர் மற்றும் கழிவுநீர் மீதான பல்வகைக் கட்டுரைகள் மற்றும் புகார் தீர்வு பற்றிய நிலவரம் போன்ற அனைத்து விவரங்களும் இவ்வெளியீட்டில் அடங்கியுள்ளன.

**13. நடைமுறைகளை எளிதாக்குதல்:**

**(அ) திட்ட அனுமதி:** அடுக்கு மாடிகள் மற்றும் சிறப்புத் தன்மை கொண்ட பல மாடிக் கட்டடங்கள் கட்ட முன் அனுமதி வழங்கும் நடைமுறையில், இவ்வாரியம் ஒவ்வொரு மனுக்களையும் தனித்தனியாக பரிசீலித்து முன் அனுமதிக்கு பரிந்துரை செய்யும் வழக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள கட்டட முன் அனுமதிக்கான கட்டணங்களை பெற்றுக்கொண்டு, உடனடியாக மனுக்களை தீர்வு செய்யும் முறை பின்பற்றப்படுகிறது. இம்முறையிலான கட்டமைப்பு வளர்ச்சிக் கட்டணத்தை கணக்கிடுதல், வசூலித்தல், செலுத்துதல் ஆகியவற்றை வாரியத்தின் சார்பாக செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இம்முறை கட்டடத்திற்கான திட்ட அனுமதி பெறும் முறையினை எளிதாகவும், மனுக்கள் உடனடியாகவும் விரைவாகவும் தீர்வு செய்யப்படவும் மற்றும் நுகர்வோர் நல்லுறவை வளர்த்துக்கொள்ளவும் உதவுகிறது. இந்த திருத்திய முறை 5-3-1998-லிருந்து செயலில் உள்ளது.

**(ஆ) நுகர்வோர் வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்த மேம்படுத்தப்பட்ட வசதிகளை ஏற்படுத்துதல்:**

வசூல் காலங்களான பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் முடிந்தவுடனே நுகர்வோர்களின் நிலுவை கணக்குகள் தனித்தனியாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றை முழுமையாக சரிபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒவ்வொரு வசூல் காலம் முடிந்தவுடனும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2000 மே 10

(1) நுகர்வோர்களிடம் பெறப்பட்ட வசூல் தொகையினை உடனுக்குடன் கணினியில் பதிவு செய்யும் (ஆன் லைன்) முறை அனைத்து பகுதி அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(2) நுகர்வோர்கள் காத்திருக்கும் நேரத்தைக் குறைக்கும்பொருட்டு பகுதி அலுவலகங்களிலும், பிரிவு அலுவலகங்களிலும் கூடுதல் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன.

*14. குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று கட்டணங்கள் சம்பந்தமான கொள்கை:*

விரிவான கட்டணக் கொள்கை வகுக்க வேண்டியதன் தேவையினை கருத்தில்கொண்டு, அதன் தொடர்பானவற்றை பரிசீலித்து வாரியம் கட்டணக் கொள்கையை அக்டோபர் 1998-ல் வரையறுத்துள்ளது. இதன் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*குடிநீர் வழங்கல்:*

(1) நுகர்வோர் வகைப்பாட்டினை எளிதாக மாற்றியமைத்து அதை நுகர்வோர் எளிதாக புரிந்துகொள்ளும்படி செய்தல்.

(2) ஒவ்வொரு நுகர்வோர் பிரிவிற்கும் அதிகபட்சமாக இரண்டு என கட்டண விகிதங்களை அமைத்து, கட்டண விகித எண்ணிக்கையை குறைப்பது.

(3) ஒரே காலத்தில் கூடுதல் உயர்வு செய்வதை காட்டிலும் படிப்படியாக ஒவ்வொரு வருடமும் கட்டண விகிதங்கள் சிறிதளவு உயர்த்துதல்.

(4) தேவையான கட்டண விகிதங்களை மாற்றியமைத்து தற்போதுள்ள குறுக்கு மானிய அளவின் ஏற்றத்தாழ்வை நீக்குவது மற்றும் தொழிற்சாலைகளை அதிகமாக சார்ந்திருப்பதை குறைத்தல்.



2000 மே 10]

*கழிவு நீரகற்றல்:*

(5) சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை மேலும் சுத்திகரிப்பு செய்து பயன்படுத்திக்கொள்ள வழங்குதல் மற்றும் குளிரச் செய்யும் உபயோகத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை உபயோகிக்க ஊக்கப்படுத்துதல்.

(6) இரண்டாவதுநிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு பொருத்தமான கட்டணங்களில் விற்பது; மற்றும் ஒவ்வொரு வருடமும் தேவையான அளவு கட்டணத்தை உயர்த்துவது.

(7) மூன்றுமுறை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு வழங்கி தண்ணீரை மிச்சப்படுத்துவது.

(8) குடிநீர் வாரியம் சுற்றுப்புற தூய்மையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக புல் பண்ணைகள் வளர்த்தல் மற்றும் மீன் வளர்த்தல்.

மேற்சொன்ன கட்டண கொள்கையின் அடிப்படையில் உபயோகிப்பாளர் பிரிவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, கட்டண வீதங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது மற்றும் குறுக்கு உதவி பெறுதலை குறைக்க முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*15. ஆலோசக அமைப்பு:*

குடிநீர் மற்றும் கழிவுநீர்த் திட்டப் பணிகளில் வாரியம் பெற்றுள்ள சிறப்பறிவு தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத் திறனை, நகர்ப்புற உள்ளாட்சி மற்றும் இதர அமைப்புகள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இவ்வாரியம் 1996-ல் பொறியியல் ஆலோசனைப் பணிக் குழு ஒன்றினை அமைத்துள்ளது. சென்ற ஓர் ஆண்டில் பல புதிய திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை எடுத்து முடித்துள்ளது.

[2000 மே 10

| வரிசை எண் | பணியின் பெயர் | ஆலோசனைக் கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மதுரையில் தற்போதுள்ள கழிவுநீர்த் திட்டத்தினை உயர்த்தும் பணிக்காக விவரமான வடிவமைப்பு மற்றும் பொறியியல். | 4.75 |
| 2. | மதுரை கழிவுநீர்த் திட்டம்-9, 9அ, 10, 10அ பிளாக்குகளுக்கும் வைகையாற்றின் வடக்கிலும் பாதாள கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி. | 29.93 |
| 3. | திருப்பூர் நகர வரைபடம் ஆக்கல் | 5.81 |
| 4. | திருப்பூரில் தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பினை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைப் பணி. | 3.25 |
| 5. | வளசரவாக்கம் கழிவுநீர்த் திட்டம் வளசரவாக்கம் நகர பஞ்சாயத்துக்கு பாதாள கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி. | 4.56 |
| 6. | மாதவரம் நகராட்சியில் புக்ராஜ் நகரில் தண்ணீர் விநியோக அமைப்பு பணி. | 2.00 |

### 16. வாய்ப்பு வள மையம் உருவாக்குதல்:

1979 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னை குடிநீர் வாரிய ஊழியர் பயிற்சி மையம் தொழில்நுட்பம், நிதி மற்றும் நிர்வாகம் ஆகிய எல்லா பிரிவு ஊழியர்களுக்கும் பயிற்சி அளித்து கொண்டு வருகிறது. இதைத் தவிர இந்திய அரசு, பங்களூர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கிறது. 1999-2000 ஆண்டில் நிதி, பொருளாதாரம், நிர்வாகம், பொறியியல் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஆகிய துறைகளை சார்ந்த 990 பயிற்சி பெறுபவர்களுக்கு 69 பிரிவு வகுப்புகள் நடத்தப்பட்டன. 1999-2000 ஆண்டில் இந்திய அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஐந்து பிரிவு வகுப்புகள் நடத்தப்பட்டு அவைகளில், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து 109 நபர்கள் பயிற்சி



2000 மே 10]

பெற்றார்கள். மேலும் இதன் தரத்தை உயர்த்துவதற்கும், பயிற்சி மற்றும் ஆலோசக பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒரு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரவும் பயிற்சி மையம் என்பது வாய்ப்பு வள மையமாக உயர்த்தப்பட்டது.

### 17. தனியார் பங்கேற்பிற்கான முயற்சிகள்:

அதிக திறன் மற்றும் செலவுக் குறைப்பு இவைகளை அடையும் நோக்கில் நிர்வாகத்தில் ஒரு மாறுதலமைப்பாகவும், குடிநீருக்கான வணிகவாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலும் தனியார் பங்கேற்பு முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வாரியம் கருதுகிறது. இதற்காக முந்தைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மேலும் தொடரப்பட்டு வருகின்றன. பொறியியல் தொடர்பான சில சிறிய பணிகள் தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டிருந்ததனைத் தொடர்ந்து, நடப்பு ஆண்டில் இவ்வாரியம் மேலும் சில கணக்கியல் மற்றும் நிதி மேலாண்மை பணிகளையும் தனியார் மூலமாக செய்து முடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு சில பணிகள் தனியார்வசம் விட்டிருப்பதனால் செயல்திறன் மேலும் அதிகரிப்பதுடன் போதிய அளவில் செலவுக் குறைப்பும் காணமுடிகிறது. இதன் விவரம் கீழ்க்கண்டவாறு தரப்பட்டுள்ளது:—

| | சேமிப்பு சதவீதம் | சேமிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| கிணற்றுத் தளங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு. | 56.00 | 14.60 |
| தனியார் லாரிகள்மூலம் குடிநீர் விநியோகம். | 18.50 | 138.40 |
| கழிவுநீரேற்று நிலையங்கள் பராமரிப்பு. | 65.00 | 32.14 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 33.00 | 4.67 |
| பாதுகாப்புப் பணி. | 10.42 | 4.18 |

[2000 மே 10

## குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று அமைப்பு முறைகளை மேம்படுத்திச் செயல்படுத்துதல்

18. சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகளுக்கான அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்தித் திட்டமிட்டு மேம்படுத்துதல், திறமையுடன் இயக்கிப் பராமரித்தல் என்பவை சென்னை குடிநீர் வாரியத்தின் தலையாயப் பணிகளாகும். வாரியம் தொடங்கி 1978 ஆம் ஆண்டில் இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கென ஒரு பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் இருக்கக்கூடிய மக்கட்தொகையின் தேவைகளுக்கேற்ப, 1991 ஆம் ஆண்டில் அந்தப் பெருந்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இப்பெருந்திட்டமே தற்போது செயல்படுத்தப்படுகின்றது.

### பெருந்திட்டம் குடிநீர் வழங்குதல்

19. நம்பத்தக்கதாகவும், சமமான முறையினால் குடிநீர் வழங்குவதற்காகவும் ஒரு பெருந்திட்டம் 1978 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு (குடிநீர் வழங்கல், கழிவுநீரகற்று வாரியம் தொடங்கப்பட்டது முதல்) அது 1991-ல் திருத்தியமைக்கப்பட்டது. 2021-ல் மக்கட்தொகையை கணக்கில் கொண்டு குடிநீர் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெருந்திட்டம் ஒவ்வொரு நிலையிலும் செயல்படுத்துவதற்கு சொந்த நிதி மற்றும் தமிழ்நாடு அரசு, உலக வங்கி, ஹட்கோ, டுபிட்கோ மூலம் பெறப்படும் கடன் தொகைகளைக் கொண்டு நிறைவேற்றப்படுகிறது. இப்பெருந்திட்டத்தில் வாரியத்திலுள்ள அடிப்படை கட்டமைப்பை முழுமையாகப் பயன்படுத்தி கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்ற வகை செய்யப்பட்டுள்ளன.

(அ) கிருஷ்ணா நதியிலிருந்து கூடுதலாக வரும் நீரைப் பெற்று சுத்திகரித்து வழங்குதல்.

(ஆ) தண்ணீர்க் கசிவு, குடிநீர் வீணாகுதல், குறைந்த அளவு அழுத்த, சமனற்ற குடிநீர் விநியோகம் ஆகியவைகளைச் சீர் செய்தல்.

மேற்கூறியவற்றை நிறைவேற்றுவதற்காக மண்டலப் பகிர்மான அமைப்பு வடிவமைக்கப்பட்டு நகரத்தை 16 மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திலும் கீழ்நிலைத்தொட்டி/மேல்நிலைத்தொட்டி/நீரேற்று நிலையம், விசைக் கருவிகள் கொண்ட குடிநீர்ப் பகிர்வு நிலையங்களை அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து



2000 மே 10]

குடிநீர்ப் பகிர்வு நிலையம் வரை குடிநீர்க் கொணரும் குழாய்கள் அமைத்தல் ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன.

முதற் கட்டப்பணியாக, செங்குன்றம் ஏரியிலிருந்து நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் கூடுதலாக எடுத்து, அங்குள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்து, பெருங்குழாய்கள்மூலம் ஏற்கெனவே உள்ள நான்கு குடிநீர்ப் பகிர்வு (அண்ணா பூங்கா, தெற்கு குடிநீர் விநியோக மையம், கலைஞர் நகர், பள்ளிப்பட்டு) மையங்களுக்கு அனுப்புதல், தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பிலுள்ள சிறிய பழுதுகளை நீக்கல், குடிநீர் வசதி இல்லாத தெருக்களுக்குப் புதிய குடிநீர்க் குழாய்கள் பதித்தல், பழுதடைந்த இரும்பு, ஏ.சி., பி.வி.சி. குழாய்களை மாற்றுதல் ஆகியவை ரூ.132.00 கோடி செலவில் 1991-1996-ல் செய்து முடிக்கப்பட்டன. மேற்கூறிய பணிகள் முடிக்கப்பட்டதால், கிருஷ்ணா நீர் செப்டம்பர் 29, 1996-ல் வந்தவுடன், நகரில் குடிநீர் விநியோகம் தினசரி 240 மில்லியன் லிட்டரிலிருந்து 440 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டது.

இரண்டாவது கட்டப்பணியாக, செம்பரம்பாக்கத்திலிருந்து நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீரை எடுத்துச் சுத்தம் செய்து குடிநீரை விநியோகித்தல், மேலும் புதிய 12 குடிநீர்ப் பகிர்வு நிலையங்களை அமைத்தல், செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெருங்குழாய்கள்மூலம் குடிநீர்ப் பகிர்வு நிலையங்களுக்கு கொணர்தல், 11 மண்டலங்களில் உள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல் ஆகிய பணிகள் 1997-ல் ஆரம்பிக்கப்பட்டு இப்பணிகளை 2003-2004 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டப்பணியாக, கீழ்ப்பாக்கத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தற்போதுள்ள 4 குடிநீர்ப் பகிர்வு நிலையங்கள் ஆகியவைகளை மேம்படுத்துதல், மீதியுள்ள 5 மண்டலங்களின் குடிநீர்ப் பகிர்மான அமைப்பை மேம்படுத்துதல் போன்றவை திட்டமிடப்பட்டு 2004 ஆம் ஆண்டிற்கு பிறகு எடுத்துக்கொள்ளப்பட்டு 2005-லிருந்து 2010-க்குள் முடிக்கப்படவுள்ளது.

### பெருந்திட்டம் கழிவுநீரகற்று அமைப்பு முறை

20. எந்த ஒரு குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தினாலும், விரிவுபடுத்தினாலும், அதனால் உண்டாகும் கூடுதல் கழிவுநீரை

[2000 மே 10

அகற்றிச் சுத்தம் செய்யத் திட்டம் தீட்டினால்தான் அது முழுமை அடையும். 1978ஆம் ஆண்டு முதன் முதலாக நகரின் கழிவு நீரகற்றும் அமைப்பை மேம்படுத்தப் பெருந்திட்டம் உருவாக்கப்பட்டது. பின்பு 1991-ல் இப்பெருந்திட்டம் 2021ஆம் ஆண்டின் நகர மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. இக்கழிவுநீரகற்றுத் திட்டம் குடிநீர் வழங்கு திட்டத்திற்குப் பொருந்துகிறார்போல் பல நிலைகளில் நிறைவேற்றப்பட உள்ளது. குடிநீர் வழங்கு வசதி உள்ள, ஆனால் கழிவுநீரகற்று வசதி இல்லாத இடங்களில் கழிவு நீரகற்றும் வசதியினை விரிவாக்கம் செய்தல், பராமரிப்புப் பணிகளில் ஏற்படும் தடைகளை நீக்கல், கழிவு நீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அமைப்புகளை மேம்படுத்துதல், கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்படவுள்ளன. தற்போதுள்ள கழிவுநீர்க் குழாய்களை 143 கி.மீ. நீளத்திற்கு வலுப்படுத்துதல், கழிவுநீர் வசதியற்ற இடங்களில் 320 கி.மீ. நீளத்திற்குப் புதிய குழாய்களைப் பதித்தல், 60 புதிய கழிவுநீரேற்று நிலையங்களின் கட்டுமானம், தற்போதுள்ள 56 பழைய கழிவுநீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல், 56 கி.மீ. நீளத்திற்குக் கழிவு நீரகற்றும் விசைக்குழாய்களை வலுப்படுத்துதல், 6 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் இப்பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

*(1) முதற் கட்டப்பணியாக,* நகரில் சுமார் 60 இடங்களில், கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு, கழிவு நீரேற்றும் நிலையங்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவைகளில் உள்ள தடைகள் நீக்கப்பட்டன. கழிவுநீர்க் குழாய்களிலும், செங்கல் கட்டுமான கழிவுநீர்ப் பாதைகளிலும் தேங்கியுள்ள வண்டலை நீக்கும் பொருட்டு தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது. 6.24 கி.மீ. நீளமுள்ள புதிய கழிவுநீர்க் குழாய்கள், கழிவுநீரகற்று வசதி இல்லாத இடங்களில் பதிக்கப்பட்டன. மேலும் 40 புதிய கழிவுநீரேற்று நிலையங்கள் கட்டப்பட்டன. இப்பணிகள் யாவும் 1995-ல் ரூ.131.14 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

*(2) இரண்டாவது கட்டப்பணியாக,* கழிவுநீர் வசதியற்ற பகுதிகளுக்கு இவ்வசதியினை விரிவாக்குதல், 2166 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர்க் குழாய்களை போடுதல், புதிய 134 கழிவுநீரிறைக்கும் நிலையங்களைக் கட்டுதல், கழிவுநீரகற்றும் பெரும் குழாய்களைப்



2000 மே 10]

பதித்தல், தற்போதுள்ள 16 கழிவுநீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் ஆகியவை 2001ஆம் ஆண்டில் முடிக்கப்படவுள்ளன. தற்போதுள்ள 6 சுத்திகரிக்கும் நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் மற்றும் கோயம்பேட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் பெருங்குடியில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களின் திறனை நாளொன்றுக்கு 114 மில்லியன் லிட்டராக அதிகரிக்க செய்யும் பணிகள் கூடிய விரைவில் எடுத்துக்கொள்ளப்பட்டு 2001-2002ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படவுள்ளன. இந்த இரண்டாவது கட்டப் பணிகளுக்கான திட்ட மதிப்பு சுமார் ரூ.164.00 கோடியாகும்.

*(3) மூன்றாவது கட்டப்பணியாக,* நகரில் உள்ள 143 கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய்களை வலுப்படுத்துதல், தற்போதுள்ள 40 கழிவுநீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல், இதன் தொடர்புடைய 50 கி.மீ. நீளத்துக்கான கழிவுநீர் அகற்றும் குழாய்களை வலுப்படுத்துதல், சுத்திகரிக்கும் திறனைக் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் ஆக அதிகரித்தல் ஆகிய பணிகள் ரூ.400.00 கோடி செலவில மேற்கொள்ளப்பட்டு 2000-லிருந்து 2005-க்குள் முடிக்கப்படவுள்ளன.

*(4) நான்காம் கட்டப்பணியாக,* சுமார் 30.90 கி.மீ. நீளத்திற்கு தற்போதுள்ள கழிவுநீர்க் குழாய்களை வலுப்படுத்துவது, தற்போதுள்ள 37 கழிவுநீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் இதன் தொடர்பான சுமார் 43 கி.மீ. கழிவுநீர்க் குழாய்களை வலுப்படுத்துதல் மற்றும் நாளொன்றுக்கு கூடுதலாக 264 மில்லியன் லிட்டர் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்தல் ஆகிய பணிகள் ரூ.640.00 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு 2005-லிருந்து 2010-க்குள் முடிக்கப்படவுள்ளன.

**கூடுதல் நீர் ஆதாரங்களை உருவாக்குதல்/இருக்கும் நீர் ஆதாரங்களைப் பாதுகாத்தல்:**

21. கிருஷ்ணா நதியிலிருந்து கிடைக்கும் 12 டி.எம்.சி. (நாளொன்றுக்கு 930 மில்லியன் லிட்டருக்கு சமமாக) நீரைப் பெற்றாலும் 2021-ஆவது ஆண்டில் சென்னை பெருநகர குடிநீர்த் தேவை முழுவதும் பூர்த்திச் செய்ய இயலாது. மேலும் நாளொன்றுக்கு சுமார் 600 மில்லியன் லிட்டர் அளவுக்குப் பற்றாக்குறை இருக்கும். இதைத் தவிர்க்க கீழ்க்கண்ட சில நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

*நீரை சேமிக்கும் வழி முறைகள்:*

22. எதிர்காலத்தில் தேவையான நீரின் அளவிற்கும், எதிர்பார்க்கும் கிடைக்க இருக்கும் நீரின் அளவிற்கும் உள்ள பற்றாக்குறையை சமாளிக்க குடிநீர் வாரியத்தின் ஓர் "ஒருங்கிணைந்த நீர் நிர்வகிக்கும் முறையின்" ஒரு பகுதியாக குடிநீர் வாரியம் குடிநீரைச் சேமிக்க பல வழிகளை மேற்கொண்டுள்ளது. குடிநீர்க் கசிவை கண்டறிந்து சீர் செய்தல், மழை நீரைச் சேமித்தல், முறையற்ற வழியில் நிலத்தடி நீரை எடுப்பதை கட்டுப்படுத்துவது மற்றும் முறைப்படுத்துதல், நிலத்தடியில் நீர்வளத்தைப் பெருக்குதல் ஆகியவை குடிநீர் வாரியத்தால் முறையாக எடுக்கப்படும் நீர் சேமிப்பிற்கான சில முக்கிய நடவடிக்கைகள் ஆகும்.

*மழை நீரைச் சேமித்தலும் நிலத்தடியில் நீரைச் செலுத்தலும்:*

23. மழைநீரைச் சேமிக்கும் திட்டம் முதன்முறையாக 1994-ல் தொடங்கப்பட்டு தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. மழை நீரைச் சேமிப்பதற்காகத் தனி வீடுகளுக்கும் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கும் தனித்தனி வழிமுறைகளை உருவாக்கி செயற்படுத்தப்பெறுகின்றன. மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதல்லாமல், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்துடன் இணைந்து, மழைநீர்ச் சேமிப்பு சம்பந்தமான நடவடிக்கைகளையும் வாரியம் எடுத்துள்ளது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான திட்ட அனுமதி வழங்கும்போது, உடன் மழை நீரைச் சேமிக்கும் வழிகளையும் கையாள வலியுறுத்தப்படுகிறது, கழிப்பறை சுத்தப்படுத்துவதில் அதிகபட்சமாக 6 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைப் பயன்படுத்த நுகர்வோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

*நிலத்தடி நீர் நிர்வாகம்:*

24. தாமரைப்பாக்கம், குசத்தலையாற்றுப்படுகை, கன்னிகைப்பேர் ஆகிய இடங்களில் மூன்று தடுப்பு அணைகள் கட்டியதன் மூலம், நீர் ஆதாரத்தை வலுப்படுத்தும் வழிவகைகள் செய்யப்பட்டன. மீஞ்சூரில் நிலத்தடியில் உவர்நீர்க் கலப்பதைத் தடுக்கும் விதத்தில், தேக்கியுள்ள நீரினை நிலத்தினுள் பாய்ச்சும் முறையும் தொடரப்பட்டு வருகிறது. இதனால் உவர்நீர்க் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது. 1996-க்கு பிறகு நிலத்தடி நீர் எடுக்கவும், லாரிகளில் கொண்டு





செல்வதற்குமான உரிமம் யாருக்கும் வழங்கப்படவில்லை. இவ்வழிமுறைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர் வளம் பெரிதும் அதிகரித்துள்ளது.

*உவர்நீரைக் குடிநீராக்கும் இயந்திரங்கள்:*

25. நொச்சிக்குப்பத்தில் நாள் ஒன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் திறனும், வேளச்சேரியில் நாள் ஒன்றுக்கு 4.0 இலட்சம் லிட்டர் திறனும், காசிமேட்டில் நாள் ஒன்றுக்கு 1.5 இலட்சம் லிட்டர் திறனும் கொண்ட மூன்று உவர்நீரைக் குடிநீராக்கும் கலன்கள் அமைக்கப்பட்டு இயக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலன்களாலும் ஏறத்தாழ 5000 மக்கள் பயன் அடைகிறார்கள்.

*ஆரணியாறு—குசத்தலையாற்றுப்படுகை நீர் ஆதார மறு ஆய்வு:*

26. சென்னையிலிருந்து வடக்கே 30 கி.மீ. தூரத்தில் 1000 ச.கி.மீ. பரப்பளவுள்ள ஆரணியாறு-குசத்தலையாற்றுப்படுகை அமைந்துள்ளது. இங்கு சுமார் 300 ச.கி.மீ. பரப்பளவில் தற்போது விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்கு நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் நீர் பெறப்பட்டு தொழிற்சாலைகளுக்கும் நகர மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 1980-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி இங்கு நாளொன்றுக்கு சுமார் 960 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில பொதுப்பணித் துறையால் 1990-ல் நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வின்படி நாளொன்றுக்கு 1627 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டது. ஆகவே, உலக வங்கி நிதி உதவியுடன் இரண்டாம் சென்னை குடிநீர்த் திட்டத்தின்கீழ், இரண்டு கட்டமாக இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 3 ஆண்டு காலத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. ஆய்வுக்குப் பிறகு, வேளாண்மை மற்றும் குடிநீர்த் தேவைக்காக இப்பகுதியில் கிடைக்கப்பெறும் நீரின் அளவு மதிப்பிடப்படும். தற்போதுள்ள ஆழ்க்கிணறுகளின் செயல்பாடுகள், அவைகளின் செயலாக்கத்திறனை மேம்பாடு செய்வதற்கான வழிமுறைகள், கிடைக்கும் நீரளவில் 80 சதவீதத்திற்கு நீரை கொண்டு செல்வதற்கான வடிவமைப்பு ஆகியவை மதிப்பிடப்படும். போதிய அளவு நிலத்தடி நீர் கிடைக்கும் என தெரியவந்தால், இரண்டாம் கட்டப் பணியாக, நீரை எடுத்தல், தகுந்த வழிகளில் எடுக்கப்பட்ட நீரை வழங்குதல் ஆகியவற்றிற்கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வுகள்

[2000 மே 10

வெற்றிகரமாக அமையுமானால், இதன் அருகில் உள்ள நீர் ஆதாரங்களிலிருந்து இவ்வாரியத்திற்கு பெருமளவு தண்ணீர் கிடைக்கப்பெறும். உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்ட 6 நிறுவனங்களிலிருந்து ஆய்வுக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் 2000 மே மாதத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

***1999-2000 ஆண்டின் சாதனைகள்:***

*குடிநீர் வழங்கல்:*

27. 1999-2000 ஆண்டில், பெருந்திட்டத்தின் இரண்டாவது கட்ட குடிநீர் வழங்கும் திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டன. பணி முன்னேற்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*(அ) புதிய குடிநீர்ப் பகிர்வு நிலையங்கள்:*

வள்ளுவர் கோட்டம் மற்றும் திருவல்லிக்கேணி குடிநீர்ப் பகிர்வு நிலையங்கள் 1998-1999 ஆம் ஆண்டில் இயக்கி வைக்கப்பட்டன. கண்ணப்பர்திடல் மற்றும் ஈக்காட்டுத்தாங்கல் ஆகிய குடிநீர்ப் பகிர்வு நிலையங்கள் 1999-2000 ஆண்டில் பணிகள் முடிவடைந்து இயக்கி வைக்கப்பட்டன. மற்ற நிலையங்கள் அமைப்புப் பணிகளின் முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| மண்டலத்தின் பெயர் | 2021-வது ஆண்டில் பயனடையும் மக்கள் தொகை மதிப்பு | பயனடையும் தொகுதிகள் | பணிகளின் மதிப்பு (ரூபாய் (கோடியில்) | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|
| சூளைமேடு | 6.76 இலட்சம் | அமைந்தக்கரை, வடபழனி, சாலிகிராமம், காமராஜ்நகர், விருகம்பாக்கம் மற்றும் எம்.ஜி.ஆர். நகர். | 22.50 | பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்பட உள்ளது. |
| பட்டேல் நகர் | 2.16 இலட்சம் | இராதாகிருஷ்ணன் நகர், செரியன் நகர், தண்டையார்பேட்டை மற்றும் கொருக்குப்பேட்டை | 11.35 | பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்ப உள்ளது. |



2000 மே 10]

| மண்டலத்தின் பெயர் | 2021-வது ஆண்டில் பயனடையும் மக்கள் தொகை மதிப்பு | பயனடையும் தொகுதிகள் | மதிப்பு (ரூபாய் (கோடியில்) | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|
| கொளத்தூர் | 3.89 இலட்சம் | கொளத்தூர், வில்லிவாக்கம் (வடக்கு), அகரம் மற்றும் செம்பியம் | 12.64 | 95 சதவீத பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்பட உள்ளது. |
| மைலாப்பூர்-நந்தனம் | 4.34 2.32 இலட்சம் | மைலாப்பூர், சாந்தோம், ஆசாத் நகர், பீமண்ணாப்பேட்டை, ஆழ்வார்பேட்டை மற்றும் இராஜா அண்ணாமலைபுரம். | 23.55 | 90 சதவீத பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்பட உள்ளது. |
| பள்ளிப்பட்டு | 3.46 இலட்சம் | அடையாறு, திருவான்மியூர். இந்திராநகர் மற்றும் சாஸ்திரி நகர். | 10.47 | 60 சதவீத பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்பட உள்ளது. |
| வியாசர்பாடி | 4.47 இலட்சம் | கொடுங்கையூர். வியாசார்பாடி மற்றும் பெரம்பூர் | 15.76 | 40 சதவீத பணிகள் முடிந்துள்ளன. மார்ச் 2001-ல் இயக்கி வைக்கப்பட உள்ளது. |
| வேளச்சேரி | 1.34 இலட்சம் | வேளச்சேரி மற்றும் கிண்டி கிழக்கு | 7.45 | 40 சதவீத பணிகள் முடிந்துள்ளன. 2001-ல் இயக்கி வைக்கப்பட உள்ளது. |

[2000 மே 10

**(ஆ) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கொணரும் முதன்மைப் பெருங்குழாய்கள்:**

ஏழு பணிகளில், போரூரிலிருந்து கத்திப்பாரா சந்திப்பு வரை, செங்குன்றத்திலிருந்து கே.கே. நகர் குடிநீர் விநியோக நிலையம் வரை, கே.கே. நகரிலிருந்து ஈக்காட்டுத்தாங்கல் குடிநீர் விநியோக நிலையம் வரை மற்றும் வேளச்சேரியிலிருந்து வேளச்சேரி குடிநீர் விநியோக நிலையம் வரை ஆகிய நான்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கீழே விவரிக்கப்பட்டுள்ளதுபோல் மீதமுள்ள மூன்று பணிகளும் முன்னேற்ற நிலையில் உள்ளன:—

| வ. எண் | வேலைகளின் விவரம் | திட்ட மதிப்பு (ரூபாய் (கோடியில்) | குழாய்களின் மொத்த நீளம் (மீட்டரில்) | போடப்பட்ட குழாய்களின் நீளம் (மீட்டரில்) | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | 1100 மி.மீ. விட்ட பெருங்குழாய்கள் பள்ளிப்பட்டு முனையிலிருந்து மைலாப்பூர்-நந்தனம் குடிநீர் விநியோக நிலையம் வரை. | 11.72 | 6330 | 6189 | பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. |
| 2. | 800 மி.மீ. விட்ட பெருங்குழாய்கள் மாதவரம் முனையிலிருந்து வியாசர்பாடி குடிநீர் விநியோக நிலையம் வரை. | 5.59 | 4640 | 4380 | பணிகள் முடிந்து இயக்கி வைக்கப்பட்டு உள்ளன. |
| 3. | 1300 மி.மீ. விட்ட பெருங்குழாய்கள் கத்திபாராவிலிருந்து பள்ளிப்பட்டு முனை வரை. | 12.60 | 5980 | 5100 | 90 சதவீத பணிகள் முடிந்துள்ளன. ஜனவரி 2001-ல் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. |



2000 மே 10]

**(இ) குடிநீர் விநியோக அமைப்பினை வலுப்படுத்துதல்:**

பட்டேல் நகர், வியாசர்பாடி, கொளத்தூர், சூளைமேடு, ஈக்காட்டுத்தாங்கல், கண்ணப்பர் திடல், நந்தனம் மற்றும் பள்ளிப்பட்டு ஆகிய 8 மண்டலங்களிலும் உள்ள உள்ளூர் குடிநீர் விநியோக அமைப்பினை வலுப்படுத்துவதற்கான பணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 1999 ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் பணி உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. பணிகள் நடைபெற்று வருகின்றன.

28. பெரும்பாலான இரண்டாவது கட்ட பணிகள் ரூபாய் 546.30 கோடி மதிப்பிலான இரண்டாவது சென்னைக் குடிநீர் திட்டத்தின்கீழ், 86.50 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி உதவியுடன் செயலாக்கப்படுகிறது. கொள்முதல் ஒப்பந்தங்களை திறமையாக முடிவு செய்ததனால் கிடைத்த சேமிப்பிலும் உலக வங்கி திட்டத்தில் கடன் சேமிப்பான 8.62 மில்லியன் அமெரிக்க டாலர் பணத்தை உபயோகித்ததாலும் ரூ. 100.00 கோடி மதிப்பிலான கூடுதல் பணிகள் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அவை அனைத்தும் கடன் முதிர்வு காலத்திற்கு முன்பாக முடிக்கப்படும்.

**குறுகிய கால குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்கான வழிகள்:**

29. குடிநீர் வழங்குதலை மேம்படுத்தும் பெருந்திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும்கூட, சில கடைமடைப் பகுதிகளுக்கு இத்திட்டம் முடிவடையும்போதுதான் குடிநீர் வழங்க இயலும். ஆகவே, இப்பகுதிகளுக்கு குறுகிய கால திட்டத்தில் குடிநீர் விநியோகிக்கும் வழிகளாக, உவர்நீரினை குடிநீராக்கும் கலன்களை அமைத்து அதன்மூலம் உப்பு நீக்கப்பட்ட நீரினை வழங்குதல், பழுதடைந்த இரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் பி.வி.சி. குடிநீர்க் குழாய்களை மாற்றி புதிய இரும்புக் குழாய்களை பதித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் குடிநீர் வழங்கலை அதிகப்படுத்தவும் தரமான நீரை அளிக்கவும் குடிநீர்க் கசிவுகளைக் குறைக்கவும் முடிகிறது.

**குடிநீர்க் குழாய்களைப் புதுப்பித்தலும் மாற்றுப் பாதையில் குழாய்கள் அமைத்தலும்:**

30. முகப்பேர் மற்றும் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் ஆகிய பகுதிகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் பராமரிக்கப்பட்டு குடிநீர் வாரியத்திற்கு பராமரிப்புக்காக மாற்றப்பட்டது. இந்தப் பகுதிகளில் பதிக்கப்பட்ட குழாய்கள் கனரக வாகன போக்குவரத்தினாலும் மற்றும் இதர சேவை நிறுவனங்கள் சாலையை அடிக்கடி தோண்டுவதாலும் பழுதடைந்து, குடிநீர் மாசுப்பட்டு பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டது. இப் பகுதிகளில் குடிநீர் வசதியை மேம்படுத்த பழுதடைந்த ஏ.சி. மற்றும் பி.வி.சி. குழாய்களை அகற்றி, பதிலாக ரூ. **9.00** கோடி செலவில் **30.30** கி.மீ. நீளத்திற்கு புதிய இரும்புக்குழாய்களைப் பதிக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலும், **900** மி.மீ. விட்டமுடைய குடிநீர்ப் பெருங்குழாய்களை கங்காதீசுவரர் கோயில் தெருவிலிருந்து சென்னை காவல் துறை ஆணையர் அலுவலகம் வரை மாற்றுப்பாதையில் அமைக்க ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன.

**கழிவுநீர் அமைப்புகள்:**

31. கீழ்பகுதிகளில் உள்ள கனகம்தரமணி, கொடுங்கையூர் (வடக்கு மற்றும் தெற்கு), வியாசர்பாடி ஏரிப்பகுதி, வேளச்சேரி, சாரதி நகர், டாக்டர் ராதாகிருட்டிணன் நகர் (வடக்கு மற்றும் தெற்கு) ஆகிய பகுதிகளில் ரூபாய் **61.55** கோடி மதிப்பில் கழிவுநீர் அகற்றும் வசதிகள் செய்ய பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடந்து கொண்டு இருக்கின்றன. இவைகளில் வேளச்சேரி கழிவு நீரகற்று வசதித் திட்டம் 1999 ஜனவரியில் முடிவடைந்தது. மற்ற வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளதுபோல் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளன:



| வ. எண் | பணியின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை | பயன்பெறும் பகுதி | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | வேளச்சேரி கழிவுநீர் திட்டத்தின் ஒரு பகுதி | 4.55 | 10000<br>15000 | ஏ.ஜி. காலனி<br>முருகு நகர் | பணி முடிவடைந்தது. |
| 2. | வியாசர்பாடி ஏரி பகுதி | 7.35 | 100000 | வியாசர்பாடி ஏரி பகுதி | பணி முடிவடைந்து கடைசி சோதனை ஓட்டம் முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 3. | கொடுங்கையூர் கழிவுநீர் திட்டம் | 30.75 | 100000 | கொடுங்கையூர் | 96 சதவீத வேலைகள் முடிவடைந்து மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. |
| 4. | கனகம்தரமணி | 7.25 | 25000 | கனகம்தரமணி | 98 சதவீத பணிகள் முடிவடைந்து மீதமுள்ள பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. |
| 5. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் (வடக்கு) | 11.94 | 63700 | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் (வடக்கு) | பணிகள் முடிவடைந்தன. |
| 6. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் (தெற்கு) | 5.22 | 18000 | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர் (தெற்கு) | பணிகள் முடிவடைந்தன. |
| 7. | சாரதி நகர் | 2.05 | 10000 | சாரதி நகர் | பணிகள் முடிவடைந்தன. |

[2000 மே 10

**32. 16 கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்துதல்:**

16 கழிவு நீரேற்று நிலையங்களை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 11 நிலையங்களில் பணிகள் முடிவடைந்து இயக்கப்பட்டன. மீதமுள்ள பணிகள் ஜூலை 2000-ல் இயக்கி வைக்கப்படும்.

**33. உடனடியான இடைக்கால நடவடிக்கைகள்:**

உடனடியான இடைக்கால நடவடிக்கையாக, 39 கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள இயந்திரங்களை அகற்றி புதிய இயந்திரங்களை ரூ.4.75 கோடி செலவில் பொருத்தி புதுப்பிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**34. மாம்பலம் கால்வாயை ஒட்டிப் பதிக்கப்படும் கழிவுநீர் ஆழ் குழாய்கள்:**

மாம்பலம் கால்வாயில் சுத்தகரிக்கப்படாத கழிவுநீர் வந்தடைவதைத் தடுத்திட, தனியே கழிவுநீர் ஆழ்குழாய்களை இக்கால்வாயின் கரையில் பதிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்த முதலீடு சுமார் ரூ.9.00 கோடி. இப்பணி ஜூன் 2000-க்குள் முடித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**35. கழிவுநீர் மறுபயன்பாட்டுத் திட்டம் மற்றும் செயற்பாட்டை மேம்படுத்தும் திட்டம் (J.B.I.C.):**

இத்திட்டத்தின்கீழ் கழிவுநீரைக் கொண்டு செல்லும் விசைக்குழாய் அமைப்பதற்கான ஒப்பந்தம் ரூ.33.65 கோடி மதிப்பில் நவம்பர் 1998-ல் வழங்கப்பட்டுள்ளது. கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மணலியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கொண்டு செல்வதற்கு ரூ.36.34 கோடி மதிப்பில் நவம்பர் 1998-ல் மற்றொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் செயல்படுத்தப்படும் நிலையில் உள்ளன. மேலும் இவ்விரண்டு பணிகளும் திட்டமிட்டப்படி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**36. புறநகர் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல் கழிவு நீரகற்று வசதிகள் அமைத்தல்:**

**அம்பத்தூரிலுள்ள பாடி புதுநகருக்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைத்தல்:**



2000 மே 10]

குடிநீர் பணிகள் ஆகஸ்ட் 1999-லும் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைத்தல் பணிகள் ஜூன் 1999-லும் முடிவடைந்தன. ஏறத்தாழ 20,000 மக்கள் இந்தப் பணி மூலம் பயன்பெற்றனர்.

**37. மாதவரம் நகராட்சிக்கு குடிநீர் வழங்குதல்:**

தற்பொழுது மாதவரம் நகராட்சியில் 58,000 மக்கள் உள்ளனர். அவர்களுக்கு லாரிகள் மற்றும் கைப்பம்புகள் மூலம் நபர் ஒருவருக்கு நாளொன்று 10 லிட்டர் வீதம் நீர் விநியோகிக்கப்படுகிறது. மாதவரம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்குவதை மேம்படுத்துவதற்கு ரூ.11.64 கோடி செலவில் ஒரு நீண்ட காலத் திட்டம் 1998-ல் தீட்டப்பட்டுள்ளது. இத்துடன் உடனடியாக, புக்ராஜ் நகர் பகுதியில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த குறுகிய கால திட்டம் ஒன்று ரூ.45.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தீட்டப்பட்டது. இத்திட்டத்தில் 300 மி.மீ. குழாய் பதித்தல், இரண்டு நீர் நிரப்பு நிலைகள் அமைத்தல், கீழ்நிலைத்தொட்டி ஒன்று கட்டுதல், நீரேற்று நிலையத்திற்கான இயந்திரங்கள் பதித்து இயக்குதல் அடங்கும். இந்தப் பணிகள் முடிவடைந்து ஜூன் 1999-ல் இயக்கி வைக்கப்பட்டது. தற்பொழுது இதனால் நாளொன்றுக்கு 2.5 இலட்சம் லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு **18,000** மக்கள் பயன் பெறுகிறார்கள். அடுத்து மற்றொரு திட்டம் ரூ. **49.00** இலட்சம் மதிப்பில் புக்ராஜ் நகரில் குழாய்களின் வாயிலாக குடிநீர் வழங்க 10 கி.மீ. வரை குடிநீர் விநியோக பெருங்குழாய்கள் பதிப்பதற்கான வேலைகள் தீட்டப்பட்டு, வேலைகள் முடிவடைந்துள்ளன.

**38. மதுரவாயல், போரூர், வளசரவாக்கம், இராமாபுரம், ஆலந்தூர், செயின்ட் தாமஸ் மவுண்ட் கன்டோன்மென்ட், பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர், கௌல்பசார், மீனம்பாக்கம், உள்அகரம் மற்றும் புழுதிவாக்கம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல்:**

சென்ற வருடம் சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததின் அடிப்படையில், வாரியம் மேற்குறிப்பிட்ட உள்ளாட்சிகளுக்குக் குடிநீர் வழங்கல் சம்பந்தமான திட்டங்கள் உருவாக்கப்பட்டு பத்து மாத காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

[2000 மே 10

| உள்ளாட்சியின் பெயர் | கூடுதலாக வழங்க இருக்கும் நீரின் அளவு நாள் ஒன்றுக்கு (மில்லியன் லிட்டர் களில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சங் களில்) | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | முன்னேற்ற நிலை |
|---|---|---|---|---|
| 1. ஆலந்தூர் | 12.8 | 1.50 | 6.65 | எல்லா பணிகளும் |
| 2 செயின்ட் தாமஸ் மவுன்ட் | 1.6 | 0.18 | | முடிவடைந்துள்ளன. |
| 3. பம்மல் | 3.0 | 0.50 | 3.90 | எல்லா பணிகளும் |
| 4. அனகாபுத்தூர் | 1.5 | 0.26 | | முடிவடைந்துள்ளன. |
| 5. மீனம்பாக்கம் | 0.5 | 0.12 | | |
| 6. மொழிச்சலூர் | 1.0 | 0.26 | 2.86 | எல்லா பணிகளும் |
| 7. கெவுல்பசார் | 0.5 | 0.12 | | முடிவடைந்துள்ளன. |
| 8. உள்ளகரம் மற்றும் புழுதிவாக்கம் | 0.8 | 0.18 | 2.83 | எல்லா பணிகளும் முடிவடைந்துள்ளன. கூடுதல் பணிகள் ரூபாய் 1.65 கோடிகளுக்கு எடுத்துக்கொள்ள பட்டுள்ளன. |
| 9. போரூர் (அ) தலைமைப் பணிகள் | 3.2 | 0.35 | 1.59 | எல்லா பணிகளும் முடிவடைந்துள்ளன. |
| (ஆ) விநியோக முறை | | | 2.67 | 50 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 10.வளசரவாக்கம் | 2.6 | 0.31 | 1.85 | 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 11. மதுரவாயல் | 1.9 | 0.32 | 2.90 | 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 12.இராமாபுரம் | 2.0 | 0.31 | 1.29 | 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. கூடுதல் பணிகள் ரூ.0.38 கோடிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. |
| மொத்தம் | 31.4 | 4.41 | 26.54 | |



2000 மே 10]

***39. வாரியத்தின் மூலதனச் செலவு:***

*1999-2000 ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.287.00 கோடியில் 2000 ஆண்டு மார்ச் வரை வாரியம் ரூ.289.30 கோடிக்கு மூலதனப் பணிகளை கீழ்க்கண்டவாறு செயல்படுத்தியுள்ளது:*

| வ. எண் | பணியின் பெயர் | செலவு மார்ச் 2000 வரை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் இரண்டாம் சென்னை குடிநீர்த் திட்டம் | 155.83 |
| 2. | ஜெ.பி.ஐ.சி. (ஜப்பான்) நிதி உதவியுடன் நிறைவேற்றப்படும் கழிவுநீர் அமைப்பு புதிதாக்க திட்டம் | 52.08 |
| 3. | அட்கோ/டுபிட்கோ நிதி உதவி திட்டங்களும், பிற பணிகளும் | 81.39 |
| | மொத்தம் | 289.30 |

*பொதுவாக ஆண்டிற்கு ஆண்டு மூலதனப் பணிகளுக்கான செலவுகள் கீழே குறிப்பிட்டுள்ளது போல வெகுவாக உயர்ந்துள்ளன:*

| வருடம் | மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995-96 | 107.89 |
| 1996-97 | 124.50 |
| 1997-98 | 160.77 |
| 1998-99 | 269.40 |

[2000 மே 10

**40.** 2000-2001 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட முதலீட்டில் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ரூ.147.92 கோடிகளும், கழிவுநீர் அகற்று திட்டங்களுக்கு ரூ.94.27 கோடிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆக, ரூ.242.19 கோடி கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | | திட்டத்தின் விவரம் | ரூபாய் (கோடியில்) |
|---|---|---|---|
| | | அ.குடிநீர் வழங்கல் | |
| | I. | உலக வங்கி நிதி உதவி பெறும் இரண்டாவது சென்னை திட்டம் | |
| 1. | | குடிநீர் பகிர்வு நிலையங்கள் | 17.85 |
| 2. | | குடிநீர் கொணரும் குழாய்கள் | 3.80 |
| 3. | | குடிநீர் பகிர்வு உட்பணிகள் | 60.03 |
| 4. | | குடிநீர் கசிவை கண்டறிந்து பழுது பார்க்கும் பணிகள் | 28.42 |
| 5. | | கலந்தாய்வு வேலைகள் | 10.14 |
| 6. | | குடிநீர் அளவு கருவிகள் பொருத்துதல் | 5.76 |
| 7. | II. | மூன்றாவது சென்னை திட்டம் | 5.00 |
| 8. | III. | செம்பரம்பாக்கத்தில் 530 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் (ஒரு பகுதி அட்கோ நிதி) | 15.00 |
| 9. | | பழுதடைந்த குழாய்களைப் புதுப்பித்தல் | 1.45 |
| 10. | | குடிநீர் குழாய்களை மாற்றுப் பாதையில் அமைத்தல் | 0.40 |
| 11. | IV. | த.நா.ஊ.வ.நி. சென்னை நகரை ஒட்டிய 12 ஊராட்சி பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல் | 0.07 |
| | | மொத்தம் (குடிநீர் வழங்குதல்) | 147.92 |
| | | ஆ. கழிவுநீரகற்றல் | |
| 12. | V. | ஜெ.பி.ஐ.சி.நிதி மூலமாக கழிவுநீரகற்றல் அமைப்புகளின் புத்தாக்கம். | 51.12 |
| | VI. | நிதி நிறுவனங்கள் | |
| 13. | | கொடுங்கையூர் தெற்கு மற்றும் வேளச்சேரி பகுதிகளுக்கு கழிவுநீரகற்று திட்டம். | 2.10 |
| 14. | | கோயம்பேடு மற்றும் பெருங்குடியில் கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல். | 4.00 |
| 15. | | கோயம்பேடு, கொடுங்கையூர், நெசப்பாக்கம் மற்றும் வில்லிவாக்கத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்துதல். | 20.00 |
| | VII. | வாரியம் மற்றும் வைப்புப் பணிகள் | |
| 16. | | இதர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகள் | 8.06 |
| | | மொத்தம் (கழிவுநீரகற்றல்) | 94.27 |
| | | ஆக மொத்தம் | 242.19 |



2000 மே 10]

***41. வாரியத்தின் நிதி நிலைமை:***

*1998-1999 ஆம் ஆண்டில் வாரியத்தின் வருவாய்களினால் நிதி ஆதாரம் ரூ.168.35 கோடியாக இருந்தது. 1999-2000-ல் அது ரூ.200.08 கோடியாக இருக்கும். மேலும் 2000-2001-ல் வாரியத்தின் வருவாய் இன நிதி ஆதாரம் ரூ.214.16 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 1998-1999-ல் வருவாய் கணக்கில் செலவினம் ரூ.179.84 கோடியாக இருந்தது. 1999-2000-ல் ரூ.216.19 கோடியாக இது உயர்ந்து, வரும் 2000-2001ஆம் ஆண்டில் வருவாய் கணக்கில் செலவினம் ரூ.256.47 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளின்போது செலுத்தப்பட்ட வட்டியினை மூலதனமாக்கப்பட்ட பிறகு, 1999-2000-ல் உபரி வருவாய் ரூ.26.51 கோடி என்றும், 2000-2001-ல் ரூ.24.88 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் வருவாய் கணக்கு செலவினத்தின் சுமார் 20.41 விழுக்காடு (ரூ.52.35 கோடி) சம்பள செலவினங்களாகும். மேலும் மொத்த வருவாயிலிருந்து 15.45 விழுக்காடு (ரூ.39.61 கோடி) இயக்குதல் மற்றும் பராமரிப்புக்காக செலவிடப்படும்.*

*வரும் ஆண்டுகளில், வாரியத்தால் திரும்ப செலுத்த வேண்டிய மூலதனப் பணிகளுக்காக கடன் தொகைகளின் அளவு மிக அதிகமாகும். குறிப்பாகச் சொல்லப்போனால், வருவாய்களுக்கு செலவினத்தில் சுமார் 49 விழுக்காடு வட்டி செலவினமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இத்தொகை ஆண்டுக்காண்டு, சுமார் 20 விழுக்காடு அளவிற்கு உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.*

*வாரியம் தனது வசூலை உயர்த்த திறமையான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதை கடந்த சில வருடங்களில் கீழே குறிப்பிட்டபடி நுகர்வோர்களிடம் பெற்ற வசூல்களிலிருந்து காணலாம்:*

| வருடம் | வருவாய் வசூல் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1995-96 | 82.13 |
| 1996-97 | 87.04 |
| 1997-98 | 119.90 |
| 1998-99 | 165.27 |
| 1999-2000 | 179.50 |

[2000 மே 10

**42.** வரும் காலத்திற்கான பெருந்திட்டங்கள்:

(i) பெரிய நீர் நிலைகளின் தரத்தை மேம்படுத்துவதன் வாயிலாக சுற்றுப்புற சூழ்நிலையின் தரத்தை மேம்படுத்தலும் மற்றும் பாதுகாத்தலும்:

(அ) கூவம் மற்றும் அடையாறு ஆறுகள் சென்னை நகரில் ஓடுகின்றன. இந்த இரண்டு ஆறுகளையும் மனிதனால் உருவாக்கப்பட்ட பக்கிங்காம் கால்வாய் இணைக்கின்றது. பருவமழைக் காலங்களில் வருடத்தில் இரண்டு மாதங்களுக்கு இந்த நீர் நிலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. மீதமுள்ள மாதங்களில் இந்த நீர் நிலைகளில் சேரும் 311 மழை தண்ணீர் கால்வாய்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வந்து சேருகின்றது. இதனால் குப்பைகளும் கழிவு மணலும் சேர்ந்து விடுகின்றன. கூவம் மற்றும் அடையாறு நதிகள் கடலில் சேரும் இடங்களில் மணல் தடுப்பு அமைப்பு இருப்பதால், இவ்வாறுகள் கடலில் கலப்பது தடுக்கப்படுகிறது. அதன் விளைவாக இவற்றில் அசுத்த நீர் தேங்கி விடுகிறது. இதனால், வெள்ளக் கட்டுப்பாட்டு முறை, மழைநீர் வடிகால்கள் ஆகியவற்றில் பிரச்சினைகள் ஏற்படுவதுடன், அதன் விளைவாக பொதுப் பிரச்சினைகளும் உருவாகின்றன.

(ஆ) 1891 ஆம் ஆண்டுக்கு முன்பாக கழிவுநீர் அகற்றும் அமைப்புகள் சென்னை நகரில் நிறுவப்பட்டது. மேலும் கடந்த 108 வருடங்களில் இது விரிவாக்கப்பட்டது. பல வருடங்களாக இந்த நீர் நிலைகளில் போதுமான வசதி இல்லாத அமைப்புகளில் போதுமான அளவு இணைப்புகள் இல்லாமல் தொடர்ந்து கழிவுநீரகற்றும் நிலையங்கள் செயல்படுவதால் ஏற்படும் தடைகளால் கழிவுநீரில் மணல்கள் தங்கி விடுதல், திறமையில்லாததால் தொடர்ந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்க முடியாதது. முடிவில் கழிவுநீர் சேர்ந்து விடுதலும் மற்றும் கழிவுநீர் மணல் படிந்து கழிவுநீர் உபரியாக வெளிவருகிறது. இவை பல ஆண்டுகளாக நீர் நிலைகளை சென்று அடைகிறது.

தமிழக அரசின் உதவியால் பெறப்பட்ட பிரிட்டிஷ் கலந்தாய்வு ஆலோசகரின ஆலோசனைகளை 1989-1996 ஆம் ஆண்டில் குடிநீர் வாரியம் பெற்றது. அதன் அடிப்படையில் பல பணிகள் முடித்து கழிவுநீர் அகற்றும் அமைப்பு முறைகளில் உள்ள பெரும்பாலான



2000 மே 10]

தடைகள் அகற்றப்பட்டன. தேவைப்படும் காலங்களில் இயந்திரங்கள் உபயோகிக்கப்பட்டு கழிவுநீர் தூர்வாரப்பட்டது. கழிவுநீர் அகற்றும் நிலையங்களின் செயல்திறன்கள் மேம்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகளால், 50 கழிவுநீர் புகார்கள் மட்டுமே பெறப்பட்டன. மேலும் கழிவுநீர் உபரியாக வெளியே வருவது குறைந்தது. தற்பொழுது இருக்கும் கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம் மற்றும் வில்லிவாக்கம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்த அட்கோ மற்றும் டுபிட்கோ ஆகியவைகளின் கடன் உதவியுடன் ரூ.51.00 கோடி மதிப்பில் விரைவில் பணிகள் செய்யப்படவுள்ளன. இருப்பினும், கிருஷ்ணா நதிநீர் கிடைக்கப்பெற்று குடிநீர் விநியோகம் இரட்டிப்பானதால், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், குடிநீர் அமைப்புகளில் கலந்துவிடாமல் தடுப்பதற்கு தற்பொழுது இருக்கும் கழிவுநீர் அகற்றும் முறைகளின் செயல்திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டி உள்ளது.

(இ) கழிவுநீர் அகற்றும் முறைகளின் செயல்திறன்களை மேம்படுத்த ஏறத்தாழ ரூ.1300.00 கோடி தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டுச் செலவு மிகவும் அதிகமாக உள்ளதால் இப்பணிகளை இரண்டு கட்டங்களில் குடிநீர்த் திட்ட விரிவாக்கப் பணிகளுக்கு இணையாகச் செயல்படுத்த உத்தேசிக்கபட்டுள்ளது. நாளொன்றுக்கு 627 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகத்திற்கு ஈடான கழிவு நீரை அகற்ற தற்போதுள்ள வசதிகள் போதுமானவை அல்லாததால், கழிவுநீர் அகற்றும் அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்துவதை முதற்கட்ட பணியாக எடுத்துச் செய்யக் கருதப்படுகிறது. மேலும் தேவையான அபிவிருத்திப் பணிகள் 2005 ஆம் ஆண்டிற்குப் பிறகு இரண்டாவது கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

*சென்னை நகர நதிகள் பராமரித்தல் திட்டம்:*

கீழ்க்கண்ட பணிகள் சென்னை நகர நதிகள் பராமரித்தல் திட்டத்தின்கீழ் ரூ.615.40 கோடி செலவில் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது:

| வ. எண் | பணிகள் | அளவு | | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | கொள்திறனை விரிவாக்க கழிவுநீர் குழாய்களைப் பதித்தல் | 65.22 கி.மீ. | | 189.30 |
| 2. | இருக்கும் கழிவுநீர் அகற்றும் நிலையங்களின் கொள்திறனை அதிகரித்தல் | 33 கழிவுநீர் அகற்றும் நிலையங்கள் | | 133.20 |
| 3. | கொள்திறனை விரிவாக்க கழிவுநீர் இறைக்கும் பெருங்குழாய்கள் பதித்தல் | 50.02 கி.மீ. | | 156.90 |
| 4. | நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு பகுதிகளில் சுத்திகரிப்பு கொள்திறனை விரிவாக்குதல் மற்றும் எல்லா ஆறு கழிவுநீர் அகற்றும் இயந்திரங்களில் நுண்ணுயிர்களைக் குறைக்கும் சுத்திகரிப்பு முறைகளை அமைத்தல் | கொள்திறன் விரிவாக்கம்<br>நுண்ணுயிர் குறைத்தல் | 264 மி.க.அ.<br>487 மி.க.அ. | 166.00 |
| | மொத்தம் | | | 615.40 |

இந்திய அரசின் நிதி உதவிக்காக, இத்திட்டம் தேசிய நதி பராமரிப்பு இயக்குரைகம், காடுகள் மற்றும் சுற்றுப்புற சூழல் அமைச்சகம் ஆகியவற்றின் முன் வைக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதல் 2000-2001 ஆம் ஆண்டில் கிடைத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தை எடுத்து செயல்படுத்தி மற்றும் 2003-2004 ஆம் ஆண்டில் முடிக்க சென்னைக் குடிநீர் வாரியம் தயாராக உள்ளது. இதுமட்டும் முடித்துவிட்டால் சென்னை நகரில் நீர் நிலைகளில் உள்ள நீரின் தரம் வெகுவாக அபிவிருத்தி ஆகும்.

### (ii) இயக்குதலும், பராமரிப்பும்-ஒரு மாற்றமிகு எடுத்துக்காட்டு:

இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பிரிவில், முந்தைய நிலையான 'பழுதினை பராமரிப்பது' என்பதை மாற்றி பழுதுருவதற்கு முன்னரே பராமரிப்பது என்ற புதிய நிலை இவ்வாண்டில் கடைபிடிக்கப்படுகிறது. பராமரிப்புப் பணிகளில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது மற்றும் அதற்கு அவசியமான உரிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது என்ற புதிய கோட்பாட்டினை இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பிரிவில் நடைமுறைப்படுத்துவது என்பது இவ்வாரியம் இவ்வாண்டில் எடுத்துள்ளது மிக முக்கியமான முடிவாகும். இதன் முக்கிய அம்சங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:





- நிதி ஒதுக்கீட்டின்போது பற்றாக்குறை ஏற்பட்டாலும்கூட, தேவையை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு , வாரியம் 'புதுப்பித்தல் மற்றும் மாற்றி அமைத்தல் நிதியம்' என்ற-ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. 1999-2000 ஆண்டில் இந்நிதியத்திற்காக ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- பொருட்கள் வாங்குவது மற்றும் பொதுவான பணிகளுக்கான ஒப்பந்தங்கள்மீது ஆண்டுவாரியான ஒப்பந்த விலை விகிதங்களை அறிமுகப்படுத்துவது மற்றும் இம்முறையினை மேலும் வலுப்பெறச் செய்வது. இந்நடைமுறைகள் மூலம் செலவுகள் குறையவும் திறன்பாடு மற்றும் உற்பத்தித் திறன் உயரவும் செய்ய முடியும்.

- பேஜர் கருவிகள், கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள் மேம்படுத்துதல் வாயிலாக தகவல் தொடர்பு வசதிகள் அதிகரித்தல்.

தேவைப்படும் இடங்களில் இயந்திரமயமாக்குதல் மூலமும், அதிகாரம், அதிகமான அளவு, அடி மட்டம் வரை பரவலாக்கப்படுவதன் மூலமும், செயல் மற்றும் பராமரிப்புப் பணியினை மேம்படுத்த இவ்வாரியம் முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தி வருகிறது. முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டு குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாயை விரிவுபடுத்துதல், பிரதான குடிநீர் குழாயினை மாற்றி அமைத்தல், கழிவுநீர் குழாயை பெரிதுபடுத்தல், பழுதடைந்த பிரதான குழாய்களையும் மற்றும் பகிர்ந்தளிக்கும் அமைப்புகளையும் மாற்றியமைத்தல் ஆகிய பணிகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டன.

### (iii) நிருவனத்தை வலுப்படுத்தல் மற்றும் மனிதவள மேம்பாடு:

ஐதராபாத்திலுள்ள உஸ்மானியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த நகர்ப்புற மற்றும் சுற்றுச் சூழலுக்கான மண்டல ஆய்வு மையத்தின் உதவியுடன், நிர்வாக சீரமைப்பு ஆய்வு ஒன்றியனை இவ்வாரியம் தொடங்கியுள்ளது. இதன்மூலம் கீழ்க்கண்டவாறு இவ்வாரியத்தின் குறிக்கோள்களை அடையவும் அதற்கான வழிமுறைகளை உருவாக்கவும் கருதப்படுகிறது:

* வாரியத்தின் தற்போதைய நிர்வாக அமைப்பினை செலவுத்திறன் அடிப்படையில் ஆய்வு செய்வது, இடப்பாடுகளையும் குறைகளையும் சரிசெய்யப்படுவதற்கான வழிகளையும் கண்டறிவது.

* வாரியத்தின் எதிர்கால நிர்வாகத் தேவைகளை கருத்திற்கொண்டு வாரியத்தில் உள்ள மனிதவள ஆற்றலின் குறைபாடுகள் வலிமை, தொழில்நுட்ப அறிவு, பயிற்சிதிறன், தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள், தொழிலில் திருப்தி ஆகியவைகளைக் கண்டறிதல்.

* திட்டங்களை அடைவதற்கான வழிமுறைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கான முறைகளைக் கண்டறிதல்.

* பயிற்சிக்குரிய தேவைகளை மேற்கொள்ளுதல்.

மேற்படி ஆய்வின் முடிவுகள் செயலாக்கத்தில் உள்ளன. ஒட்டுமொத்தமான பணியின் தரத்தினை மேம்படுத்தவும், செயல்படும் சேவைகள் உயர்த்தவும், வாரியம் "நிறுவன விருப்புகளின் வினைமுறை திறன் மறு ஆய்வு" படிப்பினை மேற்கொள்ளவுள்ளது. இங்கிலாந்து நாட்டின் உலக மேம்பாட்டுத் துறை இதற்கான உதவி செய்யவும் மற்றும் நிதி அளிக்கவும் முன்வந்துள்ளது.

**(iv) கசிவு நீரைக் கண்டுபிடித்தல் மற்றும் சரி செய்தல்:**

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முறையில் வீட்டின் இணைப்புகளிலும் மற்றும் பிரதான குழாய்களிலும் 25-30 சதவிகிதம் கசிவு ஏற்படுகிறது என்று, பெருந்திட்டத்தினைத் தயாரிக்க ஆய்வு நடத்தியபோது கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகைய பெரும் அளவு கசிவுகளைக் கண்டுபிடித்து கட்டுப்படுத்தும் பொருட்டு பெரிய அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, நகரின் குடிநீர் விநியோக அமைப்பு முழுவதிலும் கட்டம் 3, 4 மற்றும் 5 ஆகிய மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 34,800 இணைப்புகளை உள்ளடக்கிய மூன்றாவது கட்டப் பணி ரூ.15.74 கோடி மதிப்பீட்டில் செப்டம்பர் 1996 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முடிக்கப்பட்டது. இப்பணிகளினால் பெறப்பட்ட அனுபவத்தின் மூலம் கசிவைக் கண்டிபிடித்து சரி செய்யும் பணிகளின் செயல் முறையில் முன்னேற்றம் ஏற்பட்டது. இதன்விளைவாக கசிவு வீதத்தை தற்போதுள்ள நிலையான 25-30





விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடாக குறைக்க வாரியத்தால் இயன்றது. இப்பணி நிறைவடைந்துள்ள பகுதிகளில், முன்பைவிட அதிக அளவிலும், அதிகமான நேரமும் குடிநீர் பெற முடிகிறது.

இதனிடையே கட்டம் 4 மற்றும் கட்டம் 5-ல் முறையே 73,500 மற்றும் 96,500 வீட்டு இணைப்புகளை உள்ளடக்கிய 4 மற்றும் 5-ஆம் கட்டப் பணிகள் 1999 மார்ச் மாதம் தொடங்கப்பட்டு 2002 ஆம் வருடம் பிப்ரவரி மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2000 வரை 52,000 வீட்டு இணைப்புகள் சரி செய்யப்பட்டன. இந்த இரண்டு கட்டங்களுக்கும் முறையே ரூ.70.00 கோடி மற்றும் ரூ.83.53 கோடி செலவிடப்படவுள்ளது. இந்தத் திட்டம் முடிவடையும்போது 130 மில்லியன் கனஅடி அளவு குடிநீர் வீணாகாமல் உபயோகிக்க இயலும்.

## இணைப்பு

### வளர்ச்சி முகப்புரை

#### (அ) குடிநீர் வழங்கல்

| | 1979-80 | 1999-2000 |
|---|---|---|
| சுத்திகரிப்பு கொள்திறன்(மில்லியன் லிட்டரில்) | 182 | 620 |
| தண்ணீர் உற்பத்தி (மில்லியன் லிட்டரில்) | 180 | 485 |
| குடிநீர் முதன்மை குழாய்களின் நீளம் (கி.மீ.) | 1250 | 1948 |
| குடிநீர் இணைப்புகள் | 1,16,000 | 2,32,839 |
| நீர்வழங்கு நிலையங்கள் | 2 | 10 (தற்போது கட்டுமானத்தில் உள்ள 6-ஐ தவிர) |

#### (ஆ) கழிவுநீர் சுத்திகரிப்பு முறை

| | 1979-80 | 1999-2000 |
|---|---|---|
| சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்) | 57 | 268 |
| நீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 134 |
| கழிவுநீர் இணைப்புகள் | 1,14,000 | 2,68,308 |
| கழிவுநீர் பெருங்குழாய்கள் | 1222 | 2140 |



## இணைப்பு III

[37 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### மானியக் கோரிக்கை எண் 49

### மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

### 2000-2001

தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் 40 விழுக்காட்டிற்கு மேல் நகர்ப்புற பகுதிகளில் வசிக்கின்றனர். முறையான, நன்கு வரையறுக்கப்பட்ட சீர்திருத்தங்களை அமலாக்க அரசால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சேவைகளின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றில் நல்ல பயனளிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்ட பணிகளால் தேவைகளை முழுமையாக நிறைவேற்றியதாகக் கருதமுடியாது என்று அரசு உணர்ந்தாலும், நிதிநிலையிலும், தொழில் நுணுக்கம் மற்றும் நிர்வாக ரீதியான செயல்பாடுகளிலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயலாற்றும் திறன் மிகக் கணிசமான அளவில் மேம்பட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது.

2. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒருங்கிணைந்த சட்டம் இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. இப்புதிய சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட வேண்டிய விதிகள் தயாரிக்கப்பட்டு இறுதி நிலையை எய்தியுள்ளது. இவ்வாண்டு மத்தியில் இந்த விதிமுறைகளை அறிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

3. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நியாயமான அளவு நிதிப்பங்கீடு அளிக்க வேண்டுமென 11—வது மத்திய நிதிக்குழுவின் முன் வலுவான கோரிக்கையை இம்மாநில அரசு வைத்துள்ளது. இவ்வாணையம் இந்த நியாயமான கோரிக்கையினைப் பரிசீலித்து தேவையான பரிந்துரையை அளிக்கும் என்று நம்புகின்றோம்.

4. 2002-2003 ஆம் ஆண்டு முதல் 2006-2007 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப்பங்கீடு

[2000 மே 10

குறித்து பரிந்துரைகள் செய்ய இரண்டாவது மாநில நிதி ஆணையத்தை அரசு அமைத்துள்ளது. இந்த நிதி ஆணையம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஆராய்ந்து தக்க பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். முதலாம் மாநில நிதி ஆணைய பரிந்துரையின் அடிப்படையில் அரசு அளித்துவரும் நிதிப்பங்கீடு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.293.20 கோடி நிதிப்பகிர்வு என்ற நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.458.62 கோடியை எட்டியுள்ளது.

5. 1999-2000 ஆண்டில் 12 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிய இருவழி கணக்கு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை 2000-2001 ஆம் ஆண்டில் அனைத்து நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் (சென்னையைத் தவிர) விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. நகராட்சிப் பணிகளை கணினிமயமாக்கல் பெரும்பாலும் முடிக்கப்பட்டுவிட்டது. 65 இலட்சத்திற்கும் மேலான முந்தைய ஆண்டுகளுக்கான பதிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு ஜூலை மாதம் முதல் அனைத்து நகராட்சிகளிலும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை வழங்குவது கணினி மூலமாகவே செயல்படும். மற்ற பணிகளும் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் கணினி மூலமாக செயல்படத் தொடங்கும்.

7. கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மாநிலநிதியிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப்பகிர்வு அதிகரிப்பு ஒரு புறம் இருந்தாலும் உள்ளாட்சி அமைப்புகளும் தங்கள் பங்கிற்கு, சொந்த வரி வசூலை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளன. தங்களது சொந்த நிதி ஆதாரங்களையும் சேர்த்து மூலதனப் பணிகளில் முதலீடுகளை உயர்த்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்தக் கூடுதல் வரி வசூல் உதவியுள்ளது.

8. அக்டோபர் 1999-ல் உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2 தொடங்கப்பட்டது. இத்திட்டம் இரண்டு முக்கிய பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதி பல்வேறு திட்டங்களுக்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் வழங்க உலக வங்கியிடமிருந்து 80 மில்லியன் அமெரிக்க டாலரும்



2000 மே 10]

மற்றொரு பகுதி நிறுவன மேம்பாட்டுக்காக 25 மில்லியன் அமெரிக்க டாலரும் என்று அமைக்கப்பட்டுள்ளது. திட்ட அமலாக்கம் ஆரம்பிக்கப்பட்டு 31-3-2000 வரையிலான காலம் வரை செலவு செய்யப்பட்ட ரூ.32.30 கோடி தொகையை உலக வங்கியிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நகராட்சிகள் நிர்வாகம்**

9. இப்பேரவையின் முன் இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயல்விளக்கக் குறிப்பில் 1999-2000 ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள், முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் நடைபெற்றுவரும் பணிகள் பற்றிய விவரங்கள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

10. 1999-2000 ஆண்டிற்கு அனைத்து நகராட்சிகளுக்கான உத்தேச மொத்த வரவு ரூ.618.74 கோடியாகவும், கடன் செலுத்துகை சேர்த்து உத்தேச செலவு ரூ.594.36 கோடியாகவும் இருக்கும். 2000-2001 ஆம் ஆண்டிற்கு மாநில வரிகளிலிருந்து ரூ.160.52 கோடி நிதிப்பங்கீடாக நகராட்சிகளுக்கு மாற்றப்படும். இது 1999-2000 ஆண்டிற்கு வழங்கப்பட்ட நிதியைவிட கணிசமான உயர்வாகும். இதைத்தவிர கேளிக்கை வரியிலிருந்து ஏறக்குறைய ரூ. 30 கோடியும், முத்திரை வரி மீதான மிகுவரியிலிருந்து பங்குத் தொகையாக ரூ.50 கோடியும் நகராட்சிகளுக்கு அளிக்கப்படும்.

***அடிப்படை பணிகள்:***

11. நகராட்சிகளால் பராமரிக்கப்படும் முக்கிய பணிகள் அதாவது சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் திடக் கழிவு நிர்வாகம் முதலியன மேம்பட்டுள்ளன. மேலும் கணிசமான நிதி ஒதுக்கீடு மூலம் இம்முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

***சாலைகள்:***

12. மாநிலத்திலுள்ள நகராட்சிகளில் மொத்தம் 7163.84 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. இதில் இவ்வாண்டு 700 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகள் தார்ச் சாலைகளாகவோ அல்லது சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவோ மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதவிர கடந்த மூன்று முதல் ஐந்தாண்டு காலமாக பராமரிக்கப்படாத தார்ச் சாலைகள் புதுப்பிக்கப்படும். பத்து வருடங்களுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட சிமெண்ட்

தெருக்கள் மற்றும் சிமெண்ட் சந்துகளில் பழுதான சிமெண்ட் சாலைகளும், தெருக்களும் சந்துகளும் ஒரு சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் பழுதுகள் நீக்கப்பட்டு புதுப்பிக்கப்படும். இப்பணிகள் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2 நிதியிலிருந்து ரூ.90 கோடி கடன் பெற்று செய்யப்படும்.

தெரு விளக்குகள்

13. மொத்தம் 2,40,245 தெரு விளக்குகளை நகராட்சிகள் பராமரிக்கின்றன. நடப்பாண்டில் கூடுதலாக 8,000 தெரு விளக்குகள் அமைக்க, ஒரு பகுதியான ரூ. 75 இலட்சம் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்யவும், மீதியை நகராட்சிகள் சொந்த நிதியிலிருந்து ஏற்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கல்:

14. 1999-2000 ஆண்டில் புதிய திட்டமாக பொன்விழா ஆண்டு குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.50 கோடி மானியத்துடன் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தொகையில், 12 நகராட்சிகள் மற்றும் 25 பேரூராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஒதுக்கீடு 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 80 கோடியாக உயர்த்தப்படும். இத்தொகையை பயன்படுத்தி தினசரி தனி நபர் நுகர்வு 50 லிட்டருக்கும் குறைவாக உள்ள நகராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சுகாதாரம்:

15. நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்த செலவிலான கழிப்பறைகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசின் மானியம் மற்றும் ஹட்கோவின் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை, நகராட்சிகள் மற்றும் ஐந்து மாநகராட்சிகளில் 1,00,880 தனியார் கழிப்பிடங்கள் (புதிய தண்ணீர் வசதி கொண்ட கழிப்பிடங்களுடன் உலர் கழிப்பிடங்களை தண்ணீர் பயன்படுத்தக்கூடிய கழிப்பிடங்களாக மாற்றம் செய்யப்பட்டவையும் சேர்த்து) கட்டப்பட்டன. மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையினை ஒழிக்கும் நோக்கத்துடன் அனைத்து பொது உலர் கழிப்பறைகளையும், தண்ணீர் வசதியுள்ள கழிப்பறைகளாக மாற்றம்



செய்யும் பெரிய திட்டம் அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டது. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் இருந்த 238 பொது உலர் வகை கழிப்பறைகளும் தண்ணீர் வசதியுள்ள கழிப்பறைகளாக மாற்றம் செய்யப்பட்டு, போதுமான தண்ணீர் வசதி அளிக்கப்பட்டது. இன்றையநாளில் எந்தவொரு நகராட்சி மற்றும் மாநகராட்சியிலும் உலர் வகை பொது கழிப்பிடங்கள் பயன்பாட்டில் இல்லை.

திடக் கழிவு நிர்வாகம்:

16. நகரங்கள் தூய்மையாக இருப்பதற்கு அன்றாடம் விழும் குப்பைகள் 100 விழுக்காடும் அகற்றப்பட்டு அதனை கலவை உரமாக மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கான சீரிய முயற்சிகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்குப் போதுமானதும் மற்றும் நவீனமானதுமான உள்கட்டமைப்பு வசதிகளை குப்பைகளை கொண்டு செல்லப் பயன்படும் வாகனங்களையும் சேர்த்து பலப்படுத்துவதற்கும், குப்பைகளைக் கொட்டவும், உரம் தயாரிக்கவும், கலவை உரக்கிடங்கினை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

17. உரக்கிடங்கிற்கான இடம் இல்லாத நகராட்சிகள் அல்லது தற்சமயம் இருக்கின்றவற்றில் தேவைக்குப் போதுமானதாக இல்லாத நகராட்சிகளில், உரக் கிடங்குகளுக்குத் தேவையான நிலங்கள் கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பகுதி-2 திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கு நகராட்சிகளில் உரக் கிடங்கிற்கு நிலங்கள் கையகப்படுத்த ரூ.1.75 கோடி தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு நிர்வாகப் பணிகளை சிறப்பாக செயல்படுத்த வார்டு அளவில் பொறுப்பேற்று போதுமான கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதை உணர்ந்து, நடப்பாண்டில் ஒவ்வொரு நகராட்சிகளிலும் குறைந்தது இரண்டு வார்டுகளிலாவது வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரிக்கப்பட வேண்டும் என திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெறப்படும்.

பெரு(மெகா) நகர திட்டம்:

18. சென்னை பெருநகர்ப் பகுதியில் அடங்கியுள்ள 8 நகராட்சிகளில் ரூ.52.98 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம்,

மழைநீர் வடிகால், சாலைகள், சாக்கடை, சிறு பாலங்கள் போன்றவை கட்ட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்டுள்ள இத்திட்டங்கள் மைய அரசின் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியுடன் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் நிதிக் கழகத்தால் செயல்படுத்தப்படும். ரூ.34 கோடி மதிப்பீட்டு செலவில் ஆலந்தூர் நகராட்சியில் எடுக்கப்பட்டுள்ள பாதாளச் சாக்கடை பணிகள் பெரிய பணிகளுள் ஒன்றாகும். இப்பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. அவை 30 மாத காலத்திற்குள் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நமக்கு நாமே திட்டம்:

19. 1999-2000 ஆண்டு முதல் நகராட்சிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பல்வேறு நகராட்சிகளுக்கு ரூ.2.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 99 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

சந்தை மற்றும் இறைச்சி கொட்டில்களை மேம்படுத்தல்:

20. 1999-2000 ஆண்டில் நகராட்சிப் பகுதிகளில் சந்தைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டம் தொடங்கப்பட்டு, அப்பணிகளுக்காக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் 23 நகராட்சிகளில் அங்காடிகள் புதியதாக கட்டவும் மற்றும் மேம்பாடுகள் செய்யவும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டு, நகராட்சிகளில் இறைச்சி கொட்டில்கள் புதியதாகக் கட்டவும், மேம்படுத்தவும் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டு 26 நகராட்சிகளில் ரூ. 1 கோடி செலவில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.

பயிற்சி

21. தமிழ் நாடு நகரவியல் பயிற்சி நிறுவனம் 13 பயிற்சித் திட்டங்கள் நடத்தி 655 நபர்களுக்குப் பயிற்சியளிக்க உத்தேசித்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு சீர்திருத்தங்கள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இத்துறையில் பணிபுரிகின்ற அலுவலர்களுக்கும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும்



பயிற்சியளிக்க வேண்டியுள்ளது. இப்பயிற்சி சிறந்த முறையில் நிர்வாகத்தில் கூட்டு முயற்சியையும், கால நிர்வாகத்தையும் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்:

22. முன்பு நடைமுறையில் இருந்த நேரு வேலைவாய்ப்புத்திட்டம், நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித்திட்டம் மற்றும் பிரதமரின் ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 01-12-1997 முதல் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத்திட்டம் என்ற புதிய திட்டமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் கீழ்க்கண்ட இரண்டு பகுதிகளாகச் செயல்படுகிறது.

(அ) நகர்ப்புற சுயவேலைவாய்ப்புத் திட்டம்.

(ஆ) நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம்

23. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 75 விழுக்காடும் மாநில அரசு 25 விழுக்காடும் நிதியுதவி அளிக்கின்றன. இத்திட்டம் நகர்ப்புற ஏழைமக்களை இலக்காகக் கொண்டு சிறப்பு முக்கியத்துவத்துடன் செயல்படுகிறது. அனைத்து பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசால் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக மொத்த ஒதுக்கீடு ரூ.22.08 கோடி (ரூ. 16.56 கோடி மத்திய அரசு பங்காகவும் ரூ.5.52 கோடி மாநில அரசு பங்காகவும்) ஆகும். இதன் தொடர்ச்சியாக மத்திய அரசினுடைய பங்காக ரூ.3.38 கோடி நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெறப்பட்டு, பல்வேறு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

24. தேசிய குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1996-97 ஆம் ஆண்டு முதல் மைய அரசு திட்டமாகத் தொடங்கப்பட்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சாலைகள், வடிகால், தெரு விளக்குகள், குடிநீர், பொதுக் கழிப்பிடங்கள் போன்ற அடிப்படை வசதிகளை

[2000 மே 10

தேர்ந்தெடுக்கப்பட்ட குடிசைப் பகுதியில் ஒருமுகப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1999-2000 ஆண்டிற்கு இத்திட்டச் செயல்பாட்டிற்கு ரூ.27.11 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, அத்தொகை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டது. 2205 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பசுமைத் திட்டம்-மரம் வளர்த்தல்-நகரங்கள் மற்றும் நகராட்சிகளில் தூய்மைக் கேட்டை தணித்தல் மற்றும் சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல்

25. சுற்றுப்புற சூழல்-மாசு ஏற்படுவதைக் கட்டுப்படுத்த, 2000-2001 ஆம் ஆண்டிற்கு பசுமைத் திட்டம் என்ற பெயரில் மாபெரும் திட்டம் ஒன்று செயல்படுத்த உத்தேசித்து, நகராட்சிகளில் தெரு ஓரங்களில், சாலைகள், பள்ளிகள், அரசு அலுவலக வளாகங்கள் மற்றும் பொது இடங்களில் மரக்கன்றுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பசுமைத் திட்டத்தின்கீழ் மரங்கள் நடவும் பராமரிக்கவும், தொழில் வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகள் ஈடுபடுத்தப்படுகின்றன.

**சென்னை மாநகராட்சி**

26. சுத்தமான மற்றும் பசுமையான சென்னையே ஒவ்வொரு சென்னை வாசியின் கனவாகும். இக்கனவினை சென்னை மாநகராட்சி உணர்ந்து, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

27. ரூ.100 கோடிக்கும் மேலான பெரிய முதலீட்டுத் திட்டமாக நகரில் பல இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்படுவதோடு, மூன்று மண்டலங்களில் மாநகராட்சியின் குப்பைகளை அகற்ற ஒரு புதிய முயற்சியாக தனியார் நிறுவனம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் உட்புற சாலைகள் ரூ.65 கோடி செலவில் புதுப்பிக்கப்படும். 2000-2001 ஆம் ஆண்டிற்கான பெரும் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:—

*சாலைகள்*

28. ஒவ்வொரு நகரத்திற்கும் சாலைகள் உயிர்நாடி ஆகும். சென்னை மாநகராட்சி 302 கி.மீ. நீளத்திற்கான பேருந்து வழித்தடச்



2000 மே 10]

சாலைகளையும் 1900 கி.மீ. நீளத்திற்கான உட்புற சாலைகளையும் பராமரிக்கிறது.

2000-2001 ஆம் ஆண்டில் குறிப்பாக உட்புறச் சாலைகள் உள்ளிட்ட சாலைப் பணிகளுக்காக ரூ.75 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தெரு விளக்குகள்

29. தெரு விளக்கு அமைக்கும் பணிகள் மேற்படுத்தப்பட்டு, பெரும் அடிப்படை மாற்றங்கள் சமீப வருடங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் உயர்மின்கம்ப விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கு ரூ. 3 கோடி செலவிடப்படும்.

பாலங்கள்

30. சென்னை நகரில் பெருகிவரும் வாகன போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இருக்கின்ற பாலங்களை மேம்படுத்தவும் மற்றும் புதிய பாலங்கள் கட்டுவதும் மிகவும் அவசியமாகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் பாலங்கள், சுரங்கப்பாதைகள் போன்றவற்றை மேம்படுத்தவும், புதியதாக கட்டவும், ரூ.35 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.115 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ள சிறு மேம்பாலங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

மழைநீர் வடிகால்

31. மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும், சாலைகளைப் பாதுகாக்கவும், சென்னை மாநகராட்சி சுமார் 753 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்களைப் பராமரிக்கிறது. தேவையான பகுதிகளில் தற்போது உள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்த 1999-2000 ஆண்டில் ரூ.16.5 கோடியில் பெரும் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. நடப்பாண்டில் கூடுதல் மழைநீர் வடிகால்களைக் கட்டவும், தற்போதுள்ள மழைநீர் வடிகால்களை மேம்படுத்தவும் ரூ.10 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு நிர்வாகம்

32. துப்புரவுப் பணி சிறப்பாகச் செயல்பட்டால்தான் அடிப்படை சுகாதாரம் மேம்பாடு அடையும். சென்னை மாநகரில்

3100 மெட்ரிக் டன் கழிவுப் பொருட்கள் சுமார் 8400 துப்புரவு பணியாளர்கள்மூலம் தினசரி சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகிறது. நடப்பாண்டில் துப்புரவுப் பணிகளுக்கும் மற்றப் பணிகளுக்கும் ரூ.16 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சியின் மேலும் சில மண்டலங்களில் கழிவுப் பொருட்களை அகற்றுவதைத் தனியார்மயமாக்கி நவீனப்படுத்துவதற்கு, மாநகராட்சி தொலைநோக்கோடு நல்லதொரு முடிவையெடுத்துள்ளது.

*பொது சுகாதாரம் மற்றும் குடும்பநலம்*

33. பொது சுகாதாரத்திற்கான தேவைகளையும், மகப்பேறு மற்றும் குழந்தை நலத்திற்கான தேவைகளையும் நிறைவு செய்ய சென்னை மாநகராட்சி 72 மருந்தகங்களையும் 93 சுகாதார மையங்களையும் பராமரிக்கிறது. வரும் ஆண்டில் தொற்று நோய்கள் மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

*கல்வி*

34. மாநகராட்சியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பள்ளிகளின் செயல்திறன் 1999-2000 ஆண்டில் பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள் மற்றும் இதர சாதனங்கள் ஆகியவற்றை மேலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு ரூ. 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மதுரை மாநகராட்சி**

35. மதுரை மாநகராட்சி 51.85 ச.கி.மீ. பரப்பளவும், 1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 9.40 லட்சம் மக்கள் தொகையும் கொண்டுள்ளது. 1999-2000 ஆண்டில் வைகை ஆற்றின் குறுக்கே கல்பாலத்தில் ரூ. 8 கோடி செலவில் பாலம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ள பிற முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு:

*தெரு விளக்குகள்:*

36. இம்மாநகராட்சி 12,976 குழல் விளக்குகளையும், 4460 சோடியம் ஆவி விளக்குகளையும் 9 உயர்கோபுர விளக்குகளையும் பராமரிக்கிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 1.20 கோடி செலவில் 829 குழல்





விளக்குகள் மற்றும் 1185 சோடியம் ஆவி விளக்குகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நகரில் 5 முக்கிய இடங்களில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கவும் உத்தேசிக்கப்படுள்ளது.

*பாதாள சாக்கடை*

37. இருக்கின்ற பாதாள சாக்கடை முறையை, ரூ.12.50 கோடி செலவில் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணி இன்னும் 18 மாத காலத்தில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*சாலைகள்*

38. 2000-2001 ஆம் ஆண்டில் சாலைப் பணிகளை சுமார் ரூ.7.00 கோடி செலவில் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.6.25 கோடி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி மூலமும் மீதித் தொகை மாநகராட்சிப் பொது நிதியிலிருந்தும் செலவிடப்படும்.

*சுற்றுலா மேம்பாட்டு பணிகள்*

39. சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதிக்கென பாரதியார் வணிக வளாக 'டி' பிளாக் பகுதியில் தங்கும் விடுதி அமைக்கவும், இராணி மங்கம்மாள் சத்திரத்தில் 2-வது பிளாக்கைப் புதுப்பிக்கவும் ஓர் ஓய்வு இல்லம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் முதல் பிளாக்கில் 2 அறைகள் கட்டவும் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் கார்கள் நிறுத்த கான்கிரீட் சாலைகளை ரூ. 1.27 கோடி மதிப்பீட்டில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

*உள்வட்ட சாலை*

40. ரூ. 47.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் சுற்றுச் சாலைப் பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. ஜூலை 2000-க்குள் இப்பணிமுடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாலையைப் பயன்படுத்துவோரிடமிருந்து சுங்கம் வசூலிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வசூல் தொகை, மதுரை மாநகராட்சி இத்திட்டத்திற்கு வாங்கியுள்ள ரூ.35.00 கோடி கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்படும்.

## கோயம்புத்தூர் மாநகராட்சி

41. கோயம்புத்தூர் மாநகராட்சி 105.60 சதுர கி.மீ. பரப்பளவும் 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 8.16 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டுள்ள சில முக்கிய பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

தெரு விளக்குகள்

42. மாநகராட்சி 2000 எண்ணிக்கையில் 40 வாட்ஸ் குழல் விளக்குகளை 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளாக ரூ.100 கோடி செலவில் 2000-2001 ஆம் ஆண்டில் மாற்றம் செய்ய உத்தேசித்துள்ளது.

நகர் கூட்டாண்மைத் திட்டம்

43. கோவை மாநகராட்சி நகர் கூட்டாண்மைத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இதன்மூலம் கோவை மாநகரை 20 ஆண்டுகளுக்குள் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி அடையத் தக்கதொரு தொலைநோக்கு திட்டத்தையும், அத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளையும், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டையும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் 5 ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய முன்னுரிமைத் திட்டங்களும் கண்டறியப்பட்டுள்ளது. இந்நகர் கூட்டாண்மைத் திட்டம் தயாரிப்பதற்கு, தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நகரம் கோவையாகும். உலக வங்கி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி அதிகாரிகளுடனும் மாமன்ற உறுப்பினர்களுடனும் மற்றும் பல தொழில்துறை வல்லுநர்களிடமும் ஆலோசனைகள் நடத்தி இந்த மேம்பாட்டுத் திட்டத்திற்கு வரைவுத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. பொதுமக்கள் உட்பட எல்லாதரப்பினர்களுடனும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வரைவுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கோவை மாநகராட்சி மன்றம் குடிநீர் வழங்குதல், சாலைகள், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, தெரு விளக்குகள் ஆகியவற்றிற்கு ரூ.62.24 கோடி நிதி ஒதுக்கீடு நிர்ணயித்து, அதற்கான பணிகளை 1999-2000 ஆண்டு முதல் அடுத்து வரும் 5 ஆண்டுகளில் செய்து முடிக்கத் தீர்மானித்துள்ளது. இந்நிதி ஒதுக்கீடு



ஹட்கோ நிறுவனத்திலிருந்து குடிநீர் மேம்பாடு திட்டப் பணிகளுக்குப் பெறப்படும் ரூ.15.50 கோடியை உள்ளடக்கியதாகும்.

பிறபணிகள்

44. சுமார் ரூ.7.00 கோடி செலவில் 2000-2001-ல் சாலைகள் மேம்படுத்தப்படும். சொக்கம்புதூர் இடுகாட்டில் ஒன்றும், ஆத்தூர் பாலம் இடுகாட்டில் ஒன்றுமாக இரண்டு மின்சார தகன வசதிகள் ஒவ்வொன்றும் ரூ. 80 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகை தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியிலிருந்து கடனாகவும் மானியமாகவும் பெறப்பட உள்ளது. இவ்வேலைகள் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளன.

45. சிங்காநல்லூர் கமலா மில் குட்டை பகுதியில் ஒரு புதிய பேருந்து நிலையம் ரூ.1.85 கோடி செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் குப்பை அகற்ற 50 எண்ணிக்கையிலான ஃபைபர் கண்ணாடி இழையிலான மினி டம்பர் ரூ.5.00 இலட்சம் செலவில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

46. திருச்சி மாநகராட்சி 146.90 சதுர கி.மீ. பரப்பளவும், 1999 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 6.68 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

47. இம்மாநகராட்சியில் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.10.50 கோடிக்கான மூலதனத் திட்டங்களை செயலாக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இம்மூலதனப் பணிகளை மாநகராட்சியின் சொந்த வருவாய் மற்றும் அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள் மூலம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மூலதனப்பணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

சாலைகள்

48. இம்மாநகராட்சிப் பகுதியில் 3.5 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் பேருந்து வழித்தடங்களை அகலப்படுத்தி இருவழிப் பாதையாக ரூ.3 கோடி செலவில் மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுடன் 20 கி.மீ. நீளமுள்ள மண்சாலைகள் தார்ச் சாலைகளாக ரூ.2.30 கோடி செலவில் மாற்றப்படும். மாநகராட்சியுடன் புதியதாக

சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு இப்பணியில் முன்னுரிமை வழங்கப்படும். மேலும் 12 கி.மீ. நீளத்திற்கு வடிகால் ரூ.1.00 கோடி செலவில் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தெரு விளக்குகள்:

49. இம் மாநகராட்சியுடன் புதியதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் 1000 புதிய குழல் விளக்குகளை ரூ. 0.50 கோடி செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு:

50. துப்புரவுப் பணியாளர்களுக்கு 120 குடியிருப்புகள் ரூ. 0.60 கோடி செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதர பணிகள்:

51. இம் மாநகராட்சியிலுள்ள 20 மாநகராட்சிப் பள்ளிகளுக்கு கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் ரூ. 1.10 கோடி செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியிலுள்ள 50 மதிய உணவு கூடங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூ. 0.50 கோடி செலவில் கட்டவும், இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அனைத்து சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் ரூ. 1.50 கோடி. மதிப்பீட்டில் தேவையான அடிப்படை வசதிகள் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சேலம் மாநகராட்சி

52. சேலம் மாநகராட்சி 91.34 ச.கி.மீ. பரப்பளவும், 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 5.93 லட்சம் மக்கள் தொகையும் கொண்டுள்ளது. இம் மாநகராட்சி 2000-2001 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட முக்கிய மூலதனத் திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

சாலைகள்:

53. 2000-2001 ஆம் ஆண்டிற்கு சாலைகள், சுமார் ரூ. 7.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

தெரு விளக்குகள் மற்றும் இதரப் பணிகள்:

54. ரூ. 15 இலட்சம் செலவில் 1000 குழல் விளக்குகளும், 100 சோடியம் ஆவி விளக்குகளும் கூடுதலாக அமைக்கப்பட உள்ளன.



55. புதிதாக இணைக்கப்பட்ட 28 டாஸிடா துணை மையங்களுக்கும் மற்றும் இருக்கின்ற மையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், அவற்றில் பராமரிப்புப் பணிகள் செய்யவும் ரூ. 10 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விக்டோரியா மைதானத்தில் ரூ. 3.45 கோடி மதிப்பீட்டில் புதிய வணிக வளாக மையம் கட்டும் பணி முடியும் நிலையில் உள்ளது. விரைவில் கடைகள் பொது ஏலம் விடப்பட்டு, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் இத் திட்டத்திற்காகப் பெற்ற கடன் திருப்பிச் செலுத்தப்படும். குடிநீர்த் திட்டத்தில் சில மேம்பாடுகள் செய்ய வேண்டியது நீண்ட காலத் தேவையாக இருந்தும் நிதிப் பற்றாக்குறையால் இப்பணி செய்ய இயலாமல் இருந்தது. தண்ணீர் பம்ப் செய்யும் அளவை அதிகரிக்க ரூ. 6.25 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு, இத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் குடிநீர் வழங்கும் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆறாவது மண்டலம் குகை பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கங்கள் மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் இப் பகுதியின் குடிநீர் வழங்கல் விநியோகமுறை மேம்படும்.

### திருநெல்வேலி மாநகராட்சி

56. திருநெல்வேலி மாநகராட்சி 108.65 ச.கி.மீ. பரப்பளவும் 1991 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 3.74 லட்சம் மக்கட் தொகையும் கொண்டுள்ளது.

57. இம் மாநகராட்சி 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ. 29.70 கோடி செலவில் மூலதனத் திட்டத்தினை மேற்கொள்ள உள்ளது. இதில் மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து செய்யப்படும் வேலைகளும் அரசிடமிருந்து பெறப்படும் மானியம் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளும் அடங்கும்.

மூலதனத் திட்டத்தில் கீழ்க்கண்ட முக்கிய பணிகள் அடங்கியுள்ளன.

சாலைகள்:

58. சுமார் ரூ. 7.00 கோடி செலவில் உட்சாலைகள் மேம்படுத்தப்படும். இத் நிதியைக்கொண்டு சுமார் 60-70 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இத் திட்டத்ின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

குடிநீர் வழங்கல்:

59. ரூ. 1.07 கோடி செலவில் திருவனந்தபுரம் பகுதி குடிநீர் வழங்கும் திட்டம் எடுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மற்ற பணிகள்:

60. ரூ. 45 லட்சம் செலவில் 5 குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

61. திடக் கழிவு மேம்பாடு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 99 லட்சம் செலவில் கழிவுப் பொருள் அகற்றும் முறையை நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பேரூராட்சிகள் நிர்வாகம்

62. மாநிலத்தில் மொத்தம் 611 பேரூராட்சிகள் உள்ளன. நிதிநிலை மிகவும் நலிவுற்ற பேரூராட்சிகளை ஊராட்சிகளாக மாற்றலாம் என்று கொள்கை அளவில் எடுத்த முடிவின்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் 25 பேரூராட்சிகள் ஊராட்சிகளாக மாற்றப்பட்டுவிட்டன.

63. மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் ஆளுகைக்குள் 1994-ல் பேரூராட்சிகள் கொண்டுவரப்பட்டன. பேரூராட்சிகளில் அடிப்படை சேவைகளின் அளவையும், தரத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்ட கூடுதல் நிதிப் பங்கீடு, தனி பொறியியல் பிரிவு அமைத்தல், அனைத்து பிரிவு அலுவலர்களின் நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அதிகாரங்கள் உயர்த்துதல் முதலிய செயல்பாடுகள் காரணமாக பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு சிறந்த சேவைகளை அளிக்கத் தேவையான மூலதனப் பணிகளை மேற்கொள்ள உதவியுள்ளது.

நிதிப் பங்கீடு:

64. மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 111.32 கோடியும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 136.81 கோடியும், 1999-2000 ஆண்டில் ரூ. 137.25 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் ரூ. 18.61 கோடி சமன்பாட்டு மற்றும் ஊக்க நிதியாக நிதிநிலை நலிந்த பேரூராட்சிகளுக்கும், சிறப்பாக வரிவசூல் செய்த மற்றும் கடன் தவணைகள் செலுத்திய பேரூராட்சிகளுக்கும் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 23 கோடி அளவிற்கும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 69 கோடி அளவிற்கும் மூலதனச் செலவுகள் உயர்ந்துள்ளன. இதற்கு முந்தைய ஆண்டுகளில் ஆண்டு ஒன்றிற்கு பேரூராட்சிகள் ரூ. 50 லட்சம் மட்டுமே செலவழிக்கும் நிலைமை இருந்து வந்தது. 1999-2000 ஆண்டில் பேரூராட்சிகள் தங்கள் சொந்த நிதியிலிருந்து ரூ. 41.66 கோடி செலவிட்டுள்ளன.



தெரு விளக்குகள்:

65. 1999-2000 ஆண்டில் 2,441 சோடியம் ஆவி விளக்குகள் உட்பட 16,900 தெரு விளக்குகள் அமைக்க ரூ. 4.20 கோடி ஒதுக்கப்பட்டு, பிப்ரவரி 2000 முடிய மொத்தம் 14,394 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம்:

66. கூடுதல் வாகனங்கள் வாங்குதல், பணியாளர்களின் எண்ணிக்கை உயர்வு இத்துடன் முறையான விழிப்புணர்ச்சி பிரச்சாரம் முதலிய நடவடிக்கைகளால் திடக் கழிவு நிர்வாகத்தில் முழுமையான மேம்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் அரசு முறையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. 1996-97 முதல் 1999-2000 வரை திடக் கழிவு நிர்வாகத்திற்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 663-லிருந்து 1,009 ஆக உயர்ந்துள்ளது. மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 3,709 புதிய துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும் தேவையான பேரூராட்சிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சாலைகள்:

67. முதன்முறையாக 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பேருந்து நிலையத்தில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகள், சிறிய சந்துகளுக்கு சிமெண்ட் சாலை அமைத்தல் முதலிய பணிகள் எடுத்து முடிக்கப்பட்டன. இத் திட்டம் பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து சிறிய சந்துகளுக்கு சிமெண்ட் சாலைகள் அமைத்திட 1999-2000 ஆண்டில் ரூ. 15 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 2,326 பணிகள் முடிக்கப்பட்டன.

[2000 மே 10

### பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்:

68. 1999-2000 ஆண்டில் நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.78 கோடி வழங்கப்பட்டு 145 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 97 மீதப்பணிகள் முடிக்கப்பட்டன. மேலும் நகர்ப்புற சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளுக்கு ரூ. 6.65 கோடி பிரித்தளிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வங்கி மூலம் கடன் வழங்கப்பட்டு ரூ.24.55 லட்சம் மானியமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### பெருநகர திட்டம்:

69. இத் திட்டத்தின் கீழ் 13.31 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் பகுதியில் உள்ள 6 பேரூராட்சிகளில் வணிக வளாகம், மழைநீர் வடிகால், சாலை வசதி, சிறுபாலங்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வளசரவாக்கம் பேரூராட்சியில் மழைநீர் வடிகால் பணி ரூ. 1.20 கோடி மதிப்பீட்டிலும், சாலைப் பணிகள் ரூ. 1.20 கோடி அளவிலும் எடுத்து முடிக்கப்பட்டன. மதுரவாயல் மற்றும் போரூர் பேரூராட்சிகளில் மழைநீர் வடிகால் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் பெருங்குடி, மணலி மற்றும் பள்ளி கரனை ஆகிய பேரூராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், தரைமட்ட நீர்த்தேக்கங்கள், சிறுபாலங்கள், சாலைகள் மற்றும் வடிகால் பணிகள் எடுத்து முடிக்கப்பட்டுள்ளன.

### கோவில் நகரம் மற்றும் சுற்றுலா மேம்பாடு:

70. முக்கிய கோவில் மற்றும் சுற்றுலா மையங்கள் அமைந்துள்ள இடங்களில் அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ள 1999-2000 ஆண்டில் ரூ. 10.02 கோடி ஒதுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன.

### ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டம்:

71. மத்திய அரசின் உதவியுடன் தொடங்கப்பட்ட இத் திட்டம் 6-வது ஐந்தாண்டு திட்டகாலமான 1979-80-ல் தொடங்கப்பட்டது. மக்கள் தொகை இருபதாயிரம் முதல் ஐந்து லட்சம் வரையில் உள்ள நகரங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் இத் திட்டத்திற்கான முகமை நிறுவனமாக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் மற்றும்



2000 மே 10]

நகர்ப்புற அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்தையும் 1-4-1999 முதல் அரசு நியமித்துள்ளது. 1999-2000 ஆண்டில் ரூ. 12.06 கோடியளவில் 25 பேரூராட்சிகளில் வணிக வளாகம், பேருந்து நிலைய அபிவிருத்தி, சாலை மற்றும் வடிகால் மேம்பாட்டு பணிகள் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

### பொது உலர் கழிப்பிடங்கள் மாற்றம் செய்தல்:

72. அனைத்து பேரூராட்சிகளிலும் ஒரு புதிய முயற்சியாக 417 உலர் பொது கழிப்பிடங்கள் நவீன நீர் வசதியுடன் கூடிய கழிப்பிடங்களாக ரூ. 10.84 கோடி செலவில் மாற்றப்பட்டுள்ளன.

### சாலைகளுக்கான சிறப்பு திட்டம்:

73. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 80 கோடி நிதியுதவியுடன் பேரூராட்சிகளில் சாலைகளை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் அனைத்து பேரூராட்சிகளிலும் பணிகள் 1,305.8 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்படும்.

### சந்தைகள்:

74. 1999-2000 ஆண்டில் பேரூராட்சிகளில் சந்தைகள் மேம்படுத்த ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டு 262 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 245 முடிக்கப்பட்டன.

### நமக்கு நாமே திட்டம்:

75. 1999-2000 ஆண்டில் நமக்கு நாமே திட்டம் பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. முதல் கட்டமாக ரூ. 1 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத் திட்டத்திற்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளதைத் தொடர்ந்து கூடுதல் மானியம் கேட்டு பொது மக்கள் பங்குத் தொகையையும் செலுத்தி கோரிக்கைகள் வரப்பெற்றன. அதனால் மேலும் ரூ. 1.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. முதல் கட்டமாக வழங்கிய ரூ. 1 கோடி மானியத்தில் 337 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 174 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 163 பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி

76. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக இருந்த நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியின் அமைப்பை 1996-ல் மாற்றியது. இதன்படி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் என்று குழுவை ஐசிஐசிஐ, எச்டிஎப்சி மற்றும் ஐ.எல்.எப்.எஸ். நிதி நிறுவனங்களின் பங்கோடு ஏற்படுத்தியது. இந் நிதியை மேலாண்மை செய்வதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம் என்ற அமைப்பும் தொடங்கப்பட்டது.

77. இந் நிதியின் முக்கிய நோக்கங்கள்:

(அ) நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதியளித்தல்;

(ஆ) உள் கட்டமைப்பு வசதிகளை தனியார் முதலீடு மூலம் மேம்படுத்த வசதியாக ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கும் மற்றும் பொதுத் துறை மற்றும் தனியார் கூட்டாக பங்கேற்கவும் துணைபுரிதல்;

(இ) நகர்ப்புற ஏழை மக்களுக்கு உதவிடும் நோக்கத்துடன் கூடுதலாக ஒரு மானிய நிதி ஒன்றைத் தொடங்கி தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவனம் மூலம் அந் நிதியை நிர்வகித்தல்.

78. இதற்குத் தேவையான நிதியாதாரங்களைத் தேடும் முயற்சியில் குறிப்பாக நீண்டகால கடன்பெறும் முயற்சியின் ஒரு அங்கமாக ஐபிஆர்டியிடமிருந்து 80 மில்லியன் அமெரிக்க டாலரைக் கடனாக அளிக்கும்படி 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு கோரிக்கை தமிழ்நாடு அரசு அனுப்பியது. அதனை ஏற்று 1999 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் நாளன்று உலக வங்கி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதிக்கு 105 மில்லியன் அமெரிக்க டாலரை ஐபிஆர்டி கடனாக அனுமதியளித்தது. இதற்கான ஒப்பந்தங்கள் 18-7-1999 ஆம் நாளன்று, கையெழுத்திடப்பட்டது. இந் நிதியுதவி இரண்டு பகுதிகளாகக் கொண்டது. நகர்ப்புற மேம்பாட்டுக்கான முதலீடு 80 மில்லியன் அமெரிக்க டாலர் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இரண்டாவது பகுதியான





[illegible]ந்த சுகாதார மேம்பாட்டு திட்டம் மற்றும் நிறுவனத்திறன் மேம்பாட்டு பகுதி ஆகியவை இதற்காகவென்றே அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசு திட்ட மேலாண்மைக் குழுவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

*திட்டங்கள்:*

79. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தத் தேவையான திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு, நகர்ப்புற அமைப்புகளின் சேவைகளைப் பயன்படுத்த உரிய கட்டணம் நிர்ணயித்து வசூல் செய்வதற்கு ஏற்ற தனியார் முதலீடுகளுக்கு அமைப்பு ரீதியான உதவியும் இத் திட்டம் மூலம் செய்யப்படுகிறது. இதுவரை பரிசீலித்து, ஒப்புதல் அளித்த திட்டங்களில் முக்கியமாக மழைநீர் வடிகால், பாதாள சாக்கடை, சுகாதார மேம்பாடு, திடக் கழிவு மேலாண்மை, வணிக வளாகங்கள், மொத்த வியாபார சந்தைகள், சாலை மேம்பாடு முதலியன அடங்கும்.

80. 1999-2000 ஆண்டில் இந் நிதியிலிருந்து பல்வேறு திட்டங்களுக்கு ரூ.56 கோடி வழங்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் இது ரூ.228.52 கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாலை மேம்பாட்டிற்கு வழங்கப்படவுள்ள ரூ. 170 கோடியும் அடங்கும்.

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

81. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், கம்பெனிகளின் சட்டம் 1956-ன் கீழ் 1990 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும் இந் நிறுவனமானது மத்திய அரசின் நிதியுதவியுடன் செயலாக்கப்படும். பெருநகர திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர, நகர வளர்ச்சி திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசால் முகமை நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இவ்விரு மத்திய அரசு திட்டங்களும் நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன் நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

*பெருநகர திட்டம்:*

82. பெருநகர திட்டமானது சென்னை, மும்பை, கல்கத்தா, பெங்களூர் மற்றும் ஐதராபாத் ஆகிய ஐந்து மாநகரங்களின்

உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மத்திய அரசின் ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ள திட்டமாகும் இத்திட்டத்திற்கான நிதியை [illegible] மற்றும் மாநில அரசுகள் சரிசமமாக பகிர்ந்து கொள்ளும். மேற்படி நிதியுடன், நிதி நிறுவனங்களிடமிருந்தோ, தங்கள் சொந்த நிதியுடனோ 100 சதவீதம் நிதியைப் பெற்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது இதை ஒரு இருப்பு நிதிச் சொத்தாகக் கொண்டு இதிலிருந்து கடனுதவி அளித்து ஒரு சுழற்சி நிதியாக பயன்படுத்துவதாகும். இதன்கீழ் 98 திட்டங்கள் ரூபாய் 622.29 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இவற்றில், 38 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டில் ரூபாய் 70 முதல் 80 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை பெருநகர திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டம்.**

83. மத்திய அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான வளர்ச்சித்திட்டம், 6-வது ஐந்தாண்டு திட்ட காலமான 1979-80-ல் தொடங்கப்பட்டது. மக்கட்தொகை 20,000 முதல் 5 இலட்சம் வரையில் உள்ள நகரங்களுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான முகமை நிறுவனமாக அரசு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்தை 1-4-1997 முதல் நியமித்துள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 5.00 கோடியினை இத்திட்டத்தின்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்க உத்தேசித்துள்ளது.

**புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்**

84. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் நகர் மற்றும் திருப்பூர் உள்ளூர் திட்டப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், துப்புரவு சம்பந்தப்பட்ட திட்டங்களை செயல்படுத்த, தமிழ்நாடு அரசு, மத்திய அரசு, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஐ.எல்.எப்.எஸ். (Infrastructural Leasing and Financial Services Limited) ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்க நிறுவனமாகும். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:—



* கீழ்க்கண்ட அமைப்புகளுக்கு நாள்தோறும் 185 மில்லியன் லிட்டர்கள் மொத்த குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தினை கட்டி, இயக்கி, பராமரித்தல்.

  திருப்பூர் நகராட்சி

  திருப்பூர் உள்ளூர் திட்டப் பகுதிக்குட்பட்ட வழியோர கிராமங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்

  திருப்பூர் உள்ளூர் திட்டப் பகுதிக்குட்பட்ட தொழிற்சாலைகள்

  திருப்பூர் உள்ளூர் திட்டப் பகுதிக்குள் உள்ள தொழிற்சாலைகளுக்கு நீர் விநியோகத் திட்டத்தினை இயக்கி பராமரித்தல்.

  திருப்பூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோக அமைப்பை உருவாக்குதல்

  திருப்பூர் நகராட்சியில் கழிவு நீர் அகற்றும் அமைப்பை உருவாக்குதல்

  திருப்பூர் நகராட்சிக்கு உட்பட்ட குடிசைப் பகுதிகளில் நிலையான சுகாதார வசதிகளை செய்தல்.

* திருப்பூர் நகராட்சிப் பகுதிக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்று திட்டத்தினை கட்டி, இயக்கி, பராமரித்தல்.

85. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 1,163 கோடியாகும். இத்திட்டத்தினால், திருப்பூர் நகராட்சிப் பகுதியில் 6.50 இலட்சம் மக்களும், திருப்பூர் உள்ளூர் திட்டப்பகுதி மற்றும் வழியோரக் கிராமங்களில் 5.40 இலட்சம் மக்களும் பயனடைவர். நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

☆☆☆☆

222782

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.